LIBRARY
20 JUL 1965
STATE LEGISLATURE

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 8th March 1965

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Election of Presidents of Panchayats

* 4 *S.N. Q.*—SRI M. KALYANASUNDARAM, SRI K. CHEEMAICHAMY AND SRI A. RAGHAVA REDDY } Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the details of the revised programmes for the election of Presidents of Panchayat Boards and Chairmen of Panchayat Union Councils in the State;

(*b*) the reasons for changing the dates; and

(*c*) the details of the steps taken for carrying on the functions of the Panchayats till the elections are over?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தலை 1965 ஏப்ரல் 17-ம் தேதி சனிக்கிழமையும் 1965 ஏப்ரல் 19-ம் தேதி திங்கட்கிழமையும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் தலைவர்கள் தேர்தலை 1965 ஏப்ரல் 28-ம் தேதியிலிருந்து 30-ம் தேதி வரை நடத்துவதென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) உயர்நீதி மன்றம் இதற்கு முன் பிறப்பித்த தடை உத்தரவுகளைப் பல வழக்குகளில் ரத்து செய்துவிட்டது. நிரப்பப் பட வேண்டிய காலியிடங்கள் இன்னும் சில உள்ளன. பஞ்சாயத்துத் தலைவர்களின் தேர்தல்களை நடத்துவதற்கு முன் இந்தக் காலியிடங்கள் அனைத்தையும் நிரப்புவது உசிதமெனக் கருதப்படுகிறது. நகரப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் தேர்தல் அறிவிப்பு வெளியாகும் தேதிக்கும், வாக்குகள் பதிவாகும் தேதிக்கும் இடையே 21 நாட்களுக்குக் குறைவாக இடைவெளி இருக்க வேண்டுமென்று விதிகளில் சொல்லியிருக்கிறது. இந்த நிபந்தனைகளுக்காகப் போதிய இடைவெளி விட்டு, புதிய தேதிகள் நிச்சயிக்கப்பட்டுள்ளன.

(உ) தேர்தல்கள் பூர்த்தியாகிவிட்ட பஞ்சாயத்துக்களைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் 34 (3) பிரிவின்படி புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் வயதில் முதிர்ந்த உறுப்பினர் தற்காலிகத் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார்; தேர்தல் நடைபெற முடியாத பஞ்சாயத்துக்களில் ஷை சட்டத்தின் 11-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட

வரம்பு நிபந்தனையின் கீழ் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அந்தந்த பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்தை மேற்கொண்டிருக்கிறார்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள் இதை ஒத்திப் போடுவதற்குக் காரணம் உயர்நீதி மன்றத்திலே வழக்குகள் இருந்ததால் என்று. அப்படி இருந்த வழக்குகள் எல்லாவற்றிலுமே பிறப்பிக்கப்பட்ட உத்திரவுகள் ரத்து செய்யப்பட்டனவா ? அதன்படி எல்லாக் காலி ஸ்தானங்களிலுமே தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதுவரையில் ஹைகோர்ட்டிலிருந்து வந்த ஸ்டே உத்திரவின்படி 21 பஞ்சாயத்துகளுக்கு 108 வார்டுகளுக்கு, 225 மெம்பர்களுக்கு ஸ்டே வெகேட் செய்யப்பட்டிருக்கிறது. மீதம் இருப்பதைச் சீக்கிரம் வெகேட் செய்யலாம்.

திரு. கரு. சீமைச்சாமி: இந்தப் பஞ்சாயத்துகளிலே தலைவர் தேர்தல் ஒத்திப் போட்ட காரணத்தினால், தெரு விளக்குகள் எரிவதும், மற்ற சிப்பந்திகள் சம்பளம் பெறுவதும் தடைபடுகிறது. ஆகவே தற்காலிகத் தலைவர் செக் போட்டுப் பணம் வாங்கவும், எலெக்ட்ரிக் சார்ஜ் கட்டவும் என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுப்பது, காஷ்வல் லீவ் வழங்குவது, எலக்ட்ரிக் சார்ஜ் கட்டுவது போன்றவைகளை வழங்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த எலக்ட்ரிக் லைட்டுகள் நிறுத்திய பிறகு தான் அரசாங்க உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக்களின் மேல் அரசாங்கத்திற்குக் கண்ட்ரோல் இருக்கிறது. அப்படி இருக்கும்போது எலக்ட்ரிசிடி போர்டுக்குப் பணம் செலுத்தவில்லை என்ற காரணத்தினால் விளக்குகளை நிறுத்தி விட்டார்கள். அப்படி நிறுத்தாமல் இருப்பதற்குச் சர்க்கார் உத்திரவு போடுவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பொதுவாக விளக்குகள் சம்பந்தப்பட்ட சார்ஜ்கள் கட்டுவது பஞ்சாயத்துக்களின் பொறுப்பு. 29—2—1965-லே எலக்ட்ரிக் சார்ஜ்களைப் பஞ்சாயத்துக்களின் தற்காலிகத் தலைவர்கள் கட்டலாம் என்று அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கோ. சி. மணி : பெண் அங்கத்தினர்கள் தேர்தலும் இந்தப் பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தல் நடக்காததினால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சில பெண் அங்கத்தினர்களின் தேர்தல்களும் நடந்திருக்கும். விதிகளின்கீழ் விவரமான தகவல் படி நடந்துகொள்ளலாம்.

8th March 1965]

புலவர் கா. கோவிந்தன்: ஊராட்சி மன்றங்களிலே தலைவர் தேர்தலுக்காகக் கொடுக்கப்படுகின்ற வாக்குச் சீட்டுகளில் சின்னங்கள் இல்லாமல் பெயர்கள் போட ஏற்பாடாகியிருக்கிறதா? தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருக்கக்கூடும். அப்படியிருக்கும் பொழுது வாக்குச் சீட்டுகளில் பெயர்கள் எழுதிக் கொடுப்பதற்குப் பதிலாக சின்னங்களைப் போட ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அப்பொழுது எப்படி நடந்ததோ அதே முறைதான் இப்பொழுதும் அனுசரிக்கப்படும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இப்பொழுது நடைபெற்றிருக்கின்ற பன்னிரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்களில் தற்காலிகத் தலைவர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. சட்டபூர்வமாக உயர்நீதி மன்றத்தின் உத்திரவு பிரகாரம் எந்த அங்கத்தினரும் தேர்ந்தெடுத்த பிறகு பிரமாணம் எடுத்த பிறகுதான் அபீஷியல் மெம்பராக இருக்க முடியும் என்கிற போது பிரமாணம் எடுக்காமல் இருக்கும் தற்காலிகத் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் உணர்வார்களா? இது சட்டபூர்வமானதாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: மெம்பர்கள் அல்லாதவர்களுக்கு இப்படிப்பட்ட அதிகாரம் இல்லை. மெம்பராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் சட்டத்தின்படி இம்மாதிரி டெம்பரரி பிரெசிடெண்டாக இருக்கலாம் என்று விதிமுறை வகுக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. நாராயணன்: பஞ்சாயத்து நிர்வாகப் பொறுப்புகளை தற்காலிகத் தலைவர்கள் எடுத்து ஏற்று வருகிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பஞ்சாயத்திற்கு வேண்டிய பணத்திற்கு நாளது வரையில் செக் கொடுக்கப்படவில்லை. இதனால் நிர்வாகம் தடைபடுகிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இதைப்பற்றி பஞ்சாயத்து யூனியன்களுக்கு அரசாங்கம் ஏதாவது அறிக்கை அனுப்ப இருக்கிறார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: 29—2—1965-ல் அரசாங்கத்திலிருந்து ஒரு அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: தற்காலிகத் தலைவரிடம் பழைய தலைவர் தோற்றிருந்தால், பழைய தலைவர்கள் சார்ஜ் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். அப்படி மறுப்பதைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அதைபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு போகவேண்டும். அப்படியில்லாவிட்டால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

[8th March 1965

திரு. அ. பெ. தர்மலிங்கம் : பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல்களைத் தள்ளிப்போட்ட காரணத்தினால் தொல்லைகள் ஏற்படுகின்றன. பஞ்சாயத்துத் தேர்தல்கள் முடிந்த மறுதினமே தலைவர்கள் தேர்தலை நடத்துவதற்கு முன் வருவார்களா ?

MR. SPEAKER : Does it not require notice under the Act?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அடுத்த தேர்தலிலே கவனிக்க வேண்டிய விஷயம்.

திரு. கே. பொன்னையன் : பஞ்சாயத்துத் தேர்தல் நடந்த பிற்பாடு ஜெயித்த மெம்பர்கள் ஊரையே விட்டுக் காணாமல் போய் விடுகிறார்கள். அது அவர்கள் குடும்பங்களுக்குக்கூடத் தெரியவில்லை என்பதை அரசாங்கம் அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே .ம. அ. மஜீத் : அம்மாதிரி தகவல் என்னிடம் ஒன்றும் இல்லை. அண்டர்கிரவுண்டிலோ அல்லது மேலேயோ போய் விட்டார்களா என்பது எனக்குத் தெரியாது.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : கனம் அமைச்சர் அவர்கள் தேர்தலை ஒத்திப்போடுவதற்குக் காரணம் ஹைகோர்ட்டிலுள்ள கேஸ்களின் முடிவைப் பார்த்து பஞ்சாயத்துத் தேர்தல்களைத் தள்ளி வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் தேர்தலுக்கு முன்னமையே அதையெல்லாம் யோசித்து ஏன் தள்ளி வைக்கவில்லை என்பதைக் கூறுவார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பொதுவாக மொழிக் கிளர்ச்சியின் காரணமாகத் தோன்றிய அசாதாரணமான நிலைமை ஏற்பட்டதை அடுத்தும் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்வார்கள். அதற்குள் இந்தக் கேஸ்கள் எல்லாம் முடிந்துவிடலாம் என்ற அபிப்பிராயத்தில்தான் சொல்லப்பட்டது.

திரு. ஆ. துரையரசன் : வயது முதிர்ந்த அங்கத்தினரிடம் பொறுப்பை ஒப்படைக்கும்படி உத்தரவு போடப்பட்டு இருந்தும், அதிகாரிகள் போய் அவர்களை வற்புறுத்திப் பொறுப்பை ஒப்படைக்கும்படி சொல்லியும், பல முன்னாள் தலைவர்கள் பொறுப்பை ஒப்படைக்க மறுக்கிறார்கள். இதற்குக் காரணம் முன்னாள் தலைவராக இருந்தவர்கள் கையாடல் செய்திருப்பதாகப் பல இடங்களிலிருந்து செய்திகள் கிடைத்து இருக்கின்றன. அவர்கள் மீது சரிவர நடவடிக்கை எடுக்கவில்லை என்று அறிகிறோம். இதன் காரணமாகத்தான் பொறுப்பை ஒப்படைக்க மறுக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே சர்க்கார் துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கையாடல் செய்ததன் பலனாக அவர்கள் பொறுப்பை ஒப்படைக்க மறுக்கிறார்கள் என்றால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வந்தால் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள்.

8th March 1965]

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஆரம்பத்திலே எதிர்பார்த்ததை விட தலைவர்கள் தேர்ந்தெடுக்க காலதாமதம் ஆகிவிட்டது. இரண்டு மாதத்தில் இன்னும் ஒரு மாத காலம்தான் இருக்கும். இடைக்காலத்தில் இரண்டு விதத்தில் சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஒன்று தாற்காலிகத் தலைவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்ததால் வேலை செய்ய முடியாமல் போகிறது. இரண்டு தாற்காலிகத் தலைவர்கள் வேலை செய்தாலும் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் போதுமானதாக இல்லை. ஊழியர்களுக்குச் சமபளம் கொடுப்பதற்கும் மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்கும் மட்டும்தான் முடியும். பஞ்சாயத்து அலுவலகங்கள் வாடகை வீட்டில் உள்ளன. தங்கள் கட்டடங்களை பஞ்சாயத்து யூனியனுக்கு வாடகைக்கு விட்டிருப்பவர்கள் நிலைமை என்ன என்பதை அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: எதிர்பாராத நிலைமை காரணமாக இந்த மாதிரித் தேர்தலைத் தள்ளிப்போட வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை கனம் அங்கத்தினர் அறிவார். ஏழு நாட்களுக்கு உட்பட்ட முறையிலேதான் டெம்பரரி பிரெஸிடெண்ட் பதவியில் இருக்கலாம். இதை ஒத்திப்போடுவதால் ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்கு நீடிக்கும் இந்த நிலை தவிர்க்க முடியாது என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி: பஞ்சாயத்து யூனியன் கூட்டம் மாதம் ஒரு தடவையாவது நடக்க வேண்டியிருக்கிறது. மார்ச் மாதம் முடியும் போது பல வேலைகளைப் பஞ்சாயத்துக்கள் செய்து முடிக்க வேண்டி இருக்கிறது. பஞ்சாயத்து கவுன்சில் கூட்டத்தை யார் நடத்துவது? இது சம்பந்தமாக சர்க்கார் ஒரு அறிக்கை அனுப்புமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தேர்தல் முடிந்த உடனே உடனடியாகக் கூடுவார்கள்.

அரசாங்கத்திற்கு பொதுக்கணக்குக் குழுவின் கருத்துரை

*173 கேள்வி—புலவர் கா. கோவிந்தன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் தஞ்சை, இராமநாதபுரம் கஜானக்களில் உண்மைக்கு மாறான பட்டியல்கள் (Bogus bills) கொடுத்து ரூ. 66,390 பெறப்பட்டதன் மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை போதுமான தன்று என 1963-64-ம் ஆண்டு பொதுக் கணக்குக் குழு கருத்துத் தெரிவித்துள்ளதா?

(இ) ஆம் எனில் அரசு அதன் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) இது குறித்து பொதுக் கணக்குக் குழு தன்னுடைய அதிருப்தியைத் தெரிவித்திருப்பதுடன் தஞ்சாவூர் கருவூல அதிகாரி மீது விரைவில் நடவடிக்கை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[8th March 1965

எடுக்குமாறும், துறை அளவில் ஒழுங்கு நடவடிக்கைகளைத் தாமத மின்றி முடிவு செய்யுமாறும் கருத்துத் தெரிவித்துள்ளது.

(ஆ) தஞ்சாவூர் கருவூல அதிகாரி மீது நடவடிக்கை தொடங் கப்பட்டுவிட்டது. நிர்ணய நடைமுறைகளைப் பின்பற்றி இறுதி உத்தரவுகள் விரைவில் பிறப்பிக்கப்படும். இவ் வழக்கில் தொடர் புள்ள மற்றவர்களைப் பொறுத்த வரையில், துறை அளவில் ஒழுங்கு நடவடிக்கைகளை முடிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(a) The Public Accounts Committee had expressed its unhappiness in this case and suggested that action against the Treasury Officer, Thanjavur may also be initiated early and the Departmental Proceedings may also be finalised without delay.

(b) The action against the Treasury Officer, Thanjavur has been initiated and final orders will be passed early ater following the prescribed procedures. In respect of others connected with this case action is being pursued expeditiously to finalise the Departmental Proceedings.

புலவர் கா. கோவிந்தன்: இரண்டு மாவட்டங்களிலே நடை பெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தஞ்சை ஜில்லா விலே உள்ள அதிகாரியின் மீது எடுத்த நடவடிக்கைப்பற்றிதான் கூறினார்கள். மற்ற மாவட்டங்களிலே என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்? பொதுக் கணக்குக் குழு சிபார்சுக்கு முன் எடுத்த நடவடிக்கை என்ன? எடுத்த நடவடிக்கை போதுமான தல்ல என்று பொதுக் கணக்குக் குழு அபிப்பிராயம் தெரிவிப்ப தற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் விளக்குவாரா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: வேறு மாவட்டங்களில் இவ்வாறு நடந்திருப்பதாக கனம் அங்கத்தினர் சொல்வதுபற்றி என்னிடம் தகவல் இல்லை. எப்போது இந்த நடவடிக்கை தொடங்கப்பட்டது என்பதுபற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இவ்வளவு பெரும் தொகையை கையாடல் செய்த அதிகாரிகளின் பேரில் கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா அல்லது அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டத்தைச் சரிக்கட்ட சிவில் நடவடிக்கை மேற்கொண்டு அந்தந்த அதிகாரிகளின் சொத்தை ஜப்தி செய்ய நடவடிக்கை எடுக்க சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதில் பணம் கையாடல் இல்லை. 'போகஸ் பில்ஸ்' தயாரித்துக் கொடுத்து அதன் பேரில் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. சட்ட பூர்வமாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அது கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. மாதவன்: ராமநாதபுரத்தைப்பற்றியும் இந்தக் கேள்வி கொடுக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை, ராமநாதபுரம் இரண்டிலும் ஒரே மாதிரி தவறுகள் நடந்திருக்கின்றன. பில்லை கொண்டுபோய் பிரசென்ட் செய்து இருக்கிறார்கள். டிரெஷரி அலுவலகத்திலுள்ள

அதிகாரி சாட்சியாக சிபார்சு செய்திருக்கிறுர். பொதுக் கணக்குக் குழு செய்து முடிவு அது அந்த சாட்சி உதவி செய்த அதிகாரி சாட்சியாக சிபார்சு செய்திருக்கிறுர். பொதுக் கணக்குக் குழு காண்பித்து இருக்கிறது. அவர்கள் மீது இப்போது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ராமனுதபுரம் டிரெஷரி டெபுடி கலெக்டர் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. போலிசார் விசாரணையிலே என்ன வகையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னுர்களோ அது கவனிக்கப்பட்டு வருகிறது. விசாரணையில் என்னென்ன தகவல் கள் கிடைக்கிறதோ அதன்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : பொதுக்கணக்குக் குழு 'அடிக்வேட் ஆக்ஷன்' போதுமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறியிருக்கிறது. பொதுக்கணக்குக் குழு சிபார்சுக்கு முன்பு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ? அதிலிருந்து இப்போது எந்த அளவுக்கு மாறி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக் கிறது என்பதைப்பற்றி விவரம் கூற முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது நடவடிக்கை எடுததுக்கொள்ளப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யார் மீது குற்றம் சாட்டப்படலாமோ, யார் பொறுப்பாக இருந் தார்களோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றது. எப்போது தொடங்கப்பட்டது என்பதற்கு தனிக் கேள்வி வேண்டும் என்று முன்பே கூறினேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : இந்த விஷயத்தைப் பார்க்கிற போது பெரிய மோசடி நடந்து இருக்கிறது என்று தெரிகிறது. சம்பந்தப்பட்ட யார் மீதாவது மோசடி கிரிமினல் வழக்கு தொடரப்பட்டிருக்கிறதா ? அப்படி இருந்தால் அதன் விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கிரிமினல் வழக்கு தொடர பரிசீலனை வேண்டும், ஆதாரம் வேண்டும், சாட்சியம் வேண்டும். இவையெல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. மாதவன் : போலீசாரைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். போலீசார் இப்படித் தவறு செய்ப வர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சொல்வார்கள். இலாகா மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீசார் என்னென்ன வகை யிலே இதை இன்வெஸ்டிகேட் செய்யலாமோ அப்படிச் செய்தார் கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பொறுத்தமட்டில் அதிகார வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : பொதுக்கணக்குக் குழு போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டி இருக்கிறது.

அப்படிப் போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுவதற்கு என்ன காரணங்களை பொதுக் கணக்குக் குழு கூறியிருக்கிறது என்று கூற முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: டிரெஷரி ஆபீசரைப் பொறுத்த மட்டில் அவர் மீது, 'பிராட், டிஸானஸ்டி' இல்லை என்பதுதான் புலப்பட்டது. அதன் பேரில் 'நெக்லிஜென்ஸ் ஆஃப்டியூடி' என்ற வகையில்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

Train accident at Pallapatti on 23rd December 1964.

* 174 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that an accident occurred to Trivandrum Express at Pallapatti in Madurai district on 23rd December 1964;

(*b*) if so, the number of persons injured and the number died; and

(*c*) the relief measures taken by the State Government apart from those taken by the Central Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) Four persons were killed and twenty- three injured.

(*c*) The Collector of Madurai and officers of the Police Department proceeded to the scene of the accident and personally supervised the rescue and relief operations and arranged for the removal of the injured to the Hospital at Madurai. The question of grant of any financial assistance by this Government does not arise.

திரு. வை. சங்கரன்: இந்த விபத்து ஏற்பட்ட உடனே உடனடியாக வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட பொருள்களைத் தேடிப் பிடிக்க வெளிச்சம் இல்லாத காரணத்தால் அல்லல் அதிகமாகிவிட்டது என்று தெரிகிறது. இனியாவது ஒவ்வொரு வண்டியிலும் கார்டு வானிலே ஒரு சில 'பவர்ஃபுல்' டார்ச்சுகளை 'ப்ரொவைட்' பண்ண மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் சிபார்சு செய்யுமா?

கனம். திரு. எம் பக்தவத்சலம்: இப்போது அதைப்பற்றி ரயில்வே இலாகா விசாரணை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்த விசாரணையில் புலப்படக்கூடியதெல்லாம் ரயில்வே இலாகாவினரால் கவனிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ரயில்வே இலாகா நடத்தும் விசாரணை ஒரு அதிகாரியை கொண்ட விசாரணை. பொது விசாரணை—ஒரு நீதிபதியைக் கொண்ட விசாரணை அல்ல அது. இந்த விபத்து தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்று சில அதிகாரிகள் கருதுவதால், ஒரு நீதிபதியை வைத்தோ அல்லது விசாரணைக் குழு நியமித்தோ விசாரணை செய்ய வேண்டும் என்று இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யுமா?

8th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி பார்லிமெண்டில் பிரஸ்தாபிக்கப்படுகிறது. இது அங்கே கேள்வி கேட்டு விடை அளிக்கப்பட வேண்டிய விஷயம்.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த விபத்துக்குக் காரணமான அன்னசமுத்திரம் ஏரியை ரயில்வே இலாகாவினர் "அபெக்டிங் டாங்க்" என்று பல ஆண்டுகளுக்கு முன்பே பிரகடனப்படுத்தி யிருந்தும், இதில் இருக்கிற ஏரிக்கரையை எம்பாங்க்மெண்டை இன்னும் மூன்று அடி உயர்த்த வேண்டுமென்று நெடுநாட்களுக்கு முன்பு நம் மாநில அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தும் அதை உயர்த்தாத காரணத்தினால்தான் இந்த விபத்து நடந்தது என்பதை அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த ஏரியைப் பொறுத்த வரையில் அரசாங்கம் அப்போதைக்கப்போது கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது. அரசாங்கம் ஏதோ தவறிவிட்டது என்ற குற்றத்தை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த விபத்து, அன்னசமுத்திரம் கண்மாய் உடைந்ததால் ஏற்பட்டது. ரெயில்வே "அபெக்டிங் டாங்க்" என்று பிரகடனப்படுத்தி அவர்கள் எழுதிய டைரக்ஷன்ஸ் இந்தச் சர்க்காரிடம் இருக்கிறது. ஆறு ஆண்டுகளாக அதை உயர்த்தாததால், மாக்சிமம் லெவல் பிடிக்காதிருப்பதால் இவ்வளவு உயிர்கள் பாதிக்கப்பட்டன. பல உயிர்கள் பற்றிய விவகாரம் இது. உயர்த்தியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ரெயில்வே அதிகாரிகள் அப்படி ஒரு உத்தரவு போட்டார்களா என்பதைப்பற்றி அந்த இலாகாவோடு தொடர்பு கொண்டு இந்தச் சபைக்கு சமர்ப்பிக்குமாறு தாங்கள் உத்தரவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சபாநாயகர் அவர்கள் உத்தர விட்டால் அரசாங்கம் அதை கவனிக்கும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இந்த பள்ளிப்பட்டி ரெயில் விபத்தின்போது முதல் உதவி செய்யச் சென்ற அடுத்த ரெயில் விபத்துக்கு உள்ளானது உண்மையா ? அதில் ஏற்பட்ட சேதங்கள் எவ்வளவு ? காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

Quarterly list of Gazetted Officers

* 175 *Q.*—Sri M. SHUNMUGAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to revive the publication of the quarterly list of Gazetted Officers in the Madras State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : It has been decided to revive the publication of the Quarterly Civil List.

[8th March 1965

காலாண்டுக்கு ஒருமுறை வெளியிடப்பட்டு வந்த அரசிதழ் பதிவு பெற்ற சிவில் அலுவலர் பட்டியலை மீண்டும் வெளியிடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Rebate on handloom cloth

* 176 Q.—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Industries be pleased to state the amount of rebate granted for the sale of handloom cloth up to 30th September 1964?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ரூபாய் 36,99,773.93.

திரு. எம். வி. கரிவேங்கடம்: கடந்த ஒரு வருடமாகப் பொங்கலுக்குக் கொடுக்கப்படுகிற விசேஷ ரிபேட், "கைத்தறி வாரம்" என்று ஒரு வாரம் ஏற்படுத்தி அப்போது கொடுக்கப்படுகிற விசேஷ ரிபேட், நிறுத்தப்பட்டிருப்பது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த வருஷம் நிறுத்தப் பட்டது.

திரு. எம். வி. கரிவேங்கடம்: அப்படி நிறுத்தப்பட்டதற்குக் காரணமென்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த ஆண்டு ஜனவரி மாதம் பொங்கலின்போது தேக்கம் அதிகமாக இல்லை. அதனால் நாம் கைத்தறி விழா வழக்கப்படி கொண்டாடும்போது கூடுதலாக 7 நாள் என்பதற்குப் பதில் 15 நாட்களுக்குக் கொடுக்கலாம் என்று—இதற்கு முன்பும் நடந்திருக்கிறது—அந்தமாதிரி செய்ய உத்தேசித்திருந்தோம். கலவரங்கள் காரணமாகக் கைத்தறி வாரம் நடத்தப்படவில்லை. அதனால் ரிபேட் கொடுக்கப்படவில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் களுக்கு நேரடியாக அவர்களுக்கு இந்த ரிபேட் சலுகை கிடைக்கும்படி செய்வதற்கு ஏதாவது உத்தேசமுண்டா? இப்போதுள்ள நிலையில் வாங்குபவர்களுக்குத்தான் அந்தச் சலுகை இருக்கிறது. உற்பத்தி செய்யக் கூடிய நெசவாளர்களுக்கு அல்லது மாஸ்டர்களுக்கு இந்தச் சலுகை போகும்படி ஏற்பாடு செய்ய முன்வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தவிதமான உத்தேசம் இல்லை.

திரு. டி. எல். சசிவர்ண தேவர்: "கைத்தறி வாரம்" மீண்டும் நல்ல சூழ்நிலையில் கொண்டாடி இந்தமாதிரி ரிபேட் கொடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எப்ரல் 4-ம் தேதியில் இருந்து கொண்டாடுவதற்கு உத்தேசித்திருக்கிறோம்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: இந்த ரிபேட் முறை யானது இப்போது கைத்தறி பிரதம நெசவாளர்கள் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக பல தவறான பில்கள் போடப்படுகிறது என்று சொல்லி பல மாதங்கள் கழித்து கண்டு

பிடிக்கப்பட்டு அதன் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. ஆகவே இந்த ரிபேட் முறையை, இப்போது கொடுக்கப்படுகிற முறையை, மாற்றி வேறு முறையில் நெசவாளர்களுக்கு உதவி செய்வதற்கான முறையை ஏற்படுத்த ஏதாவது உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நெசவாளர் சங்கங்களிடம் இருந்து அந்தவிதமான கோரிக்கைகள் வருமானல் சர்க்கார் பரிசிலனை செய்யும். இப்போதுள்ளபடி இந்த முறைதான் நல்லது என்று அவர்கள் நினைக்கிருர்கள்.

Financial assistance to weavers

* 177 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the nature of help rendered by the Handloom Finance Corporation to weavers; and

(b) the number of weavers benefited so far?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இது வரை ஒன்றும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

இந்தக் கேள்விக்கு பதில் எழுதிய பிறகு, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிலிருந்து காஷ் க்ரெடிட் நடைமுதல் பணம் 2 கோடி ரூபாய் இந்த கார்ப்பரேஷனுக்கு வழங்கியிருக்கிருர்கள். ஆகவே இப்போது கடன் கொடுக்கத் தொடங்கி விடும்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : இரண்டு கோடி ரூபாய் கடன் வழங்கியிருப்பதாகவும், கடன் கொடுக்கத் தொடங்கியிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் கூறிஞர்கள். அதனுடைய விவரத்தைச் சுருக்கமாக வெளியிடுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி கேட்டால் ஒரு அறிக்கை மேஜை மீது வைக்க முடியும். விவரங்களை வாயால் சொன்னல் ஒன்றுக்கு ஒன்று விட்டுப்போய் விட்டால் பிரசுரம் ஆகும்போது தவருன பிரசுரம் வந்துவிடும் என்று அஞ்சுகிறேன்.

Spinning mill (Kanyakumari district)

* 178 Q.—SRI A. KUNJAN NADAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether sanction has been accorded for the opening of a spinning mill in Kanyakumari district in the private sector; and

(b) whether the mill has started functioning?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Government of India have issued a licence for the establishment of a cotton spinning mill with 12,000 spindles in the private sector in Kanyakumari district.

(b) The mill has not been established yet.

[8th March 1965

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இந்த ஸ்பின்னிங் மில் ஏற்படுத்துகிற விஷயத்தில் எல்லா மாவட்டங்களிலும் கொடுத்திருக்கிற லைசென்சுகளை லைசென்ஸ் பெற்றவர்கள் சீக்கிரமாகப் பயன்படுத்தாமல் காலதாமதப்படுத்தி வருகிறார்கள். ஆகவே இவ்வளவு காலத்திற்குள் அந்த மில்லை ஏற்படுத்த வேண்டும். இல்லை என்றால் அந்த மில்லுக்குக் கொடுத்த லைசென்சை ரத்து செய்ய வேண்டுமென்று, அரசாங்கம் லைசென்ஸ்தாரர்களை வற்புறுத்துமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போதே மத்திய சர்க்கார் லைசென்ஸ் கொடுக்கிற விதிகளை கனம் அங்கத்தினர் அவர்கள் பார்த்தால் தெரியும். ஆறு மாதங்களுக்குள்ளாக உடனடியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள்ளாக இன்னின்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அதில் கண்டிருக்கிறது. அவ்வாறு எடுக்காவிட்டால் ரத்து செய்வதற்கு மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.

Sri R. PONNAPPA NADAR: Sir, may I know whether there is any proposal to cancel that licence and grant it to some other person because it has exceeded the time-limit?

The Hon. Sri R. VENKATARAMAN: Sir, the Madras Government are very reluctant to cancel any licence. We are anxious that all the licences that are granted to this State should be implemented. We know that there has been delay in the implementation of this licence and the Government are endeavouring their best to see that the licence is implemented.

திரு. டி. கார்ச்சா கவுடர்: எல்லா மாவட்டங்களிலும் நூற்பு மில்கள் அமைப்பதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் நீலகிரி இந்த காட்டிகரியில் வரவில்லை. கோவையில் இருந்து நீலகிரியில் மில் ஆரம்பிக்க இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு விண்ணப்பம் போட்டிருந்தார்கள். அதை அமைச்சர் அவர்கள் அனுதாபத்தோடு கவனித்து இந்த ஆண்டு அங்கு மில்கள் ஏதாவது ஆரம்பிக்க உத்தேசிப்பாரா ?

The Hon. Sri R. VENKATARAMAN: Sir, this is a request. The Government will always bear in mind all the requests made in this House.

Cholera (North Arcot district)

*179 Q.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether information has been received about the incidence of Cholera in North Arcot district;

(b) if so, the details thereof; and

(c) whether accommodation has been made available in all ten taluk hospitals for treatment of Cholera patients?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம்.

(இ) 1964 ஆகஸ்ட் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரையில் அந்த மாவட்டத்தில் காலரா நோயுற்றவர் 411 பேர்கள், அவர்களில் இறந்தவர்கள் 127 பேர்.

(உ) ஆம்.

Women's Organisation (Pudukkottai)

*180 Q.—Sri A. THIAGARAJAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the representatives of various Women's Organisations at Pudukkottai presented any memorandum to the Chief Minister on 7th September 1964, regarding the work relating to the Women and Child Welfare in Pudukkottai; and

(b) if so, the action taken thereon?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ), (இ) புதுக் கோட்டையிலுள்ள பல்வேறு மாதர் சங்கங்களின் பிரதிநிதி களிடமிருந்து மனு எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால் புதுக்கோட்டை, வடக்குராஜ வீதியிலுள்ள மாதர் நல சங்கத்தினிடமிருந்து, 1964 அக்டோபர் 7 தேதியன்று கிடைத்த கோரிக்கைகளடங்கிய மனு, பரிசிலனையிலிருக்கிறது.

திரு. ஆ. துரையரசன்: அந்தக் கோரிக்கைகள் என்னென்ன என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கோரிக்கைகள் பரிசீலனையில் இருக்கின்றன. அது தீர்ந்த பிறகுதான் எது எது என்று கூற முடியும்.

திரு. ஆ. துரையரசன்: பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். என்ன கோரிக்கைகள் என்று சபையில் விளக்குவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பல கோரிக்கைகள் இருக்கின்றன. எது எது என்று கூறுவதற்கு இயலாது. அவைகள் எல்லாம் பற்றி பரிசீலனை முடிந்த பிறகு தனியாகக் கேள்வி ஒன்றை அங்கத்தினர் அவர்கள் போட்டால் கூறப்படும்.

Prohibition of obscene exhibits

*181 Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to prohibit exhibition of obscene posters and literature, in the State; and

(b) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம்.

(ஆ) இந்த விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

[8th March 1965

9-00 a.m. **திரு. வை. சங்கரன்:** உதாரணமாக இங்குள்ள சில சினிமாக் கொட்டகைகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய "விமன் பை நைட்" "யூனிவர்ஸ் பை நைட்" போன்ற படங்களின் விளம்பரப் படங்கள் கொட்டகைகளின் வெளியே வைக்கப்பட்டிருக்கின்றன. இதன் விளம்பரச் சுவரொட்டிகள் மிகவும் கீழ்த்தரமான உணர்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இதனால் பல விதமான இடைஞ்சல்கள் ஏற்படக்கூடும். ஆகவே இது போன்ற ஆபாசச் சுவரொட்டிகளைத் தடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்த மாதிரியான சுவரொட்டிகள் அங்கங்கே ஒட்டப்படுகின்றன என்று பல புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளைப்பற்றி கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசாங்கத்திலிருந்து வந்திருக்கக்கூடிய உத்தரவின் கீழ் ஆங்காங்கு இருக்கின்ற கலெக்டர்களுக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் எந்தெந்த ஐ.பி.சி. பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப்பற்றி விசாரித்துக் கேட்டு எழுதப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து ரிப்போர்ட் வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன்: விஷம் தலைக்கு ஏறிய பின்னால் நடவடிக்கை எடுத்துப் பிரயோசனம் இல்லை. ஆகவே இதைத் தடுப்பதற்கு அவசரமாக நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன் வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: நடவடிக்கைகள் எல்லாம் சட்டப்படி எடுக்க வேண்டும். அவசரப்பட்டு சட்டவிரோதமாக ஏதாவது நடவடிக்கை எடுத்தால் வெறும் விஷம் மாறி, பாம்பு விஷம் போல் ஏறி, நம்முடைய அடிப்படை நோக்கமே கெட்டு விடும்.

திரு. இராம. அரங்கண்ணல்: கடந்த இரண்டு மூன்று மாதங்களாக நிதி காரியங்களுக்காக நடத்துகிறோம் என்று சொல்லி, சில பிரபல கல்யாண மண்டபங்களில் மேல் நாட்டுமுறையில் "பால் டான்ஸ்" முதலியவைகள் நடந்து வருகின்றன. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கல்யாண மண்டபங்கள் தனிப்பட்டவர்களுடைய இடங்கள். அதில் எந்தவிதமான காரியங்கள் நடைபெறுவதற்கும் அவர்கள் அனுமதி கொடுக்கலாம். அதற்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொள்வதற்கில்லை.

Advance to the Corporation of Madras for purchase of Pipes

* 182 *Q.*—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the sum of Rs. 50 lakhs was given as advance for the purchase of pipes to the Corporation of Madras; and

8th March 1965]

(*b*) if so, whether the entire amount had been utilised ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No Sir.

(*b*) Does not arise.

MR. SPEAKER : Questions are over.

[**Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II. ADJOURNMENT MOTION *re.* STATIONING OF INDIAN ARMY PERSONNEL IN SOME PLACES.

SRI K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I wish to draw the attention of the Hon. the Chief Minister to the following matters of urgent public importance, viz. :—

" That this House do stand adjourned to discuss the situation created by the stationing of the Units of the Indian Army personnel in various district headquarters, urban centres and rural areas and the recent announcement of the Inspector-General of Police to continue the stationing of the said Units for a period of six months causing thereby panic, unrest and fear in the mind of the people residing in those areas and resulting in their desertion of habitation and livelihood, leaving crops, cattle and property, their hearth and home and flying to nearby jungles, thus curtailing their freedom of movement and preventing them from carrying on their normal avocations. "

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அவசரப் பிரேரணைக்குரிய விஷயத்தைப் பற்றித் தங்கள் முன்னால் சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். இதிலுள்ள சில முக்கியமான கருத்துக்களை மட்டும். . .

கனம் சபாநாயகர் : இதில் என்னென்ன சொல்லவேண்டுமோ. அதைப்பற்றி எல்லாம் கனம் அங்கத்தினர் தங்கள் பிரேரணையில் பலமாகச் சொல்லியிருக்கிறார்கள். . .

திரு. கே. ஏ. மதியழகன் : இதைப்பற்றிய எக்ஸ்ப்ளனேஷனை மட்டும் குறிப்பிடுகிறேன் . . .

கனம் சபாநாயகர் : எக்ஸ்ப்ளனேஷன் வேண்டியதில்லையே, கனம் அங்கத்தினர் கொடுத்திருக்கின்ற எக்ஸ்ப்ளனேஷன் போதுமானது. இதில் குறிப்பிடாத வேறு ஏதாவது ரூல்ஸ், லா ஏதாவது இருக்குமானால் அதைப்பற்றி மட்டும் சொல்லலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்படி ஒரு நாட்டில் சிவில் லா இருக்கும் போது மிலிட்டிரியை கொண்டு வந்து வைத்திருப்பதும், இதன் மூலமாக அரசியல் சட்டத்தின் மூலமாக மக்களுக்கு இருந்து வந்த "ப்ரீடம்" சுதந்திரம், ப்ரொஃபெஷன், பிசினஸ் இவைகளில் இன்றைக்குச் சுதந்திரமாக ஈடுபடுவதற்கு முடியாத அளவில், இங்கு கொண்டுவைத்திருக்கின்ற மிலிட்டிரிகளின் மூலமாகத் தடை ஏற்படுகிறது. மக்களுக்கு

டெர்ரரிசம், இன்டிமிடேஷன் இவைகள் எல்லாம் ஏற்படுகின்றன. இதை நாம் தடுத்தாக வேண்டும். ஆகவே மிலிட்டிரியை வாபஸ் ஆக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகின்ற முறையில் கொடுந் திருக்கின்ற இந்த அவசரத் தீர்மானத்தை தாங்கள் அருள் கூர்ந்து அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இது தீர்மானம் அல்ல, இது அவசரப் பிரேரணை. பொதுவாக, இந்தச் சபையில் அவசரப் பிரேரணை கொண்டு வரவேண்டும் என்றால் அதற்கு ஏதாவது சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்கள் இருக்க வேண்டும். ஆகவே, இந்த விஷயம் அவசரப் பிரேரணைக் குரியதல்ல என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்கள் சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்கள் என்றோ, அதையொட்டிய சம்பவங்கள் என்றோ எடுத் துக்கொள்வதற்கில்லை. இங்கே குறிப்பிட்ட காவல் இப்போது மட்டுமல்ல, சில நாட்களாகவே இருந்து வருகிறது. மேலும் ஐ. ஜி. அவர்கள் ராணுவத்தை மேலும் வைத்திருப்போம் என்று சொன்னதாக, அவர்களுடைய அவசரப் பிரேரணையில் குறிப்பிட் டிருப்பதும் சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் கள் கூறியதெல்லாம் வெளி மாநிலங்களிலிருந்து வரவழைத்த போலீசை ஐந்தாறு மாதங்கள் வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்று தான் சொல்லியிருக்கிறார்களே தவிர ராணுவத் தைப்பற்றி ஒன்றும் அவர்கள் சொல்லவில்லை என்பது தான் எனக்குத் தெரியும். சில பத்திரிகைகளில் செய்திகள் வேறு வித மாக வந்தது ; செய்திகள் என்றால் உள்ளே இருக்கக்கூடிய செய்தி சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் ஹெட்டிங்கில் மட்டும் "ராணுவம்" என்று போட்டிருக்கிறது. இது எந்த அளவிற்குப் பொருந்தும், இது பத்திரிகை தர்மம் என்று தான் நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. தலைப்பில் தான் இம்மாதிரி எல்லாம் எழுதப் பட்டிருக்கிறது. ராணுவத்தினரை வரவழைத்தது பற்றியெல்லாம் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் பலர் பேசினார்கள். இன்னும் பேசப் போகிறார்கள். அதற்கெல்லாம் நான் விடையளிக்கப்போ கிறேன். ஆகவே, நாட்டின் பாதுகாப்பையொட்டி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற விஷயம் இது. நிர்வாகத்தையொட்டி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற விஷயம் இது. இது அவசரப் பிரேரணைக்குரிய விஷயம் அல்ல என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் முதலமைச்சர் அவர்கள் இப் போது சொன்னதை யெல்லாம் பல நாட்களுக்கு முன்பே சொல்லி யிருக்க வேண்டும். ராணுவம் மேலும் வைத்திருக்கப்படும் என் றெல்லாம் செய்திகள் வந்த போது சொல்வது தான் சரியாக இருந் திருக்க முடியும். அப்படியில்லாமல் இப்போது சொல்வது சரி யல்ல. ஆகவே, இந்த விஷயத்தை அவசரப் பிரேரணையாகக் கருதி இதற்குத் தாங்கள் அருள்கூர்ந்து அனுமதி அளிக்கவேண் டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

8th March 1965]

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், ஒரு சந்தர்ப்பம் அல்ல, இரண்டு சந்தர்ப்பம் அல்ல, அமைச்சர்களோ அல்லது அதிகாரிகளோ பத்திரிகை நிருபர்களிடம் பேசியிருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது, இப்போது கனம் அமைச்சர் அவர்கள் சொல்வதிலிருந்து, பத்திரிகை நிருபர்களுக்குச் சொன்னதில் உள்ள கோளாறு அல்லது அதைப் புரிந்து கொள்வதில் இருக்கிற கோளாறு என்று தெரியவில்லை. அடிக்கடி பத்திரிகையில் இதைப் பற்றி. . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புரிந்து கொள்வதில் எந்த விதமான கோளாறும் இல்லை, பத்திரிகைகள் தலைப்புக் கொடுப்பதில் தான் கோளாறு. புரிந்து கொள்வதில் தவறு ஏற்படவில்லை, தலைப்புப் போடுவதில் உள்ள தவறு.

கனம் சபாநாயகர் : 'சப்ஜெக்ட்' எங்கேயோ போய் விட்டது. What can we do with such newspapers?

I do not think that this matter comes within the scope of an adjournment motion. I, therefore, withhold my consent.

III.—PRIVILEGE MATTERS.

(1) ALLEGED TREATMENT METED OUT TO SRI M. RAJANGAM, M.L.A., WHILE IN POLICE CUSTODY.

* **திரு. செ. மாதவன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மன்ற உறுப்பினர் திரு. இராசாங்கம் அவர்கள் போலீஸாரால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். சட்டவிரோதமாக இவ்விதம் தாக்கப்பட்டிருக்கிறார்கள். எலெக்டரிக் ஷாக் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதுகுத் தோல் உரிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி கனம் அங்கத்தினர் ஒருவரை, போலீஸார் தாக்கியிருக்கிறார்கள்.

கனம் சபாநாயகர் : இதைப்பற்றிய விவரம் தேவையில்லை, 'டார்ச்சர்' என்கின்ற ஒரு வார்த்தை போதுமானது. கனம் அங்கத்தினர் இவ்விதமெல்லாம் நடந்தது என்று சொல்லுவார்கள். சர்க்கார் தரப்பில் இல்லையென்று சொல்லுவார்கள். he hon. Member can explain how this matter comes under privilege.

திரு. செ. மாதவன் : இவ்விதம் ஒரு அங்கத்தினர் தாக்கப்படுகிற நிலை ஏற்பட்டால் அது இந்த மன்றத்தின் உறுப்பினருடைய உரிமையைப் பாதிப்பதாகுமா இல்லையா என்பது தான் இப்போதுள்ள பிரச்னை. பல தீர்ப்புகளிலே இது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 'அஸ்ஸால்ட்' 'மொலெஸ்டேஷன்' இவைகளை எல்லாம் உரிமைப் பிரச்னையாகும் என்று தீர்ப்பு அளிக்கப்படுகிறது. ஆனால் அந்தச் சமயத்தில் 'அஸ்ஸால்ட்', 'மொலெஸ்டேஷன்' என்பது உரிமைப் பிரச்னை ஆகும் என்பது நாம் கவனிக்க வேண்டிய ஒன்று ஆகும். இந்த நோத்திலே தனிப்பட்ட

[திரு. செ. மாதவன்] [8th March 1965

ஒரு நபர், ஒரு மன்ற உறுப்பினரைத் தாக்கினால் அது உரிமைப் பிரச்னை ஆகுமா? அல்லது போலீஸாரோ, அரசாங்கமோ ஆள் வைத்துத் தாக்கினால் அது உரிமைப் பிரச்னை ஆகுமா?

MR. SPEAKER: That is not the matter to be considered now. Under what circumstances the Member was assaulted and whether that would constitute a breach of privilege is the question to be considered.

திரு. செ. மாதவன்: மன்ற உறுப்பினர் இந்த மன்றத்திற்கு வரும்போதோ அல்லது திரும்பிச் செல்லும்போதோ தாக்கப் பட்டால் அது உரிமைப் பிரச்னை ஆகும் என்று ஏற்கனவே தீர் மானிக்கப்பட்டிருக்கிறது. நாம் இந்த உரிமைப் பிரச்னையில், போலீஸாரால் லாக்கப்பில் இருக்கும்போது தாக்கப்பட்டால், அது உரிமைப் பிரச்னையாக வருமா என்று நாம் கவனிக்க வேண்டிய பிரச்னையாக இருக்கிறது. ப்ளாக்ஸ்டோன் இதைப்பற்றி விரி வாகச் சொல்லியிருக்கிறார்கள் . . .

I shall read it now. "Privilege of Parliament was principally established in order to protect its Members not only from being molested by their fellow-subjects but also, more especially from being oppressed by the power of the Crown."

இதை விளக்கி 'மேஸ் பார்லிமெண்ட்டரி ப்ராக்டீஸ்' என்ற புத்தகத்தில் 1751-ல் நடந்த வழக்கு பற்றி 122-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"In 1751 Mason, a constable, for apprehending, insulting and abusing a member about 11 O'clock at night in the Liberty of Westminster and detaining him in confinement all night, and Carne, the High Constable of the City and Liberty of Westminster, for refusing to discharge him except upon condition that he would take no notice of what had passed, were voted guilty of a breach of privilege and committed."

என்ற குறிப்பு மேஸ் பார்லிமெண்ட்டரி ப்ராக்டீஸில் இருக்கிறது. "Apprenending, insulting and abusing" என்று வந்திருக்கிறது. அதுவும் இரவு நேரத்தில் போலீஸ் ஸ்டேஷனில் வைக்கப்பட்ட நிலையைக் கூறுகிறது. இந்த நிகழ்ச்சியிலும், நண்பர் ராஜாங்கம் அவர்கள் போலீஸ் லாக்கப்பில் இருக்கும்போது, சட்ட விரோத மான இப்படிப்பட்ட கொடுமை நடந்திருக்கிறது என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நான் இங்கே வற்புறுத்திக் கூற ஆசைப்படுவது, சாதாரணக் குடிமகன் என்ற முறையில் தீங்கு நேரிடும்போது சட்டப்படி நீதி மன்றத்திற்குப் போக வாய்ப்பு இருக்கிறது. ஆனால் சட்ட மன்ற உறுப்பினராக இருப்பதாலேயே சில கொடுமைகள் நிகழ்கின்றன. ஆகையினால் தான் சட்ட மன்றத் தில் இந்த உரிமைப் பிரச்னையைக் கிளப்ப வேண்டியிருக்கிறது. சட்ட மன்றமும் இதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டும். ஒரு தொகுதி யில் புரட்சி நடக்கிறது. அதற்குப் பல பேர்கள் காரணமாக இருக் கிறார்கள். அந்தத் தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினர் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர் என்ற ஒரே காரணத்திற்காக இப்படிப்

8th March 1965] [திரு. செ. மாதவன்]

பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. அதை நான் ஒரு புது நிகழ்ச்சியாகக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். அது உரிமைப் பிரச்னையாக வருமா வராதா என்று பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு ஒரு உதாரணம் சொல்ல ஆசைப்படுகிறேன். மேற்கு வங்காளத்தில் ஒரு பிரச்னை ஏற்பட்டது. உரிமைப் பிரச்னையா இல்லையா என்று குழுவிற்கு அனுப்புவதற்கு முன் 'ப்ரைமா ஃபாஸி' கேஸ் இருக்கிறதா இல்லையா என்று தாங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். இதற்கு 'ப்ரைமா ஃபாஸி' கேஸ் இருக்கிறது என்பது தான் இங்குள்ள பிரச்னை. காரணம், ஏற்கெனவே இதைப் போல ப்ரீஸீடென்ட் இல்லாமல் இருந்தால், அதை இந்த மன்றம், உரிமையாக வருமா, வராதா என்று தெரிந்து கொள்ள ப்ரைமா ஃபாஸி கேஸ் இருக்கிறது என்று சொல்லி, உரிமைக் குழுவிற்கு அனுப்பலாம். அதற்கு ஆதாரம் இருக்கிறது. மேற்கு வங்காளத்தில் இப்படிப்பட்ட ஒரு சர்ச்சை வந்தது. ப்ரிவென்டிவ் டிடென்ஷன் ஆக்டின் கீழ் கைது செய்யப்பட்ட நிலையில் உரிமைப் பிரச்னை வருமா என்ற சர்ச்சை வந்தது. 1939-ல் 'காப்டன் ராம்ஸே கேஸில் இருந்து டிஃபென்ஸ் காஸஸ் உரிமைப் பிரச்னையாக வராது என்று ஏற்கெனவே அங்கே தீர்ப்பு இருக்கிறது. அதற்குப் பின் தேஷ்பாண்டே கேஸிலே, லோக் சபாவிலே ப்ரிவெண்ட்டிவ் டிட்டென்ஷன் ஆக்டின் கீழ் கைது செய்யப்பட்ட கேஸிலே உரிமைப் பிரச்னை வராது என்று தீர்ப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறது. மேற்கு வங்காளத்தில் உரிமைப் பிரச்னைக்கு வருமா, வராதா என்ற பிரச்னை வந்தபோது இது பற்றி விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. "ஒரு உரிமைப் பிரச்னையில் முதலில் இந்த மன்றம் கவனிக்க வேண்டியது ப்ரைமா ஃபாஸி கேஸ் இருக்கிறதா என்பதாகும். ஏற்கெனவே இந்த மன்றத்தில் அறுதியிட்டுத் தீர்க்கப்படாமல் இருந்தால் அது ப்ரைமா ஃபாஸி கேஸ் இருப்பதாக அமையும்" என்று மேற்கு வங்கச் சட்ட சபைத் தலைவர் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார். அதைத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

"Whether a distinction can be drawn between such cases and cases of preventive detention under ordinary law as to whether the House should exercise its right of parliamentary privilege only with reagrd to the attendance of the Members during silting hours if it thinks that the presence of such Members is absolutely essential for the discharge of parliamentary responsibilities."

"இந்த மன்றம் புதிதாக ஒன்றை எடுத்துக்கொண்டு, ஏற்கெனவே வேறு மன்றங்களில் தீர்ப்புச் சொல்லப்பட்டிருந்தாலும் இந்த மன்றத்தில் தீர்க்கப்படாத பிரச்னையாக இருப்பதால் அது ப்ரைமா ஃபாஸி கேசாக வரலாம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த என்னுடைய உரிமைப் பிரச்னையைப் பொறுத்தவரையில் எந்த மன்றத்திலும் அறுதியிட்டு முடிவு செய்யப்படவில்லை. நம் மன்றத்திற்கென்று தனியான உரிமைகள் உரிமைப் பிரச்னையைப் பொறுத்த அளவில் கொடுக்கப்பட்டிருப்பதாலும், இந்த மன்றத்திலே தீர்மானிக்கப்படாத நிலையில் இருப்ப

தால் இது ஒரு ப்ரைமா ஃபாஸியாக இருக்கும், அதை உரிமைக் குழு விசாரிக்கலாம் என்பது என்னுடைய பணிவான கருத்து ஆகும். இன்னும் குறிப்பிட்டிருக்கிறது.

"As Legislatures are sovereign so far as powers, privileges and immunities of its members are concerned, Deshpande's case in the House of the People may not necessarily be binding on State Legislatures.

As this is the first case of its kind in this Legislature after the new Constitution, I think I should give an opportunity to the Privilege Committee of this House to consider the matter in all its aspects. I, therefore, refer the matter of the Committee of Privileges of this House".

"Assault and molestation" ஒரு மன்ற உறுப்பினர் போலீசாரால் தாக்கப்பட்டிருக்கிறார், காயப்படுத்தப்பட்டிருக்கிறார். சட்டத்திற்குப் புறம்பாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பது வாதம். இந்த உரிமைப் பிரச்னையைப் பொறுத்த அளவில் எந்த மன்றத்திலும், இந்த மன்றம் உட்பட, தீர்மானிக்கப்படவில்லை என்பது என்னுடைய வாதம். 1953-ல் ஒரு பிரச்னை திரு. என். கே. பழனிசாமி என்பவரைப் பற்றி திரு. கே. பி. கோபாலன் என்ற உறுப்பினர் சட்ட சபையிலே கொண்டு வந்திருக்கிறார். என்றாலும் அதிலே 'அஸ்ஸால்ட் அண்ட் மொலெஸ்டேஷன்' என்று குறிப்பிட்டிருக்கிறதே தவிர அப்போது நிகழ்ந்த நிகழ்ச்சியிலே இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி, அடிக்கப்பட்டதாகவோ, தாக்கப்பட்டதாகவோ ப்ரொஸீடிங்ஸிலே காணப்படவில்லை. 1953-ல் கொடுக்கப்பட்ட தீர்ப்பும் அஸ்ஸால்ட் அண்ட் மொலஸ்டேஷனுக்கு தான் பொருந்தும், இந்த நிகழ்ச்சிக்குப் பொருந்தாது என்பது என்னுடைய வாதம். வேறு மன்றங்களிலும், எந்த மன்றத்திலும் எந்த மாதிரியான ஒரு பிரச்னையின் மீது தீர்மானம் கொடுக்கப்படவில்லை. மேஸ் பார்லிமெண்ட்டரி ப்ராக்டிஸில் ஒரு குறிப்பிட்ட வழக்கைத் தவிர வேறு இல்லை. புதிதாக இருக்கிற காரணத்தினால் இதற்குப் ப்ரைமா ஃபாஸி கேஸ் இருக்கிறது, உரிமைப் பிரச்னையாக வருமா, வராதா என்று தீர விசாரித்து ஒரு முடிவுக்கு வருவது ஒரு நல்ல ப்ரீஸிடெண்ட்டாக இருக்கும் என்று கருதி இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பும்படி தங்களைப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர் போலீஸ் பாதுகாப்பில் இருக்கும்பொழுது வதை செய்யப்பட்டிருக்கிறார் என்பது ஒரு முக்கியமான பிரச்னை. இந்தச் சபையின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்கு வரும்பொழுது தாக்கப்பட்டாரா அல்லது போகும்பொழுது தாக்கப்பட்டாரா என்பது மட்டும் அல்ல இதில் பார்க்க வேண்டியது. இந்தச் சபையின் அங்கத்தினர்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டியது முக்கியமானது. அதாவது, பயம் இல்லாமல், தயவு தாட்சண்யம் இல்லாமல், இந்தச் சபையின் அங்கத்தினர்கள் தங்களுடைய கடமையை ஆற்றுவதற்கும்,

8th March 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

இந்தச் சபையின் அங்கத்தினர் என்ற முறையில் தன்னுடைய தொகுதியில் பணிபுரிவதற்கும், நிர்வாகத்தில் குறை இருந்தால் அதைப்பற்றிப் பயப்படாமல், தயவு தாட்சண்யம் இல்லாமல் எடுத்துக் கூறுவதற்கும் தகுந்த சூழ்நிலை இருப்பது மிகவும் முக்கியம். அதைத் தாங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். சாதாரண பிரஜைகளிடமிருந்து கூட, போலீஸ் பாதுகாப்பில் இருக்கும்பொழுது, இப்படி 'தேர்டு டிகிரி மெதட்ஸ்'—மூன்றாம் தர முறைகளை--உபயோகப்படுத்தி சாட்சியங்களைச் சேகரிப்பது தவறு. சாதாரணப் பிரஜைக்கு இது சம்பந்தமாக வேறு பரிகாரம் இருக்கலாம். அதைப்பற்றி சம்பந்தப்பட்ட மாஜிஸ்ட்ரேட் முன்பு மனுச் செய்து கொள்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கலாம். ஆனால், இந்தச் சபையின் அங்கத்தினருக்கு அப்பேர்ப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுமானால், மற்றவர்களுக்கும் ஒரு அச்சம் ஏற்படும். இது அங்கத்தினர் திரு. ராஜாங்கத்தைப்பற்றிய பிரச்னை மட்டும் அல்ல. இந்தச் சபையின் அங்கத்தினர்கள் போலீஸ் நிர்வாகத்தைப் பற்றி பல சந்தர்ப்பங்களில் இந்தச் சபையில் கண்டித்துப் பேசலாம், நிர்வாகத்தைப்பற்றி கண்டித்துப் பேசலாம், அதற்காக தங்கள் மீது போலீஸார் பழி வாங்கக் கூடும், வஞ்சம் தீர்த்துக் கொள்ளக் கூடும் என்ற அச்சம் ஏற்படக் கூடாது, இந்தச் சபையின் அங்கத்தினர்களுக்கு. அப்பொழுது தான், பயம் இல்லாமல், தயவு தாட்சண்யம் இல்லாமல், இந்தச் சபையின் அங்கத்தினர்கள் தங்கள் கடமையை ஆற்றுவதற்கு முடியும். சபையின் அங்கத்தினரிடம் 'தேர்டு டிகிரி மெதட்ஸ்' உபயோகப்படுத்தியது பற்றி நாம் தனியாக விசாரிக்க வேண்டும். இது இந்தச் சபையின் அங்கத்தினர்களுடைய உரிமையைப் பாதிக்கக்கூடிய பிரச்னையாகும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்த மாதிரி ஒரு விஷயம் உரிமைப் பிரச்னைக்கு விடப்படாமலே தீர்க்கப்பட்டிருக்கிறது. பஞ்சாப் சட்டசபை அங்கத்தினர் ஒருவர் கையில் விலங்கிட்டு அழைத்துச் செல்லப்பட்டபொழுது அதைப் பற்றி விசாரிக்கப்பட்டு, போலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அங்கத்தினர் கையில் விலங்கிட்டதே தவறு என்று சொல்லப்படுகிறபொழுது, இம்மாதிரி இந்தச் சபையின் அங்கத்தினர் ஒருவரை வதைகள் செய்தது உண்மையாக இருக்குமானால், அது இந்தச் சபையின் அங்கத்தினர்கள் அனைவருக்கும் அச்சத்தை ஏற்படுத்தக் கூடும், திகிலை ஏற்படுத்தக் கூடும். நிர்வாக நிகழ்ச்சிகள் சம்பந்தமாகப் பல சந்தர்ப்பங்களில் இங்கே பேசக்கூடும். நான் இங்கே இன்னும் சிறிது நேரத்தில் பேசுவதற்கு இருக்கிறேன். அப்படிப் பேசும்பொழுது அச்சம் இல்லாமல், தயவு தாட்சண்யம் இல்லாமல் பேசுவதற்கான சூழ்நிலை இருக்க வேண்டும். நாமெல்லாம் அரசியல்வாதிகள், ஏதாவது ஒரு கிளர்ச்சியில் ஈடுபடலாம். ஆகவே போலீஸ் பாதுகாப்பில் இருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் எதிர்க் கட்சி அங்கத்தினர்களுக்கு ஏற்படுவது இயல்பு. அப்படி ஏற்படுமானால், ஏதாவது ஒரு நிகழ்ச்சியை மனதில் வைத்துக்கொண்டு போலீஸ்காரர்கள் எதிர்க் கட்சி அங்கத்தினர்களை வதைக்கு உட்படுத்தக்கூடிய நிலைமை

ஏற்படக் கூடாது. இந்தச் சபையின் அங்கத்தினர்கள் அச்சத்திற்கு இடம் இல்லாமல், தயவு தாட்சண்யம் இல்லாமல் தங்களுடைய கடமையைப் புரிவதற்கு சாதகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டியது மிகவும் அவசியம். ஆகவே, இந்தப் பிரச்னையை இந்தச் சபையின் உரிமைக் குழு விசாரித்து, இது உரிமைக்குள் வருமா, எந்த அளவுக்கு வரும் என்று தீர்மானிக்க வேண்டிய கடமை இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, தாங்கள் இதை உரிமைக்குரிய விஷயம் என்று கருதி, உரிமைக் கமிட்டியின் பரிசீலனைக்கு விட்டு, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு.** இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்களால் எழுப்பப்பட்டிருக்கிற உரிமைப் பிரச்னையை உரிமைக் குழுவின் பரிசீலனைக்கு விடுவதன் மூலம் நல்ல தெளிவு பெறலாம் என்ற கருத்தினை கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்களும், கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். முன்பே கூட கனம் உறுப்பினர் திரு. சங்கரனைப் பொறுத்து மதுரையில் நடந்த சம்பவம்பற்றிய பிரச்னை இந்த மன்றத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. இந்த மன்ற உறுப்பினர்கள் தவறு செய்வார்களேயானால், முறைப்படி, சட்டப்படி போலீஸ் நடவடிக்கை எடுப்பதற்கு, வழக்குத் தொடருவதற்கு, நீதிமன்றத்தில் தண்டனை வாங்கித் தருவதற்கு, உரிமைகள் இருக்கின்றன. ஆனால், பாதுகாப்பில் இருக்கும்பொழுது, அவரை துன்புறுத்தி, அடித்துக் கொடுமைப்படுத்தி, அவரைப் பல்வேறு வகைகளில் இணங்க வைக்கிற முறைகளுக்கு இடம் ஏற்படுமேயானால், கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டது போல, சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமையை தன்னுடைய தொகுதியில் செவ்வனே செய்வதற்கு வாய்ப்பு ஏற்படாத நிலை ஏற்பட்டுவிடும். மன்ற உறுப்பினர்களின் மதிப்பு காப்பாற்றப்பட வேண்டும். அவர்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று மதிக்கத் தக்க ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டும். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் மட்டுமல்ல, இந்த மன்றத்தில் இருக்கிற அத்தனை உறுப்பினர்களின் மதிப்பும் காப்பாற்றப்பட வேண்டும். அவர்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்கின்ற அளவுக்கு அவர்களை மதிக்க வேண்டும். அவர்கள் மீது சட்டப்படியான தவறுகள் இருந்தால், சட்டப்படியான நடவடிக்கைகள் இருந்தால், சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு போலீஸுக்கு முழு உரிமை இருந்தாலும், அவர்களை கொடுமைப்படுத்தி, அடித்து, துன்புறுத்துவதற்கு இடம் கொடுப்போமானால், எதிர்காலத்தில் பலரும் தங்கள் தங்களது கடமைகளை உண்மையாக ஆற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அதுவும் எதிர்க் கட்சியினர்கள் பல்வேறு கிளர்ச்சிகளில் ஈடுபடக்கூடிய காலத்தில், அவர்களை இப்படிப்பட்ட காவல் இடங்களில் வைக்கப்படும் சூழ்நிலை ஏற்படும். கனம் உறுப்பினர் திரு. ராஜாங்கத்தின் நிலைமையை அப்படியே விட்டுவிடுவோமானால்

8th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அது ஒரு முன் மாதிரியாக அமைந்து, பலரும் அம்மாதிரி துன்புறுத்தப்படுவதற்கான கொடிய நிலை ஏற்பட்டுவிடும். மன்ற உறுப்பினர்களின் மதிப்பு காப்பாற்றப்படவேண்டும். அவர்களை அவமானப்படுத்தக்கூடிய, அவர்களுக்கு தீமைகள் இழைக்கக் கூடிய நிலைமை இருக்கக் கூடாது. அவர்களுடைய மதிப்பு எல்லா வகையிலும் காப்பாற்றப்பட வேண்டும், சந்தேகத்திற்கு அப்பாற் பட்டவர்கள் என்று கருதப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படவேண்டும் என்பதை நிலைநாட்டுகிற முறையில் இதை ஒரு உரிமைப் பிரச்னை யாகக் கருதி, உரிமைக் குழுவின் ஆய்வுக்கு விட்டு நல்லதொரு முடிவு ஏற்பட வேண்டும். எதிர்காலத்தில் அது வழிகாட்டியாக அமையக்கூடும். இதைப் பொறுத்துத் தீர்ப்பு வழங்க வேண்டிய நிலைமையில் இப்பொழுது இல்லை. இது உரிமைக் குழுவின் பரிசீலனைக்கு விடவேண்டிய ஒன்று, இல்லையா என்பதைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். இதை உரிமைக் குழுவின் ஆய்வுக்கு விடுவதன் மூலம், ஒரு நல்ல நிலைமை ஏற்படக்கூடும்; இதைப் பொறுத்து நல்லதொரு தீர்ப்பு ஏற்படக்கூடும், அதை எடுத்துக்காட்டாக வைத்து மன்றத்தை நடத்திச் செல்வதற்கு வழிவகைகள் ஏற்படும் என்ற முறையில், இதை உரிமைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, சம்பந்தப்பட்ட உறுப்பினர் வதை செய்யப்பட்டார் அல்லது சித்திரவதை செய்யப்பட்டார் என்று கூறப்படுவதை நான் முற்றிலும் மறுக்கிறேன். இந்த மன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, சாதாரண பிரைஜையாக இருந்தாலும் சரி, இதில் வித்தியாசம் பாராட்டுவதைக்கூட நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஒரு சாதாரணப் பிரஜையாக இருந்தாலும் அவரையும் வதை செய்யக் கூடாது. அது முற்றிலும் தவறு. அப்படி யாரேனும் செய்தார் என்று ஏற்பட்டால், அவர் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. இந்த விஷயத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. மாஜிஸ்டிரேட் முன்பு வழக்கு வரும். அப்பொழுது இதிலே குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்க ளுக்குள்ள குறைகளை, போலீஸ்காரர்களால் ஏற்பட்ட குறைகளை, இவைகளையெல்லாம் எடுத்து அங்கே கூற முடியும். அதற்குப் பிறகு மாஜிஸ்டிரேட் இவைகளையெல்லாம் விசாரித்து, நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். இதிலே இந்த நிலையிலே 'பிரைமா பாஸி' கேஸ் ஒன்றும் இல்லை. ஆகவே, இதிலே உரிமைப் பிரச்னை எழவில்லை என்று தான் தங்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: Sir, I am not pleading for the hon. Member, Sri Rajangam. But I am pleading for the whole House and for all the hon. Members.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அப்பொழுதே சொல்ல வேண்டியவைகளைச் சொல்லிவிட்டார்களே !

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சம்பந்தப்பட்ட அங்கத்தினர் வேண்டு மானால் கோர்ட்டுக்குப் போகலாம். ஆனால், இதிலே எல்லா அங்கத் தினர்களும்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது என் னுடைய பிரச்னை.

MR. SPEAKER : Ruling is reserved.

9–30 a.m

(2) EDITORIAL IN THE DAILY "NAM NADU".

MR. SPEAKER : The hon. Member, Sri Karcha Gowder, has given notice of a privilege matter. His case is clear and he may explain it, confining his argument to facts and rules.

***திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்த மன்றத்திலே 3-3-1965 அன்று நிகழ்த்திய உரையைப் பற்றி 5--3—65 அன்று "நம் நாடு" என்ற பத்திரிகையிலே என்னை இழித்தும், குறைத்தும் எடிடோரியல் எழுதப் பட்டிருக்கிறது. எடிடோரியல் அல்லது ஆசிரியர் பகுதியில், 'கார்ச்சா கவுடரின் காட்டுக் கூச்சல்' என்று, நான் இந்தச் சபை யிலே நிகழ்த்திய உரையைப்பற்றித் தீட்டியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக சில வாசகங்களை தங்கள் அனுமதியின் பேரில் சபை முன் கொண்டுவர விரும்புகிறேன். 'விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப் பினர் கார்ச்சா கவுடர் அவர்கள், தம்மியல்புப்படி, கழகத்தை முறையற்ற முறையில் தூற்றி இருக்கிறார் அவர் தூற்றலைக் காட்டுக் கூச்சல் என்றுதான், வேதனையோடு குறிப்பிட வேண்டிய தாகிறது.' கனம் எதிர்க் கட்சித் தலைவர் ஆசிரியாக இருக்கும் ஒரு பத்திரிகையில் இப்படி எழுதப்பட்டிருப்பதைக் கண்டு வேதனைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, "எதிர்க்கட்சிகளால் தூண்டப்பட்ட ரௌடி களையும்—என்--எதிர்க்கட்சிகளில் சிலரையும் பீரங்கிகொண்டு சுட்டிருந்தாலும் நான் வரவேற்று இருப்பேன்" என்று சொன்ன தாகப் போடப்பட்டிருக்கிறது. ஆனால் நான் "எதிர்க் கட்சியிலே உள்ள இப்படிப்பட்ட சிலரையும், முதல் அமைச்சர் அவர்கள் துப்பாக்கி பிரயோகம் அல்லது பீரங்கி வைத்துச் சுட்டு இந்த நாட்டின் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்திருந்தாலும் நான் வரவேற்றிருப்பேன்" என்றுதான் சொன்னேன் என்று இந்தச் சமயத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன், அது தான் சட்டசபை ரிகார்டில் இருக்கிறது.

அதற்குப் பிறகு, "சட்ட மன்ற உறுப்பினர் கார்ச்சா கவுடர் அவர்கள் வெளியிட்டிருக்கின்ற கருத்து; நூற்றுக்கு நூறு பொய் யாகும், அவர் பேச்சில் கடுகளவு மனித உணர்வும் இருப்பதாகத் தெரியவில்லை" என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு கடுமை யாக எதிர்க் கட்சித் தலைவர் ஆசிரியராக இருக்கும் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறதே என்று நினைக்கவே முடியவில்லை.

8th March 1965] *[திரு. டி. கார்ச்சா கவுடர்]*

அதற்கு மேலாக, நான் சேர்ந்திருக்கும் தொகுதி மக்களை அவமானப்படுத்தும் வகையில், "காட்டாந்த மலைப் பகுதியைச் சேர்ந்த கார்ச்சா கவுடரிடம், இத்தகைய காட்டுக் கூச்சலைத் தவிர வேறு எதையும் நாம் எதிர் பார்க்கக் கூடாது போலும்" என்று எழுதி நான் சேர்ந்திருக்கும் தொகுதி மக்களையும் குறைவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது.

அதன் பிறகு, "முதல் அமைச்சர்—கார்ச்சா கவுடர் ஆக இருவரும் கூட்டாக."

கனம் சபாநாயகர் : அதிலே ஒன்றும் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த மாதிரி நான் பேசியதைத் திரித்தும், முறையற்ற வகையிலேயும் ஆசிரியர் பகுதியில் தலைப்புக் கொடுத்து எழுதியிருப்பது குறித்து நான் வருந்துகிறேன். ஆகவே அதைத் தங்களுடைய தீர்ப்பிற்கு விட்டு தாங்கள் நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. கார்ச்சா கவுடர் "நம் நாடு" தலையங்கத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். "நம் நாடு" வெளியிட்டிருக்கிற தலையங்கத்திலுள்ள கருத்துக்கள் பற்றியும் சுட்டிக் காட்டினார்கள். நான் அந்த ஏட்டுக்கு ஆசிரியனாக இருக்கிறேனே அல்லாது தலையங்கம் எழுதுவதெல்லாம் துணை ஆசிரியர்கள் தான். அப்படி எழுதும் துணை ஆசிரியர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும், அவர்கள் எழுதும் தலையங்கங்களுக்குக் கீழே அவர்கள் கையெழுத்துப் போட வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறேன். இந்தத் தலையங்கம் கூட திரு. காஞ்சி கலியாணசுந்தரம் எழுதியது என்று கையெழுத்திலிருந்து தெரிந்து கொள்ள முடியும். இதை நான் எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால், துணை ஆசிரியர்களால் எழுதப்பட்டது என்பதை எடுத்துக் காட்டவேதான். அது என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதும், அதற்காக நான் மிகவும் வருத்தப்பட்டேன். இந்தச் சட்டமன்ற உறுப்பினருடைய கவுரவத்திற்குக் குறைவு வரக்கூடாது என்று எண்ணுபவன் நான் உறுப்பினர் மதிப்பைக் குறைக்கும் செயலில் எப்பொழுதும் ஈடுபடாதவன் நான் என்பதை இந்த மன்றம் உணரும். யார் மனதையும் புண்படுத்தக் கருதாதவன் நான். இந்தத் தலையங்கம் என் பார்வைக்கு வந்தவுடனேயே, துணை ஆசிரியரைக் கண்டித்ததோடு எதிர்க் கட்சியில் உள்ள யாரையும்பற்றி அப்படி எழுதக் கூடாது என்றும் எச்சரித்திருக்கிறேன். அதற்காக வருத்தம் தெரிவித்து, 'வருந்துகிறோம்' என்ற தலைப்போடு, அந்த ஏட்டில் மறுநாள் நானே என் பெயரில் எழுதியிருக்கிறேன். திரு. கார்ச்சா கவுடர் அவர்களைப்பற்றித் தவறாக எழுதப்பட்டு விட்டது, அதற்காக வருந்துகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல, இந்த பிரச்சினை வருவதற்கு முன்பாகவே, தங்களிடம், இதற்காக வருந்துகிறேன், இனிமேல் இம்மாதிரி ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளுகிறேன் என்று சொல்லியுள்ளேன். கனம் உறுப்பினர் திரு. கார்ச்சா கவுடர் மட்டுமின்றி, மற்ற சட்ட மன்ற

உறுப்பினர்களும், யாராக இருந்தாலும், குறைவான முறையில் தாக்கப்படக் கூடாது என்பதில் அக்கறை கொண்டவன் என்ற முறையில் வருத்தம் தெரிவித்திருக்கிறேன் என்பதையும் இந்த மன்றத்தின் முன்னால் குறிப்பிடுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி இதோடு விட்டு விடலாம் என்று கருதுகிறேன்.

MR. SPEAKER : Of course, there is a *prima facie* case of breach of privilege. But I appreciate very much the sentiments expressed by the hon. the Leader of the Opposition, who is also the Editor of that paper. Therefore, I think that the matter may be dropped.

IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1965-66—*cont.*

MR. SPEAKER : The general discussion on the Budget will continue. The hon. Member, Sri C. Chiranjeevulu Naidu, will now speak. He should take only five to six minutes.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, I would like to say a few words on the Budget which has been presented before this House. As the time allotted to me is only six minutes, I would like to restrict myself to a few points. I welcome this Budget and the way in which it has been presented. The Budget speech has been a lengthy one—self-explanatory in nature—containing all the particulars regarding the developmental activities in the State. For the intensive cultivation of agriculture, a proper programme has been chalked out. Also in regard to minor irrigation and other schemes, much incentive is given to the agriculturists.

Regarding the industrial development of the State, I would like to say a few words. There has been a lopsided development so far as industries are concerned. There is concentration of industries in certain places and I request the Government to kindly look into that aspect of the matter and see that all the parts of the State are covered and given the benefit of industrialisation.

As regards power, there has been a notable improvement and that has to be appreciated.

So far as education is concerned, it has been proposed to open seven colleges. I would request the Government to open one college in Tiruvallur or Tiruttani to serve the needs of Tiruvallur, Tiruttani and Ponneri taluks.

As regards provision for medical facilities, I would request the Government to make some more allotment for the construction of buildings for the primary health centres and their staff in the rural areas.

It has been a matter for appreciation and gratification that the Dearness Allowance has been increased. We hope that the employees of the State Government will discharge their responsibilities and realise the need for toning up the administration. In

8th March 1965] [Sri C. Chiranjeevulu Naidu]

his connection, I also suggest that the M.T.A. and the F.T.A. rules may be revised. The rates of T.A. provided there were fixed many years ago and they do not have any relationship to the present cost of living. So, the rates may kindly be revised. I hope that in future no occasion will arise for them to wear black badges and come to the Secretariat and other places and that they will maintain discipline when a contingency arises to demand an increase in dearness allowance.

Regarding the food policy of the Government, I may say that the price control order is really and definitely a price support order so far as the producer is concerned. But I have my own doubts, whether the free movement of foodgrains must be restricted within the State by having check-posts. I feel that the Government should consider the desirability of having a free movement of foodgrains within the State. They may seal the borders of our neighbouring States. When there is a possibility of surplus foodgrains in our State, when our State is not so deficit, and when we can get our needs through procurement, there is no need to restrict the movement of foodgrains within the State.

As regards recent disturbances which have taken place in our State, I wish to say that the fact that the Honourable the Chief Minister has acted so courageously and magnanimously is a matter for appreciation. In this connection, I can only refer to the statement he has made on the eve of his departure for Delhi. 'We believe in the oneness and integrity of the country. The fact that we have obtained freedom after making hard scarifices is known to all of us and we should do nothing which would effect this concept. At the same time we should take steps to assure the people that they would not be affected by any change. This sentiment would be felt by all those who participated in the struggle for Independence against the then British Government. Stalwarts like our Hon. the Chief Minister have fought for the freedom of the country and to-day we are enjoying the fruits of our Swaraj. We wanted Swaraj and ye have obtained it and everyone of us should strive for safeguarding Swaraj in spite of political considerations. Sir, the question of language is a problem which has been facing this country. That has to be properly and dispassionately considered. That question has also to be considered deeply by eminent educationists in our country. There has been a move now to amend the Official Language Act and that will go a long way to satisfy the people who are entertaining a lot of fear that Tamil language would be destroyed and that Hindi would develop and take its place. But we cannot appreciate those people who have been agitating and crying "Hindi down, down". This is not the way in which our national language should be treated. No language in our country should be destroyed. All the languages in our country have to develop. Part XVII of the Constitution deals with the official language. It is not the State Government which is responsible for all these things. It has been provided in the Constitution itself. It should be the responsibility of the people concerned to have properly forethough that

such a thing would be injurious to the interests. Now our State Government are doing their best. The people have to wait patiently and represent their case to the Government. If these things had been borne in mind, all the recent acts of violence could have been avoided.

With regard to the happenings in Tiruttani, I am sorry to say that it is a matter for shame to all of us. There, the first target of attack was the Railway station. It looks as though it was an organised sabotage, because costly imported equipment in the cabin rooms including meters have been destroyed. Some of the valuable articles have been stolen. It has been said that several railway stations have been attacked and valuable materials have been destroyed. In Tiruttani, Sir, two more places have been attacked. One was the valuable Library which has been gifted by our beloved President Dr. S. Radhakrishnan, who is the illustrious son of the soil, and for whom every citizen of this country has got the utmost respect. He has gifted his house and also given Rs. 10,000 for the construction of the building. It is a matter for gratification that our benign Government has taken steps to advise the Tiruttani Devasthanam to construct the building and restore the Library. Certain valuable Sanskrit books, which are out of print have been destroyed. It is a matter for shame to all of us that such things should have happened and one Member told me that how mercy should be shown in respect of those who had damaged this valuable Library. The next building that was attacked was the District Munsif's Court. It is a memorable building which has been constructed with the contribution of every ryot in the Taluk in memory of Sri B. Munuswami Naidu, the late lamented peasant leader, who was for some time the Chief Minister of the composite State of Madras. Heavy damage was caused to this building. All articles of furniture were thrown out, the records were set fire to and the building has been destroyed. This is how things have taken place. I am not here to say as to who is responsible for these acts, and to what extent. It is for the Government to investigate the matter. But I would like to point out that such things are not in the best interests of the country. I had been myself a student congress leader and I have conducted about twenty strikes when I was a student leader. Mr. Hume was the then Commissioner of Police and he commended the way in which the strike was conducted and said " Here are leaders who are disciplined and orderly ". I think it was on the 25th of January 1946. These things happened in those days when we fought for our independence under the leadership of Mahatma Gandhi. I am not here to accuse the students. But students should not assume to be policy makers. Our Government have been magnanimous enough to withdraw all the cases against them. The Government have viewed these things leniently as they felt that the students were not responsible for those things and that anti-social elements have taken advantage of the situation. The students will realize this and go to their classes. When we resorted to agitations in those days, we took precautions to see that none of

8th March 1965] [Sri C. Chiranjeevulu Naidu]

us misbehaved and that anti-social elements did not join our groups. It is up to the Government to pardon the students and that has been done. But we must bear in mind the events that have taken place recently and what President Ayub Khan has been saying in China about them. We must not forget the fact that our borders are being threatened and we must keep up our traditions. We must leave things for the educationalists and journist to decide. With these words, Sir, I resume my seat. Thank you Sir.

* டாக்டர் பா. நடராஜன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பட்ஜெட் தமிழக அரசின் பொருள் செயல் வகைக்கும், வினைச் செயல் வகைக்கும் கொடிகட்டி பறக்கும் வகையில், திறம்பட அமைந்துள்ளது. 163 கோடி வருமானம், 170 கோடி செலவினம், சுமார் 7 கோடி பற்றாக்குறை. ஆனால் பற்றாக்குறை எவ்வகையிலும் கவலைக்கிடமானதாக இல்லை. 11 கோடி அதிக வருமானம் எதிர்பார்த்த இடத்தில், 19 கோடி வந்துள்ளது. பற்றாக்குறையை நிரப்ப புது வரிகள் எதுவும் தேவைப்படவில்லை. கடன் வாங்கும் நிலையும் ஏற்படவில்லை. பாங்கில் செக் கொடுப்பதற்கும் ரொக்கம் வருவதற்கும் இடையிலுள்ள கால இடைவெளியில் ஏற்படும் பணமுடை போன்றதுதான் இந்தப் பற்றாக்குறை. வரி வருமானம் ஏறுமுகமாகவே இருக்கின்றது. இந்தப் பற்றாக்குறையும் எதனால் ஏற்பட்டதென்று நினைக்கும்போது, வருத்தத்துக்கு எந்த இடமும் இல்லை. 5 கோடி ரூபாய்க்கு மேல் அரசாங்க அலுவலாளர்க்கும், ஆசிரியர்களுக்கும், ஸ்தல ஸ்தாபன பணியாளர்களுக்கும் அதிகச் சம்பளம் கொடுத்ததால் ஏற்பட்டதே. இதன் பெரும் பகுதியும். ஏறுகிறென்று விலைவாசிகள் ஏறும் நிலையில் அவர்கள் சென்ற சில ஆண்டுகளாக பட்ட துன்பம் துடைக்கும் வகையில் ஏற்பட்ட அதிகச் செலவுக்காக நிதி அமைச்சரை நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். சமூக நீதி வழங்கும் பெரு முயற்சியில் இதுவரை 22 கோடி ரூபாய்க்குமேல் விலைவாசி உயர்வை ஈடு செய்துள்ளது போற்றத்தக்கது.

கனம் உறுப்பினர் மாதவன் அவர்கள் சொன்னார்கள், இந்த பட்ஜெட்டில் சோஷியலிசம் எதுமில்லையென்று. ஏனென்றால், அதில் தொழில் எதனையும் தேசீய மயமாக்கப்படவில்லையாம். நமது ஐந்தாண்டுத் திட்டம் ஒவ்வொன்றுமே சோஷியலிஸ லட்சியத்துக்கு நம்மை எடுத்துச் செல்லும் ராஜபாதையாக இருக்க, அந்தப் பாதையில் நாம் வகுத்துக்கொண்ட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வியக்கத் தக்க வெற்றியைப் பெற்றிருக்க, சோஷியலிஸமில்லை என்று எப்படி சொல்ல முடியும்? தொழில்களை எல்லாம் தேசீய மயமாக்கிவிட்டால் சோஷியலிசம் வந்து விடுமா? சமூக நீதி பிறந்து விடுமா? இது பத்தொன்பதாம் நூற்றாண்டு சோஷியலிசக் கொள்கை. எல்லாம் தனியார் துறையிலேயே இருக்கவேண்டும் என்று சொல்கின்ற 18-ம் நூற்றாண்டு சுதந்திரக் கட்சிக் கொள்கை அண்ணனுக்கு, எல்லாம் தேசீய மயமாகவேண்டும் என்று சொல்லும் 19-ம் நூற்றாண்டு சோஷியலிஸக்கொள்கை தம்பி. ஆனால் நாம் காணும் சோஷலிசத்திலே

[டாக்டர் பா. நடராஜன்] [8th March 1965

பொதுவார்த் துறைக்கும் இடமுண்டு, தனியார் துறைக்கும் இடமுண்டு. ஒன்றையொன்றுத் தழுவி, பொருளாதார வளர்ச்சி, நிறைந்த தொழில் வாய்ப்பு, விரைந்த உற்பத்தி, திருந்திய சமூக நீதி இவற்றைக் காணும் ஒரு நிலையையே ஜனநாயக சோஷலிசத்தின் குறிக்கோளாகக் கொண்டுள்ளோம். எந்தெந்தத் தொழில்களை எவ்வப்போது தேசீயமாக்குவது என்பது அவ்வப்போது இருக்கும் சூழ்நிலைக்கும் நிதிநிலைக்கும் ஏற்ப வகுத்துக் கொண்டே போகக் கடமைப் பட்டிருக்கிறோம். தேசீயமாக்கவேண்டும் என்பதற்காக தேசீயமாக்கப்போவதில்லை. தனியார் துறை இருக்கவேண்டும் என்பதற்காகத் தனியார் துறையை விட்டுவைக்கப் போவதில்லை. எது விரைந்த வளர்ச்சியைத் தரும். எது பரந்த பொருளாதார நீதியை வழங்கும் என்பதைக் கண்டு, நிருவாக ஆற்றலுக்கும், பொருளாதார வசதிக்கும் ஏற்றவாறு அமைப்பதே மதி நுட்பங் கொண்ட சோஷலிசமாகும்.

கல்விக்காக, 37 கோடி செலவு செய்கிறோம். இந்த ஆண்டில் அதிகப்படியாக 5 கோடி செலவு செய்கிறோம். இந்தச் செலவு வெறும் கலைவளத்துக்கா ? வீடு பேற்றுக்கா ? கல்வியைவிட பொருளாதாரத் துறையில் உற்பத்தித் திறனை மிகுத்து சமூக ஏற்றத் தாழ்வுகளைப் போக்கும் கருவி மற்றொன்று உண்டா ? 6 முதல் 11 வயதுக்குட்பட்ட தொடக்கக் கல்வி 92 சத சிறுவருக்குக் கொடுக்க வழிவகை செய்துள்ளோமே. அகில இந்தியாவிலும் இன்று 70 சத விகிதத்துக்குத்தானே கொடுக்க முடிந்தது. தமிழகத்தின் ஒப்பற்ற சாதனை, முற்போக்கு முயற்சி சோஷியலிச ஆர்வம், இவை விளங்க இதனிலும் வேறு எடுத்துக்காட்டு வேண்டுமா ? ஒரு கோடி என்பது லட்சம் ரூபாய் அளவில் மதிய உணவுத் திட்டச் செலவை வகுத்திருக்கிறோ. இது சோஷலிசமல்லவா ? 11-வது வகுப்பு வரைச் சம்பளமில்லாமல் படிப்புக் கொடுக்கின்றார்களே, இது சோஷலிசமல்லவா ? பின்தங்கிய மக்களுக்காக 4 கோடி 84 லட்சம் ரூபாய் செலவு செய்ய இருக்கிறோமே இது சோஷலிசமல்லவா ? அரிஜனங்களுக்கு வீட்டு மனை வசதிக்காக 3 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதே. மாலைக் கல்லூரிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதே. நூற்றிருபது ஆரம்ப சுகாதார நிலையங்களைத் திறக்க இருக்கிறார்களே. மருத்துவத் துறைக்கு 70 லட்சம் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதே. பொது சுகாதாரத்துக்கு 80 லட்சம் மேலும் செலவு செய்யப்பப்படுகிறதே. முதியோர் பென்ஷன் திட்டச் செலவு பெருக்கப்படுகிறதே—இவையெல்லாம் சோஷலிசத்தின்பாற்படாதா ! ஜனநாயக சோஷலிச இலட்சியத்தை நோக்கி திட்டத்துக்கு திட்டம் விரைந்து செல்கிறோம். இந்தப் பயணத்தில் ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டும் ஒவ்வொரு மைல் கல்லாக அமைந்துள்ளது.

இந்த பட்ஜெட்டின் சிகரமாக விளங்கும் நிகழ்ச்சி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகம் கண்டுள்ள வியக்கத்தக்க வெற்றியாகும். 290 கோடிக்குத் திட்டமிட்டோம். 390 கோடிக்கு முடித்திருக்கிறோம். பல மாநிலங்கள் வகுத்த திட்டத்தை

8th March 1965] [டாக்டர் பா. நடராஜன்]

முடிக்க தள்ளாடிக்கொண்டிருக்கையில், அகில இந்தியப் பெருந் திட்டமே முழு வெற்றி காணுது முட்டிப் போட்டுக்கொண்டிருக் கையில் வகுதத அளவையும கடந்த நாம் அதனை நிறைவேற்றி யுள்ளோம், அதுவும் நமது சுயமுயற்சியாலே, கிட்டத்தட்ட 100 கோடி அளவுக்கு நிதி வசதியைத் திரட்டி வெற்றி பெற்றிருக் கின்ருேமென்ருல், நாம் பெருமிதப்படுவதற்கில்லையா ? முதல மைச்சர் அவர்கள் பெருமிதங்கொள்கின்ருர். ஆனுல் ஒவ்வொரு தமிழனும், அவன் எந்தக் கட்சியைச் சார்ந்திருப்பினும், பெரு மிதங் கொள்வதற்கு உரியதாக இருக்கின்றன, இதனுல் என்ன ? அடுத்து, 750 கோடி அளவில் ஒரு நான்காவது திட்டத்தை உருவாக்கி முடிக்க மடிதற்றி எழுந்து நிற்கின்ருேம். மூன்ருவது திட்டத்தை இரட்டித்து நான்காவது திட்டத்தை நடத்துவதா என்று அகில இந்திய அளவில் தயக்கம் ஏற்படுகிறது. ஆனுல் நமக்கு அது இல்லை. முதலமைச்சர் சொல்வது போல் "முன்னை யத் திட்டங்கள் எல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்து ஒப்பிட்டு நோக்கினுங்கூட அவற்றையெல்லாம் விட பெரியது நான்காம் திட்டம்". அவ்வளவு பெரிய திட்டத்தை ஒரு பிள்ளை விளையாட் டாக முடிக்க இருக்கின்ருேம். புதுவரிகள் போடாமலே, பெரும் பாலும் முடிப்போம். எப்பவும் போலவே, இதனையும் வகுத்த எல்லையைக் கடந்த விரிவில் முடிப்பினும் முடிப்போம்.

இந்தத் தனி ஆற்றல் தமிழகத்திற்கு எப்படி வந்தது ? சிந்திக்க வேண்டுகிறேன். என் எதிர்க்கட்சி நண்பர்களை, வினைத் திட்பம் கொண்ட நிர்வாக இயந்திரம் என்பார்கள். பொருள் செயல் வகை அறிந்த நிதி நுட்பம் என்பார்கள். உண்மை, ஆனுல் இவையெல்லாம் இருந்தாலும் கூட, யாவற்றிற்கும் அடிப்படையா யிருப்பது அமைதியான சூழ்நிலை, வள்ளுவர் சொல்வாரல்லவா,

"ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்து அமைவில்லாத நாடு."

எத்தனை இயற்கை வளங்களும், எத்தனை மனித ஆற்றலும், எத்தனை திறமுள்ள நிர்வாக இயந்திரமும் இருந்தாலும், வேந்து அமைவு—அமைதியான வளர்ச்சிச் சூழ்நிலை—இல்லாது போனுல் —என்ன பயன் ? இந்த அமைதியான அரசியல் சூழ்நிலையல்லவா, தொழிலில் முதலீடு செய்வதற்கும், தொழிலாளர் ஊக்கத்தோடு உழைப்பதற்கும், வெளிநாட்டார் விரும்பி முதலீடு செய்ய வரு வதற்கும் துணையாக இருந்தது. இத்தகையதொரு சூழ்நிலையில் லாத குறையல்லவா, கேரளம் போன்ற மாநிலங்கள் எல்லா இயற்கை வளனிருந்தும் முன்னேற முடியாமல் தள்ளாடுவது ?

ஆனுல், இத்தகையதொரு வளர்ச்சிக்குச் சாதகமான சூழ் நிலைக்கு இன்று தமிழ்நாட்டில் சில குண்டர்கள் பங்கம் விளை வித்து விட்டனர். ரயில் நிலையங்களை கொளுத்தினர், பஸ்களை தீக்கிரையாக்கினர், டெலிபோன் கம்பிகளை அறுத்தனர். டெலி கிராப் தூண்களைப் பிடுங்கினர். சாமான் வண்டிகளைச் சூறை யாடினர், பள்ளிகளுக்கு எரியிட்டனர், தபால் நிலையங்களை அழித் தனர், ஏன் ஒன்றிரண்டு தினங்கள் வாழ்வே ஸ்தம்பிக்கச் செய்து

விட்டனர். உயிருக்கும் உடமைக்கும் ஒருங்கே ஆட்டங் கண்டனர். கொன்றழித்துக் கொடிய செயல்களைச் செய்தனர். நல்ல வளமான வாய்ப்பான வளர்ச்சிச் சூழ்நிலைக்குப் பங்கம் விளைவித்துவிட்டனர். அழிப்பது எளிது, ஆக்குவது அரிதாயிற்றே. கட்டடங்களைக் கட்டிவிடலாம், தூண்களை நிமிர திருத்திவிடலாம். கம்பிகளை மீண்டும் போட்டுவிடலாம், ஆனால் இழந்த சூழ்நிலையை மீண்டும் பெற எத்தனை நாள் ஆகும்? எனது நண்பர் தொழில் அமைச்சர் கண்ணீர் சிந்துகிறார். இத்தனை ஆண்டுகளாக வருந்திச் செய்த வேலையெல்லாம், உள்ளங்கால் வெள்ளெலும்போட ஓடி உழைத்து செங்கல் மேல் செங்கலடுக்கி எழுப்பிய அருமைச் சூழ்நிலைக் கட்டடத்தை ஓரிரு நாட்பொழுதில் அழித்துவிட்டனரே என்று கதறுகிறார். பெற்றவருக்கல்லவா பிள்ளை வருத்தம் தெரியும்?

இதை மொழிக் கலவரம் என்கிறார்கள், இந்தி எதிர்ப்பு என்கிறார்கள், வடவர் எதிர்ப்பு என்கிறார்கள். நான் அவ்வாறு கருதவில்லை. வளரும் முற்போக்கு சக்திகளை முறியடிக்க பிற்போக்கு சக்திகள் சூழ்ச்சி செய்து, திட்டமிட்டு நடத்தின ஒரு உள்நாட்டு போரின் ஒத்திகை யென்றே இதனை நான் கருதுகிறேன்.

பதினேழு ஆண்டுகளாக நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சாரத் துறைகளிலே விரைந்ததொரு முன்னேற்றத்தைக் காண காங்கிரசு அரசாங்கம் முனைந்து பாடுபட்டு வந்துள்ளது. இந்த முயற்சியிலே பலருடைய பரம்பரை உரிமைகளும் போக போக்கியங்களும் புல்லுருவி வாழ்வும் பாதிக்கப்பட்டுவிட்டன. மதுவிலக்கினால் பாதிக்கப்பட்ட கள்ளச் சாராயங் காய்ச்சுகிறவர்கள், வரிவசூலிப்பால் பாதிக்கப்பட்ட கள்ளச் சந்தைப் பணக்காரர்கள், தங்கச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட கள்ளத் தங்கக் கடத்தல்காரர்கள், விலைக்கட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்ட பதுக்கல் கொள்ளைக்காரர்கள், ஜனநாயகத்தால் பாதிக்கப்பட்ட ஏகபோக உரிமைக்காரர்கள்—இப்படியாக நாட்டில் பற்பல தீய சக்திகள் சட்டத்தால் தங்களுக்கு வரும் நஷ்டங்களுக்கு கலகத்தால் உய்வு காணலாம் என்று கனவு கண்டு, காலம் பார்த்திருந்தனர். மொழிப் பிரச்னையை எழுப்பி, உணர்ச்சி வேகத்தை வீசி பகைமை என்னும் கொழுப்பைவிட்டு, கலக நெருப்பினை வளர்த்தார்கள். தீ மூண்டது, கொழுந்து விட்டெரிந்தது, பரந்து படர்ந்து சுற்றி நின்று தாண்டவம் ஆடினார்கள், கொக்கரித்தார்கள். உயிர்பலி கண்டு உள்ளம் உவகை பூத்தார்கள்.

நேரு மறைந்து விட்டார், சாஸ்த்திரிதானே—என்று நினைத்தார்கள். காமராஜ் டில்லி போய்விட்டார், பக்தவத்சலம்தானே என்று கணக்குப் போட்டார்கள். முதலமைச்சரும் தமது பெயருக்கும் தாம் தோன்றிய சேக்கிழார் மரபுக்கு மிணங்க, முதலில் தயங்கினார். எவ்வித தயக்கம்? குருக்ஷேத்திர போர்க்களத்திலே தன் உற்றார், உறவினர், நண்பர், ஆசிரியர், முதியோர், இளைஞர்—இவர்களைக் கண்டு இரத்தபாசத்தால் அருச்சுனனுக்கு ஏற்பட்டது போன்ற ஒரு தயக்கம். தமக்கென உறுதியோடு சிந்தனை செய்ய அறியாத, உணர்ச்சியே உருவான, எடுப்பார் கைப்பிள்ளை

8th March 1965] [டாக்டர் பா. நடராஜன்]

களாக இருக்கும் மாணவர்களாயிற்றே என்று, அவர்களை அதிக வருத்த வேண்டாம், 'கடிதோச்சி மெல்ல எறிக' என்று வள்ளுவர் வகுத்த முறையில், முதலிலே போலீசாருக்கு உத்தரவிட்டார், ஆனால் மாணவர்களைப் பயன்படுத்தி, பலியாக்கி, வஞ்சம் தீர்க்க முனைந்து நிற்கும், அராஜக சக்திகள் தலைகாட்டியதும், கண்ணன் காட்டிய வழி அவர்களுக்கு நினைவு வந்தது, வள்ளுவரை நினைந்தார்—

"கொலையிற்கொடியாரை வேந்து ஒறுத்தல், பைங்கூழ்
களைகட்டதனோடு நேர்."

என்ற திருக்குறள் கண் முன்னே வந்து நின்றது. அந்த நிலையில் தன் கடமை, பொறுப்பு இன்னதென்று தெளிந்தார். தெளிந்த பின் தயங்காது செயல்பட்டார்.

"அறநிலை அமைச்சரா இப்படிச் செய்தார்" என்றார் எதிர் கட்சி நண்பர் ஒருவர்—ஆம், அறநிலை அமைச்சராகையில்தான் இவ்வாறு திறமறிந்து செய்தாரென்று சொல்வேன். கீதையும், குறளும் காட்டின அறவழியில் செயல்பட்டார். பக்தவத்சலம் என்ற தனிமனிதனா சமூக உறவிலே கனிவுள்ளம் படைத்தவரா செய்தார்? இல்லை, இல்லை, நாட்டின் நல்வாழ்வு தன் கையிலிருக்கும் பொறுப்பை நன்குணர்ந்த, அமைதியையும், சட்டத்தையும் நிலைநாட்ட வேண்டும் தவிற்கரிய கடமையையுணர்ந்த, முதல் அமைச்சர் செய்தார். செய்தக்க அல்ல செய்யக்கெடும், ஆனால், செய்தக்க செய்யாமையானும் கெடுமே! அராஜகம் தலைவிரித்தாடுவதைக் கண்டும், அவர் வாளாவிருந்தால், தன் கடமையைச் செய்தவராவாரா? எத்தனை பயமுறுத்தல் கடிதங்கள். எத்தனை அச்சமுறுத்தும் சுவரொட்டிகள், முதலமைச்சர் தலைக்கு விலை கூறிய துண்டு பிரசுரங்கள், அவர் அசைந்தாரில்லை. கடமையை அறிந்த பின் தயக்கமேது? காஸாபிளாங்காவின் கதை இளமையிலேயே உள்ளத்தில் பதியக் கிடந்த கடமை வீரர்.

இப்படி உள்ளத்தை இரும்பாக்கிக்கொண்டீர்களே என்றார், திருவண்ணாமலைத் தொகுதி நண்பர். அடிபட்டு நைந்து, உயிர் போகும் தருவாயில் தண்ணீர் கேட்ட சப்-இன்ஸ்பெக்டர்கள் வாயில் பெட்ரோல் எண்ணெய் விட்டு விறகு வண்டியை மேலேற்றித் தீக்கொளுவினார்களே, அதைக்கேட்டு உள்ளம் மென்மையாக இருக்க வேண்டுமென்றாரா? பாண்டிச்சேரியில் அரவிந்த ஆச்சிரமத்திலே தவப்பெண்கள் அவமானம் செய்யப்பட்டனரே. அதை அறிந்தும், மலர் போன்ற உள்ளத்தோடு முதலமைச்சர் கண்மூடி மௌனியாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்த்தாரா? அண்ணாமலை நகரில் பல்கலைக் கழக ரிஜிஸ்டிரார் வீட்டுக்கு நெருப்பு வைத்தார்களே, அது உணர்ந்தும், கருணைபுரியும் கசிவுள்ளத்தோடு கண்டு நிற்கவேண்டுமென்றாரா? திருவண்ணாமலைத் தொகுதியின் பிரதிநிதி. திருத்தணியில் ஜனாதிபதியின் தத்துவப் பொக்கிஷங்களான நூல்களை எல்லாம் கட்டடத்தோடு தீக்கு இரையாக்கினார்களே கல்லா மாக்கள். அது கண்டும் நெகிழ்ந்த

[டாக்டர் பா. நடராஜன்] [8th March 1965

உள்ளத்தோடு முதலமைச்சர் அமர்ந்திருக்க வேண்டும் என்று கருதினாரா?

போகட்டும் இவையெல்லாம் நடந்தனவே, இவை தவறு என்று எங்காவது அவர்கள் கண்டித்ததுண்டா? ஓர் அறிக்கையேனும் வெளியிட்டதுண்டா?

மாணவர்களை முதலில் தூண்டிவிட்டவர்கள் தி.மு.க. கட்சி. தி.மு.க.வை பயன்படுத்தியது இந்தப் பொல்லாப் பிற்போக்கான சக்திகள். தி.மு.க.வை பிற்போக்கு சக்தி என்று நான் சொல்லவில்லை. காரணம் அவர்களுடைய கொள்கைகள் இன்ன என்று தெரிந்தால் தானே அவர்கள் பிற்போக்காளர்களா, முற்போக்காளர்களா, என்று சொல்ல முடியும்? எவ்வித கொள்கையுமின்றி காங்கிரசுக்கு ஏட்டிக்குப் போட்டியாக, ஏறுக்கு மாறாக அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, தங்களுடைய கொள்கை என்ன--தாங்களாக செய்யப்போவது என்ன என்பதைப்பற்றி அவர்கள் தெளிவுபடுத்தவே இல்லை. அடுத்து, இடது சாரி கம்யூனிஸ்டுகள் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டார்கள் என்று சந்தேகிக்க இடமிருக்கிறது. அவர்கள் முற்போக்குக் கொள்கைகள் உடையவர்கள் என்று கருதப்பட்டாலும் அவர்களுடைய ஞானத்தந்தையாகிய கார்ல் மார்க்ஸ்--ஒரு நாட்டிலே பிற்போக்கு சக்திகளுக்கும், முற்போக்குச் சக்திகளுக்கும் மோதல் ஏற்பட்டு புரட்சிக் கலவரம் ஏற்பட இருந்தால், கம்யூனிஸ்டுகள் அதில் கலந்து கொண்டு அதை பெரும் புரட்சியாக மாற்றி ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்கிற விதியை எழுதி வைத்திருக்கிறார். அத்தகைய ஒரு கலவரமாகத்தான் இது நாட்டில் நடந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

ஒன்று நினைவிருக்கட்டும், அராஜக செயல்களை ஆதரிப்போர் அராஜகத்துக்கே இரையாவார்கள். வன்முறைச் செயல்களைத் தழுவுவோர், அவற்றுக்கே பலியாவார்கள். இது வரலாறு கண்ட உண்மை. இப்படியாக இவர்கள் கண்டியாதது தானே, இவர்களும் இந்த அராஜகச் செயலுக்குச் சதி செய்தவர்கள், சக்தி யூட்டியவர்கள் என்ற எண்ணத்தை வலுக்கச் செய்கிறது. செய்து விட்டு, மாணவர் பேரில் பழியை போட்டு விட்டு, நல்ல பிள்ளைகள் போல் நடிக்க முயல்வானேன்? இரத்தக் கறை படிய வைத்தார் முதலமைச்சர் என்றார் ஒருவர். இரத்த வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தினர் என்பதல்லவா உலகம் கூறும் உண்மை!

நேர்மை கொண்ட அரசியல் வாதிகளானால், எனது தி.மு.க நண்பர்கள் ஊர் ஊராகச் சென்று, அராஜக சக்திகள் செய்த தவற்றை விளக்கி, அரசாங்கம் செய்த தவற்கரிய கடமைப் பணியை எடுத்துச்சொல்லி, தாங்கள் அதற்குப் பொறுப்பாயிருந்தால் மக்களிடம் மன்னிப்புக்கோரி, நாட்டில் மீண்டும் வளர்ச்சிக்கான சூழ்நிலை தோன்ற பாடுபடவேண்டும். தி.மு.க. ஒரு கட்சியாகச் செயல்பட வேண்டுமானால் இதை அவர்கள் இன்றே செய்யவும், நன்றே செய்யவும். அவர்கள் தலைவர் அறிஞர் அண்ணா அந்தத் திசையில் திருப்பிவிட்டார் என்பதை டில்லியில் அவர்

8th March 1965] [டாக்டர் பா. நடராஜன்]

விடுத்த அறிக்கையிலிருந்து விளங்குகின்றது. தம்பிமார்களும் இனியேனும் நல்ல பாதைக்குத் திரும்புவார்களாக.

இறுதியாக, மொழிப்பிரச்னையைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லி எனது உரையை முடித்துக்கொள்கிறேன். அமைதியை நிலைநாட்டும் வகையில் நமது முதலமைச்சர் செய்த அரும்பணி ஒரு புறமிருக்க, மொழிப்பிரச்னையின் முட்டறுப் பதிலும் அவர் செய்த பணி போற்றத்தக்கது. சிக்கலானது என்றார்கள், குழப்பமானது என்றார்கள். எல்லாம் எதற்காகச் சொன்னார்கள். அறியாத மக்கள் உள்ளங்களிலே வெறியூட்டவே. என்ன சிக்கல்? என்ன குழப்பம்? நமது அரசியல் வாழ்வின் அடிப்படையை ஒத்துக்கொண்டால், சிக்கலுமில்லை, குழப்பமுமில்லை. இந்திய ஒற்றுமை நமது மூச்சு, ஜனநாயகம் நமது வாழ்வின் வளர்ச்சி நெறி. ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு. ஒற்றுமை நீங்கினால் அனைவர்க்கும் தாழ்வு. ஆகவே பிரிவினை என்பதைக் கனவிலும் கருதலாகாது. பிரிவினைக் கோரிக்கை சட்டத்தால் மறுக்கப்பட்ட உடனே, கொல்லைப்புறமாக அதைக் கொண்டு வரும் மொழிப் பிரச்சனை தந்திரத்துக்கு இடமில்லை. ஜனநாயகத்திலே பெரும்பான்மையினர் கருத்துக்கு அனைவரும் இணங்கவேண்டும். இதுவே நியதி. இந்தியாவில் பெரும்பான்மை மக்கள் இந்தியை அரசாங்க மொழியாக இருக்க விரும்பினார்கள். இந்தி பேசும் மாநிலங்கள் மட்டுமல்ல, இந்தி பேசாத பஞ்சாப், குஜராத், மகாராஷ்டிரம், அசாம் ஆகிய மாநிலங்களும் விரும்புகின்றன. ஆந்திரம், கேரளம், மைசூர், வங்காளம் ஆகிய மாநிலங்களும் ஒத்துக்கொண்டன. நாமும் 1950-ல் ஒத்துக்கொண்டோம். ஆகவே இந்தி மத்திய அரசாங்க அலுவல் மொழியாகின்றது. ஆனால் இந்தி அறியாத மாநிலங்களுக்கு இது எந்த வகையிலும் இடர்பாடாகாது, இருத்தலாகா என்று கருதி ஆங்கிலமும் மத்திய அரசாங்க அலுவல் மொழி என்று பண்டித நேரு உறுதி மொழி கொடுத்தார். மாநிலங்களில் அந்தந்த மாநில மொழியே அரசாங்க மொழியாக அரசோச்சும் என்றும் உறுதி வழங்கப்பட்டது. தேசிய ஒருமைப்பாடு, ஏற்பட, மும்மொழித் திட்டமும் வகுக்கப்பட்டது. இதைச் சட்டமாக்கவேண்டுமென்று கருதினால், சட்டமாக்கப்பெறும். அதைப் பற்றி எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லை. ஆனால் சண்டித்தனம் செய்தால்தான் கோரியது கைகூடும் என்ற எண்ணம் போகவேண்டும். சண்டித்தனத்துக்கு ஜனநாயகத்தில் இடமில்லை. அமைதியான கருத்துக் கிளர்ச்சிக்கு அடிப்படை உரிமை உண்டு அழுதால் தாய் பால் கொடுப்பாள். ஆனால் அடித்ததால் தாய் பால் கொடுத்தாள் என்று சொல்வதுண்டா?

ஜனநாயகப் பண்பாட்டை மறந்து தமிழர்கள் செயல்படுவது முறையல்ல. தமிழ்நாட்டில் நடந்த கலவரங்கள் போலவே வட இந்தியாவில் தமிழர்கள் வாழும் பகுதிகளில், பம்பாயின் மாதுங்காவில், தாராவியில், டில்லியில், கல்கத்தாவில், ஜாம்ஷெட்பூரில், பூனாவில், ஜபல்பூரில், பிலாயில், துர்க்காப்பூரில்--அங்கெல்லாம்

[டாக்டர் பா. நடராஜன்] [8th March 1965

நிகழ்ந்திருந்தால், அங்குள்ள தமிழர்கள் நிலைமை என்னவாயிருக்கக்கூடும் என்பதைச் சிந்தித்துப்பார்த்தார்களா?

தமிழர்கள் வாழப்பிறந்தவர்கள், நிதான புத்தியுடையவர்கள், நேர்மை உடையவர்கள், உழைப்பாளிகள். தேச ஒற்றுமையால் வரும் அதிகப்பயன் தமிழருக்கே. வளரும் இந்தியாவில் தமிழரின் பங்கும் வளரும். இமயத்தைச் செண்டாலடித்தோம், மேருவை நிமிர வைத்தோம், கங்கையைக் கொண்டோம், கண்ணகிக்கு அங்கே கல்லெடுத்து நீராட்டினேம் என்ற வரலாற்றுப் பெருமையெல்லாம், சென்ற காலத்தோடு முடிந்துவிட்டதா? நமது அறிவுத்திறனாலே, பொறையின் நலத்தாலே, உழைப்பின் வலியாலே இந்தியப் பெருநாட்டின் ஆட்சியில் நாம் சிறந்ததொரு இடத்தை என்றும் பெறவேண்டாமா? இந்தியைப் படிக்க வேண்டாம் என்று வடக்குள்ளவர் சொன்னாலும்கூட, நாம் விரைந்து படித்து, அவர்களை மொழித் திறனில் வென்று மிக்கோராக வேண்டாமா? ஏன் மும்மொழியோடு நிற்க வேண்டும்? பதினெட்டு மொழிகளையும் கற்போமே. எந்த மொழியாலும் நமக்குப் பகைமை வேண்டாம். எல்லா மொழிகளும் இறைவன் பகர்ந்த மொழிகளே, என்றல்லவா திருமூலர் திருமந்திரம் கூறுகிறது?

"பண்டதராவார் பதினெட்டுப் பாடையுங்
கண்டவர் கூறுங் கருத்தறிவார் என்க,
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் அரண் சொன்னவாறே..."

வாழ்க தமிழ், வாழ்க நற்றமிழர், வாழ்க பாரத மணித்திருநாடு. வணக்கம்.

10-00 a.m. திரு. பி. கே. மூக்கையா தேவர்: கனம் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் வரி இல்லாத வரவு செலவுத் திட்டம் என்று இருந்தாலும், ஏற்கனவே போடப்பட்டிருக்கக் கூடிய வரிகளையே தாங்க முடியாத நிலையில், மக்கள் கொந்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில் நிலைமைகள் இருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே நாம் பார்க்க வேண்டிய கணக்குகளைக் காட்டிலும் இந்த நாட்டிலே சமீபத்திலே நடந்த புரட்சியை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். மூன்றே நாளில் சர்க்கார் கணக்குப்படி 50 பேர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். வெளியிலே கிடைக்கின்ற தகவலைப் பார்க்கும்போது நூறுக்கு மேல் இருநூறு வரை சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இந்த நிலையில் 'நோ ப்ராப்ளம் ஸ்டேட்' என்று புகழப்பட்ட நமது மாகாணம் இன்று விவகாரம் நிறைந்ததாகக் காணப்படுகிறது. 'ப்ராப்ளமாட்டிக் ஸ்டேட்' என்ற அளவுக்கு ஆளும் தரப்பிலே உள்ளவர்கள் ஆக்கியிருக்கிறார்கள். கனம் மத்திய அமைச்சர் டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்கள் எல்லாம் கான்ஸ்டிடியூவன்ட் அசெம்பிளியில் பேசுகிறபோது இந்தியை வற்புறுத்தினால் நாடு பிரியும், இந்த நாட்டுப்

8th March 1965] [திரு. பி. கே. மூக்கையா தேவர்]

பொருளாதாரம் பாதிக்கப்படும் என்று அன்றே எச்சரித்திருக்கிறார்கள். சமீபத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியின் காரணமாக நம்முடைய மத்திய அமைச்சர்கள் இருவர் ராஜினமாச் செய்திருக்கிறார்கள். ஆனால் இன்று நம்முடைய ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஒன்றுமே நடவாதது போல் பேசுகிற பேச்சுக்கும், நாட்டில் உள்ள நிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தை மக்கள் புரிந்து கொள்வார்கள். அந்த மத்திய அமைச்சர்கள் ராஜினமாச் செய்த காரணத்திலிருந்தே, இந்தப் பிரச்சினை ஒரு கட்சிப் பிரச்சினை அல்ல; ஒரு மாகாணத்தைப் பொறுத்த பிரச்சினை அல்ல; இது ஒரு தேசீயப் பிரச்சினை என்ற அளவுக்கு நிலைமைகள் உருவாகியிருக்கின்றன, சுதந்திரத்திற்காக நாம் போராடினேம். புரட்சி செய்தோம். அதே போன்று இன்று நாட்டிலே சமுதாயப் புரட்சியாக நடந்திருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இன்று மாணவர்கள் இதற்காகப் போராட்டம் நடத்தினர்கள் என்று சொன்னல் அவர்கள் எல்லாம் நம்முடைய பிள்ளைகள், பேரன்கள்—இந்த நாட்டின் மானத்தைக் காப்பாற்றி இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து அதை வரவேற்கவேண்டும். இன்று வது நமது அமைச்சர் அவர்கள், அந்த மாணவர்கள் மீது போடப்பட்டிருக்கிற எல்லா வழக்குகளையும் வாபஸ் வாங்கியதை வரவேற்கிறேன். எதற்காக மாணவர்கள் உயிரை விட்டார்களோ, போராட்டம் நடத்தினர்களோ அந்தப் பிரச்சினையிலே நீங்கள் தைரியமாக நின்று நம்முடைய நிலையை மத்திய சர்க்காரிடத்திலே எடுத்துச் சொல்ல முடியாத காரணத்தால்தான், மாணவர்கள் முன் நின்று இதற்கு வழி காட்டியிருக்கிறார்கள். இந்த நாட்டுக்கு வழி செய்தவர்களை நீங்கள் . .

கனம் சபாநாயகர்: 'நீங்கள், உங்கள்' என்று சொல்லவேண்டாம். 'அவர்கள்' என்று சொல்லலாம்.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: இந்தப் போராட்ட காலத்திலே கை கால்களை இழந்த மாணவர்களுக்கு உதவிப் பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக எதிர்க்கட்சிக்காரர்கள் சதி பண்ணினர்கள் என்று கூறினர்கள். உண்மையிலேயே இந்தச் சதியை எதிர்க்கட்சிக்காரர்கள் செய்யவில்லை. இன்று கனம் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறார்கள். இந்த ஆட்சி இன்று கவிழ்ந்தால் நெடுஞ்செழியன் அவர்கள் மந்திரியாக வந்துவிட முடியாது. ஒரு வெங்கட்டராமனே, கக்கனே, வெளியில் இருக்கிற சுப்பிரமணியமோ அல்லது காமராஜரோ வர முடியுமே தவிர, வேறு கட்சியில் உள்ளவர்கள் ஒன்றும் வர முடியாது. இதிலே எப்படி எதிர்க்கட்சியின் சதி இருக்க முடியும்? ஆகவே, இந்த மந்திரி சபையைக் கவிழ்ப்பதற்காக எதிர்க்கட்சிகள் சதி செய்து இந்தப் புரட்சியைக் கிளப்பினர்கள் என்று சொல்வது தவறானது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்த மந்திரி

[திரு. பி. கே. மூக்கையா தேவர்] [8th March 1965

சபையை மாற்றி விடவேண்டுமென்று ஆளும் கட்சியிலே இருப்பவர்கள்தான் நடந்து கொண்டார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும்.

மதுரையில் நடந்த சம்பவங்களை நான் நேரிலேயே பார்த்தேன். மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றார்கள். வடக்கு மாசித் தெருவிலே அகிம்சைக் கூடமாக இருக்க வேண்டிய காங்கிரஸ் ஆபீஸ் அன்றைய தினம் ஆயுதச் சாலையாக இருந்தது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். கலகத்திற்குத் தூண்டும் வகையில் தமிழ்ச் செய்தி என்ற பத்திரிகையில் போடப்பட்டிருந்ததன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? "ஒவ்வொருவரும் கையில் கத்தி வைத்துக் கொள்ளுங்கள்; பெட்ரோல் பாட்டிலும் நெருப்புப் பெட்டியும் வைத்துக் கொள்ளுங்கள்" என்று பெரியார் கையெழுத்திடப்பட்டு அந்தப் பத்திரிகையிலே செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த பத்திரிகையின் பேரிலே என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது? நாட்டிலே தீ வைப்புகளும், மற்ற கலவர நிகழ்ச்சிகளும் நடந்தன என்றால் அதற்கு யார் காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும். இந்த 'தமிழ்ச் செய்தி' என்ற பத்திரிகையை யார் நடத்துகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மதுரையிலே கடந்த 24-ம் தேதி பகிரங்கமாகப் பிரசாரம் செய்தார்கள். அன்று மாணவர்கள் ஊர்வலம்---அவர்கள் பச்சிளம் குழந்தைகள்; ஹைஸ்கூல் மாணவர்கள்---வந்து கொண்டிருந்தது. காங்கிரஸ் ஆபீசில் இருந்தவர்கள் 'இந்தி வாழ்க' என்று கூவிக்கொண்டு ஊர்வலத்தினர் மீது உள்ளேயிருந்தபடி கற்களை வீசி எறிந்தார்கள். வேட்டியைத் தூக்கிக் காண்பித்தார்கள். உள்ளே இருந்த கற்கள் எறியப்பட்ட காரணத்தால் அதே கற்களை வெளியே இருந்து திருப்பி எறிந்தார்கள். வெளியே இருந்து கற்களை எறிய வேண்டுமென்றால் அந்தப் பகுதியிலே வெளியே கற்களே கிடையாது. உள்ளே இருந்து வந்த கற்களைத்தான் திருப்பி எறிந்தார்கள். உள்ளே இருந்து ஒருவன் ஓடிவந்து ஒரு பையனை வெட்டித் தள்ளினான். அவனுடைய கண் வெளியே வந்து விழுந்தது. இதைக் கண்ட ஆபீசர்கள் கூட ஸ்தம்பித்து நின்று விட்டார்கள். அந்த ஆபீசைக் காங்கிரஸ் ஆபீஸ் என்று பெயர் சொல்லி அழைப்பதா? அறுவாளால் வெட்டியது ரௌடித்தனம் இல்லையா? நீங்கள் செய்தது சரியா என்பதை நல்ல முறையில் ஆராய்ச்சி செய்ய வேண்டும். அதற்கு மனம் இல்லையென்றால் ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்தால் எல்லா உண்மைகளும் வெளிவரும். இந்தக் கலவரங்களுக்கு ஆரம்பமே மதுரை காங்கிரஸ் ஆபீஸ்தான். அன்று நம்முடைய ஹோம் மினிஸ்டர் அவர்கள் மதுரையிலே இருந்தார்கள். அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். அவர்களுக்கு ஆபீசர்கள் மேல் கோபம் அன்று போலீசாரே தாக்கப்பட்டார்கள். டெய்ஸ் அவர்களே தாக்கப்பட்டார்கள். அடுத்த நாள், மதுரை தியாகராஜர் கல்லூரியில் மாணவர்களைத் தூண்டி விட்டதாகக் கூறி அந்தக் கல்லூரிப் பிரின்ஸ்பாலைத் தாக்கியிருக்கிறார்கள்.

8th March 1965] *[திரு. பி. கே. மூக்கையா தேவர்]*

அவர் கையெடுத்துக் கும்பிட்டும் கூட அவரை அடித்திருக்கிறார்கள். 'மூக்கையா நான் சொல்லி அனுப்பினேனே, நீ எங்கே போய்த் தொலைந்தாய்' என்று கேட்டார். பக்கத்து வீடு என் வீடு. அவர் களுடைய தோள்ப்பட்டையிலே குண்டு பட்டு அது சாய்ந்து விட்டது. அவர்கள் என்னைப் பார்த்து, 'என்னைத் தெரியவில்லையா, என்னுடைய நிலைமையைப் பார்' என்று கதறினார்கள். அவர்கள் பழைய தியாகி.

நான் காங்கிரஸ் தியாகி என்று சொன்னார்கள். அவற்றை யெல்லாம் கூறிக் கதறியும் அவர்கள் அடிக்கப்பட்டார்கள் என்றால் அதன் நோக்கம் என்ன? பின்னர் டி.எஸ்.பி.-யிடம் கேட்டபோது அவர்கள் சொன்னார்கள், பாஷை தெரியாத போலீஸ்காரர்கள் அடியுங்கள் என்று சொன்னதற்கு அடித்துக் கொண்டே போனார் கள் என்றார்கள். ஹாஸ்டலில் சென்று அடித்தார்கள். பாஷை புரியவில்லை என்று சொல்கிறார்கள். அப்படி பாஷை புரியாதவர் களை வைத்து இந்நாட்டு மக்களை அடித்து ஒடுக்கி வைக்க வேண்டுமா? எல்லாவற்றிற்கும் காரணம், அங்குள்ள காங்கிரஸ் காரர்கள் தூண்டிவிட்டு மாணவர்களை அடிக்கவேண்டுமென்று போலீஸ்காரர்களை நிர்பந்தம் செய்திருக்கிறார்கள். ஆகவே இதற்கு ஒரு நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின்னர் கம்பத்தில் நடந்திருக்கிற நிகழ்ச்சி. வீட்டில் இருந்த திரு. ராஜாங்கம் அவர்களை அழைத்து வந்து கலவரம் நடக்கிறது நீங்கள் நேரில் வந்து பாருங்கள். மக்களிடம் சொல்லுங்கள் என்று அவரை அழைத்து வந்து அடித்திருக்கிறார்கள். பல உயிர்களைக் காப்பாற்றியவரை அடித்திருக்கிறார்கள். ஜெயிலில் நான் நேரில் பார்த்தேன். சதை பிய்ந்திருக்கிறது. மூன்று தடவைகள் அவர் கள் அடிக்கப்பட்டு மயக்கம் வந்திருக்கிறது. மயக்கம் வந்தவுடன் தண்ணீர் விட்டு மயக்கத்தை நீங்கி திரும்பவும் அடித்திருக் கிறார்கள். தாங்க முடியாத கொடுமை இது. கேஸ் போட்டால் போடுங்கள். இந்தி விஷயத்தை நல்ல முறையில் உணர முடியாத காரணத்தினால்—மத்திய சர்க்காரிடம் வற்புறுத்த முடியாத காரணத்தினால், உங்களால் முடியாத காரணத்தினால் நாட்டு மக்களும் மாணவ சமுதாயமும் கொதித்தெழுந்து உங்களுக்கு பக்கபலமாக, திரு. பக்தவத்சலம் அவர்களே நீங்கள் சொல்ல வேண்டும் மத்திய சர்க்காரிடம், இவர்கள் கேட்டால் கேட்கட்டும், இல்லாவிட்டால் உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம் என்று மாணவர்கள் உங்கள் பலத்தை உயர்த்தத்தான் செய்தார்களே தவிர வேறு அல்ல. வேறு எதற்காக என்று நினைக்கிறீர்கள்? உங்களை ஏமாற்றி மாணவர்கள் முதல் அமைச்சராக வர முடியுமா, அல்லது எதிர்க் கட்சிகள்தான் வரமுடியுமா? உங்களுக்கு இடையே இருக்கிற சிக்கல்கள் எங்களுக்குத் தெரியும். எப்படியும் உங்களை அனுப்பிவிட வேண்டுமென்று இருக்கிறார்கள் வெளியே. உங்கள் வேதனையைச் சமாளிக்க நாட்டில் நல்ல ஆட்சியை நடத்துகிறேன் என்று தாழ்வு மனப்பான்மையின் அடிப் படையில் கொடுமைகளை நடத்தியிருக்கிறீர்கள். எப்படியோ சமாளித்து விட்டோம் என்று நினைப்பது பெரிதல்ல. தயவு

[திரு. பி. கே. மூக்கையா தேவர்] [8th March 1965

செய்து உங்கள் பெருமைக்கும், உங்கள் நல்லெண்ணத்திற்கும் தக்கபடி பிற்கால சமுதாயத்தை அழித்துவிடக்கூடாது. நல்ல முறையில் நடத்திச் செல்லுங்கள்.

(மணி அடிக்கப்பட்டது.)

திரு. கே. டி. கோசல்ராம்: மிஸ்டர் ஸ்பீக்கர், சார், பட்ஜெட் விவாதத்தின்போது நாட்டு நலன்கள் நாட்டு மக்களின் பொருளாதார வளர்ச்சி இவற்றைப்பற்றி மக்களிடம் வோட் வாங்கி வந்த அங்கத்தினர்கள் பேசக்கூடிய விஷயம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். சபையில் அங்கத்தினர்கள் பேசும்போது தலைவர் அவர்களுக்கு மரியாதை காட்டுகிற வகையில் 'தலைவர் அவர்களே' என்று குறிப்பிட்டு பேச வேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம்: பரிதாபப்படுகிறேன். மிஸ்டர் ஸ்பீக்கர் என்றுதான் ஆரம்பித்தேன் என்பதை கேட்காமல் இருப்பதற்காக பரிதாபப்படுகிறேன். சபாநாயகர் அவர்களே என்பதுதான் அதற்குப் பொருளே தவிர தலைவர் என்ற பொருள் அல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். மக்களுடைய நிலையை பொருளாதாரத் துறையில் மக்களை எவ்விதம் இழந்துச் செல்வது என்பதை இந்த சபையில் வாதிக்க வேண்டிய தருணத்தில் இந்த நாட்டிலுள்ள ஒரு சில முதலைகள், நாட்டு மக்களின் ரத்தத்தை உறிஞ்சுகிற முதலைகள் பொருளாதாரத்தைப் பற்றி கவலைப்படாதவர்கள் நாட்டு மக்களின் ஏழ்மையைப் போக்குகிற எங்களை குறை கூறி நெருப்பு பற்றிக்கொண்டு சபையில் முழுவதும் மொழிபற்றியே பேசிக்கொண்டிருக்கும் அந்நிலை வந்துவிட்டது. இந்த நேரத்தில், இந்த இயக்கம் எப்படி ஆரம்பிக்கப்பட்டது என்பது கேள்வி அல்ல. நாங்களும் போராட்டங்கள் நடத்தினோம் வெள்ளையனை எதிர்த்து. இதைவிட அதிகமான போராட்டங்கள் நடத்தினோம். எங்கள் தலைவர் நேரு அவர்கள் என்ன சொன்னார்கள்? இந்த நாட்டில் நடந்ததற்கு எல்லாம், இந்த நாடு சுதந்திரம் பெறவேண்டும் என்பதற்காக சொன்னோம், நாட்டு மக்கள் எவ்வளவோ செய்தார்கள் அதற்காக அதற்கு எல்லாம் நான்தான் பொறுப்பாளி என்று நேரு அவர்கள், எங்கள் தலைவர் நேரு அவர்கள் சொன்னார்கள். உங்கள் தலைவர் கோழையாக. . .

SRI M. KAMALANATHAN: Sir, the hon. Member should withdraw that word.

திரு. இராம. அரங்கண்ணல்: நம் தொழில் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் இல்லாதவர்களைப்பற்றி இங்கே எதுவும் குறிப்பிடக்கூடாது என்று சொன்னார்கள். எங்கள் தலைவரைப் பற்றி நண்பர் கோசல்ராம் சொல்வது மிகவும் மோசமான வார்த்தையாக இருக்கிறது. அதை நீக்குமாறு தாங்கள் உத்தரவு இடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: உங்கள் தலைவர் என்று ஆரம்பிப்பதற்கு முன்னால். . .

8th March 1965]

திரு. ம. கமலநாதன் : கோழை என்று சொன்னார்கள். அதை 'வித்ட்ரா' செய்யவேண்டும்.

SRI K. T. KOSALRAM : I am not yielding.

கனம் சபாநாயகர் : இங்கு இல்லாதவர்களைப்பற்றி பேசுவது நல்லதல்ல.

திரு. கே. டி. கோசல்ராம் : நான் பெயரைச் சொல்லவில்லை.

கனம் சபாநாயகர்: 'டச்' செய்யாமல் போவது நல்லது.

SRI M. KAMALANATHAN : The hon. Member should withdraw it.

திரு. கே. டி. கோசல்ராம் : தலைவர் என்றால் மாவட்டத் தலைவர் ஆகலாம் வட்டத் தலைவராகலாம். . . .

MR. SPEAKER : Let the hon. Member please clarify his hand. Whom did he refer?

திரு. கே. டி. கோசல்ராம் : இந்த சபையில் அவர்கள் தலைவர் யார் இருக்கிறார்களோ அவர்களையே வைத்துக்கொள்ளலாம்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் யாரைக் குறிப்பிடுகிறார்கள்?

திரு. கே. டி. கோசல்ராம்: எங்கள் தலைவர் அத்தனைக்கும் பொறுப்பு ஏற்றார்கள். நீங்கள், நாங்கள் என்று சொல்வதை விட்டு குறிப்பாகச் சொல்லி விடுகிறேன். ஜனநாயகப் பண்பாடு என்பது தேர்தல் மூலம் எதையும் மாற்றி அமைப்பது என்பதுதான். ஜனநாயக அடிப்படையில் உள்ள ஜனநாயக நாடுகளில் அன்னியர்கள் இல்லாத ஒரு நாட்டில், நாமே நம்மை ஆண்டு கொண்டிருக்கிற உள்ள பண்பாடு. அந்த பண்பாட்டிற்கு விரோதமாக கோழைத்தனமாக ராஜிநாமா செய்ய வேண்டுமென்று யாரோ ஒரு சிலர் சொன்ன வார்த்தைக்காக செய்வது சரியல்ல. ஜனநாயக பண்பாட்டைக் காப்பாற்றுவதற்கு, நாட்டில் ஏற்படுகிற அராஜகத்தை அடக்குவதற்கு, பொது மக்கள் க்ஷேமமாக வாழ்வதற்கு என்று பொது மக்கள் சர்க்கார் இன்று இருக்கிறது, என்பதை நிருபித்துக் காட்டுவதற்கு தக்க தருணத்தில் சரியான சந்தர்ப்பத்தில் பலமாக இருந்து ஜனநாயகத்தைக் காப்பாற்றிய திரு. முத்துரங்க முதலியார் அவர்களின் குடும்பத்திலிருந்து, சந்ததியிலிருந்து வந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் எடுத்த முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பலமாக இருக்க வேண்டும். அப்படி பலமாக இருந்து மக்களை காப்பாற்றியிருக்கிறார்கள் என்று சொல்வேன். ஆங்கிலம் வேண்டுமா என்று கேட்டால் திரு. பக்தவத்சலம் அவர்கள் என்ன சொன்னார்களோ, அதை விட ஆங்கிலம் எப்போதுமே இந்த நாட்டின் ஒரு மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்வேன். அதில் நிச்சயமான உணர்ச்சி கொண்டவன் நான். இந்த நாட்டில் நடந்த கலவரத்தில் காங்கிரஸ்காரர்கள் மீது ஒரு வெறுப்பு. கதர் சட்டை போட்டுக் கொண்டவர்கள் மீது ஒரு வெறுப்பு. இதற்கு நாம், நம் அங்கத்தினர்கள் எல்லோரும் திராவிட முன்னேற்றக் கழகத்தை, குற்றஞ் சாட்டுகிறார்கள். அப்படி குற்றஞ்சாட்ட வேண்டிய அவசியமே

இல்லை. அவர்கள் அல்ல அதற்குக் காரணம். நாம்தான் காரணம். சுதந்திரம் வந்ததற்குப் பின்னால், எப்படி சுதந்திரம் அடைந்தோம், காங்கிரஸ்காரர்கள் அதற்காக எத்தகைய துன்பங்களை அனுபவித்தார்கள், திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதைப்பற்றி எல்லாம் குழந்தைகளுக்குத் தெரிவதில்லை. ஒன்றை நான் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு முக்கிய பிரமுகர் என்னிடம் கூறினார்கள். அவர்கள் சர்வீஸ் கமிஷனில் இருந்தவர். 23 வயது பையன் ஒருவன், அவனிடம் கேள்வி கேட்டபோது, திருவாடானையிலிருந்து வந்திருக்கிறீர்களே தம்பி, அந்த ஊரில் சுதந்திர காலத்தில் நடந்தது என்ன என்று கேட்டார்கள். அதற்கு, அந்த பையன் நான் 1942-ல் பிறந்தவன். நான் பி.ஏ.,எம்.ஏ., வரை படித்திருக்கிறேன். எனக்கு சுதந்திர வரலாறு பற்றி ஒன்றும் தெரியாது.
10-30 a.m. எங்கள் ஊரில் என்னென்ன நடந்தது என்பதுபற்றி புத்தகத்தில் எழுதித் தரவில்லை. நான் படிக்கவுமில்லை எனக்கு தெரியவும் தெரியாது. ஆகவே அதைப்பற்றிக் கேட்டால் நான் எப்படி விடை அளிப்பது என்று அந்தப் பையன் சொன்னானாம். இதை அந்த உயர்தர அதிகாரி என்னிடம் கூறினார்கள். இதைத்தான் நான் அரசாங்கத்தினிடம் கேட்கின்றேன். இன்றைக்கு ஏதோ பலர் கற்பழிக்கப்பட்டதாக சொன்னார்கள். இன்றைக்கு இதற்காக நீலிக் கண்ணீர் வடிக்கின்றவர்கள் அன்றையதினம் எத்தனை ஊர்களில் கற்பழிக்கப்பட்டார்கள் என்பதைப் பார்த்தார்களா? நடுத்தெருவில் அன்றைக்கு கற்பழிக்கப்பட்டார்கள் பலர். அந்த அவல நிலை அன்றைக்கு ஏற்பட்டது, எதற்காக? இந்த நாட்டினுடைய சுதந்திரத்தைப் பெறுவதற்காக; அதைப்பற்றி இன்று யாருக்குத் தெரியும்? அன்றைக்கு நடந்த சுதந்திர போராட்டத்தைப்பற்றி யாருக்குத் தெரியும்? அன்றைக்குக் கதர் சட்டைப் போட்டவர்கள் என்னென்ன தியாகங்கள் செய்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது. கதரினுடைய மகிமை தெரியாது. இதையெல்லாம் தெரியாத அளவிற்கு ஆக்கியது யார், காங்கிரஸ்காரர்களே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அல்ல, அந்த தவறை செய்தது நாம் தான். அன்றைக்கே இந்த நாட்டினுடைய சுதந்திரத்தைப்பற்றியும், இந்த நாட்டினுடைய மொழியைப்பற்றியும் நமது பச்சைக் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுத்திருந்தோமேயானால் இன்றைக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது. ஒரு சினிமா தியேட்டரின் முன்னால் பார்த்தேன் ஆப்ரகாம் லிங்கன், கென்னடி இவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரங்கள் போராட்டங்கள் இவைகளைப்பற்றிய புத்தங்களை--10 ரூபாய் விலையுள்ள புத்தகங்களை எட்டு அணாவிற்கு விற்கிறார்கள். அமெரிக்க நாட்டினுடைய சுதந்திரம் எவ்வாறு கிடைத்தது. அமெரிக்க சுதந்திரத் தலைவர்கள் யார் யார் என்பதைப் பற்றியெல்லாம் புத்தகங்களில் வெளியிடுகிறார்கள். அதுமட்டுமல்ல 10 ரூபாய் விலை கொண்ட புத்தகத்தை எட்டு அணாவிற்கு விற்கும் அளவிற்கு அமெரிக்க தேச சர்க்கார் சப்ஸிடைஸ் செய்து கொடுக்கிறார்கள். நாம் நம்முடைய நாட்டு சுதந்திரத்தைப்பற்றி வெளியிடுவதற்கு என்ன செய்திருக்கிறோம். அவர்கள் இம்மாதிரிப்பட்ட புத்தகங்களை அவர்கள் நாட்டில் மட்டுமல்ல அன்னிய நாடுகளிலும் தெரி

விக்கவேண்டுமென்று இவ்விதம் செய்கிறார்கள். இங்கே காங்கிரஸ் காரர்கள் சுதந்திரத்திற்காக என்ன செய்தார்கள். தேச சுதந்திரம் எவ்வாறு பிறந்தது என்பதைப்பற்றியெல்லாம் வெளியில் தெரிவிக்க நாம் தவறிவிட்டோம். அதனுடைய 'ரிஃப்ளெக்ஷன்' நான் இன்றைக்கு நாம் காண்பது. ஆகவே இதற்கு காரணம் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் தான் என்று சொல்வதற்கில்லை. இந்த நாட்டில் வாத்தியார் பட்டாளம் ஒன்றிருக்கிறது. திடீர் திடீரென்று அறிக்கைகள் வரும். முதலமைச்சர் அவர்கள் விட வேண்டிய அறிக்கைகளை எல்லாமே இவர்கள் விட்டுவிடுவார்கள். சுதந்திரம் வருவதற்கு முன்பே என் போன்ற சாதாரண ஊழியர்கள், இன்றைய தினம் முதலமைச்சராக இருக்கக்கூடிய பக்தவத்சலம் போன்ற ஊழியர்கள் இந்த நாட்டில் எல்லா ஊர்களிலுமே ஹைஸ்கூல்கள் இருக்க வேண்டும் என்று நினைத்துத்தான் இந்த நாட்டில் எங்கு பார்த்தாலும் ஹைஸ்கூல்களை நிறுவி வருகிறோம். ஆனால் இன்றைக்கு நடக்கின்ற நிலைமை என்ன? நான் ஒரு பள்ளிக்கூடத்திலுள்ள பையன் ஒருவனைக் கூப்பிட்டு கேட்டேன். 12, 13 வயது இருக்கும். அவன் என்ன செய்கிறான், லாபரட்டிரி கண்ணாடியை உடைப்பது என்பது மட்டும் அவன் தெரிந்துவைத்திருக்கிறான். லாபரட்டரி கண்ணாடியை உடைப்பது என்பது தான் எங்கள் வாத்தியார் ஐயா முடிவு என்று சொல்லுகின்றான். இந்த அளவிற்கு வாத்தியாயர்கள் பிள்ளைகளை நடத்தி வருகிறார்கள். இது மட்டும் அல்ல; பல காரணங்கள் இருக்கின்றன. இந்தி வந்துவிட்டால், இங்கிலீஷ் படித்திருக்கின்ற நம் பிள்ளைக்கு எங்கே வேலையில்லாமல் போய்விடுமோ என்கின்ற கோயபல்ஸ் பிரச்சாரம் பொதுவாக எல்லா இடத்திலும் பரவிவிட்டது. ஒரு தடவைக்கு பத்து தடவை சொன்னால் பொய்யும் மெய்யாகிவிடுகிறது. இப்படிப் பட்ட தவறான ஒரு பிரச்சாரம் நடந்திருக்கிறது, இதில் மக்கள் மயங்கியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் பல குட்டி தேவதைகள் தான் காரணம். இந்த நிலைமையின் காரணமாகத்தான் நாட்டில் அராஜகம் நடந்தது, இதை நான் அனுமதிக்க மாட்டேன். இதை எந்தவிதத்திலும் தடுத்து இந்த நாட்டில் அமைதியை நிலைநாட்டி மக்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்க்கையை ஏற்படுத்துவேன் என்று உறுதியாக இருந்தார் கனம் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள். மும்மொழித்திட்டத்தைப்பற்றி கனம் டாக்டர் நடராஜன் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தை காங்கிரஸ் கட்சித்தான் நடத்திக் கொண்டிருந்தது. அதிலும் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் மும்மொழித்திட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும் கூட, ஆங்கிலத்திற்கு அதிகமான அளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை எதிர்க்கட்சிக் காரர்கள் மறுக்க முடியாது. அவ்வளவு தூரத்திற்கு ஆங்கிலத் திற்கு முக்கியத்துவம் போய் விட்டது என்று சொல்வது முதலைக் கண்ணீர் வடிப்பதற்கு ஒப்பானதாகும் என்று தான் சொல்ல முடியும். அண்மையில் நான் திருவனந்தபுரத்திற்குச் சென்றிருந்தேன். அங்கேயுள்ள நிலைமையை நான் நண்பர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தி அஜிட்டேஷன் அங்கு எந்த அளவிலும் பாதிக்கவில்லை. எந்த விதமான கட்சி வேறுபாடும் இல்லாமல் சாதாரண பிரஜை என்ற நிலையில் சொல்லுகிறேன்.

[திரு. கே. டி. கோசல்ராம்] [8th March 1965

அவர்கள் எப்படி நினைக்கிறார்கள் என்றால், இந்தி படித்தால் தான் பிற மாநிலங்களுக்குச் செல்ல முடியும். வெறும் கிணற்றுத் தவளைகளாக நாங்கள் இருக்கமுடியுமா என்று தான் திருவனந்தபுரத்திலுள்ள தமிழர்கள் நினைக்கிறார்கள். திருவனந்தபுரத்தில் தமிழர்கள் இருக்கின்ற பகுதியில் முன்னால் ஒன்றிரண்டு சீட்டுகள் தமிழர்களுக்கு இருந்தது. இப்போது 10 சீட்டுகள் வரை கிடைத்திருக்கிறது. அதே நேரத்தில் தேவிகுளத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 10 பேர்கள் நின்றார்கள், எல்லோருக்குமே டெப்பாஸிட் போய்விட்டது. (குறுக்கீடு) நான் இதை குறையாக சொல்ல வரவில்லை, பிற மாநிலங்களில் பிரச்சினையை எப்படி பார்க்கிறார்கள் என்பதை சொல்வதற்காகத்தான் குறிப்பிடுகிறேன். பத்து வருஷத்திற்கு முன்னதாகவே கேரளா, மைசூர் போன்ற ராஜ்யங்களில் எல்லாம் இந்தியை கட்டாய பாடமாக வைத்தார்கள். அதன் மூலமாக இன்றைக்கு அங்குள்ளவர்கள் நல்லமுறையில் இந்தியை புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தவறு செய்திருப்பது நாம் தான். அன்றைய தினம் ராஜாஜி அவர்கள் இந்தியை கட்டாய பாடமாக கொண்டு வந்த நாளிலிருந்தே தொடர்ந்து வைத்திருந்தால், இன்றைக்கு நம் குழந்தைகள் இந்த நிலைக்கு போயிருக்காது. இந்தி கட்டாய பாடமாக படித்து வரவும் அதே நேரத்தில் தொடர்ந்து ஆங்கிலம் இருந்து வரவும் செய்திருந்தால், இப்பேர்ப்பட்ட நிகழ்ச்சிகளை எல்லாம் தவிர்த்திருக்க முடியும் என்பதை நான் முதல் அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் உணவு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது இன்றைக்கு எங்கள் பகுதியில் ஒரு படி அரிசி 2 ரூபாய் 4 அணாவுக்கு கூட கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. கிராமத்திற்கு கிராமம் தடையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது வெறும் அப்ஸர்டாக இருக்கிறது. இரண்டு ரூபாய் கொடுத்தாலும் ஒரு படி அரிசி கிடைப்பதில்லை. அரசாங்கத்திலிருந்து கொடுக்கின்ற முறையோ சரியாக இல்லை. ஒரு மாதத்திற்கு ஒரு தடவை அதுவும் சரியாக கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற கலெக்டர்கள் எதையெல்லாமோ வைத்துக்கொண்டு உத்தரவு போட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவைப் போடலாம். இருக்கின்ற கஷ்டங்களை, இருக்கின்ற சிக்கல்களை நாங்கள் சொல்லுகிறோம். அவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு தாங்களாகவே உத்தரவு போடுங்கள். ஏதோ உணவு அமைச்சர் ராமைய்யா அவர்கள் சமாளித்து வருகிறார்கள். ஆனால் அங்கங்கே அதிகாரிகளுடைய தொந்தரவுகள் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. முக்கியமாக இரண்டு ரூபாய்க்கு கூட ஒரு படி அரிசி கிடைப்பதில்லை என்பதை தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. அ. பெ. தர்மலிங்கம்: தகுதிமிக்க தலைவர் அவர்களே, தமிழகத்தில் தமிழ் காக்க உயிர் நீத்த அத்தனை வீரர்களுக்கு என் வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன், உயிரிழந்த அத்தனை பேர்களுடைய குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் நாங்கள் எல்லாம் எதிர்பார்க்காத வகையில் எங்களுடைய மதிப்பிற்குரிய டாக்டர் நடராஜன் அவர்கள் இன்றையதினம் திசை மாறி போய்விட்டார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, இந்த சட்டமன்றம் எந்தெந்த நேரத்தில் எல்லாம் கூடியிருக்கிறது என்பது அவர்களுக்கும் ஞாபகம் இருக்கும் என்று நம்புகிறேன். அப்போது டாக்டர் அவர்கள் இந்த சபையில் இருந்திருக்கமாட்டார்கள் வேறு கட்சியிலோ அல்லது வேறு அலுவலாளர் பதவியிலோ அவர்கள் ஈடுபட்டிருக்கலாம் என்று கருதுகிறேன். 1938-வது வருடத்திலிருந்து இந்தசட்டமன்றம் கூடும்போது எல்லா ரத்தக்கறை படிந்த கையோடுதான் இவர்கள் சட்டசபையில் கூடுகிறார்களே தவிர, இன்று மட்டும் புதிதாக இல்லை என்பதை நான் கூற ஆசைப்படுகிறேன். 1938-வது ஆண்டில் இந்தி கட்டாயமாக திணிக்கப்பட்ட நேரத்தில் நாங்கள் திராவிடக்கழகமாக இருந்தோம். அன்றையதினம் நடந்த போராட்டத்தில் ஆயிரம் பேருக்கு மேல் சிறைபட்டார்கள். தாளமுத்து-நடராஜன் பலி கொடுக்கப்பட்ட பின்னால் தான் சட்டசபையில் கூடினார்கள். அதற்குப்பிறகு இன்றைய வரையில், அதாவது 1952-வது ஆண்டில் நாங்கள் கள்ளக்குடியில் மும்மொழி போராட்டம் நடத்திய நேரத்தில் லால்குடி நடராஜன் என்கின்ற இளைஞனையும், கேசவன் என்கின்ற இளைஞனையும் பலி கொடுத்திருக்கிறோம். அதன் பின்னால் தூத்துக்குடியில் துப்பாக்கிப் பிரயோகம் போன்றவைகள் நடந்தன; அதிலும் ரத்தக் கறை படிந்த பின்னால் தான் சட்டசபையில் கூடினார்கள்; 1952-க்குப் பிறகு 1957-ல் முதுகளத்தூரில் துப்பாக்கிப் பிரயோகம் முதலியவைகளை நடத்திவிட்டுத் தான் சட்டசபையில் கூடினார்கள். 1964-ல் அண்மையில் நாகர்கோவிலில் மாணவர்களை சுட்டுவிட்டு அந்த ரத்தக்கறை படிந்த கைகளோடுதான் இங்கே கூடியிருக்கிறார்கள். இப்போது 1965-லேயும் அண்மையிலே நடைபெற்ற போராட்டத்தில் ஒரு இடத்திலே அல்ல, எங்களுடைய பகுதியைச் சேர்ந்த கரூர், மணப்பாறை திருச்சி போன்ற இடங்களிலேயும்; இதைப்போலவே மதுரை, கூடலூர், திருப்பூர், திருநெல்வேலி; கோயம்புத்தூர் பொள்ளாச்சி செஞ்சி போன்ற பகுதிகளிலேயும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி ரத்தக்கறை படிந்த கையோடு தான் இந்தச் சபையைக் கூட்டியிருக்கிறார்கள் . . .

கனம் சபாநாயகர்: சபையைக் கூட்டுவது சபாநாயகரோ அல்லது கவர்னரோ தான். ஆகையால் . . .

திரு. அ. பெ. தர்மலிங்கம்: கூடியிருக்கிறார்கள். இப்போதும் இவை அத்தனைக்கும் காரணம் எதிர்க்கட்சிகள் என்றெல்லாம் பேசப்பட்டது. எதிர்க்கட்சிகள் என்று சொல்லுவதை விட இத்தனைக்கும் காரணம் நம் மதிப்புக்குரிய முதல் அமைச்சர் அவர்கள் தான் என்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், என்ன காரணத்தினாலோ கடந்த சில மாதங்களாகவே நம் முதல் அமைச்சர் அவர்களும், மற்றும் பல பெரியவர்களும் சபையில் பேசும்போதெல்லாம் வீராவேசத்தோடு பேச ஆரம்பித்து விட்டார்கள். நாங்களெல்லாம் இளைஞர்கள்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [8th March 1965

எங்களுக்கு வீராவேசம் வந்தாலும் அதையெல்லாம் அடக்கி ஆள வேண்டிய கடமை பெரியவர்களைச் சேர்ந்தது. ஆனால் பெரியவர்கள் துள்ளிக் குதிக்க ஆரம்பித்து விட்டார்கள். அது மட்டுமல்ல, அப்போது பேசப்பட்ட நேரத்தில் '26-ம் தேதி, திராவிட முன்னேற்றக் கழகம்; அன்று இந்தியை ஆட்சிமொழியாக ஆக்குவதை எதிர்த்து எந்தவிதமான தியாகத்திற்கும் தயாராக இருக்கிறோம்' என்று தெரிவித்து விட்டு, 26-ம் தேதியை துக்க தினமாகக் கொண்டாடும் என்று சொன்னபோது, சபையிலே பேசும்போது, முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் 'போலீசார் கவனித்துக்கொள்வார்கள், பொது மக்கள் கவனித்துக் கொள்வார்கள்' என்று கூறினார்கள். இருவரும் கவனித்துக்கொண்டார்கள். மாணவர்களை போலீசார் கவனித்துக்கொண்டார்கள். போலீஸ்காரர்களை பொது மக்கள் கவனித்துக்கொண்டார்கள். எப்படி நாங்கள் தூண்டி விட்டதாகக் கருத முடியுமா? நாங்களா தூண்டி விட்டது? அவர்கள் தானே அதைத் தூண்டி விட்டது? அவர்கள் தூண்டி விட்டதால் தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்குப் பிராயச்சித்தமாக, எல்லா ஆலயங்களிலும் பூசை செய்து பிராயச்சித்தம் தேடினால், இவ்வளவு சிசுஹத்தி தோஷம் ஏற்பட்ட பிறகு ஆண்டவன் எப்படி மன்னிப்பான். அப்படி மன்னித்தால் அவன் ஆண்டவனாக இருக்க முடியாது. இவ்வளவையும் நடத்திய பிறகு, பேசுகிறபோது என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த சின்னசாமி 1964-ம் ஆண்டு, ஜனவரி மாதம் 26-ம் தேதி தன்னைத் தானே வருத்திக் கொண்டு தியாகம் செய்தபோது கேவலமாகப் பேசப்பட்டது. 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதி அரங்கநாதன் என்பவரும், சிவலிங்கம் என்பவரும் தங்களையே தியாகம் செய்துகொண்டு தீக் குளித்த செயலைப் பற்றி கேவலமாகப் பேசப்பட்டது. தமிழ் நாட்டிலே ஒரு பண்பு உண்டு. தனக்கு எதிரியாக இருந்த ஒருவன் இறந்து விட்டாலும், 'ஐயோ பாவம், போய்விட்டான்' என்று இரக்கம் காட்டுகிற பண்பு தமிழனுக்குத் தான் உண்டு. என்ன காரணத்தினாலோ அனுதாபம் தெரிவிக்காமல் ஆத்திரமூட்டக் கூடிய வகையில், வறுமையால் செத்தார்கள். ஏதோ செத்தார்கள் என்று பேசினார்கள். அதன் விளைவாக என் மாவட்டத்தில் விராலிமலையில், ஷண்முகம் என்பவர் எனக்கு ஒரு கடிதத்தை எழுதி 'நீங்களெல்லாம் கோழையாக ஆக விட்டீர்கள். என்ன செய்வது என்று தெரியவில்லை. என்னையே தியாகம் செய்து கொள்கிறேன். நான் இறக்கிறேன்' என்று எனக்கு கடிதத்தை எழுதிவிட்டு உயிர்த் தியாகம் செய்திருக்கிறார். இதையெல்லாம் உணர்ந்து பார்க்க வேண்டாமா? நான் நிச்சயமாகச் சொல்லிக் கொள்கிறேன், தமிழுக்காக ஒரு போராட்டம் வந்து 'நீங்கள் செத்துப் பாருங்கள்' என்று சொன்னால் சட்டமன்றத்திற்குள்ளேயே நானே தீக்குளிக்கத் தயார். இந்திக்காக இத்தனை பேர்கள் தீக்குளித்திருக்கிறார்களே இந்தி ஒழியவேண்டும் என்று, யாராவது ஒருவர் இந்தி இருக்கவேண்டும் என்று தீக்குளித்திருக்கிறார்களா? காட்டுங்கள் பார்ப்போம்? உயிர் என்றால் சாமானியமா? சாகிறான் என்றால் . .

MR. SPEAKER : Is it a democratic act?

8th March 1965]

திரு. அ. பெ. தர்மலிங்கம்: நாங்கள் கண்டிக்கிறோம். அது உகந்ததல்ல. ஆனால் கேலி பேசவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. யாரோ திராவிட முன்னேற்றக் கழகத்தினரை, எதிர்க் கட்சிக்காரர்களும், மில் முதலாளிகளும், பண பலம் உடையவர்களும், கள்ளச் சந்தைக்காரர்களும், கருப்பு மார்க்கெட் காரர்களும், சாராயம் காய்ச்சுகிறவர்களும், ஊக்குவித்தார்கள் என்று எல்லாம் தெரிந்த டாக்டர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டாமா? எங்களிடத்தில் கள்ளச் சந்தைக்காரர்கள், கள்ள வாணிபம் செய்கிறவர்கள் இருக்கிறார்களா? அந்த முறையில் தண்டிக்கப்பட்டவர்கள் யாராவது இருக்கிறார்களா காட்டுங்கள் இப்போதே தூக்குப் போட்டுக் கொண்டு சாகிறோம். தயவு செய்து . . .

டாக்டர் பா. நடராஜன்: நீங்கள் அவர்களுக்கு இரையாகி விட்டீர்கள் என்று தான் நான் சொன்னேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: நாங்கள் இரையாகியிருக்கிறோமா இல்லையா என்பதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன். சமீபத்திலே பாராளுமன்றக் கூட்டத்தில் ஒரு வரவு-செலவுப் புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டது. அரசியல் கட்சிகளுக்கு கம்பெனிகள் எவ்வளவு நன்கொடை கொடுத்திருக்கிறார்கள் என்று ஒரு புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். அதில் பார்த்தால் காங்கிரஸ் கட்சிக்கு 98 லட்சம் ரூபாய் முதலாளிகள் நன்கொடை கொடுத்திருக்கிறார்கள்—நன்கொடை என்ற பெயரில் வந்திருக்கிறது. அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அந்த முறையில் கொடுக்கப்பட்டது, இந்த நாடு பூராவிற்கும் சேர்ந்து 301 ரூபாய். எங்கள் பக்கமா முதலாளிகள் இருக்கிறார்கள்? முதலாளிக் கட்சி எது என்று தயவு செய்து யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இத்தனைக்கும் பிறகு அவர்கள் தூண்டி விட்டார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் என்ன காரணத்தினாலோ இது வரையில் மில் முதலாளிகளோ, தூண்டி விடுவதற்கு உடந்தையாக இருந்தவர்களோ யாரும் கைது செய்யப்படவில்லை. திருச்சியில் ஒரு மாநாடு நடத்தினார் என்ற காரணத்திற்காக திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய சர். பி. டி. ராஜன் அவர்கள் ஏன் கைது செய்யப்படவில்லை? அதில் கலந்துகொண்ட கருமுத்து தியாகராஜன் செட்டியார் ஏன் கைது செய்யப்படவில்லை? அதிலே கலந்துகொண்டு பேசிய திரு. ஜி. டி. நாயுடு ஏன் கைது செய்யப்படவில்லை? அதிலே கலந்து கொண்டு உரை ஆற்றிய திரு. கிருஷ்ணசாமி பாரதி ஏன் கைது செய்யப்படவில்லை. திரு. ஆதித்தன் ஏன் கைது செய்யப்படவில்லை?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் மீது இப்போது வழக்கு போடப்பட்டிருக்கிறது. என்ன காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டார் என்று வழக்கில்

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1965

இருக்கிறது. இப்போது அதைப் பற்றி பதில் அளிக்க முடியாது. வழக்கில் இருக்கிற ஒன்றைப் பற்றிப் பேசினால் அதற்கு பதில் அளிப்பது கஷ்டமாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: மற்றவர்களை ஏன் கைது செய்யவில்லை என்பதற்காகத் தான் நான் இதைக் குறிப்பிட்டேன். அதன் பிறகு எங்கள் கட்சியைச் சேர்ந்த, சட்ட மன்ற துணைத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நான் உண்மையிலேயே அதைப் பற்றி பெருமைப்படுகிறேன். எங்களுக்கெல்லாம் அப்படிப்பட்ட வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்று வேதனைப்படுகிறேன். பரிதாபம்; இந்த சர்க்காரிலே எங்களுக்கெல்லாம் 54-வது Cr. P.C. செக்ஷன் போடப்பட்டது. கௌரவத்திற்கு உரிய அங்கத்தினர் என்று சொல்லப்படுகிறது—ஆனால் போடப்பட்டது 54 Cr. P.C. செக்ஷன். சிறையிலே இருந்த ஒருவன் என்னைப்பார்த்து 'என்ன கேஸ்' என்று கேட்டான். '54-வது செக்ஷன்' என்று சொன்னேன். அதற்கு அவன் 'நானும் 54-வது செக்ஷன் தான்' என்று சொன்னான். '54-வது செக்ஷன் என்றால் என்ன' என்று கேட்டேன். 'முக்காடு கேஸ்' என்று சொன்னான். 'அப்படியென்றால் இரண்டு பேர் கேசும் ஒன்று' என்று கேட்டேன். 'ஆமாம், இங்கே ஒன்று தான், வெளியே வேறு' என்று சொன்னான். நான் கனம் அங்கத்தினர். கலைஞர் கருணாநிதி பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டார். ஏன் என்று எங்களுக்கெல்லாம் புலனாகவில்லை. அவர்களையெல்லாம் தூண்டி விட்டார்கள் என்று அந்த சாக்கில் உள்ளே போட்டுவிடவேண்டும்—தர்மபுரி தேர்தல் இருக்கிறது. அவரை வெளியே விட்டு வைக்கக் கூடாது—என்று உள்ளே போட்டு விட்டார்கள் என்று ஜனங்களே பேசுகிறார்கள். அது மாத்திரம் அல்ல. அவரை 400 மைல்களுக்கு அப்பால் ஏன் கொண்டுபோக வேண்டும்? அவர் என்ன பயங்கரவாதியா? இங்கே பேசும்போது கூட முதல் அமைச்சர் அவர்கள் 'கலைஞர் கருணாநிதி அவர்கள் எல்லாம் தெரிந்தவர்கள், அவர்களைப் பாராட்டுகிறேன், விஷயம் தெரிந்தவர்' என்றெல்லாம் கூறியிருக்கிறார். ஐயையோ, தெய்வமே, எதிர்த்தால் கூடப் பரவாயில்லை, ஆதரித்தால் ஆபத்து போல இருக்கிறது. என்ன காரணத்திற்காக கைது செய்து 400 மைல்களுக்கு அப்பால் கொண்டு போகவேண்டும்? என்ன பயங்கரத்தை செய்தார்? அவர்கள் என்ன சதி செய்தார்கள்? உண்மையில் யோசித்துப் பார்க்கவேண்டாமா? சதி செய்தாரா? யாரைக் கவிழ்க்க சதி செய்தார்? எங்கே என்ன சதி செய்தார்? அது மட்டுமல்ல. என் மாதிரி உடம்பாக இருந்தால் தாங்கும். ஆஸ்பத்திரியில் மருந்து சாப்பிட்டு, வேளா வேளைக்கு மருந்து சாப்பிட வேண்டும், நெஞ்சில் வலி; ரத்த அழுத்தம் சரியாக இல்லை, வெளியில் கூட்டங்களுக்குப் போகக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டவர், என்ன அராஜகம் செய்து விட்டார்? அவர்கள் பத்திரிகையில் ஏதாவது எழுதினரா? உணர்ச்சியைத் தூண்டி விடுகிற மாதிரி எழுதினர் என்று சொன்னால் எத்தனை பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். பத்திரிக்கை தர்மம் என்றெல்லாம் பேசப்படுகிறது. இன்றைக்கு சுதேசமித்திரன்

8th March 1965] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

பேரிலே வழக்கு, பேசக் கூடாது. நவமணி மீது வழக்கு, பேசக் கூடாது. தினத் தந்தி ஆசிரியர் கைது, பேசக் கூடாது. மாலை முரசு ஆசிரியர் கைது, பேசக் கூடாது. மாலை மணி ஆசிரியர் கைது, பேசக் கூடாது. ஏன்? எல்லோரும் தூண்டி விட்டார்கள். நான் கேட்கிறேன் தங்கள் மூலமாக, அவர்களுக்கு; இந்த சர்க்காருக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்கிறதா? எவ்வளவுதான் ஒருவருக்கு ஒருவர் வேண்டியவன் வேண்டாதவன் என்று இருந்தாலும் சர்க்காருக்கு வேண்டியவன், வேண்டாதவன் என்று இருக்கலாமா? இதெல்லாம் தூண்டியது என்று சொன்னால் எனது பெருமதிப்புக்கும் வணக்கத்திற்கும் உரிய பெரியார் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். என்ன அறிக்கை விட்டிருக்கிறார்? எல்லோரையும் குறி வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார். நெருப்புப் பெட்டி, பெட்ரோல் வைத்துக்கொண்டு எல்லோரையும் குறி வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார். எங்களைச் சொல்ல மாட்டார் என்று நினைக்கிறேன். ஏனென்றால் எங்களுடைய வீடுகளெல்லாம் சாதாரண வீடுகள் தான். அந்தப் பத்திரிகை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்படி அவர் மீது நடவடிக்கை எடுத்துவிட்டால், 'உங்கள் சட்டமாவது, கிட்டமாவது; போங்கள்' என்று சொல்லிவிடுவார். தமிழ்ச் செய்தி என்ற பத்திரிக்கை வெளிவந்து கொண்டிருக்கிறது அந்த ஆசிரியரை ஏன் கைது செய்யவில்லை? ஏன் அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. ஆளும் கட்சியினருக்கு வேண்டியவர்கள் என்ற காரணத்தினாலா? நவ சக்தி என்ற பத்திரிகை இருக்கிறது. அந்தப் பத்திரிக்கை மட்டும் என்ன வேண்டுமானாலும் எழுதலாமா? காரணம், அது ஒரு பிரமுகருடையது. அதனால் தான் அவரை அரெஸ்ட் பண்ணவில்லை. பெரியவர் என்றால், காங்கிரஸ் கட்சியின் பாஷையில் நம்முடைய முன்னாள் முதல் அமைச்சர் அவர்களுடைய பத்திரிகைமீது நடவடிக்கை எடுக்கவில்லை. நாம் ஏதாவது செய்தால், அடி, பிடி என்று சொல்லுகிறது. 30-வது D.I.R. சட்டம். இது தான் ஜனநாயகமா? இப்படியெல்லாம் நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதைப் பார்த்தால், நமது முதல் அமைச்சர் அவர்கள் போலீஸ் அமைச்சரான பிறகு தான் இதெல்லாம் நடந்திருக்கிறது. மன்னிக்கவேண்டும், போலீஸ் அமைச்சர் வேறு. இப்பொழுது தான் மந்திரி சபையில் இலாகா மாறுவது சகஜமாய்விட்டது. மாதத்திற்கு ஒரு தடவை இலாகா மாறுகிறது. கனம் மன்றாடியாரிடமிருந்து உணவு இலாகா மாறிற்று. மாதா மாதம் மாறுகிறது. நான் தவறுதலாக முதல் அமைச்சரை போலீஸ் அமைச்சர் என்று சொல்லவில்லை. ஆனால் போலீஸ் இலாகாவைப்பற்றிப் பாராட்டினது, இதைப்பற்றி பேசியது; போனது; வந்தது எல்லாம் நமது முதல் அமைச்சர் அவர்கள்தான். அதனால் இந்த போலீஸ் இலாகாவை முதல் அமைச்சர் வைத்திருக்கிறார்களோ என்று நினைத்தேன். நான் அப்பொழுது ஜெயிலில் இருந்தேன். ஏதாவது இம்மாதிரி இலாகாவை மாற்றி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ, அல்லது ரகசிய சுற்றறிக்கை வந்திருக்கிறதோ என்று நினைத்தேன். நான் தவறுதலாகச் சொல்லவில்லை. அதற்குப்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [8th March 1965

பிறகு, இப்பொழுது ஒரு உரிமைப் பிரச்சினை தங்கள் முன்னாலேயே இருக்கிறது. அதைப் பற்றி எதுவும் பேசவில்லை. நம்முடைய அருமை நண்பரும், உங்களுடைய பலரின் சொந்தக்காரருமான இந்தச் சபையின் அங்கத்தினர் திரு. ராஜாங்கம் அடிக்கப்பட்டு, எலக்ட்ரிக் ஷாக் கொடுக்கப்பட்டு, முதுகை உரித்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் கோர்ட்டில் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லுகிறார். அவர் கோர்ட்டுக்கு வருவதற்குள் காயத்தின் ஒரு தழும்பு கூட இருக்காது, ஆறிப் போய்விடும். உண்மையிலே ஜனநாயகம் பாதுகாக்கப் பட வேண்டும் என்றால், தலைவர் அவர்களே, அந்த அங்கத்தினருக் குப் பாதுகாப்புக் கொடுத்து இந்தச் சபைக்கு அழைத்து வர ஏற்பாடு செய்யவேண்டும். அப்பொழுது தான் உண்மை விளங்கும். நாங்கள் சொல்வது தவறாக இருந்தால், எங்களைக் கொலை செய்யுங் கள், சுட்டுக் கொல்லுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை. அப்பொழுது தான் நாங்கள் சொல்லுவதின் உண்மையை நிரூபிக்க முடியும். கோர்ட்டில் பார்த்துக்கொள்வது என்றால், அதற்குள் காயம் எல்லாம் ஆறிப் போய் ஒரு தழும்பு கூட இருக்காது. நாங்கள் போய் பார்ப்பதற்குக்கூட உரிமை இல்லை. அவருடைய சொந்தக்காரர்கள் அந்த ஊருக்குப் போனாலே தவறு. அந்த ஜாதியில் பிறந்த காரணத்தினாலே, அவருடைய சொந்தக்காரர் களெல்லாம் அயோக்கியர்களா? விரோதிகளா? துரோகிகளா? தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். காங்கிரஸ் மகா சபைக்கு உழைத்தவர்கள், பாடுபட்டவர்கள், தியாகம் செய்தவர் கள் தோழர் ராஜாங்கத்தின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள், பல பேர்கள் அந்தப் பகுதியிலே உரிமையோடு போக முடியவில்லை. அப்படி அவரை அடித்து, நொறுக்கி, முதுகிலே பட்டை பட்டை யாக ஆக்கியிருக்கிறார்கள். போலீசாரைத் தண்ணீர் கேட்டால் பெட்ரோல் ஊற்றினார்கள் என்று சொல்லப்படுகிறது. தலைவர் அவர்களே, மூத்திரத்தைக் கொடுத்தார்களாம், வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். (எதிர்க்கட்சியிலிருந்து ஆரவாரம் 'ஷேம் ஷேம்') அவர்கள் முதுகில் அடி பட்ட அடையாளம் இல்லாமல் இருந்தால், நீங்கள் கொடுக்கிற தண்டனையை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். வழக்கு இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி மேலும் பேசவில்லை. அந்தப் பகுதியிலே கற்பழிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டது. உண்மையில் அந்த நேரத்தில் அவர்கள் வேறு விதமாக இருந்தால் கற்பழிக்கப் பட்டிருப்பார்களா? கற்பழிப்பதை எப்படிக் காட்டுவது? அவர்கள் மறத்திகள், கோழைகள் அல்ல, அவர்கள் ஒரு வீர குலத்தைச் சேர்ந்தவர்கள். சும்மா இருக்கமாட்டார்கள், ஏதாவது போய் கேட்டால், அடி, உதை என்று சொல்லுகிறார்கள். ராணுவ ஆட்சி நடைபெறுகிறது. ஜனநாயக ஆட்சியா நடை பெறுகிறது.

என்னுடைய பகுதி கரூரைப் பொறுத்தவரையில் கலவரம் நடைபெற்றதுபற்றி இங்கே பேசப்பட்டது. எவ்வளவோ பேர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் நண்பர் சக அங்கத்தினர் திரு. ராமநாதன் அவர்கள் கொள்ளை அடித்ததைப்பற்றி பாக்கெட்டில்

8th March 1965] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

700 ரூபாயை பார்த்துவிட்டு வந்ததுபோல் இங்கே பேசினார்கள். அவர்கள் 1962-ல் எங்கள் கட்சியில் இருந்தார்கள். 1963-ல் யூனியன் சேர்மனாக வேண்டி அங்கே போனார்கள். அதுவும் முடியவில்லை. மணப்பாறை அங்கத்தினர் எனது மதிப்பிற்குரிய கனம் சின்னையா கவுண்டர் ராஜிநாமா பற்றி பேசினார்கள். திருச்சி அரசியலே ஒரு விதமானது. திடீர் திடீரென்று இந்தப் பக்கத்திலும், அந்தப் பக்கத்திலும் அவர்கள் ஆட்களைச் சேர்த்து வைத்துக்கொள்வார்கள். சில பேர்களைத் தொலையுங்கள் என்று விட்டுவிட்டார்கள். தீய சக்திகள் நுழைந்துதான் இந்தக் கலவரங்கள் எல்லாம் ஏற்பட்டது. செஞ்சி அங்கத்தினர் பேசினார். அந்தப் பகுதியிலே இந்த மன்ற உறுப்பினர் திரு. கோபால் கவுண்டர் அண்ணார் பையன் துப்பாக்கி குண்டால் தாக்கப்பட்டு மடிந்துபோனான். செஞ்சி உறுப்பினர் அருமை நண்பர் ராஜாராம் அதைப்பற்றி பேசவில்லை. அராஜக ஆட்சிதான் நடைபெறுகிறது. யாருக்கும் பாதுகாப்பு இல்லை. ராத்திரியில் ஜாக்கிரதை என்று சொன்னார்கள். 54-ல் பிடிக்கப் போகிறார்கள் என்று சொன்னார்கள். 51 என்று சொன்னாலும் பரவாயில்லை, 41 என்று சொன்னாலும் பரவாயில்லை. திருச்சியில் நேற்று 40 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே சொல்லுகிறேன். இந்தக் கலவரத்திற்கும் எங்களுக்கும் நிச்சயமாக சம்பந்தம் கிடையாது. நான் வெட்கப்படுகிறேன். தலைவர் கோழையா என்று சொன்னார். நாம் மாணவர்கள் செய்த ஒரு சிறிய காரியத்தைக்கூட நம்மால் செய்ய முடியவில்லையே என்று வெட்கப்படுகிறேன். இந்தச் சட்ட சபையில் விவாதம் நடந்தபொழுது, மேயா, ஷல்லா, இதுவா; அதுவா என்றெல்லாம் பேசப்பட்டது. அப்படியெல்லாம் பேசி இந்தப் பிரச்சினைக்கு நாம் பரிகாரம் காணமுடியாமல் இருக்கும் பொழுது, மாணவர்கள் இதைச் சாதித்துவிட்டார்களே. நாம் அத்தனை பேர்களும் செய்ய முடியாததை, பரிகாரம் தேடி முடியாதபோது அவர்கள் செய்துவிட்டார்களே; இரண்டு காங்கிரஸ் அமைச்சர்களை ராஜிநாமா செய்யும்படி செய்து விட்டார்களே என்பதற்காக அவர்களை பாராட்டுகிறேன். மதிப்பிற்குரிய திரு. கோசல்ராம் அவர்கள் நமது மந்திரி ராஜிநாமாவைப்பற்றி சொல்லுவார்கள் என்று நினைத்தேன். அவர்கள் சேக்கிழார் பரம்பரையைச் சேர்ந்த முதல் அமைச்சர் என்று சொல்லிவிட்டார். நம்முடைய முதல் அமைச்சர் ஏன் ராஜிநாமா செய்யவில்லை ? இங்கே ராஜிநாமா செய்தால் ஏற்றுக்கொண்டு விடுவார்கள் என்று நினைத்தார்களோ என்னவோ, டெல்லியில் செய்தால்தான் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று எண்ணினார்களோ என்னவோ, எனக்குத் தெரியவில்லை. இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு, தமிழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு, தமிழக முதல் அமைச்சர் ராஜிநாமா செய்து மத்திய சர்க்காரைப் பணிய வைத்திருக்கவேண்டும். டெல்லி அமைச்சர்கள் ராஜிநாமா செய்து சர்க்காரைப் பணியவைக்கவேண்டியிருந்ததே என்று உண்மையிலேயே நான் வருத்தப்படுகிறேன், வேதனைப் படுகிறேன். இவ்வளவு பெரிய கலவரங்கள் ஏற்பட்டதற்குப் பின், இதைப்பற்றி விவாதித்துக்கொண்டே இராமல், உண்மையில் இந்தப் பிரச்னைக்கு ஒரு நிரந்தரப் பரிகாரம் தேட வேண்டும். ஒரு கட்சி விட்டு இன்னொரு கட்சி மாறுவது என்பது அடிக்கடி

இப்பொழுது ஏற்படுகிறது. கட்சி மாறுவது காபி குடிப்பது மாதிரி ஆகிவிட்டது. ஆகவே, தோன்றியபடியெல்லாம் சுட்டுக் கொல்லாதீர்கள். உங்கள் கட்சிக்கு வரக்கூடியவர்கள் அனுவசியமாக சுட்டுக்கொல்லப்படலாம். அல்லது உங்கள் கட்சியில் இருந்தவர்கள் இந்தக் கட்சிக்கு வருகிற நேரத்தில் அவர்கள் இறந்திருக்கலாம். ஆகவே, இதுபற்றி நல்ல முடிவுகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் போராட்டத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை. மானம் காத்த மறவர்களை, மாணவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்கள் இப்பொழுது பள்ளிகள், கல்லூரிகள் திறக்கும்பொழுது தங்கள் தங்கள் வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும், எக்காரணத்தைக் கொண்டும் இம் மாதிரி போராட்டத்தில் ஈடுபடக்கூடாது என்று என்னுடைய சார்பிலே அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், இந்த பட்ஜெட் விவாதத்திலே மொழிக் கிளர்ச்சி பற்றியே பேசவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வேறு விதத்தில் அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காததால், இந்த பட்ஜெட் விவாதம் பூராவுமே மொழிக் கிளர்ச்சி சம்பந்தப்பட்டதாக ஆகிவிட்டது. மொழிக் கிளர்ச்சி இந்த நாட்டின்

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

ஒற்றுமையில் அக்கரை உடையவர்கள் அனைவருக்கும் கவலை தரக் கூடிய ஒரு விஷயமாகும். அந்தக் கிளர்ச்சிகளில் நடந்த பல சம்பவங்களை, செயல்களை எந்தக் கட்சியினருமே ஆதரிக்கவில்லை. அதை நிராகரித்திருக்கிறார்கள். இந்தச் சபையில் இருக்கிற எதிர்க்கட்சியினர்கூட இந்த நிகழ்ச்சிகளுக்கு வருந்தம் தெரிவித்து, போலீஸ் அதிகாரிகள் இறந்ததற்குக் கூட அனுதாபம் தெரிவித்து அதில் உயிர் நீத்தவர் அனைவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்து, இந்தச் சபையில் நிறைவேற்றுவதற்காக ஒரு தீர்மானத்தைக் கொடுத்தார்கள். அதற்கு இடம் கிடைக்காமல் போன காரணத்தினால் வெளியிலே கூட அந்த அனுதாபத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். இந்த நிகழ்ச்சிகளின் விவரங்களுக்கோ, மற்றவைகளுக்கோ போவதற்கு முன்பு, ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒன்றே ஒன்று பத்திரிகையில் பார்த்தேன். அந்த செய்தி உண்மையானால், அதாவது மாணவர்கள் பேரில் போடப்பட்டுள்ள வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன, அவர்கள் அனைவரும் பள்ளிகளுக்குச்
11-00 a.m. செல்லலாம், பள்ளிகளும், கல்லூரிகளும் இன்றிலிருந்து திறக்கப்படும் என்கின்ற செய்தி வந்ததானது உஷ்ணத்திற்கு இடையிலே சிறிதளவு நல்ல நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே மனோபாவத்தோடு மற்ற பிரச்சினைகளையும் அணுகவேண்டும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்களையும், இந்த அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்ளுகிறேன். அரசாங்கம் அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறார்கள். இரண்டு யூனிவர்சிடிகளைச் சேர்ந்த வைஸ்-சான்ஸலர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, நாங்கள் இந்த நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசியல் கட்சி

8th March 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

களுடைய அபிப்பிராயங்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டாம் என்று எண்ணியிருப்பார்களோ என்னவோ. மாணவர்களிடம் எல்லோருக்கும் அனுதாபம் இருக்கிறது. நானும் அவர்களைக் கண்டிக்கவில்லை. ஏதாவது இயக்கங்களில் ஈடுபடுகிறார்கள் என்றால், அது அவர்களுடைய குற்றம் இல்லை. ஆகவே, இந்த மொழிப் பிரச்சினையால் ஏற்பட்ட கிளர்ச்சிக்குக் காரணம் என்ன என்று இன்னும் பரிசீலனை செய்யப்படவில்லை என்றுதான் சொல்லுவேன். அப்படிப் பரிசீலனை செய்தால், மாணவர்கள் மீது குறைப்பட்டுப் பிரயோசனம் இல்லை என்பதை அறிவார்கள். எதிர்க் கட்சியினருக்கு மதிப்பு கொடுக்கவில்லையென்றால்கூட, வைஸ்-சான்ஸலர்கள் கூறியதற்காக செய்கிறோம் என்கிறார்கள். எப்படியிருந்தாலும், இது மாணவர்களுக்குச் செய்த கொடுமைக்கு பிராயச்சித்தமாக இருக்கும். இதே மனோபாவத்தை மற்ற பிரச்சினைகளை அணுகும்போதும் இன்னும் எடுக்கவேண்டிய முடிவுகள் சம்மந்தமாக எடுக்கும் நடவடிக்கைகளிலும், காட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இறந்த மாணவர்கள் அனைவருடைய குடும்பங்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும். அதையும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கனம் முதல் அமைச்சரைக் குறிப்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தப் பிரச்சினையில் அரசியலே இருக்கக்கூடாது, இந்த மொழிப் பிரச்சினையே அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கவேண்டும். அதே மாதிரி மற்ற கட்சிகளும், அரசாங்கமும், தங்கள் தங்கள் கட்சிகளுக்கு அப்பாற்பட்டது இந்தப் பிரச்சினை என்று கருதவேண்டும். இதைக் கட்சிப் பிரச்சினையாக ஆக்கப்படுவதை நான் ஆதரிக்கவில்லை. இது ஒரு கட்சிப் பிரச்சினை இல்லை. இந்தக் கிளர்ச்சிக்கு வேறு பல காரணங்கள் உண்டு. அரசாங்கத்தின் மேல் ஆளுக்கு ஒரு கல்லாகப் போட்டு இருக்கிறார்கள். அது அவர்களுடைய அதிருப்தியைத்தான் காட்டுகிறது. இந்தச் சூழ்நிலையைப் பயன் படுத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. ஆகவே எந்த ஒரு கட்சியின் மீதும் பழியைப் போடுவது சரியாகாது. அதனால் அரசியல் ஆதாயம் வேண்டுமானால் ஆளும் கட்சியினருக்கு இருக்கலாமே தவிர, அது உண்மையாகாது. முதல் அமைச்சர்கூட ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார்கள். இந்த வன் செயல்களுக்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழகமும், இடதுசாரி கம்யூனிஸ்டுகளும், மில் முதலாளிகளும் என்று குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர்களை கைது செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்வானேன்? அவர்கள் மீது ருசு இருக்கிறது என்றால், வழக்குப் போடுவதற்கென்ன? கோர்ட்டுக்குப் போவதற்கென்ன? சான்றுகள் ருசுப்படுத்தப் பட்டாலும் படலாம் படாவிட்டாலும் இல்லை. அது வேறு விஷயம்; ஆனால் இருக்கிற சான்றுகளை வைத்துக் கொண்டு வழக்குப் போட துணிவு இல்லையா? அதெல்லாம் இருக்கட்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தினரைக் கைது செய்ய சான்றுகள் இருந்தன. இடது சாரி கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களைக் கைது செய்ய சான்றுகள் இருந்தன. ஆனால் மில் முதலாளிகளும்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [8th March 1965

தூண்டுகிறார்கள் என்று சொன்னார்களே, ஏன் அவர்களில் ஒருவரையும் கைது செய்யவில்லை? சான்றுகள் இல்லையா?

எட்டாந்தேதி வரைக்கும் நடந்த நிகழ்ச்சிகள் வேறு. அதன் பிறகு 10, 11, 12-ம் தேதிகளில், இந்த மூன்று நாட்களிலும் நடந்த நிகழ்ச்சிகள் தனித்தன்மையானது. அதற்கு அரசியல் கட்சிகளே காரணம் இல்லை. . அரசியல் கட்சிகளே அவற்றைக் கண்டித்து இருக்கிறார்கள். தலைவர்களெல்லாம் கண்டித்திருக்கிறார்கள் இந்த வன் செயல்களை. இருந்தும், வன் செயல்கள் நீடிக்கக் காரணம் என்ன? பெரிய பெரிய ரெயில்வே நிலையங்கள், தபால் ஆபீசுகள், மற்ற அலுவலகங்கள் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தி விடப் பட்டன. பெட்ரோல் எப்படி சேகரிக்க முடிந்தது? அம்மாதிரி நிகழ்ச்சிகள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் இல்லையா? போலீஸ் என்ன செய்து கொண்டிருந்தது என்று அறிய விரும்புகிறேன். எங்கெங்கே சம்பந்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று வேட்டையாடிக் கொண்டு அலைகிறவர்கள்தானே அவர்கள். யார் யார் என்ன என்ன செய்வார்கள் என்று தகவல் தெரியவில்லையா? ஒரு லட்சம் வரி செலுத்துவதைத் தவிர்க்க மூன்று லட்சம் செலவழிப்பார்களே? அது தெரியாதா? அவர்கள் சம்மந்தம் இல்லையா? இல்லை, முதல் அமைச்சர் போகிற போக்கில் பொறுப்பில்லாமல், மில் முதலாளிகள், 'வெஸ்டட் இண்டரஸ்ட்' என்று பேசினார்களா? இல்லை; ஆதாரம் இருந்தது; அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் விரும்பவில்லையா? சாதாரண திராவிட முன்னேற்றக் கழகத்தினர், கம்யூனிஸ்ட் இவர்கள் மீது வழக்குப் போடவேண்டும், சிறையில் அடைக்க வேண்டும் என்று சொல்லும் போது, இப்படிப் பட்ட மில் முதலாளிகளிலும், இரண்டு மூன்று ஆசாமிகளை கைது செய்தால் என்ன? தகவல் அப்பொழுது இல்லை என்றாலும் இப்பொழுதாவது கிடைத்திருக்க வேண்டுமே? அதற்காகப் போலீசைக் குற்றம் சொல்ல வேண்டுமானால், அவர்கள் தவறான பாதையில் போகவில்லை என்றாலும், சரியாகப் பணியாற்றவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அவர்களுடைய 'இண்டெலிஜன்ஸ் டிபார்ட்மெண்ட்', 'அன்-இண்டெலிஜண்ட் டிபார்ட்மெண்டாகத்தான்' இருந்திருக்கிறது. இண்டெலிஜண்ட் டிபார்ட்மெண்டில் இண்டெலிஜன்ஸ் இல்லாதவர்கள்தான் இருக்கிறார்கள். எப்படிப் பரவும் என்று தகவல் கொடுத்தார்கள்? ஏதோ அரசியல் கட்சி மீது, மாணவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தால், பிரச்சினையை சமாளித்து விடலாம், துப்பாக்கியும்; போலீசும் இருந்தால் போதும் என்று அவர்கள் நினைத்திருந்தாலும், இவ்வளவு பெரிய விஷயத்தில் வருமுன் காக்க வேண்டியது அமைச்சர் கடமையல்லவா? இதை நமது ஜனாதிபதியே சுட்டிக் காண்பித்திருக்கிறார்கள். எல்லா விவரங்களையும் அறிந்திருக்கக் கூடிய ஜனாதிபதி அவர்களே மன வேதனையோடு முன் ஜாக்கிரதையாக இருந்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைவிட கண்டனம் வேறு மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் வேண்டியதில்லை. வன் செயல்களை யாரும் ஆதரிக்கவில்லை. ஆதரிப்பதும் சரியில்லை. ஆனால் ஏதோ அரசியல் கட்சி பொறுப்பு என்று மட்டும் தட்டிக்கழிக்க முடியாது. இது ஒன்றும் புரட்சியும் இல்லை. டாக்டர் நடராஜன் அவர்கள் இது

8th March 1965] *[திரு. மீ. கலியாணசுந்தரம்]*

ஏதோ புரட்சி என்ருர்கள், மார்க்ஸ் போதித்தார் என்ருர்கள். மார்க்ஸ் இப்படிப் போதித்ததாக நான் படிக்கவில்லை. டாக்டர் நடராஜன் படித்திருக்கிருர்களோ என்னவோ. இது புரட்சியே இல்லை. புரட்சி என்பது வேறு. இது வெறும் கிளர்ச்சி. புரட்சி என்பதற்கு அர்த்தமும் வேறு, முறையும் வேறு. புரட்சி ஒரு கலை என்று லெனின் சொன்னர். '' Revolution is an art '' பகைமையும், கொலையும் செய்வதுதான் புரட்சி என்று நினைக்க வேண்டியதில்லை. இந்தக் கிளர்ச்சி 1942 போராட்டத்தோடு ஒப்பிட வேண்டிய அவசியமும் இல்லை. இது பல உருவத்திலே வந்தது. அதற்குக் காரணம் என்ன ? கேரளாவிலே கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியில் இருந்தபோது, அதைக் கவிழ்க்க காங்கிரஸ்காரர்கள் பயன் படுத்திய வழிகள்தான் இவை. ஆகவே, மாணவர்கள் மற்றவர்கள் என்ன நினைக்கிருர்கள், தங்கள் அதிருப்தியைக் காட்ட இப்படிப் பட்ட வழிகளைத்தான் கையாளவேண்டும் என்று நினைத்து விட்டார்கள் போலும். ஆகவே, அரசாங்கத்தின்மீது ஏற்பட்ட அதிருப்தியைத் தெரிவிக்க, அரசாங்க சொத்துக்களான, தபால் ஆபீசுக்கு நெருப்பு வைத்தார்கள், ரெயில்வே ஸ்டேஷனுக்கு நெருப்பு வைத்தார்கள், டெலிபோன் எக்ஸ்சேஞ்சை நாசம் செய்தார்கள், போலீஸ் அதிகாரிகளைக் கொலை செய்தார்கள். ஆகவே, இந்தச் செயல்களுக்கு உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்ருல், காங்கிரஸ்காரர்கள் கேரளாவில் செய்ததைத்தான் உதாரணமாகச் சொல்லலாம். அது ஒன்றுதான் பொருத்தமாக இருக்கும். ஆகவே, சுதந்திரப் போராட்டம் முதலியவற்றை இந்த மொழிக் கிளர்ச்சிக்கு ஒப்பிடுவது சரியில்லை. ஒரு சூழ்நிலை ஏற்பட்டது; அந்தச் சூழ்நிலையை மக்கள் தங்களுக்கு மத்திய சர்க்கார் பேரிலும், மாநில சர்க்கார் பேரிலும் இருக்கும் அதிருப்தியை, ஆத்திரத்தை வெளிக்காட்ட உபயோகித்துக் கொண்டார்கள். அவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதன் காரணமாக ஆத்திரம், அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. தவருன வழி. அதில் சந்தேகம் இல்லை. தீய சக்திகள் பயன் படுத்தப் பட்டன என்பது தவறு, அது வேறு விஷயம்.

எதிர்க் கட்சிக்காரர்கள் மீது குறை சொல்லுகிருர்கள். அதிகாரத்தை எப்படி கைப்பற்றலாம் என்று செய்கிருர்கள் என்கிருர்கள். அங்கத்தினர்களுக்குக் கோபம் வருகிறது. மொழிக் கிளர்ச்சியும், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதென்பதும், வேறு வேறு விஷயங்கள். சில அங்கத்தினர்கள் கோரிக்கைவிடுகிருர்கள். பக்தவத்சலம் ராஜீனமா செய்ய வேண்டும் என்று கேட்கிருர்கள். யார் வந்தால் என்ன. எல்லாம் ஒரே குட்டையிலே ஊறின . . . அதை நான் சொல்ல விரும்பவில்லை. யார் வருவதால் என்ன தனிப்பட்ட நலன் ? ஒருவர் நல்லவர், மற்றவர் அப்படியில்லை என்று பாகுபாடு செய்ய சக்தி எனக்குப் போதாது. ஆனல் நான் கேட்கிறேன், இந்த முதல் அமைச்சர்தானு பொறுப்பாளி ? இந்த மாநிலத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிற கொள்கைகள், 10, 15 வருஷங்களாகப் பொறுப்பில் இருந்தவர்கள் எல்லாம் பொறுப்பாளிகள் அல்லவா ? இருந்தபோதிலும், இந்த 20, 25 தினங்களாக நமது கனம் முதல் அமைச்சர் அவர்கள் நிதானம் தவறியிருக்கிருர்கள், என்பதை வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன்.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [8th March 1965

அவர்களுக்குரிய அந்தஸ்துக்கும், அவர்களுடைய அனுபவத்திற்கும் உள்ள முறையில் அவர்களுடைய வார்த்தை ஒரு சந்தர்ப்பத்திலும் வரவில்லை. பையன்கள் தீக் குளிக்கிறார்கள்—என்றால், 'மன வெறுப்பு ஏற்பட்டுத் தீக் குளித்திருக்கலாம்' என்று அந்தச் சமயத்திலா கிண்டல் செய்வது? பிறகு செய்யக் கூடாதா? எப்படியாவது இருக்கட்டும். அவன் தவறாகப் புரிந்துகொண்டிருக்கலாம் அல்லது தவறாக அவன் எடுத்துக்கொண்டிருக்கலாம். எப்படியிருந்தாலும், 'தமிழுக்காக உயிரைக் கொடுக்கிறேன்' என்று பலர் நினைத்துப் பல காரியங்கள் செய்திருக்கலாம். அந்த எண்ணத்தையாவது பாராட்ட வேண்டாமா? அந்தச் சமயத்தில் தானா அதைச் சொல்வது? இப்படி எல்லாம் அவர்கள் சொன்னது அந்தச் சமயத்தில் மேலும் மேலும் ஆத்திரம் ஊட்டக்கூடியதாக இருக்கிறது.

இன்றைக்கு நடந்ததையே ஒரு சிறு உதாரணமாக எடுத்துக் கொள்வோம். கனம் அங்கத்தினர் திரு. கே. டி. கோசல்ராம் கொஞ்சம் வேகமாகப் பேசினார்கள். அவர் பேசலாம். அதைப் பற்றி இல்லை. ஆனால், பெரிய தலைவர்கள் என்ன செய்யவேண்டும்? பெரிய தலைவராக இருப்பவர் எழுந்து, 'அவ்வளவு தூரம் பேசக் கூடாது,' என்று ஆறுதலான வார்த்தையைச் சொல்லி, உஷ்ணத்தைத் தணிக்கக் கூடிய வார்த்தைகளைச் சொல்லியிருக்கவேண்டும். ஆனால், அப்படிச் செய்யவில்லை. அதை நியாயப்படுத்துவதற்கு நினைக்கிறாரே தவிர, 'அப்படிக் கூறக்கூடாது' என்று சொல்லியிருந்தால், இந்தச் சபையில் இருந்த உஷ்ணத்தைக் குறைக்க உதவி செய்திருக்கும். நாட்டு நிலைமையில் இப்படிப்பட்ட உஷ்ணமான நிகழ்ச்சிகள் ஏற்பட்டாலும், ஆறுதல் தரக்கூடிய வார்த்தைகளை அவர்கள் சொல்வதுதான் சிறந்ததாக இருக்கமுடியும். இந்த நாட்டில் அரசியல் கட்சிகள் என்ற வகையில், சட்டப்படி எதிர்க் கட்சிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. எதிர்க் கட்சிகள் தவறான பிரசாரம் செய்தார்கள் என்றால், அதையும் அரசியல் ரீதியில் சமாளிக்க விவேகமும் நிதானமும்தான் வேண்டுமே தவிர, அந்த சமயத்தில் ஆத்திரமூட்டுவது என்பது சரியாக இருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

மாணவர்கள் முதல் அமைச்சர் அவர்களைச் சந்திக்க வருகிறார்கள். சந்தித்துத் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்வதற்குத் தானே வருகிறார்கள்? மாணவர்கள் அன்று முதலமைச்சர் நாற்காலியைப் பிடிக்கவா வந்தார்கள்? 'நான் மாணவர்களைப் பார்க்க மாட்டேன் என்று சொல்லவில்லை, நான் வேறு வேலையாகப் போயிருந்தேன்' என்று இப்பொழுது சமாதானம் சொல்கிறார்கள். ஆனால், அன்று இருந்த மனோபாவம் என்ன? பத்திரிகைகள் தவறாகப் பிரசுரித்தார்களா? "மாணவர்கள் என்னைச் சந்திக்கவேண்டுமானால், இப்படித்தான் வருவதா? பள்ளிக்கூடத்திற்குச் செல்லாமல், வகுப்புகளைப் புறக்கணித்துவிட்டுக் கிளர்ச்சி பண்ணிக் கொண்டா வருவது? அவர்களை நான் சந்தித்துப் பேசுவதா?" என்ற வகையில் பத்திரிகையில் செய்தி வந்ததெல்லாம் தவறாகத்

8th March 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

தான் வந்ததா? மனோபாவம் என்ன இருந்தது அன்றைக்கு? அன்றைக்கு அந்தக் கிளர்ச்சியைப்பற்றி இருந்த மனோபாவம் வேறு. இந்த அரசாங்கத்தை, இந்த மந்திரி சபையை எதிர்ப்பதற்காக யாரோ மாணவர்களைப் பயன்படுத்துவதாகக் கற்பனை செய்து கொண்டு அவ்வாறு சொல்லியிருக்கவேண்டும். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் எண்ணம் எதிர்க் கட்சியினருக்கு இருந்ததாக முதலமைச்சர் சொல்கிறார்களே, அவர்கள் அதிகாரத்தில் இருக்கும் கட்சியிலேயே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் எண்ணம் இருக்கவில்லையா? உண்ணாவிரதம் அந்த சமயத்தில்தானா இருக்கவேண்டும். உண்ணாவிரதம் இருக்கிறேன் என்று சொன்னவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளவில்லையா? எதற்காக உண்ணாவிரதம் இருக்கவேண்டும்? இரண்டு மத்திய சர்க்கார் அமைச்சர்கள்—திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும், திரு. அளகேசன் அவர்களும்—மந்திரி சபையிலிருந்து ராஜினாமாச் செய்தார்களோ, அந்தச் செயலைச் சில கனம் அங்கத்தினர்கள் பாராட்டுகிறார்கள். நான் சென்ற முப்பது வருஷங்களாகப் பொது வாழ்வில் இருந்துகொண்டிருக்கிறேன். இந்த அமைச்சர்களிடம் எனக்கு நன்றாகப் பழக்கமும் உண்டும். கடந்த 13 வருஷங்களாக இந்தச் சபையில் நான் இருந்து வருகிறேன். ஒவ்வொரு வருக்கும் என்ன பொறுப்பு இதில் உண்டு என்பது எனக்குத் தெரியும். மொழி பற்றிய விவாதம் இரண்டு நாள் இந்தச் சபையில் நடக்க இருக்கிறது. அந்த விவாதம் வருகிறபோது, திரு சி. சுப்பிரமணியம் அவர்களை இந்தச் சபையில் கொண்டுவந்து நிறுத்திப் பேச வைக்கிறேன். இதே மண்டபத்தில் படத்தில் உள்ள ராஜாஜி அவர்கள் இந்தச் சட்டசபையில் 1947-க்கு முன்னால் என்ன சொன்னார் என்பதற்கு, 1947-க்கு முன்னால் இருந்த ராஜாஜி அவர்களை இந்தச் சபையில் நிறுத்தி வைத்துப் பேசவைக்கிறேன். அவர்கள் அந்தச் சமயத்தில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று அதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுகிறபோது தெரிவிக்கின்றேன். வீடு பற்றி எரியும்போது ஆளுக்கு ஒரு கோலாகப் பிடுங்குவதா? இவர்களுக்கு நாட்டைப்பற்றிக் கவலையா? கட்சியைப் பற்றிக் கவலையா? தங்களுடைய செல்வாக்கைப்பற்றிக் கவலையா? ராஜினாமா செய்த நிகழ்ச்சிதான் 12-ந் தேதி வேகத்தை அதிகப்படுத்தியது. (கனம் அங்கத்தினர் திரு. கே. டி. கோசல்ராம் குறுக்கிடு) 'கோழை', 'வீரம்' என்று பேசிவிடுவது வெறும் வார்த்தை அல்ல. கோழைத் தனத்தில் செய்ததாக இருக்கலாம். வீரத்தினால் செய்ததாகவும் இருக்கலாம். அரசியல் சாகசத்தில் செய்ததாகவும் இருக்கலாம். அதற்கு அரசியல் நோக்கம் இருக்கிறது. இந்த ராஜினாமாக்களெல்லாம் தேவை தானா? தமிழ்நாட்டின் தலைவர்களாகத்தான் அவர்களை நான் மதிக்கிறேன். எந்தக் கட்சியில் நாம் இருந்தாலும் நாமெல்லாம் இல்லாமல் யார் மக்களுக்கு வழி காட்டப் போகிறார்கள்? சின்னக் கட்சியாக இருக்கலாம்; பெரிய கட்சியாக இருக்கலாம்; ஆளும் கட்சியாக இருக்கலாம்; எதிர்க் கட்சியாகவும் இருக்கலாம். இது கட்சிப் பிரச்னை அல்ல. தமிழ் நாட்டில் என்ன மொழி இருக்கவேண்டும்? மாணவர்கள் எதைக் கற்றுக்கொள்ள வேண்டும்? எப்படி ஆட்சி நடத்தவேண்டும்? என்பதிலே மத்திய

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [8th March 1965

அரசாங்கத்தோடு சண்டை போட வேண்டிய அவசியம் இருக்கலாம். ஒரே கட்சியில் தாறுமாறான அபிப்பிராயம் வரலாமா? எந்த சமயத்தில் பார்த்து ராஜினாமாச் செய்வது? தீப் பரவுகிற இடத்தில் பெட்ரோலை ஊற்றுவதாக அல்லவா இருக்கிறது அந்த ராஜினாமா? தேச ஒற்றுமையின் காரணமாக ஏற்பட்டது அல்ல அந்த ராஜினாமா என்று நான் பகிரங்கமாகச் சொல்ல விரும்புகிறேன். வேண்டுமானால், இங்கே இருக்கும் முதல் அமைச்சர் காலை வாரிவிடப் பயன்பட்டிருக்கலாம். அது எனக்குத் தெரியாது. 'அங்கும் கொஞ்சம் திருப்புங்கள்' என்று நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். முதலமைச்சர் சார்ந்திருக்கக்கூடிய கட்சியிலேயே இவ்வளவு கோளாறை வைத்துகொண்டு, எதிர்க் கட்சிகளைக் குறை கூற என்ன உரிமை இருக்கிறது? அவருடைய கட்சியைச் சார்ந்த ஒருவர் உண்ணா விரதம் இருந்தார் என்றால், அது பொறுப்புணர்ச்சியோடு செய்தது தானா? வேண்டுமானால், 'இந்த எம்.எல்.ஏ. நல்லவர்' என்று மாணவர்கள் கருதியிருக்கலாம். அது மாணவர்களைத் தட்டிக் கொடுக்கக்கூடியதாக இருக்கவில்லையா? உண்ணாவிரதம் இருந்தால் தான் வெளியே போக முடியும் என்று கருதியிருக்கக்கூடும். மாணவர்கள் மீது கோபப்பட்டு என்ன பிரயோஜனம்? மக்கள் மீது கோபப்பட்டு என்ன பிரயோஜனம்? ஒவ்வொரு கட்சியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இயக்கம் முறையாகக் கொண்டு செல்லப்படுவதற்கு உதவி செய்ததா? முறை தவறிப் போக உதவி செய்ததா? என்பதை ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிச் சிந்தித்துப் பார்த்துத்தான் இதிலே ஒரு முடிவுக்கு வரவேண்டும். இதிலே பெரும் பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்கும், காங்கிரஸ் தலைமைக்கும் உண்டு. கனம் உறுப்பினர் திரு. கே. டி. கோசல்ராம் கூறியதை முழுக்க முழுக்க ஒப்புக்கொள்கிறேன். இந்தக் கிளர்ச்சிகள் பூராவுக்கும் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைவிட காங்கிரஸ்காரர்கள் தான் என்று சொன்னார்களே, அதை ஒத்துக்கொள்ளலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தி எதிர்ப்பு இன்று நேற்று அல்ல, அது தெரிந்த விஷயம். அவர்கள் மொழி சம்பந்தமாக என்ன கொள்கை வைத்திருக்கிறார்கள், அரசாங்கம் சம்பந்தமாக என்ன கொள்கை வைத்திருக்கிறார்கள் என்பது தெரிந்த விஷயம். அவர்கள் தேசத்தில் ஒற்றுமையைப் பற்றி, ஒற்றுமை ஃபிலாஸஃபி பற்றி இப்பொழுது என்ன சொன்னாலுங்கூட, ஒற்றுமையைப்பற்றி அவர்கள் முன்பு வேறு கருத்து வைத்திருந்திருக்கிறார்கள் என்பதும் தெரிந்த விஷயம். ஆனால், மற்றவர்களுக்கு, அகில இந்தியக் கட்சிகளாக இருப்பவர்களுக்கு இந்தியாவின் ஒற்றுமையில் இருக்கும் ஆர்வம், திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கு இருக்கும் என்று எதிர்பார்ப்பது தவறு. எது வேண்டுமானாலும் பேசியிருக்கலாம். எது வேண்டுமானாலும் செய்து இருக்கலாம். ஆனால், அகில இந்திய ஒற்றுமையில் அக்கறை இருக்கக்கூடியவர்கள், 44 கோடி மக்கள் வாழ்ந்தால் நாம் வாழ்வோம், வீழ்ந்தால் நாம் எல்லோரும் வீழ்வோம் என்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்

8th March 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

இந்த மொழிப் பிரச்னையை அணுகிய முறை என்ன? அது சரிதானு என்று பரிசீலனை செய்ய வேண்டாமா?

ஏதோ எழுபது, எண்பது பேர்கள் செத்ததாகச் சொல்லப்பட்டது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, பாண்டிச்சேரியில் நடந்ததையும் இதிலே சேர்க்கவேண்டும். பாண்டிச்சேரி அரசியல் ரீதியில் தனியாக இருக்கலாம். ஆனுல், அதுவும் தமிழ்நாட்டைச் சேர்ந்ததாகத்தான் கொள்ளவேண்டும், இந்த மொழிக் கிளர்ச்சியைப் பொறுத்த வரையில். அங்கேயும் இந்த மொழிக் கிளர்ச்சியில் சுடுபட்டு, இறந்திருக்கிருர்கள். ஆந்திராவிலும் இறந்திருக்கிருர்கள். இதெல்லாம் எதைக் காட்டுகிறது? இதுவரையில் மொழிப் பிரச்னை சரியாகக் கையாளப்பட்டிருக்கிறதா? காங்கிரஸ் தலைவர்கள் சரியான கொள்கையைக் கையாண்டு வந்திருக்கிருர்களா? இந்த மொழிக் கொள்கையைப் பற்றி பதில் சொல்லக்கூடிய காங்கிரஸ்காரர்கள் மேடையிலே சரியாக விளக்கி இருக்கிருர்களா? அவர்கள் மேடையிலே செய்த பிரசங்கங்கள் என்ன? மும்மொழிக் கொள்கையைப்பற்றிய தீர்மானம் இப்பொழுது தானு புதிதாக வந்தது? இது 1957-ம் வருஷத்திலேயே இந்தச் சபையில் இருக்கிற எல்லாக் கட்சியினரும் ஏற்றுக்கொண்ட பிரச்னை அல்லவா? இந்த நாட்டில் உள்ள 14 மொழிகளுடன் ஆங்கிலமும் தேசிய பாஷையாக இருக்கவேண்டும் என்று சொன்னதும் புதிதாகச் சொன்ன விஷயமா? அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியில் மௌலானு அபுல் கலாம் ஆஸாத் அவர்கள் மொழிப் பிரச்னையைத் தீர்க்க அளித்த யோசனை தானே இது? அது எல்லோரையும் கட்டுப்படுத்தக் கூடியது தானே? இந்திமொழி பேசாத மக்களின் பாதுகாப்புக்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிருர்கள்? 1965-ம் வருஷம் ஜனவரி 26-ந் தேதி துக்க நாள் கொண்டாடலாமா என்பது வேறு விஷயம். ஆனுல், மக்களிடத்திலே ஏற்பட்ட பயத்தைப் போக்க என்ன வழி செய்திருக்கிறீர்கள்? 15 வருஷ அவகாசம் கொடுத்தது ஒரு புறம் இருக்கட்டும். திராவிட முன்னேற்றக் கழகம் திடீரென்று 1965-ம் வருஷம் ஜனவரி 26-ந் தேதிதானு இயக்கத்தை ஆரம்பித்தது? அதற்கு முன்பே '1967 பொதுத் தேர்தலுக்குத் திட்டம் போட்டிருக்கிறீர்கள்' என்று அவர்களைக் கிண்டல் செய்வது? ஒரு அரசியல் கட்சியைக் குறித்து இப்படிச் சொல்லிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? ஆளும் கட்சியினர் நாற்காலியை எப்படியாவது பாதுகாத்துக்கொண்டிருக்கவேண்டும், எதிர்க் கட்சி எப்படியாவது நாற்காலியைப் பற்றிக்கொள்ளவேண்டும் என்று இருப்பது ஒன்றுதானு பிரச்னை? நாட்டிலே மக்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, குடியிருக்க வீடு, மற்றும் மொழி கலை எல்லாம் தேவை அல்லவா? அதைப்பற்றி ஒவ்வொரு கட்சியும் என்ன கருத்து வைத்திருக்கிறது—என்று காங்கிரஸ் தரப்பில் தீர்மானம் போட்டிருக்கவேண்டும். மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியிருக்கவேண்டும். இந்தி எதிர்ப்பு என்பது திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய பிறகு ஏற்பட்ட பிரச்னையா? அன்னிபெஸன்ட் அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டுக்குச் சென்ருர். அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம்

களுக்குச் சென்றவர்கள், அந்தக் காலத்தில் இந்தியில் பேசுவது கஷ்டம் என்று எதிர்க்கவில்லையா? காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே ஒரே கருத்தா இருக்கிறது? இந்தி என்பது எதோடு இணைக்கப் பட்டு வந்திருக்கிறது? தேசிய இயக்கத்தோடு இணைக்கப்பட்டது உண்மைதான். வெள்ளைக்காரனை எதிர்த்த காலத்தில் தேசிய மொழி வேண்டும் என்ற எண்ணம் இருந்தது உண்மைதான். ஆனால், 'சமஸ்க்ருதத்தின் அடிப்படையில் இருக்கும் இந்தியா? அல்லது இந்துஸ்தானியா ?' என்பதிலே அவர்களிடையே கருத்து வேறுபாடு இருக்கவில்லையா ? காந்தி, இந்திதான் வேண்டுமென்று சொன்னபோது, மற்றவர்கள் அவருடைய கருத்துக்கு மாறுபட் டிருக்கவில்லையா ? அது எல்லாம் மற்றவர்களுக்கு--புதிதாகக் காங் கிரசில் சேர்ந்தவர்களுக்கு தெரியாது இருக்கலாம். நல்ல அனுபவ முதிர்ச்சியும், வயது முதிர்ச்சியும் உடைய நமது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாது என்று நான் சொல்ல முடியாது. கனம் ராஜகோபாலாச்சாரியார் இந்த மொழிப் பிரச்சினை பற்றி சொல்லி வந்துள்ள கருத்துக்களை எல்லாம் நான் சேர்த்து வைத்திருக் கிறேன். இப்போது ஆங்கிலம் தான் இருக்கவேண்டும் என்று அவர்கள் சொல்வதற்குக் காரணம் இருக்கலாம். இன்றைக்குள்ள பிரச்சினை என்ன? இந்த தேசம் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பது தான். 44 கோடி மக்களுக்கும் ஒன்றுபட்டு வாழத்தக்க சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று தான் நான் மனப்பூர்வ மாக விரும்புகிறேன். உண்மையிலேயே நான் இன்றைக்கு நம் முடைய முதல் அமைச்சரைப் பார்த்துப் பரிதாபப்படுகிறேன். அவர் முதல் அமைச்சராக இருக்கவேண்டாமா, வேண்டுமா என் பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கும் வரை யார் முதல் அமைச்சராக இருந்தாலும் எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. எனக்கு லாபமும் இல்லை. உரலுக்கு ஒரு பக்கம் இடி என்றால் மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்று சொல்வார்கள். அதுபோல நமது முதல் அமைச்சர் அவர் களுக்கு இன்று இரண்டு பக்கமும் இடியாக இருக்கிறது. உண் மையில் அவர்கள் நடந்திருக்கிற உண்மைகளை இங்கே எடுத்து அப்படியே சொல்ல வேண்டும். இந்தப் போராட்ட காலத்தில் கனம் பக்தவத்சலம், கனம் கக்கன் ஆகியவர்களைப் பற்றி எல்லாம் கண்டபடியாக எழுதப்பட்டு இருந்தது. அதாவது திரு. பக்தவத் சலம் அவர்களைப்பற்றி, அவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார், பக்தவத்சலத்திற்குப் பாடை என்பதாக கண்டபடி எழுதப்பட்ட சுலோகங்களைக் கண்டு எல்லாம் நான் மிகவும் மன வருத்தம் அடைகிறேன். எந்தக் கட்சியைச் சேர்ந்த அரசியல் தலைவராக வேண்டுமானாலும் இருக்கலாம். நாட்டில் ஒரு கட்டுப்பாடு இல்லை யென்றால் ஜனநாயகம் இருக்காது. போராட்டம் நடந்த அந்த நாட்களில் கதர்ச் சட்டை அணிந்தவர்கள் வெளியில் கூடப் போய் இருக்க முடியாது. இந்தக் கலவரத்தை திராவிட முன்னேற்றக் கழகம்தான் செய்தது என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. மக்களுக்கு இந்த ஆட்சியிடத்தில், இவர்கள் கையாண்ட மொழிக் கொள்கையிடத்தில், அத்தகைய வெறுப்பு ஏற்பட்டது, எதிர்ப்பு ஏற்பட்டது. வெறுப்புக்குத் தூபம் போட்டவர்களை

8th March 1965] *[திரு. மீ. கலியாணசுந்தரம்]*

ஆங்காங்கே அராஜகச் செயல்களில் ஈடு பட்டவர்களை ஆராய்ந்து அறிய நடவடிக்கை எடுக்காது அரசியல் கட்சிகளைத் தாக்கிக் கொண்டிருப்பதால் பயன் இல்லை. இதனால் உண்மையான குற்றவாளிகள் தப்பிக் கொள்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? இவ்வளவு நாசம் ஏற்பட்டு இவ்வளவு உயிர்ச் சேதம் ஏற்பட்டு, நாட்டில் அமைதியைப் பாதுகாக்கவும், அரசாங்க உடைமைகளைப் பாதுகாக்கவும் ராணுவம் அழைக்கப்பட்டது என்ற பின்னர்தானே மத்திய அரசாங்கத்திற்குச் சிறிதாவது புத்தி வந்தது? அதன் பிறகு ஏற்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் இந்தப் போராட்டம் நியாயமானது, இந்த இயக்கம் தேவையானது என்பதைத் தானே நிரூபித்து இருக்கின்றன. இந்தப் போராட்டம் இல்லாமல் இருந்திருந்தால் முதல் அமைச்சர்களுடைய மகாநாட்டை 23-ஆம் தேதி கூட்டி இருப்பார்களா? பிரதம மந்திரி லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் பிரசங்கம் செய்திருப்பாரா? ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் இங்கே வந்து உறுதி மொழி அளித்திருப்பார்களா? இவர்கள் எல்லாம் பிப்ரவரி 8-ஆம் தேதி வரையில் பேசிய பேச்சுகள் என்ன? ஆக, இந்தப் போராட்டம் எழுந்ததற்குக் காரணமே மத்திய அரசாங்கம் தான். ராஜ்ய அரசாங்கத்திற்கும் இதில் பொறுப்புண்டு. கொஞ்சம் விவேகத்துடனும், இந்த ராஜ்ய மக்களின் உள்ளத்தைப் புரிந்து கொண்டும், இந்தியா ஒற்றுமையாக இருப்பதற்கான செயல்களைத் தான் மேற்கொள்ளவேண்டும் என்ற அடிப்படைச் சிந்தனையோடு செயல்படுகிற தன்மையும் மத்திய அரசாங்கத்திற்கும் சரி, நம்முடைய மாநில அரசாங்கத்திற்கும் சரி இருந்திருந்தால் இத்தகைய போராட்டத்தையே தவிர்த்திருக்க முடியும். ஜனநாயக விரோத சக்திகளுக்கு பலாத்காரக் கலவரங்களை இந்த நாட்டில் தோற்றுவிக்க சந்தர்ப்பமே இல்லாது போய் இருந்திருக்கும். அதைச் செய்யாதது மத்திய அரசாங்கத்தின் குற்றமாகும். அதில் ராஜ்ய அரசாங்கத்திற்கும் பொறுப்புண்டு. இந்தியை எப்படியாவது திணித்துவிட வேண்டும் என்பதாக அங்கிருந்தவர்கள் செய்தார்கள். இவர்கள் அதை வெளிப்படுத்தாது இருந்தார்கள். இங்கு மட்டும் அல்ல. மற்ற இந்தி பேசாத ராஜ்யங்களைப் பொறுத்த வரையிலும் கூட இதே நிலை தான். மத்திய அரசாங்கத்தில் இருந்து இந்தியிலேயே உத்தரவுகள் வந்தன. இதை யாரும் மறுக்க முடியாது. மற்ற ராஜ்யங்களில் இவ்வளவு பெரிய கிளர்ச்சி இல்லாதபோது தமிழ்நாட்டில் மட்டும் ஏன் வன்முறைச் செயல்களுடையதாக மாறிவிட்டது என்று கேட்கலாம். மற்ற இந்தி பேசாத ராஜ்யங்களில் இருந்த நிலை இங்கே இல்லை. அங்கெல்லாம் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும்—கட்சி வேறுபாடு இல்லாமல்—இந்தியை எதிர்த்தார்கள். ஆனால் தமிழ் நாட்டில்தான் துரதிருஷ்டமாக எதிர்க்கட்சிகளின் கருத்தில் இருந்து ஆளும் கட்சியினர் மாறுபட்டு எதிர்த்து நின்றார்கள். இல்லையென்றால் வங்காளத்தைப்போல கட்சி வேறுபாடு இல்லாமல் இங்கே ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கலாம். அத்தகைய ஒரு முயற்சி இங்கே எடுக்கப்படவில்லை. சர்வ கட்சிக் கூட்டம் கூட்டி இதைப்பற்றி விவாதித்து ஒரு முடிவு எடுக்கலாம்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [8th March 1965

என்று நான் கூறினேன். அப்படிச் செய்வது கூடத் தங்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கலாம் என்றோ, என்னவோ முதல் அமைச்சர் அவர்கள் அதை ஏற்கவில்லை. யாரையும் கேட்கவேண்டியதில்லை, கலந்து ஆலோசிக்க வேண்டியதில்லை, தாமே செய்து விட முடியும் என்று முதல் அமைச்சர் அவர்கள் நினைத்தார்கள். அவ்வளவு சுலபமான காரியம் அல்ல, இது. இப்போது எல்லாம் எதிர்க்கட்சிக்காரர்கள் என்ன சொன்னாலும், அதைக் கேட்பதில்லை. நமது முதல் அமைச்சர் அவர்களுக்கு இப்போது எல்லாம் முதல் அமைச்சராக ஆன பிறகு கோபம்தான் ஜாஸ்தியாக வருகிறது. அவர் வாயில் இருந்து வரக் கூடிய வார்த்தைகள் எல்லாம் மற்றவர்களை, மக்களை, ஆத்திரமூட்டக் கூடிய வார்த்தைகளாகவே தான் இருக்கிறது. சிலர் அவரை வைர நெஞ்சு உடையவர் என்று சொன்னார்கள். நெஞ்சு வைரமாகவோ, இரும்பாகவோ, கல்லாகவோ இருந்து மக்களுக்குப் பயன் இல்லை. அவர் தேசீய பரம்பரையில் வந்தவர். மக்களுடைய உணர்ச்சியை மதித்து, கருத்துக்களை மதித்து நடக்கக் கூடிய காந்தியினுடைய மென்மையான உள்ளமோ, நேருஜியினுடைய உள்ளமோ தான் அவர்களிடத்தில் இருந்தாகவேண்டும். நிச்சயமாக நேருஜி அவர்கள் இருந்திருந்தால் நிலைமை இப்படி ஆகியிருக்காது. அவர் இறந்தபிறகு தான் அவருடைய அருமை தெரிகிறது. வேண்டுமென்றால் அவர் இந்தப் பிரச்சினைக்கு ஒரு இறுதியான முடிவை ஏற்படுத்திக் கொடுக்காமல் போய்விட்டாரே என்று வருந்தலாம். ஆனாலும் அவர் இருந்திருந்தால் இந்தப் பிரச்சினையை இவ்வளவு தூரம் விட்டு இருக்கமாட்டார். ஆங்கிலம் தான் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்கிற நிலையே வந்திருக்காது. ஆங்கிலமும், இந்தியும் தொடர்ந்து இருக்கத்தான் வேண்டும் என்றால் இதற்கு ஆட்சிமொழிச் சட்டத்தைத் திருத்தினால் போதுமா? அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமா? அரசியல் சட்டத்தைத் திருத்துவது என்றால் மற்ற ராஜ்யங்கள் ஏற்குமா என்கிற சிந்தனை எல்லாம் இப்போது தான் எழுந்திருக்கிறது. ஏன் முன்பே எழவில்லை? பத்தாம் தேதிக்குப் பிறகு தானே நமது முதல் அமைச்சர் அவர்கள் இருமொழித் திட்டத்தைப் பற்றி வெளியிட்டார்கள்? நேருஜியின் வாக்குறுதி சட்டபூர்வமாகச் செய்யப்படும் என்று முன் கூட்டியே தெரிவித்திருந்தால் ராணுவம் வரவழைக்கப்பட வேண்டிய நிலை வந்திருக்குமா? இதை யோசிக்க வேண்டும். அன்றைக்கு வெள்ளைக்காரனோடு எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தோம். ஆங்கிலத்தை அப்போது தேசீய மொழி என்று சொல்லிக் கொள்ள நாம் விரும்பவில்லை. நமக்கென்று வேறு ஒரு மொழி வேண்டும் என்பதற்காக இந்தி என்று ஏற்றுக்கொண்டிருக்கலாம். இந்தி மொழியின் மூலமாக தேசத்தை ஒருமைப்படுத்தலாம் என்று எண்ணியிருக்கலாம். இன்றைக்கு மொழியைக் காட்டிலும் முக்கியமானது தேச ஒருமைப்பாடு. மொழிக்காக தேசம் சிதறுண்டு போக நாம் அனுமதிக்க முடியாது. இந்தி மொழியினால் தேசீய ஒருமைப்பாடு பாதிக்கப்படக் கூடும் என்கிற நிலை வருகிறபோது அந்த மொழியைப் பற்றியே மறு

8th March 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

பரிசிலனை தேவை. வெறும் திராவிட முன்னேற்றக் கழகத்தை மட்டும் குறை சொல்லிப் பயன் இல்லை. தேசத்தில் உள்ள பதினான்கு மொழிகளுக்கும் போதுமான முக்கியத்துவம் கொடுக்கப்படுவதற்கு முயற்சி எடுக்காமல், இந்தி திணிக்கப்படுவதை எதிர்க்காமல் இந்த அரசாங்கம் இருந்து விட்டது. தமிழ் மொழிக்குக் கொடுக்கவேண்டிய முக்கியத்துவத்தையும் கொடுக்காமல் இருந்துவிட்டது. இதை எல்லாம் உணர்ந்து கொள்ளாமல் இன்றைக்கு ஒருவர் மேல் ஒருவர் பழி போட்டுக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. இன்றைக்கு தேசிய ஒருமைப்பாட்டுக்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் பிரச்னை. இதுபற்றி எதிர்க்கட்சியைச் சேர்ந்த எங்களை அழைத்துப் பேசினாலும் நாங்கள் ஒத்துழைக்கத் தயார். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் பேசியிருப்பதும் கூட இதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கக்கூடியதாக நான் நினைக்கிறேன். அதைப்போய் கோழைத்தனம் என்பதாகக் குறிப்பிட்டு ஆத்திரமூட்ட வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். ஆத்திரமூட்டும்போது கோழைகள் கூடக் கற்களை எடுத்து அடிக்கக் கூடும். ஆகவே ஆத்திரமூட்டாமல் இந்தப் பிரச்சினையில் முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய திறமை, அனுபவத்திற்கு ஏற்ப நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்க் கட்சிகளை மட்டும் அடக்குவதில் உறுதியாக இருந்து பயன் இல்லை. பாவம், அவர் முதல் அமைச்சராகப் பதவி ஏற்றதிலிருந்து அவருக்கும் துரதிருஷ்டமாக இருக்கிறது. இந்த நாட்டுக்கும் துரதிருஷ்டமாக இருக்கிறது. முதலில் கார் விபத்தில் சிக்கி கையை உடைத்துக்கொண்டு ஆஸ்பத்திரியில் இருந்தார்கள். அதன் பிறகு விலைவாசிப் போராட்டம். அதன் பிறகு இயற்கையும் அவருக்கு விரோதமாக இருந்தது. புயலாலும், கடல் கொந்தளிப்பாலும் ராஜ்யத்திற்குக் கஷ்டம். அதன் பிறகு இந்த மொழிப் பிரச்சினை. ஏதோ அதனதன் வழியில் அவற்றை தைரியமாக அவர் சமாளித்துவிட்டார். இந்த உறுதி அதோடு இருக்கக் கூடாது. இந்த மொழிப் பிரச்சினை சம்பந்தப்பட்டவரையில் மத்திய அரசாங்கத்திற்கு நம் நிலையை உறுதியாக எடுத்துச் சொல்லி சட்டபூர்வமாக ஆங்கிலமும் இணைப்பு மொழியாக நீடிக்க வகை செய்யவேண்டும். இந்தச் சபையிலே உள்ள எதிர்க் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்கிறோம். இந்த சம்பவங்கள் ஏற்பட்டதற்குக் காரணங்கள் என்ன என்பதை விசாரணை செய்வதற்கு ஒரு என்கொயரி கமிஷன், அதாவது விசாரணைக் கமிஷன், ஏற்படுத்தவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். இது உதவிகரமாக இருக்கும். யார் யார் தவறு செய்தார்கள், என்ன என்ன தவறு செய்தார்கள் என்பதையெல்லாம் புரிந்துகொண்டால் எதிர் காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கு வழிகாட்டியாக இருக்கும். ஆகவே, விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

11-30 a.m.

அடுத்தபடியாக கூடலூர் சம்பவம் பற்றிச் சொன்னபொழுது ராஜாங்கத்தைக்கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். என்

னுடைய கட்சியிலிருந்து கூடத் தகவல் வந்திருக்கிறது. ராஜாங்கத்தைக் கொண்டுவந்து நிறுத்தவேண்டும் என்பதுகூட அல்ல; இந்த சபையின் உறுப்பினர்கள்கூடப் போய்ப்பார்த்துவிட்டு அதன் மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே என்னுடைய கட்சி சிந்தனையாலோ, செயலாலோ ஈடுபடவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த உலகத்திற்கே தெரியும். அப்படியிருந்தும், அங்கு கட்சியிலிருந்த தோழர்களுடைய வீடுகள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன; சொத்துக்கள் நாசப்படுத்தப்பட்டு இருக்கின்றன. மலைமேல் ஏறி ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்; கீழே வந்தால் உதை கிடைக்கும் என்ற எண்ணத்தால் மலைமேலேயே இருக்கிறார்கள். எனவே, இதைக் கவனித்து அங்கு நல்ல சூழ்நிலை உருவாக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மொழிக் கொள்கையிலே, மத்திய அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கமும் பின்வாங்கியதே, அப்போது என்ன அர்த்தம்? இந்த இயக்கத்திலே என்ன தவறுகள் நடந்திருந்தாலும் கூட அதையெல்லாம் மன்னிக்கவேண்டும் என்பதுதான் அர்த்தம். அரசியல் ரீதியாக நடவடிக்கை எடுக்கக்கூடாது, வஞ்சம் தீர்த்துக் கொள்ளவேண்டுமென்று நினைக்கக்கூடாது. காந்திஜி அவர்கள் கூடச் சொல்லியிருக்கிறார்கள்: "மன்னிப்பதும், மறப்பதும் அரசியலுக்கு அவசியம்" என்று. எனவே, அந்த முறையில் மன்னிப்பதற்குப் பழகவேண்டும்; மறப்பதற்கும் பழகவேண்டும்; அப்பொழுதுதான் அரசியலிலே ஒரு நல்ல ஆரோக்கியமான சூழ்நிலை ஏற்படும். பழி வாங்குவது, வஞ்சம் தீர்ப்பது, 1967 பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு எப்படிச் செய்தால் சாதகமாக இருக்கும் என்பதையெல்லாம் நினைக்காமல் நல்ல முறையில் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பட்ஜெட்டின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எவ்வளவு நேரம் இன்னும் நான் எடுத்துக்கொள்ளலாம்?

கனம் உதவி சபாநாயகர்: இன்னும் ஐந்து நிமிடங்கள் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சரி. ஒரு வருஷத்தினுடைய பட்ஜெட் அந்த வருஷத்தைப்பற்றிய காரியம் மட்டுமல்ல. அந்த வருஷத்தை அடுத்து வரக்கூடிய ஆண்டுகளுக்கும், அடுத்து வரப் போகின்ற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் ஒரு படிக் கட்டு மாதிரி.

இந்த பட்ஜெட்டிலே 164 கோடி ரூபாய் வருமானம் என்று இருக்கிறது. 171 கோடி ரூபாய் செலவு செய்யக்கூடிய அளவுக்கு இந்த பட்ஜெட் உயர்ந்திருக்கிறது. இது எப்படி உயர்ந்தது? இதனால் என்ன விளைவுகள் இருக்கும்?

பல துறைகளில் அபிவிருத்தி இருக்கிறது. குறிப்பாகக் கல்வித் துறையிலே பாராட்டத் தகுந்தபடி இருக்கிறது. 37 கோடி ரூபாய் கல்வித் துறையிலே செலவுபண்ணப் போவதாகக் குறிப்பிட்டுள்ளது. பட்ஜெட்டே 16 கோடியாக இருந்த காலம்கூட

8th March 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

உண்டு. ஆனால், இன்று கல்வித் துறைக்கு 37 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. 37 கோடி ரூபாய் செலவு செய்து கல்வியை எப்படிப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். இந்த மாணவர்களைத் திருப்திப்படுத்த முடியாத அளவுக்கு இருக்கிறோம். தனியார் கல்லூரிகளில் நடைபெறும் அட்டூழியங்கள் மாணவர்களை அதிருப்தியடையச் செய்திருக்கிறது. இந்த மாணவர்களுடைய அதிருப்தியைப் போக்குவதில் முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்கும், வைத்தியம், சுகாதாரம் போன்ற துறைகளுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை குறைவாக இருக்கிறது. இந்தத் துறைகளில் சாதனைகள் திருப்திகரமாக இல்லை.

அடுத்து, உணவுப் பிரச்னையைச் சமாளித்துவிட்டதாக முதலமைச்சர் அவர்கள் நினைக்கவேண்டாம். இன்னும் மூன்று மாதங்கள் கழிந்தால் இன்னும் சிக்கல்கள்தான் இருக்கும். அதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. உணவுத் துறையில் சிக்கலுக்கான இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று வினியோகத்தில் குறைபாடுகள்; இரண்டாவது உணவு உற்பத்தி குறைவாக இருக்கிறது, உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பது. எனவே, தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி விவரமாக, தனி மானியக் கோரிக்கைகள் வருகின்றபொழுது, அந்த சந்தர்ப்பத்தில் பேச விரும்புகிறேன்.

எதிர்க் கட்சிகளைக்கூட்டிப் பேசுவதில், அவர்களுடன் விவாதிப்பதற்கு முதலமைச்சருக்கு ஏன் அச்சம் வேண்டும்? எல்லாக் கட்சிகளுடைய அங்கத்தினர்களையும் வைத்துக்கொண்டுதான் திட்ட நகல்களைத் தயாரிக்கவேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் திட்டங்கள் அப்படித்தான் தயாரிக்கப்பட்டன. ஏன் இந்த நான்காவது திட்டத்தையும் அப்படித் தயாரிக்கக்கூடாது? இனிமேலாவது இதை ஆராய்ந்து, எல்லாக் கட்சிகளையும் கூட்டி அவர்களுடைய ஆலோசனையைக் கேட்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்தி, ஒரு ஆல்-பார்ட்டி லெஜிஸ்லேச்சர் கமிட்டி ஏற்படுத்தி நகல் திட்டங்களைத் தயாரிக்கச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டில் புதுவரிகள் இல்லை என்று சொல்லப்படுகிறது. அங்கத்தினர்கள் புதுவரிகள் போடவில்லை என்று சொன்னார்கள். இந்த பட்ஜெட்டில் இல்லையென்றால் என்ன? புதுவரிகள் யார் போட்டால் என்ன? எப்பொழுது போட்டால் என்ன? புதுவரிகள் இல்லையா? பர் காபிடா--அதாவது தனி நபர் மூலம் ராஜ்ய சர்க்கார் வசூலிப்பது—1961-62-இல் ரூ. 13.50 காசு; 1962-63-ல் ரூ. 15.95 காசு; 1963-64-ல் ரூ. 18.14 காசு; 1964-65-ல் ரூ. 19.28 காசு; 1965-66-ல் ரூ. 23 இருக்கும். ராஜ்ய சர்க்கார் வரியைப் பொறுத்தமட்டில் 5 வருஷத்தில் 13 ரூபாயிலிருந்து 23 ரூபாய் வரை வரி அதிகரித்து இருக்கிறது. மத்திய சர்க்கார் வரியைப் பார்த்தால் 1961-62-இல் ரூ. 22.20 காசு இருந்தது

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [8th March 1965

1964-65-இல் ரூ. 40.28 ஆக இருக்கிறது. அதாவது ஒவ்வொரு பிரஜையும் ரூ. 63.64 காசு வரி கொடுக்கவேண்டிய அளவுக்கு நிலை ஏற்பட்டிருக்கிறது என்று பர் காபிடா இண்டிகேட் பண்ணுகிறது. இப்பொழுது ஐந்து வருஷத்தில் வருமானம் 76 கோடி அளவுக்கு உயர்ந்து 30 கோடி ரூபாய் வருமானம் அதிகமாகக் கிடைக்கக் கூடிய நிலை இருக்கிறதென்றால், இது சாதாரண வளர்ச்சியால் வந்த வருமானம் என்பதை ஒப்புக்கொள்ள முடியாது. எலெக்ஷனுக்கு முன்பேயே வரிகள் எல்லாம் போட்டுவிட்டார்கள். எனவே புது வரிகள் போடவில்லை என்று சொல்லிவிட முடியாது. இந்த வருஷம் முன்பு போட்ட புது வரிகள் எல்லாவற்றினுடைய சுமை விழக் கூடிய வருஷமாகத்தான் இருக்கப் போகிறதே தவிர வரிச்சுமை ஒன்றும் குறைந்துவிடவில்லை. ஆனால் மற்ற ராஜ்யங்களுடன் ஒப் பிடும்பொழுது நமது ராஜ்யம் முதல் வரிசையில் நிற்கிறதே தவிர வரிபோடுவதில் 2-வது 3-வது வரிசையில் நிற்கவில்லை என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறேன். எவ்வளவு பணம் செலவழித் தாலும் மக்களுக்கு மூன்று வேளையும் சோறுபோடவேண்டும். அப்படி சோறு கிடைப்பதற்கு என்ன வழி என்று பார்த்து முடிவு செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். டாக்டர் பா. நடராஜன் அவர்கள் சொன்னார்கள், 'அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு ரூ. 22 கோடி செலவழிகிறது, இப்பொழுது மீண்டும் ரூ. 5 கோடி செலவழிக்கப்போகிறோம்' என்று. அந்த ரூ. 5 கோடியை வாங்கியும் அவர்கள் திருப்தியுடன் இருக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். வாங்கிக் கொண்டவர்கள் நிந்தனை செய்து கொண்டுதான் வாங்கிக் கொள் வார்கள். ஆகவே மக்களைத் திருப்திப்படுத்த என்ன என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவைகளை எடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிக்க சட்ட மன்றத் துணைத்தலைவர் அவர்களே, முதலிலே அண்மையிலே நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் துப்பாக்கிச் சூடுகளுக்கு இரையாகி யவர்களுடைய குடும்பங்களுக்கும் வன்முறைச் செயல்களுக்கு இரையாகி உயிர் நீத்த போலீஸ் அதிகாரிகள், போலீஸ் ஊழியர்கள் ஆகியோருடைய குடும்பங்களுக்கும் அடிபட்டு காயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்படவேண்டிய அளவுக்கு அல்லல் பலவற்றிற்கு ஆளான அதிகாரிகளுக்கும், பொது மக்களுக்கும் மாணவர்கள் ஆகியோருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நடைபெற்று முடிந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் காரணமாக கைதுசெய்யப்பட்டுச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த மாணவர்களின் மீதுள்ள வழக்குகளைத் தள்ளுபடி செய்து தண்டனைக்குட்பட்டு அடைக்கப்பட்டிருந்த மாணவர்களையும் விடுதலை செய்யவேண்டுமென்று மேல் சபையின் எதிர்க்கட்சித் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு இணங்க, இந்த அரசாங்கம் மாணவர்களை விடுதலை

8th March 1965] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

செய்யவும் மாணவர்கள் மீதுள்ள வழக்குகளை வாபஸ் வாங்கவும் முன்வந்ததை நான் வரவேற்கின்றேன். அதற்காக மகிழவும் செய்கிறேன். இந்தப் பெருந்தன்மையைக் கனம் முதலமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன்னாலேயே காட்டியிருப்பார்களானால் நாடும் அதை மிக நல்ல முறையிலே வரவேற்றிருக்கும், இந்த மன்றமும் நல்ல முறையிலே வரவேற்றிருக்கும். இதனை அவர்கள் அப்போதே செய்திருப்பார்களேயானால் நாட்டில் மீண்டும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்காது.

1965–66-ம் ஆண்டுக்கான நிதி நிலை பற்றி ஆராய வேண்டிய இந்த மன்றம் சென்ற ஆறு நாட்களாக ஜனவரி–பிப்ரவரியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பற்றிய சூழ்நிலையை ஆராய வேண்டிய கட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறது. இந்த அறிக்கையைப்பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டிய சட்ட மன்ற உறுப்பினர்களின் நேரம் அனைத்தும் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றிய கருத்துக்களைச் சொல்வதிலேயே முடிந்திருக்கின்றன. கனம் முதலமைச்சர் அவர்கள் சிற்றமும் சினமும் கொள்ளாத வகையில் எதிர்க் கட்சிக்கு மதிப்பளிக்கின்ற வகையில் இந்த விவாதத்திற்காக முன்கூட்டியே இரண்டு நாட்களோ மூன்று நாட்களோ ஒதுக்கித் தந்திருப்பார்களானால், அப்போது, நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய கருத்துக்களைக் கூறியிருக்க முடியும். இப்போது இந்த வரவு-செலவுத் திட்டம் பற்றிய கருத்துக்களை எடுத்துக் கூற வாய்ப்பு ஏற்பட்டு இருக்க முடியும். நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதித்து மற்ற இடங்களிலே பரிகாரம் காணுவதை விட சட்டமன்றத்திலே எப்படிப் பரிகாரம் காணப்படுகிறது என்பதிலே நாட்டு மக்கள் அக்கறை கொண்டிருக்கிறார்கள். இந்த மாநில முதலமைச்சர் என்ற முறையிலும், இந்த மன்றத்தின் முதல்வர் என்ற முறையிலும் அவர்கள் இதற்காக என்று இரண்டு மூன்று நாட்கள் ஒதுக்கித் தந்திருப்பார்களேயானால் இந்த நிதி நிலை அறிக்கையிலே எல்லாரும் தங்களுடைய கருத்தை எடுத்துச் சொல்லியிருக்க முடியும். இந்த நிதி நிலை அறிக்கையிலே கவனம் செலுத்த முடியாத அளவுக்கு, கடந்த ஆறு நாட்களும் எந்தப் பிரச்னைக்காக ஒதுக்கப்பட்டதோ அதைப் பற்றி விவாதிக்க முடியாத அளவுக்கு நிலைமை ஏற்பட்டு விட்டது, உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்றாகும்.

1965–66-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைக் கனம் முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்திருக்கிறார்கள். நடந்து முடிந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய கருத்துக்களை எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களும் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும் எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் எதிர்க்கட்சியின் மீது குற்றம் கூறினார்கள். எதிர்க்கட்சியினர் இந்த அமைச்சரவையும், முதலமைச்சர் அவர்களும் எடுக்கத் தவறிய நடவடிக்கைகளைப் பற்றியும், அவருடைய நடவடிக்கைகளால் நாட்டிலே ஏற்பட்ட நிலைமைகளைப் பற்றியும் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை வலியுறுத்திக் கூறவேண்டிய முறையில் நானும் கருத்துக்களைக் கூற வேண்டிய வனாக இருக்கிறேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை இந்த மன்றத்தில் வைக்கப் பட்டிருக்கும் நிலையில் ரூபாய் ஆறு கோடி 97 லட்சம் துண்டு விழுகிற அறிக்கையாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துண்டு விழுகிற தொகையைச் சரிக்கட்டப் புதுவரிகள் எதுவும் விதிக்கப் படவில்லையென்றும் அதற்குக் காரணமாக நான்காவது நிதிக் கமிஷனிடம் கூடுதல் தொகை கேட்பதன் மூலமும், வரிகளை வசூலிப்பதில் எடுத்துக் கொள்ளும் தீவிர நடவடிக்கைகளின் காரணமாகவும், துண்டு விழுவதைச் சரிகட்ட முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் இன்று புதுவரிகள் போடப்பட வில்லை என்பதால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும் சென்ற ஆண்டு, அதற்கு முந்திய ஆண்டு, தாங்க முடியாத அளவுக்குப் போடப்பட்ட வரிகளின் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற தொல்லைகளைப் பற்றி கவலைப்பட வேண்டியிருக்கிறது. அதுபற்றி மன்றத்தில் தெளிவு பட எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. எற்கெனவே போடப்பட்டிருக் கிற வரிச்சுமையையே தாங்க முடியாது என்ற இருக்கிற நிலையில் மேலும் வரி போடப்படவில்லை என்பது குறித்து மகிழ்ச்சி கொள்ள லாமே தவிர போடப்பட்டிருக்கிற வரிச்சுமை குறைக்கப்படவில்லை என்ற கவலையையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அரசாங்க ஊழியர் களுக்குக் கிராக்கிப்படி உயர்த்தியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. அவர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்திக் கொடுக்க வேண்டு மென்று இந்த மன்றத்திலே அடிக்கடி வலியுறுத்திச் சொல்லப்பட் டிருக்கிறது. இப்போது அவர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தப் பட்டிருந்தாலும் அவர்களுடைய குறைகள் முழுமையாக நீங்கிய பாடில்லை. நகர ஈட்டுப் படியும், வீட்டு வாடகைப் படியும் மத்திய அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுவது போன்று தங்களுக் கும் கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கைகளைக் கொடுத்துக்கொண் டிருக்கிறார்கள். இந்த ஆண்டு மாலை நேரக் கல்லூரிகள் கோவையி லும், சென்னையிலும் கலைக்கல்லூரிகளில் ஆண்களுக்காகவும்; சென்னை மேரி அரசியார் கல்லூரியில் பெண்களுக்காகவும் ஆரம்பிக் கப்பட இருப்பது வரவேற்கத்தக்கதாகும். பணிபுரிகிற ஆசிரியர் களுக்காக மாநிலக் கல்விக் கழகம் துவக்கப்பட இருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றுதான். சேலம் உருக்காலையைப் பற்றி ஒரு முடிவான கருத்து சொல்லப்படவில்லை. சேலம் உருக்காலை துவங் கப்பட்டால் இந்த மாநிலத்தொழில்கள் வளர வசதிகள் எற்படும் என்று மற்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். பொருளா தார ரீதியில் நன்கு செயல்பட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. இது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உருவாக்கப் படும் என்று கூறப்பட்டது. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் இந்தத் திட்டத்திற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்ப தாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனல் அந்தத் திட்டம் இன்னமும் ஐயப்பாடான நிலைமையிலேயே வைக்கப்பட்டிருக்கிறது. தஸ்தூர் கம்பெனி அறிக்கையில் "இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதன் மூலம் நலன் எற்படும்" என்று கூறியிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். உருக்கு ஆலைத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தென்னகத்தில்

8th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

எந்த இடத்தில் ஏற்படுத்தப்படும் என்பதே பரிசிலனேயில் இருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. எவ்வாறு இருப்பினும் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக்குள் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவில்லையானாலும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டிலேயே சேலம் உருக்குத் தொழிற்சாலேயை உருவாக்குவதிலே தீவிரம் காட்ட வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். தொழில் நுட்பக் கல்வி, மருத்துவம், பாசனம், மின்சாரம் போன்ற பல்வேறு துறைகளேப்பற்றி, மானியக் கோரிக்கைகள் வருகின்றபோது பேசலாம் என்ற அளவிலே அவைகளேப்பற்றிய கருத்துக்களே எல்லாம் இப்போது பேசாமல் விடுகிறேன்.

இந்த மன்றத்திலே கடந்த ஐந்தாறு நாட்களாக சென்ற திங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளேப் பற்றிய கருத்துக்களே எதிர்க் கட்சியினரும், ஆளும் கட்சியினரும் பரிமாறிக் கொண்டிருக்கிருர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைப் பற்றித் தெளிவாகக் கூறி வந்திருக்கிறது. இந்தி ஆட்சிமொழியாகக் கொண்டுவருவதைப் பற்றித் திராவிட முன்னேற்றக் கழகம் எத்தகைய கருத்தினைக் கொண்டிருக்கிறது என்பதை அதனுடைய வரலாறு தெளிவுபட எடுத்துக் காட்டும். நடைபெற்று முடிந்த நிகழ்ச்சிகள் அத்தனைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் காரணம் என்று ஆளும் கட்சியில் இருப்பவர்கள் பலர் எடுத்துக் கூறினுலும், ஆளும் கட்சியிலே இருப்பவர்களிலே சிலர் "திராவிட முன்னேற்றக் கழகத்தையோ அல்லது வேறு எந்தக் கட்சியையோ இதற்குக் காரணமாகக் கூற முடியாது; சூழ்நிலே அந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது" என்று கூறியிருக்கிருர்கள். பாராளுமன்றத்தில் பேசிய தென்னுட்டு உறுப்பினர்கள் பலரும் கூட "குறிப்பிட்ட எந்த அரசியல் கட்சியையும் இதற்குக் காரணமாக்கக்கூடாது; மக்களுடைய உள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் கொதிப்புணர்ச்சியும், அச்ச உணர்ச்சியும், ஐயப்பாடுந்தான் அடிப்படையான காரணம்" என்று கூறியிருக்கிருர்கள். இங்கே வந்து விட்டுச் சென்ற திருமதி இந்திரா காந்தி நிலேமையை நேரிலே கண்டு 'மக்களுடைய உணர்ச்சிதான் காரணம்' என்று எடுத்துக் கூறிஇருக்கிருர்கள். இந்த மன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் அத்தகைய கருத்துக்களே எடுத்துக் கூறும் போது அதனே ஏற்றுக் கொள்கிற நிலேயில் ஆளும் கட்சியினர் இல்லே. ஆளும் கட்சினர் மீது எதிர்க்கட்சியினர் சாட்டிய குற்றச்சாட்டுகளுக்கு நியாயம், தீர்ப்பு இந்த மன்றத்திலே கிடைக்கப் போவதில்லே என்பது அனேவருக்கும் நன்ருகத் தெரியும். கனம் முதலமைச்சர் அவர்கள் சிலபல காலமாக சினத்தோடும், சீற்றத்தோடும் இருக்கிற காரணத்தால் எந்த ஒரு பிரச்சினேக்கும் முடிவு ஏற்படாத நிலேமை இருந்து வருகிறது. எதிர்க்கட்சியினர் எடுத்துக் கூறியபடி இந்தப் பிரச்சினேயைப் பற்றி விவாதிப்பதற்கு நாட்களே ஒதுக்கி இருப்பார்களேயானுல், இந்த நிதிநிலே அறிக்கையின் மீது அது சம்பந்தப்பட்ட கருத்துக்களே விவரமாக எடுத்துக் கூறியிருக்க முடியும். எந்த விதத்திலும் எதிர்க்கட்சியினரைப் பொருட்படுத்தாத நிலேமையிலே கனம் முதலமைச்சர் அவர்கள் தம்முடைய செயல்களே ஆற்றிக் கொண்டிருக்கிருர்கள்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [8th March 1965

ஏற்பட்ட கலவர நிகழ்ச்சிகளுக்கு திராவிட முன்னேற்றக் கழகம்தான் காரணம் என்று சொல்கிறார்கள். ஆட்சிமொழிப்பிரச்சினையைப் பொறுத்து இந்த நிலைமைகள் ஏற்பட்டனவா அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்பட்டிருக்கிற முக்கியத்துவத்தைப் பொறுத்து இந்த நிலைமைகள் ஏற்பட்டனவா என்பதை அமைச்சரவையும், மன்ற உறுப்பினர்களும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தார் நீண்ட காலமாகவே ஆட்சி மொழியைப் பொறுத்தவரை திட்டவட்டமாகப் போராடிக் கொண்டு வருகிறார்கள். அதுவும் அமைதியான முறையில் போராடிக் கொண்டு வருகிறார்கள். 1938-ல் இருந்தே இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி திராவிட இயக்கத்தினரின் சார்பாக தொடங்கப்பட்டு கருத்து தெரிவிக்கப்பட்டு வந்திருக்கிறது. பொது மொழியாக, தேசிய மொழியாக, ஆட்சி மொழியாக இந்திதான் இருக்கவேண்டுமென்ற கருத்து பரிமாறப்பட்டு வந்த காலத்திலிருந்து; அதை அரசியல் சட்டத்தில் ஏற்றி வைத்து ஆதரவு தேட வேண்டுமென்று நினைத்த காலத்திலிருந்து, அதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்திருக்கிறோம். அதன் விளைவாக அந்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சி, 1938-ல் கிளர்ச்சி வடிவு எடுத்து, சிறை செல்லும் அளவிற்கு நிலை ஏற்பட்டது. அதன் பிறகு திராவிட இயக்கத்தினர் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம், இந்தியை திணிக்கிற முயற்சி ஏற்படும்போதெல்லாம், கிளர்ச்சிகள் நடத்துக்கொண்டே வந்திருக்கின்றனர். அதுவும் அமைதியான முறையில்தான் கிளர்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய பிறகு இந்தி எதிர்ப்பைப் பொறுத்து கழகம் கொண்டிருக்கிற கருத்துக்கள் பேச்சுக்களின் மூலமாகவும், மகாநாட்டு தீர்மானங்கள் மூலமாகவும், பொதுக்கூட்டங்கள் வாயிலாகவும், எடுத்து வைக்கப்பட்டதோடல்லாமல் அறப் போராட்டம் மூலமாகவும், நாட்டு மக்களிடம் தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இதை எடுத்துச் சொல்லக் காரணம், திடீரென்று 1965 ஜனவரி திங்களில்தான் இந்த உணர்வு ஏற்பட்டு, அந்த அடிப்படையில், அத்தனை பேர்களையும் தூண்டி விடக்கூடிய நிலை ஏற்பட்டது என்று எண்ணுவது சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்டத்தான். திராவிட முன்னேற்றக் கழகம் 1963-ல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சித் திட்டத்தை உருவாக்கி ஒரு ஆண்டிற்கு மேலாக பத்து மாவட்டங்களில் போராட்டங்கள் மூலம் எதிர்ப்பு உணர்ச்சியை, இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை, இந்திய அரசுக்கும், வடநாட்டினருக்கும். இந்தி ஆட்சிமொழியாக வர வேண்டும் என்று எண்ணுகிறவர்களுக்கும், தெளிவாக தெரிவித்துக் கொண்டிருக்கிறது. சட்டத்தை எரிக்கிற கிளர்ச்சியிலும், மறியல் கிளர்ச்சியிலும், பத்து மாவட்டங்களிலும், மாவட்டங்களில் உள்ள வட்டங்களிலும் உள்ள கழகத்தைச் சார்ந்தவர்கள் ஈடுபட்டுத் தங்கள் கருத்துக்களை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். எந்தத் திட்டம் ஏற்படும்போதும், அல்லது எந்தத் திட்டத்தில் ஈடுபடும் போதும் திராவிட முன்னேற்றக் கழகம் மறைவிலிருந்து, ஒளிவாக, அரசாங்கத்திற்கோ அல்லது போலீஸுக்கோ அறிவிக்காமல்

8th March 1965] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

எந்த ஒரு போராட்டத்தையும் இந்த 16 ஆண்டு காலமாகத் துவக்கியது இல்லை. எந்தப் போராட்டம் துவக்கப்பட்டிருந்தாலும் சரி பொதுக் குழு, 'செயல் குழு இவற்றில் தீர்மானங்கள் நிறைவேற்றி போலீஸுக்கு அதை அறிவித்து விட்டுத்தான் போராட்டம் நடத்திக் கொண்டு வருகிறது. எந்தப் போராட்டமானாலும் சரி கழகத்தினர் தங்களைத் தாங்களே அதில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். அதனால் வருகிற கஷ்ட நஷ்டங்களை கழகத்தினரே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற முறையில்தான் போராட்டத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அத்தகைய போராட்டங்களில் கழகத்தின் அனுமதி பெற்றவர்களே அதில் ஈடுபட வேண்டும் என்ற விதி கழகத்தில் வகுக்கப்பட்டிருக்கிறது. 1963-ல் தொடங்கப்பட்ட போராட்டத்தில் தலைமைக் கழகத்தின் அனுமதி பெற்றவர்கள் மட்டுமே ஈடுபட வேண்டும், மூவர் அணியாக ஈடுபடுதல் வேண்டும். எரிப்புப் போராட்டத்தில் ஒருவர் ஒருவராக ஈடுபட வேண்டும், இன்ன இடத்தில் இத்தனை இத்தனை மணிக்கு இன்னின்ன பேர்கள் ஈடுபட வேண்டும், அதில் ஏற்படுகிற அடக்குமுறையின் விளைவுகளை தாங்கிக் கொள்ள கழகம் இருக்கிறது என்ற முறையில் தான் செய்திருக்கிறோம். இந்த முயற்சியைக் கழகம் ஏற்றுக் கொள்ளக் காரணம் தென்னக மக்கள், தமிழ் மக்கள், மொழிப் பிரச்னை பற்றி எந்த அளவு உணர்ச்சி பெற்றிருக்கிறார்கள், எத்தகைய விளைவுகளை எதிர்பாக்கிறார்கள், என்பதை அகில இந்திய ஆட்சியினர் உணர வேண்டும், இந்தியைப் புகுத்த வேண்டுமென்று எண்ணுகிறவர்கள் உணர வேண்டும் என்ற முறையில்தான் போராட்டத்தை நடத்திக் கொண்டு வந்திருக்கிறது. மாணவர்களைப் பற்றி திராவிட முன்னேற்ற கழகம் பல்லாண்டு காலமாகச் சொல்லி வருகிற கருத்தை மாணவர்கள் மகாநாட்டில் எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும், நானும், மற்றவர்களும் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறோம். மாணவர்கள் அரசியலை அறிந்து கொள்கிற அளவிற்கு இருக்கவேண்டுமே தவிர, நேரடியாக அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டுத் தங்கள படிப்பை பாழாக்கிக் கொள்வது என்பது கூடாது என்று பலமுறை கூறி இருக்கிறோம். எந்த நேரடிப் போராட்டத்திலும் மாணவர்கள் கலந்து கொள்ளக் கூடாது என்ற கருத்தை தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். டாக்டர்கள், மாணவர்கள் போன்றவர்கள் எந்தக் காரணம் கொண்டும் கழகம் தொடங்குகிற போராட்டங்களில் ஈடுபடக்கூடாது என்ற கருத்தை கழகச் செயற் குழு, பொதுக்குழு, தீர்மானங்கள் மூலம் நிறைவேற்றி வந்திருக்கின்றன. மாணவர்கள் அரசியலில் முழுக்க முழுக்க ஈடுபடுவது, அல்லது அரசியலை அறவே அறியாமல் இருப்பது, அல்லது அரசியலை அறிந்து கொண்டு ஆனால் அதில் நேரடியாக ஈடுபடாமல் மாணவர்கள் இருப்பது என்ற இந்த இம்மூன்றில் அரசியலுக்கும் தங்களுக்கும் சற்றும் சம்பந்தமில்லாமல், படித்து முடித்து விட்ட பின்னர் அரசியலைப் பற்றி தெரிந்து கொள்ளலாம் என்றிருந்தால் ஜனநாயக நாட்டில் அரசியலில் அவர்கள் ஈடுபட முடியாத நிலை ஏற்படும். ஆகவே கட்சி அரசியலில் வேண்டுமானால் மாணவர்கள் நேரடியாக ஈடுபடாமல் இருக்கலாம்; ஆனால் நாட்டின் அரசியலைப் பற்றி, எதிர்கால விளைவுகளைப் பற்றி, மாணவர்கள்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [8th March 1965

அறிந்து கொள்ள வேண்டும். மாணவர்கள் நேரடிப் போராட்டத்தில் ஈடுபடக்கூடாது, படிப்பை பாழாக்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடக்கூடாது என்ற கருத்தை திருச்சி மாணவர்கள் மகாநாட்டில் நானும் மற்றவர்களும் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறேம். சிதம்பரத்தில் நடந்த மகாநாட்டில் அறிஞர் அண்ணு அவர்களும், மற்றவர்களும் பேசும்போது இக்கருத்தைத்தான் வெளியிட்டிருக்கிருர்கள். சுருக்கெழுத்தாளர்கள் குறித்து வைத்திருக்கிற அறிக்கைகளில் கூட முதல் அமைச்சர் அவர்கள் அதைக் கண்டிருக்கக் கூடும். மாணவர்கள் படிப்பை பாழாக்கிக் கொள்ளும் விதத்தில் நேரடிப் போராட்டத்தில் ஈடுபடக்கூடாது என்று வலியுறுத்தி வருகிறேம். அப்படி இருக்க நாங்கள் தான் மாணவர்களை தூண்டி விட்டோம். அதன் விளைவாகத்தான் வன்முறை நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன என்று ஆளும் கட்சியைச் சார்ந்த பல பேர்கள் தெரிவித்திருக்கிருர்கள். முதல் அமைச்சர் அவர்கள் கூட திரும்பத் திரும்ப அதைத் தான் சொல்கிருர்கள். பல விளக்கங்கள் எடுத்துச் சொல்லியும் கூட. மாணவர்களை ஈடுபடுத்துவதுதான் எங்கள் எண்ணம் என்ருல் 1963-ல் துவக்கப்பட்ட எரிப்புப் போராட்டத்தில், மறியலில் அவர்களை ஈடுபடுத்தியிருக்கக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கும். இதிலிருந்து இத்தகைய குற்றச்சாட்டு உண்மையானது அல்ல என்பது தெரிய வரும். அந்தப் போராட்டத்தின்போது முதல் அமைச்சர் அவர்களும் மற்றவர்களும் தெரிவித்தது என்ன? இந்தக் கருத்துக்கு நாட்டில் ஆதரவு இல்லை, யாரும் அக்கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை, இந்த இயக்கம் பிசு பிசுத்துப் போய் விட்டது, இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளும் நிலையில் யாரும் இல்லை, யாரும் அவர்களுக்கு ஆதரவு தரும் நிலையில் இல்லை என்றெல்லாம் இந்த ஓராண்டு காலமாக பேசி வந்திருக்கிருர்கள். 1965 ஜனவரி 26-ம் நாளைத் துக்க நாளாக மேற்கொள்கிற நிலையில் அதனை ஆர்பாட்டமான முயற்சியாக மேற்கொள்ளவில்லை, கிளர்ச்சி அளவில் கொள்ளவில்லை, எங்கள் எண்ணத்தை வெளிபடுத்துகிற வாய்ப்பாகத்தான் துக்க நாள் கொண்டாடுகிறேம் என்று தெளிவுபட கூறியிருக்கிறேம். அதுகுறித்து அறிஞர் அண்ணு அவர்களும் அறிக்கை வெளியிட்டிருக்கிருர்கள். இந்த மன்றத்தில் 23-ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் தெளிவுபட எடுத்து வைத்திருக்கிறேம். குடியரசு தின விழா கொண்டாடுகிறவர்களைத் தடுக்கிற எத்தகைய முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. அதற்கு குந்தகம் விளைவிக்கிற நோக்கம் விளைவிக்க வேண்டுமென்ற நோக்கம் எங்களுக்கு இல்லை என்ற கருத்தையும் எடுத்துத் தெரிவித்திருக்கிறேம். அப்படி கொண்டாடுகிறவர்களுக்கு தீங்கு இழைக்க வேண்டுமென்று நினைக்கவில்லை. இந்திய அரசினருக்கும், மற்றவர்களுக்கும் உணர்த்துவதற்காகவே செய்கிறேம், அப்படி அன்று உணர்த்தாவிட்டால் இந்தியை இந்த நாடு ஏற்றுக் கொண்டு விட்டது என்று அவர்கள் எண்ணக் கூடும், அதற்காகத்தான் துக்க நாள் கொண்டாடுகிறேம் என்ற கருத்தை தெளிவுபடக் கூறியிருக்கிறேம். இந்தி ஆட்சி மொழி ஆவது குறித்துப் பெரும் விழா டெல்லியில் கொண்டாடப்பட்டிருக்கிறது. ஜனவரி

8th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

22-ம் தேதி திரு. சாஸ்திரியார் அவர்கள் அந்த விழாவை ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். அதற்குச் சான்று பகரும் இந்திக் கொடியை குடியரசுத் தலைவரவர்கள் வாங்கி ஆதரவு தந்திருக்கிறார்கள். கோலாகலமாக ஒரு வார காலம் கொண்டாடியிருக்கிறார்கள். எதிர்ப்பை தெரிவிக்காவிட்டால் எதிர்ப்பு இல்லை இந்தி திணிப்பிற்கு என்று இந்திய அரசினர் நினைத்துக் கொள்வார்களே என்ற முறையில் எங்கள் கருத்தை வெளிப்படையாக சொல்கிற அளவிற்கு, யாருக்கும் எத்தகைய குந்தகமும் ஏற்படாமல் எங்கள் முயற்சியை மேற்கொண்டோம். கறுப்புக் கொடி கட்டுவது, தங்கள் தங்கள் வீடுகளில் கறுப்புக் கொடி கட்டுவது, அல்லது கறுப்புச் சின்னம் அணிவது என்ற முறையில் எங்கள் எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்ட முன்வந்தோம். இதற்கு முன்பு ஒவ்வொரு மாவட்டத்திலும் போராட்டங்கள் நடந்திருக்கின்றது. வட்டத் தலைமை அஞ்சலகங்களில் மறியல் நடந்திருக்கின்றது. கிட்டத்தட்ட 100 இடங்களில் 1,500-க்கு மேற்பட்டவர்கள் கைதாகி தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு ஆண்டாக நடந்த அந்தப் போராட்டத்தில் ஒரு வன்முறைச் செயல் கூட நடைபெற்றதில்லை. அப்போதெல்லாம் மாணவர்களை தூண்டிவிட்டு எங்களுடைய போராட்டத்திற்கு ஆதரவு தாருங்கள் என்று நாங்கள் சொல்லவும் இல்லை. அதற்கு மாறாக மாணவர்கள் இம்மாதிரியான போராட்டங்களில் ஈடுபடக்கூடாது என்பதைத்தான் நாங்கள் வற்புறுத்தி வந்திருக்கிறோம். இவ்விதம் எல்லாம் நிலைமை இருந்தும், இவர்கள் தான் மாணவர்களுடைய கிளர்ச்சியை தூண்டிவிட்டார்கள் என்று முதலமைச்சர் அவர்களும் மற்ற காங்கிரசுக் கட்சியினரும் கருத்துத் தெரிவித்து வந்திருக்கிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் நான் கொடுத்த 41-வது விதியின் கீழ் கொடுத்த கவன ஈர்ப்பு தீர்மானத்திற்குப் பதில் அளிக்கின்ற முறையில், இத்தகைய கருத்தைக் குறிப்பிட்டார்கள். திருச்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மகாநாட்டில் மாணவர்கள் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபடும்படி தூண்டிவிடப்பட்டார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். திருச்சியில் நடந்த மகாநாட்டில் நானும் கலந்து கொண்டேன்; மற்ற அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார்கள். நானும் பேசியிருக்கிறேன். அதில் 'இந்தி ஆட்சிமொழியாக வருவதற்கு தகுதியற்ற ஒரு மொழி; அதற்கான தகுதியை அது பெறவில்லை; அது ஆட்சிமொழியாக வருவதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஆகவே இந்தி ஆட்சி மொழியாக வரக்கூடாது; தாய் மொழியாக இருக்கக்கூடிய தமிழ் மாநில ஆட்சிமொழியாக இருக்க வேண்டும்; உலக தொடர்புக்காக, நாம் எல்லோரும் படித்துக் கொண்டிருக்கின்ற ஆங்கிலத்தை. நாம் எல்லோரும் படித்துக் கொண்டிருக்கின்ற ஆங்கிலத்தை, அறிவு வளர்ச்சிக்காக பயன்படுகின்ற ஆங்கிலத்தை; இன்று மட்டுமல்ல; மேலும் நம்முடைய அறிவு வளர்ச்சிக்காக கற்றுக் கொள்ளப்போகின்ற ஆங்கிலத்தை உலக தொடர்பு மொழியாக நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற ஆங்கிலத்தை; இந்தியாவின் மொழி தானகத் தொடர்பு மொழியாக ஆகும் காலம் வரையில்; இந்தியாவின் தொடர்பு மொழியாக அமைத்துக் கொள்ளலாம். அத்தகைய ஒரு நிலை வரும்போது அந்நிய மொழியை 12 noon.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [8th March 1965

எப்படி வைத்துக் கொள்வது என்கின்ற எண்ணம் வருமானல் அந்த வகையில் ஆட்சிமொழி என்று சொல்லப்படுகின்ற அள விற்கு, ஆட்சி செலுத்திக் கொள்கின்ற வகையில் 14 மொழிகளும் இடம் பெறலாம். அவ்வாறான நிலை ஏற்படும்போது, ஏதேனும் ஒரு இந்திய மொழி அகில இந்தியாவிற்கும் தொடர்பு மொழியாக வரக்கூடிய தகுதியை பெற முடியும். அந்த நிலை ஏற்படுகிறவரை யிலும் உலகத் தொடர்பு மொழியாக இருக்கக்கூடிய ஆங்கிலமே நீடிக்கலாம். ஆங்கிலத்தைப்பற்றி கூறும் போது அதனை ஆட்சி மொழி என்று சொல்வது பொருத்தமிராது என்று தோன்றுமே யானல் அதற்கு கொடுத்திருக்கின்ற பெயரை மாற்றி 'நாடிடை மொழி' என்றோ அல்லது வேலைக்கார மொழி என்றோ பெயரை வைத்துக் கொள்ளலாம். இந்தியாவின் 14 மொழிகளையும் ஆட்சிமொழி களாக வைத்துக் கொள்ளலாம். அந்த வகையில் அந்தந்த இடத் தில் இருக்கக்கூடிய மொழிகள் மூலம் அஞ்சல் அட்டைகள், அஞ் சல் உறைகள், அஞ்சல் தலைகள் ஆகியவற்றை வழங்குவது; தமிழ் நாட்டில் தமிழ் மொழியிலேயே அஞ்சல் அட்டைகளை வெளியிடு வது போன்றவைகளை செய்வதில் எத்தகைய கஷ்டமும் இராது. ஐந்து ரூபாய் பத்து ரூபாய் நோட்டுகளில் எல்லாம் 14 மொழி களும் பொறிக்கப்பட்டிருக்கின்றதை நாம் பார்க்கிறோம்; அப் பேர்ப்பட்ட முறையில் நாம் ஆட்சி மொழியாக 14 மொழிகளை ஆக்கினல் கூட அதற்கான ஆக்கத்தை நம்மால் தாக்கூடும். அந்த வகையில் இடைக்காலத்தில் தொடர்பு மொழி ஆங்கிலமாக இருக்க வேண்டும்; இந்தி கூடாது' என்று சொல்லப்பட்டதே தவிர, மாணவர்கள் ஜனவரி 25-ம் தேதி ஆர்ப்பாட்டங்களில் இறங்கி கலகங்களை செய்யவேண்டும் என்று என்னுடைய பேச்சிலோ அல்லது வேறு எவருடைய பேச்சிலோ கருத்து வற்புறுத்தப்பட வில்லை; அது மட்டுமல்ல; அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களிலும் மாணவர்களை தூண்டிவிடக்கூடிய அளவிற்கோ அல்லது அவர்களைக் கலகங்களுக்கு உற்சாகப்படுத்தக்கூடிய வகையிலோ அமையவில்லை. அந்தவிதமான தீர்மானங்கள் எதுவும் நிறை வேற்றப்படவில்லை. மாணவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை, ஆதரிக்க வில்லை, இவர்களுடைய போராட்டத்தை ஏற்றுக்கொள்பவர்கள் யாரும் இல்லை என்று ஒன்றரை ஆண்டு எடுத்துச்சொல்லி வந்தவர் கள், இன்றையதினம் 25-ம் தேதி மாணவர்கள் ஊர்வலம் நடத்திய தற்கும், அதற்குப் பின்னல் மாணவர்கள் நடத்திய போராட்டங் களுக்கும் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் என்று சொல்லுவது எந்த அளவுக்கு பொருத்தமாக இருக்க முடியும்? ஆகவேதான் மாணவர்கள் சொல்கிறார்கள், 'திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டிவிடக்கூடிய நிலையில் மாணவர்கள் இருக்கவில்லை' என்பதை. இதை கனம் முதலமைச்சர் அவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சாதாரணமாக மாணவர்கள் எந்த நேரத்தில் போராட்டம் நடத் தினலும், வேலை நிறுத்தம் செய்தாலும் கூட, பொதுவாக ஆசிரி யர்கள், பெற்றோர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் போன்ற அனை வரும் வேலை நிறுத்தங்கள் போன்றவைகள் கூடாது என்று சொல்லி வருவதையும் எழுதி வருவதையும் நாம் கண்டிருக்கிறோம்.

8th March 1965] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

ஆனால் இந்த ஆட்சிமொழிப் பிரச்னை ஒரு கட்சிப் பிரச்னையாக கருதப்படவில்லை. இந்தி ஆட்சி மொழியாக வந்தால் தமிழர்களுக்கும் தென்னக மக்களுக்கும் எந்தவிதமான நன்மையும் ஏற்படாது என்பதை அறிந்த காரணத்தால், இந்தி நமக்கு தேவையில்லை என்கின்ற கருத்து மாணவர்கள் மட்டுமல்ல, ஆசிரியர்கள் பெற்றோர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இருக்கின்ற பொதுமக்கள் அத்தனைப் பேருக்கும் ஏற்பட்டிருக்கிறது. அந்த நோக்கத்திற்கு ஆதரவு கொடுத்து வருகிறார்கள். அந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் மாணவர்கள் 25-ம் தேதி தங்கள் போராட்டத்தை நடத்தினார்கள். அன்றையதினம் ஊர் வலம் முதலியவைகளை நடத்தினார்கள். எங்கு பார்த்தாலும் அது அமைதியாகவே நடந்திருக்கின்றது. பல இடங்களில் அமைதியாக கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஊர்வலங்கள் நடைபெற்றிருக்கின்றன. சில இடங்களில் இந்தி புத்தகங்களுக்கு நெருப்பு வைத்திருக்கின்றனர். இவைகள் எல்லாம் அமைதியாகவே நடந்திருக்கின்றன. அதன் பின்னால் ஃபிப்ரவரி 10, 11, 12 இந்த தேதிகளில் நடைபெற்ற போராட்டங்களில் பல வன்முறைச் செயல்கள் நடைபெற்றிருக்கின்றன. இவைகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தால் திட்டமிடப்பட்டு நடந்த செயல்கள் என்று கனம் முதலமைச்சர் அவர்களும் மற்ற கனம் காங்கிரஸ் உறுப்பினர்கள் பலரும் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த சம்பவங்கள் எல்லாம் உண்மையில் யாரும் எதிர்பாராத வகையில் நடந்ததாகும். நடந்த ஒரு நிகழ்ச்சியைத் தொடர்ந்து மற்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்திருக்கின்றன. யாரும் இன்னின்ன இடத்தில் பலாத்கார செயல்கள் நடத்த வேண்டும், இன்னின்ன இடத்தில் ரயில்களை கவிழ்க்கவேண்டும், இன்னின்ன இடத்தில் ரயில் பெட்டிகளுக்கு நெருப்பு வைக்கவேண்டும், இன்னின்ன இடத்தில் அஞ்சல் நிலையங்களுக்கு நெருப்பு வைக்கவேண்டும் என்று உண்மையிலேயே திட்டமிட்டு செய்யவில்லை. அவ்விதம் திட்டமிட்டு நடைபெற்றிருந்தால், கனம் அமைச்சர் அல்லது ஆளும்கட்சி அங்கத்தினர்கள் கூறுவது உள்ளபடியே இருந்தால், கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து வைத்திருக்கின்ற ரகசிய போலீஸார் மூலமாக இந்த திட்டங்கள் எல்லாம் தெரிந்திருக்கவேண்டுமே. கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவில் பணிபுரிந்து கொண்டிருக்கிற திறமைசாலிகள் என்று சொல்லக்கூடிய இரகசிய போலீஸாருக்கு, எதிர்கட்சிகளின் தூண்டுதலின் பேரில் இன்னின்ன இடத்தில் ரயில்களை கவிழ்க்கப் போகின்றனர், இன்னின்ன இடத்தில் ரயில் பெட்டிகளுக்கு நெருப்பு வைக்கப் போகின்றனர் என்றெல்லாம் தெரிந்திருக்கவேண்டும். அப்படி தெரிந்திருந்தால் அரசு தக்கபடி முன்கூட்டியே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கலாமே. ஆகவே எதிர்கட்சிகளின் தூண்டுதலின் பேரில்தான் மாணவர்கள் கிளர்ச்சிகள் நடத்தினார்கள் என்று சொல்வதில் எந்தவிதமான உண்மையும், பயனும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தி எதிர்ப்பைப்பற்றி மக்கள் கொண்டிருக்கிற எண்ணத்தை அரசாங்கம் உணர மறுக்கிறது. இதன் காரணமாகவே வேண்டாத பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. 25-ம் நாள் மாணவர்கள் ஊர்வலங்கள் நடத்தியது திராவிட முன்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [8th March 1965

னேற்றக் கழகத்தினரின் தூண்டுதலோடுதான் நடத்தப்பட்டது என்பதை கனம் முதலமைச்சர் அவர்கள் சிற்றத்தோடும் சினத்தோடும் சொல்கிறார்கள். மிகவும் பொறுமையுடன் பிரச்னையை அணுகக் கூடியவர், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஏற்பட்டபிறகு சிற்றத்தோடும் சினத்தோடும் தான் நடந்து கொண்டார் என்பதை நாம் செய்தித்தாள்களின் மூலமாக அறிந்துகொண்டோம். அது மட்டுமல்ல. கனம் முதலமைச்சர் அவர்களிடத்தில் எத்தகைய செய்திகள் பரப்பப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி எண்ணும் போது வேடிக்கையாக இருக்கிறது. மன்ற ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலரும் எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பற்றி பேசும்போது புகாரி ஓட்டல் பிரச்னையைப் பற்றி சொன்னார்கள். மாணவர்களை புகாரி ஹோட்டலுக்கு அழைத்து சென்று விருந்து நடத்தி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சில எம்.எல்.ஏ.-க்கள் மாணவர்களை கிளர்ச்சி செய்யும்படி தூண்டிவிட்டார்கள் என்ற தவறான செய்தியை முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்திருக்கிறார்கள். அதை அவர்கள் வெளியே பொதுக் கூட்டங்களில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் யார் அந்த எம்.எல்.ஏ.? யார் அந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்? என்பதைப்பற்றி குறிப்பிடவில்லை. இன்னொரு பத்திரிகையில் செய்தி வந்ததையும் நான் கேள்விப்பட்டேன். அதாவது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் நெடுஞ்செழியன், கருணாநிதி ஆகிய இருவரும் புகாரி ஹோட்டலுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று விருந்து நடத்தினார்கள் என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இத்தகைய முறையில் பல் வேறுபட்ட செய்திகள் சொல்லப்பட்டன. நான் மனச்சாட்சிக்கு மாறுபடாமல் சொல்கிறேன். 1956-க்கு முன் புகாரி ஹோட்டலுக்கு சென்றிருக்கிறேன்; அதன் பின்னால், 1962-ம் ஆண்டு என்று நினைக்கிறேன்; மேயர் குசேலர் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட விருந்தின்போது புகாரி ஹோட்டலுக்குச் சென்றிருக்கிறேன். நான் சாதாரணமாக புகாரி ஹோட்டலுக்குச் செல்பவன் அல்லன்; யாருக்கும் நான் விருந்து வைப்பவன் அல்லன்; இந்த நிலையில், நானும் கனம் உறுப்பினர் கருணாநிதியும் மாணவர்களை புகாரி ஹோட்டலுக்கு அழைத்துச்சென்று விருந்து நடத்தினோம் என்று பத்திரிகையில் சொல்லப்பட்டது. இப்பேர்ப்பட்ட விருந்துகளின் மூலம் மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவார்கள் என்றால் எத்தனை கிளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கக்கூடும்? எப்படிப்பட்ட தவறான செய்தி கனம் முதலமைச்சர் அவர்களிடம் தரப்பட்டிருக்கிறது என்பதை உணர்த்தவே இதைச் சொல்லுகிறேன். நான் எதற்காக இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், இந்தப் பிரச்னையின் உண்மையை உணர அரசாங்கம் தான் மறுக்கிறது. மாணவர்களுக்கு இந்தி அவசியம் இல்லை என்று திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து பரப்பிக் கொண்டு வருகிறது. இந்த நாட்டினுடைய ஒரே ஆட்சி மொழியாக இந்தி வருவதற்குத் தகுதியுடைய மொழி அல்ல என்று சொல்லிக்கொண்டு வருகிறது. இந்த நாட்டினுடைய ஒரே ஆட்சி மொழியாக இந்தி இருக்கக் கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறது. இன்னும் தொடர்ந்து சொல்லும். ஒரு இந்திய

8th March 1965] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

மொழிக்கு அகில இந்திய அந்தஸ்து கொடுக்கவேண்டுமானால் அப்படிப்பட்ட அந்தஸ்து 14 மொழிகளுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வற்புறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறது. இப்போது இருக்கிற சூழ்நிலையை அப்படியே விட்டுவிட்டு, 14 மொழிகளுக்கும் ஆட்சி மொழி அந்தஸ்தைக் கொடுத்து, அவற்றுள் எந்த மொழி தொடர்பு மொழித் தகுதியை, வாய்ப்பைப் பெறுகிறதோ அந்த மொழிக்குத் தொடர்பு மொழி அந்தஸ்தைத் தரலாம் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் செய்தித் தாள் நிருபர்களோடு பேசிய பேச்சில் தெரிவித்திருக்கிறார்கள். இந்தி மொழியைப் பரப்புவதைப் பற்றித் தெரிவித்திருப்பது, இந்தி ஆட்சி மொழியாக அல்ல, இந்தி படிப்பதைக் கட்டாயப் படுத்த வேண்டும் என்ற கருத்தில் அல்ல, மொழிகளைப் படிப்பதில் தவறு இல்லை; இது போன்று கனம் உறுப்பினர் டாக்டர் நடராஜன் அவர்கள் தெரிவித்த மாதிரி 18, 20 மொழிகள் படிப்பதில் தவறு இல்லை; பல்கலைக் கழகங்கள் பல்வேறு மொழிகளைக் கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்தால், அவைகளை விரும்பி படிக்க மாணவர்கள் முன்வருவது தவறு அல்ல; அப்படி இந்தி படிக்கலாமா என்று கேட்டால் மறுப்பு இல்லை; அப்படி யாரும் படிப்பதைத் தடுக்கவில்லை; இந்தி ஆட்சிமொழியாகக் கூடாது. அதுவும் இந்தி மட்டும் ஓரே ஆட்சி மொழியாகக் கூடாது; அந்த அந்தஸ்தை 14 மொழிகளுக்கும் தரவேண்டும்; தொடர்பு மொழி ஆகக்கூடிய தகுதியை எந்த மொழி பெறுகிறதோ அது அந்த அந்தஸ்தைப் பெறவேண்டும் என்ற கருத்தைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

மாணவர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி 25-ம் தேதி எங்கு பார்த்தாலும் அமைதியாக நடைபெற்றிருக்கிறது. இந்த மன்றத்திலே கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் போதும், கவனம் ஈர்ப்புப் பிரேரணைக்கு பதில் அளிக்கும் போதும், முதல் அமைச்சர் அவர்கள். 'போலீசார் எந்த இடத்திலும் வன்முறைச் செயலில் ஈடுபடவில்லை; எந்த அளவுக்கு அதிகாரத்தைச் செலுத்த வேண்டுமோ அந்த அளவுக்குத்தான் அதிகாரத்தைச் செலுத்தியிருக்கிறார்கள்; அவர்கள் பேரில் சிறு தவறு கூட இல்லை' என்று அறிக்கையில் கூறியுள்ளார்கள். உண்மை நிலை அதுதானா என்று முதல் அமைச்சர் அவர்கள் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 25-ம் தேதி நிகழ்ச்சிகளுக்குப் பின்னால் நிகழ்ச்சிகள் ஏற்பட்ட இடங்களில் எதுவும் நடைபெறவில்லை. பல இடங்களில் ஊர்வலங்கள் நடைபெற்றிருக்கின்றன. அத்து மீறிய முறையில் போலீஸார் அத்தனை இடங்களிலும் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. அத்தனை அதிகாரிகளும் குற்றம் செய்ததாகச் சொல்ல வரவில்லை. பல இடங்களில் போலீஸார் மிக சாமர்த்தியமாகச் சமாளித்ததன் காரணமாக கலவரம் எதுவும் ஏற்பட இடம் இல்லாமல் போயிற்று என்று சொல்லலாம். கலவரங்கள் எப்படி ஏற்படுகின்றன என்று பன்னெடுங்காலமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தூண்டி விட்டு அல்லது திட்டம் போட்டு அல்ல கலவரம் நடைபெறுவது. அடக்குமுறைகளின் விளைவாக நடைபெறவில்லை என்று சொல்வதற்கில்லை. ஆரம்ப

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [8th March 1965

காலத்திலிருந்து கலவரம் எப்படி ஏற்படுகிறது என்பது எல்லோர்க்கும் தெரியும். 1942-ம் ஆண்டு ஆகஸ்ட் புரட்சியின்போதும் சரி, அதற்கு முந்திய காங்கிரஸ் போராட்டங்களிலும் சரி, பல இடங்களில் பலாத்கார, வன்முறைச் செயல்கள் ஏற்பட்டிருக்கின்றன. தண்டவாளங்கள் பெயர்த்து எறியப்பட்டிருக்கின்றன. தபால் ஆஃபீஸ்கள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. கச்சேரிகள் தாக்கப்பட்டிருக்கின்றன. கச்சேரி ரெக்கார்டுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. அதிகாரிகள் எரிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்போதெல்லாம் அண்ணல் காந்தியார் போன்றவர்கள் உட்கார்ந்து திட்டம் தீட்டி அதெல்லாம் நடந்தது என்று குற்றம் சொல்ல முடியுமா? அதை ஏற்றுக்கொள்ளத்தான் காங்கிரஸ்காரர்கள் தயாராக இருக்கிறார்களா? திட்டம் போட்டு அதன்பிறகுதான் அதெல்லாம் நடைபெற்றது என்று சொல்ல முடியுமா? மக்கள் கூட்டம் கூடுகிற நேரத்தில் அவர்களைத் துன்புறுத்துகிற முறையில் நிகழ்ச்சிகள் ஏற்படுமானால், அவர்களுக்கு அருவருப்பை ஏற்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகள் ஏற்படுமானால், அவர்கள் வெறுப்பு அடையக் கூடிய நிகழ்ச்சிகள் ஏற்படுமானால், உடனே கலகம் மூளுகிறது. கலவர நிகழ்ச்சிகளை ஆரம்ப காலத்திலிருந்து நாம் அறிவோம். கலவரங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏற்படுகின்றன என்பதை போராட்டங்களைப் பார்த்துப் பார்த்துப் பழகப்பட்ட நாடு நன்கு அறியும். 1908-ம் ஆண்டில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று மக்கள் மனப்பான்மை எப்படிக் கலகம் செய்யும் தன்மையில் மாறுகின்றன என்பதைத் தெளிவு படச் சுட்டிக் காட்டுகிறது. அரசினர் வெளியிட்டிருக்கிற 'ஹிஸ்டரி ஆஃப் தி மெட்ராஸ் போலீஸ்' என்ற புத்தகத்தில் எப்படி எப்படி பொது மக்களுடைய மனப்பான்மை மாறக் கூடிய முறையில் அமைந்திருக்கிறது என்று 1908-ம் ஆண்டில் அதிலே வரக்கூடிய ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அப்போது விடுதலைப் போராட்டத்தில் வ.உ.சி. அவர்கள் கலந்துகொண்டார்கள். அவர்களோடு அந்தப் போராட்டத்திலே சுப்பிரமணிய சிவா அவர்களும் ஈடுபட்டார். அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்த போது மக்கள் மன நிலை எப்படி இருந்தது என்பதைப் பற்றி தெரிவிக்க விரும்புகிறேன். இந்தப் புத்தகத்தில்சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால்:

'Security proceedings were instituted against them which was an occasion for mass disturbances. On 13th March 1908, at Tuticorin, Mr. Ashe, the Divisional Magistrate and the police were assaulted by a mob which did not disperse until the use of fire-arms; in Tirunelveli the mob proceeded from Viraraghavapuram to the bazaar compelling the shopmen to close their shops and assaulting two Europeans on the way. They also invaded the C. M. S. College and the District Munsif's Court, which they forced the Munsif to close, burnt the Police station, the municipal office, a kerosene godown and a portion of the post-office and destroyed some furniture in the hospital. The District Magistrate, Mr. Wynch and the Superintendent of Police, Mr. Sweeting, who arrived on the scene with a police force were hemmed in and assaulted. The police had to open fire to quell the disturbance.

8th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

On the following day the people of Thachanallur Union, a suburb of Tirunelveli, rose and destroyed public property but dispersed before the police arrived. '

என்பதாகும். 1908-வது ஆண்டிலேயே, தலைவர்கள் கைது செய்யப் படுகிற நிலைமை ஏற்படும் போது மக்கள் எந்த அளவுக்கு கிளர்ச்சி களிலும் கலவரங்களிலும் ஈடுபடுகிறார்கள் என்பதை இதிலிருந்து நன்றாக அறியலாம். போராட்டங்கள் துவங்குகிற நேரத்தில் போலீ ஸாரின் அடக்கு முறைகள் மக்களுக்கு ஆத்திரமூட்டுவதாக இருக்குமானால் அதன் விளைவாக ஏற்படுகிற நிலைமைகள் அர சினரோ, மற்றவர்களோ, அல்லது கூட்டம் கூட்டியவர்களோ நினைக்காத அளவில் நடந்து விடுகின்றன. அப்படிப்பட்ட கட்டுக் கடங்காத நிலைமை கள்ளுக்கடை மறியல் போராட்டத்திலும், உப்புச் சத்தியாகிரகத்திலும், ஆகஸ்ட் புரட்சியிலும் ஏற் பட்டது. அச்சம் தரக்கூடிய கலவரங்கள் எங்கு பார்த்தாலும் நிகழ்ந்திருக்கின்றன. இதையெல்லாம் மாபெரும் காங்கிரஸ் தலை வர்கள் உட்கார்ந்து திட்டம் தீட்டியது என்று முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? 25-ம் நாள் நடைபெற்ற நிகழ்சி களைப் பொறுத்த வரையிலும் எல்லா இடங்களிலும் மாணவர்கள் அமைதியாகத்தான் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் ஆகிய வற்றை நடத்தியிருக்கிறார்கள். போலீஸார் தங்கள் நடமையைத் திறம்படச் செய்திருப்பார்களானால் பல இடங்களில், நிகழ்ச்சிகள் அமைதியாகவே நடந்து முடிந்திருக்கும். சில இடங்களில் அந்த மாதிரி அமைதியாக நடந்தும் இருக்கிறது. இத்தகைய நேரத்தில் மதுரை பற்றிய பயங்கர நிகழ்ச்சி செய்தித்தாள்களில் வந்தது. அந்த நிகழ்ச்சியின் தொடர்பாக வேறோர் நிகழ்ச்சி, அந்த நிகழ்ச்சி யின் தொடர்பாக மற்றொரு நிகழ்ச்சி என்ற முறையில் 13-ம் நாள் வரையில் நடைபெற்றிருப்பதை நிலைமையைச் சரியாக உணர்ந்த வர்கள் ஒப்புக்கொள்வார்கள். 25-ம் நாள் மதுரையில் ஊர்வலம் அமைதியாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தி எதிர்ப்பு முழக்கங்களை கிளப்பிக்கொண்டு மாணவர்கள் சென் றிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி அலுவலகத்தின் முன்பு ஊர்வலம் வந்தபோது, சில காங்கிரஸ்காரர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித் திருக்கிறார்கள். அதற்குப் பிறகு இரண்டு சாராருக்கிடையேயும் முழக்கங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்போது காங்கிரஸ் கட்சி அலுவலகத்திலிருந்து சிலர் கையில் அரிவாள் களுடன் வந்து மாணவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். இரு பக்கமும் சிதறியிருந்த மாணவர்கள் ஒன்று கூடி சினம் கொண்டு அவர்களைத் தாக்கியதாகவும், அதன் பிறகு காங்கிரஸ் கட்சி அலுவ லகத்தை நாசப்படுத்தும் வேலையில் ஈடுபட்டதாகவும் சொல்லப் பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில், ஊர்வலம் வந்தது, காங்கிரஸ்காரர்களுக்கும் அவர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, மக்களுக்கு ஏற்பட்ட காயங்களைப் பற்றியோ, மாணவர் களுக்கு ஏற்பட்ட காயங்களைப் பற்றியோ சொல்லவில்லை. போலீ ஸாருக்கு ஏற்பட்ட காயங்களைப் பற்றி மட்டும் சொல்லியிருக் கிறார். அவர் நடைபெற்றதை முழுமையாகத் தெளிவாக எடுத்துச் சொல்லவில்லை. அந்த நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்லும்போது

என்ன நடந்தது என்பதைப் பற்றி முதலமைச்சர் தெளிவாகச் சொல்லவில்லை. அங்கு இருக்கிற பத்திரிக்கைக்கு கலெக்டர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதைக் கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய பார்வைக்குக் கொண்டுவருகிறேன். செய்தித்தாளில் வெளிவந்த செய்தி--

'The trouble started when the student processionists, it is alleged, were attacked with aruvals, sticks and brickbats by Hindi protagonists in front of the office of the Congress Committee.'

என்பதாகும்.

மதுரை கலெக்டர் அவர்கள் வெளியிட்டிருக்கிற அறிக்கை பற்றிய செய்தியும் செய்தித்தாள்களில் வெளி வந்தது.

"Mr. Seshan said that as the procession of students from Tilak Square reached the North Masi street, the processionists shouted anti-Hindi slogans and some persons shouted counter slogans. The procession was stopped and some of the students were attacked by some persons who came from the Congress Committee Office."

என்று தெரிவித்திருக்கிறார்கள். காங்கிரஸ் கமிட்டி ஆபீஸுக்கு முன்னர் கூட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. வந்துகொண்டிருந்த மாணவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இந்தக் கலவரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தச் செய்தி மாணவர்களிடையே எங்கு பார்த்தாலும் பரவிற்று. அதனுடைய விளைவுதான் 26, 27-ஆம் நாட்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகள், கலவரங்கள் ஆகும். கலவர நிகழ்ச்சிகளைப் பற்றிப் பல உறுப்பினர்கள் விரிவாக தெரிவித்தார்கள். நேரம் இல்லாத காரணத்தினாலே திரும்பவும் அவைகளைப் பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. கனம் முதல் அமைச்சர் அவர்களும், திரு. காமராஜ் அவர்களும், மற்றும் பல காங்கிரஸ் தலைவர்களும், 26-ம் தேதி நிகழ்ச்சியைப் பற்றிய நோக்கத்தை தொடர்ந்து நாங்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், பலாத்கார செயல்கள் நடைபெறுவதற்கு ஆதரவாக இருக்கும் வகையில்தான் அவர்கள் பேசித் தீர்த்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலே, குறிப்பிட்டவர்கள் முன்கூட்டியே கைது செய்யப்பட்டால், அந்த கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றதாகக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். 100 இடங்களில் நடத்துவதாக இருந்த கூட்டங்களை; ஒரு இடத்தில் நடத்த நாங்கள் ஏற்பாடு செய்தோம். சென்னை கமிஷனர் அவர்கள் பொது இடத்திலே கறுப்புக் கொடி கட்டினால் கலவரம் ஏற்படலாம், போலீஸ்காரர்களே அந்தக் கொடிகளை அவிழ்த்துவிடுவார்கள், காங்கிரஸ்காரர்கள் அவிழ்க்கவேண்டியதில்லை, அவிழ்க்கவேண்டிய அவசியம் இல்லை என்று அறிக்கை விடுத்திருக்கிறார்கள். வீடுகளில் வேண்டுமானாலும் கறுப்புக் கொடியை ஏற்றிக் கொள்ளட்டும், தனியிடங்களில் கட்டிக்கொள்ளட்டும்; பொது இடங்களில் வைக்கக்கூடாது என்று போலீஸ் கமிஷனரே அறிக்கை விடுத்தார். 23, 24-ம் நாட்களில் கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டிருக்கிற அறிக்கையில், பொது இடங்களில் கறுப்புக் கொடி கட்டாதீர்கள்; கட்டின

8th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கொடியை போலீஸார் அவிழ்த்தாலும் அதற்காக ஆத்திரப்படாதீர்கள், அவிழ்த்து விட்டுப் போனால் போகட்டும் என்ற முறையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கறுப்புக் கொடியைக் கிழித்து எறிவோம், கொடியை அகற்றுவோம், கொடிகட்டும் கையை வெட்டுவோம் என்று காங்கிரஸ்காரர்கள் திட்டமிட்டுச் செயல்கள் புரிந்தார்கள். கழகக் கட்டிடங்களும், கழகத்தினர்களின் வீடுகளும்; தாக்கப்பட்டிருக்கின்றன. பல கறுப்புக் கொடிகள் இறக்கப்பட்டு கொளுத்தப்பட்டிருக்கின்றன. கழகத்தைச் சேர்ந்த மேல்சபை உறுப்பினர் திரு. என். வி. நடராஜன் அவர்கள் வீட்டில் காங்கிரஸ்காரர்களால் கறுப்புக் கொடிக்கு தீ வைக்கப்பட்டு கொளுத்தப்பட்டிருக்கிறது. அறிஞர் அண்ணா வீட்டில் கறுப்புக் கொடி இறக்கப்பட்டு கொளுத்தப்பட்டிருக்கிறது. மன்றத்தின் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. கருணாநிதி அவர்களின் வீட்டில் கொடி இறக்கப்பட்டு; கொளுத்தப்பட்டிருக்கிறது. பல இடங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. தென்காசியில் கழகத்தின் அலுவலகம், தாக்கப்பட்டிருக்கிறது மதுரையில் கழகக் கட்டடத்தின் உள்ளே நுழைந்து மேஜை; நாற்காலிகள்; மற்றவைகள் எடுக்கப்பட்டு வெளியே வாசலில் வீசி எறியப்பட்டிருக்கின்றன. மேலக் கோபுர வாசல் தெருவில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இப்படிப்பட்ட பலாத்கார நிகழ்ச்சிகளில் எத்தனையோ காங்கிரஸ்காரர்கள் பல இடங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். பலாத்காரத்தைத் தூண்டிவிடுகிற வகையில் பெரியார் ராமசாமி அவர்கள் அறிக்கை ஒன்று வெளியிட்டார்கள். அவர்கள் மீது அரசாங்கம் இதுவரையில் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. கோவையில் கழகத்தோழருக்குச் சொந்தமான ரிக்ஷா வண்டி கொளுத்தப்பட்டு சாம்பலாக்கப்பட்டிருக்கிறது. கழகத்தைச் சேர்ந்த சிதம்பரம் அவர்களின் வீட்டில் தாக்குதல் நடத்தப்பட்டுக் கதவு உடைக்கப்பட்டு; அப்புறப்படுத்தப்பட்டுச் சாமான்கள் பல எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இப்படி பல கழகத்தோழர்களின் வீடுகளிலும், பணிமனைகளிலும், படிப்பகங்களிலும் பலாத்கார நிகழ்ச்சிகள் காங்கிரசுக்காரர்களால் நடத்தப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் இப்பொழுது விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துச் சொல்ல நேரம் இல்லாததால், பின்னால் மான்யக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வருகிறபொழுது அவற்றைச் சொல்லிக்கொள்ளலாம் என்று கருதி, அவற்றை முழுவதும் சொல்லாமல் விடுகிறேன்.

பலாத்கார நிகழ்ச்சிகளுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தான் காரணம் என்று சொல்வதற்கு எந்த அடிப்படை உண்மையும் இல்லை. பலாத்கார நிகழ்ச்சி கூடாது என்பதைக் கண்டித்து கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் தொடர்ந்து அறிக்கைகள் பல விட்டு வந்திருக்கிறார்கள். அப்படியிருக்கும் பொழுது, திரும்பத் திரும்ப திராவிட முன்னேற்றக் கழகம்தான் இந்த கலவரங்களுக்குக் காரணம் என்று சொல்லுகிறார்கள் என்றால், அதன் விளக்கம் புரியவில்லை. எங்களுடைய வாதங்களுக்குக் கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் தீர்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்க்கும் நிலைமையில் இங்கே அவர்கள் பேச்சும், போக்கும் அமையவில்லை. அவர்கள் எங்கள்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [8th March 1965

மீது வீணான குற்றங்களைச் சாட்டுகிறார். இருக்கிற உண்மை நிலைமைகளை நாங்கள் சொல்கிறோம். மக்கள் மன்றம் இதற்கு உறுதியான தீர்ப்பு அளிக்கப்போகிறது என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஏற்பட்ட நிகழ்ச்சிகள் அத்தனையும் பரிசிலனை செய்து பார்க்க ஒரு கமிஷன் அமைத்தால், உண்மை நிலை தெளிவு படக்கூடும். இப்பொழுது கூட உண்மை நிலைகளை உணர்த்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த அமைச்சர் அவை தயங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு சில கட்சிகளின் தூண்டுதலின் பேரில் தான் இவ்வளவு கலவரங்களும் ஏற்பட்டன என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். வட நாட்டில் இருக்கிற, இந்தியப் பேரரசில் இருக்கிற அமைச்சர்களும் அதைத் தான் திரும்பத்திரும்பச் சொல்லுகிறார்கள்.

இங்கே மக்கள் இந்தியை எதிர்க்கவில்லை, இந்தி ஆட்சி மொழியாவதை தேசிய மொழியாவதை அவர்கள் மறுக்கவில்லை; ஆனால் கட்டாயமாக திணிக்கப்படுவதைத்தான் விரைவாக திணிக்கப்படுவதைத் தான் எதிர்க்கிறார்கள் என்ற அளவிலே இங்கிருந்து கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால்; இந்த நாட்டு மக்கள் ஒரு தகுதியற்ற, ஒரு பயனற்ற, எந்த வகையிலும் பயன் படாத, நம் நேரத்தையும்; நினைப்பையும்; உழைப்பையும்; அறிவையும், ஆற்றலையும் பாழ்படுத்துகிற அளவுக்கு இருக்கிற ஒரு மொழியை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை என்ற அடிப்படை கருத்தை முதலில் அரசு உணர வேண்டும். இந்தக் கருத்து ஆந்திரா, கருநாடகம்; கேரளம்; அஸ்ஸாம்; வங்காளம் முதலிய இடங்களிலும் பரவி இருக்கிறது. இந்த அடிப்படை எண்ணத்தை அறிந்து, அதற்கு மதிப்பு அளிக்கின்ற நடவடிக்கைகள் எடுக்காத வரையில் சிக்கல் தீராது. இந்த நிகழ்ச்சிகளை யாரோ தூண்டி விட்டார்கள், அதன் காரணமாகத் தான் நடைபெற்றன என்று இந்த அரசு எண்ணினால், அது தன் போக்கிலே தவற்றை மேற்கொண்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். நல்லதொரு விளைவை எதிர்பார்க்க முடியாத நிலைமை நீடித்துக்கொண்டிருக்கிறது. இவ்வளவுக்கும் காரணம் அரசாங்கத்தின் போக்குத்தான். முதலமைச்சர் பேச்சும் போலீசாரின் அடக்கு முறையுந்தான் கலவரங்களுக்கு வித்திட்டன. அடக்குமுறைத் தாக்குதல் மூலம் ஏற்பட்ட உணர்ச்சியினால், கலவர நிகழ்ச்சிகள் ஆங்காங்கு ஏற்பட்டன. ஒன்றை ஒன்று பற்றிச் சென்றது. பல இடங்களில் மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள், ஆசிரியர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். விடுதிகளுக்குள் நுழைந்து மாணவர்களைப் போலீசார் தாக்கியிருக்கின்றனர். பொது மக்களும் தாக்கப்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஏற்பட்ட ஆத்திர உணர்ச்சி மாணவர்களைக் கலவர நிலைக்கு கொண்டு வந்து சேர்த்தது. ஆங்காங்கு ஏற்பட்ட நிகழ்ச்சிகளின்போது, எங்கெங்கே சாமர்த்தியமாக, அமைதியாக, திறமையாக, நிலைமைகளை போலீஸ் அதிகாரிகள் சமாளித்தார்களோ அங்கேயெல்லாம் நிலைமைகள் கட்டுக்கு அடங்கின. எங்கே அத்துமீறிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்களோ, அந்த இடங்களில் கோர நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. இதற்கு என்று ஒரு கமிஷன், நீதிபதிகளைக் கொண்ட கமிஷன், அமைத்தால், கலவர நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அடிப்

8th March 1965] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

படைக் காரணம் என்ன, யார்யார் ஈடுபட்டார்கள் என்பதைப் பற்றி அவர்கள் ஆராய்ந்து கூறக்கூடும்.

இம்மாதிரி கலவர நிகழ்ச்சிகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதை வன்மையாகக் கண்டித்தே வருகிறது. கலவரத்திற்குக் காரணமாக இருப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களை தண்டியுங்கள் என்று தான் எங்கள் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் பலரும் தெரிவித்திருக்கிறார்கள். நானும் அதைத் தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு கட்சியினர் மட்டும்தான் தவறு செய்தார்கள் என்று எண்ணிக் கொண்டு, நிரபராதிகளாக இருப்பவர்கள் மீது வழக்கு தொடுத்து தண்டனை வாங்கிக் கொடுக்க அரசு முனைகிறது. தி.மு. கழகத்தார் மீது வழக்குகள் தொடர்ந்துள்ளார்கள் அரசினர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களை முழுக்க முழுக்க விட்டு விட்டிருக்கின்றனர். முதல் அமைச்சர் அவர்கள் தமது விருப்பு; வெறுப்பையே சட்டமாக ஆக்கிக்கொண்டு ஆளுகிறார். ஆனால், இந்த கலவரத்தைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும் சரி, இந்த நாசகாரியத்தைச் செய்தவர்கள் எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு என்ன தண்டனை வேண்டுமானால் கொடுக்கட்டும். அதனை நாங்கள் தடுக்கவில்லை. அவர்களிடையே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் யாராவது இருப்பார்களேயானால், அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள கழகம் காத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், யார் என்று பார்க்காமல், கலவரம் செய்தவர்களைத் தான் தண்டிக்கவேண்டும். இந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, நிரபராதிகளை பழி வாங்கும் நோக்கத்தோடு, தி.மு. கழகத்தாரைக் கைது செய்வதும் அவர்கள் மீது வழக்குத் தொடர்வதும், இன்னும் பல தொல்லைகளுக்கு அவர்களை உள்ளாக்குவதும், ஆகிய பணிகளை இந்த அரசு தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறது. நீதியை நேர்மையுடன் நிலைநாட்டுகிற போக்கு இந்த அரசினிடத்தில் இல்லை. நாங்கள் எவ்வாறு அமைதியாக நடந்துகொள்கிறோம், நாங்கள் எப்படிப் பட்ட எண்ணத்தைக் கொண்டிருக்கிறோம், எங்கள் தலைவர்கள் தொடர்ந்து என்ன கருத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது சி.ஐ.டி. ரிப்போர்ட்டிலிருந்து அரசினருக்குத் தெளிவாக விளங்கும் என்று கருதுகிறேன். வன்முறைச் செயல்களை என்றும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரித்தது இல்லை. வன்முறைகளில் ஏற்படுகின்ற நஷ்டம் நாட்டிற்கு ஏற்படுகிற நஷ்டம் என்பதைக் கழகம் நன்கு உணர்ந்து இருக்கிறது. அதன் மூலம் ஏற்படக்கூடிய சேதங்கள் நாட்டு மக்களை பாதிக்கக்கூடியவை என்பதை கழகம் என்றும் உணர்ந்து தான் வருகிறது. அறக்கிளர்ச்சி மூலம், தங்களைத் தாங்களே வருத்திக்கொள்கிற போராட்டங்களில்தான் இதுவரையில் கழகம் ஈடுபட்டு வந்திருக்கிறது. வன்முறைகள் எதையும் எந்த வகையிலும் திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டியதில்லை, ஆதரித்ததில்லை, வளர்த்ததில்லை.

பிறர் பேரில் வீண் பழி போடுவதன் மூலம் இந்தப் பிரச்னைக்கு இந்த அரசு பரிகாரம் தேட முடியாது. அடிப்படையான மொழி உணர்ச்சிக்கு இந்த அரசு முதலில் மதிப்பு அளிக்க வேண்டும்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [8th March 1965

என்ன இருந்தாலும் தமிழ் தான் இந்த மாநிலத்தின் ஆட்சி மொழியாகவும், மத்திய ஆட்சிமொழிகளில் ஒன்றாகவும் ஆகுதல் வேண்டும். அது பாதிக்கப்படுகிற எந்த நிலைமையையும் இந்த நாடு ஏற்றுக்கொள்ளாது. அத்தகைய உணர்ச்சி நாளுக்கு நாள் வளருமே தவிர, அது வீழாது என்பதை கனம் முதல் அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் உணர வேண்டும். இந்தியாவில் உள்ள 14 மொழிகளுக்கும் ஆட்சிமொழித் தகுதி வேண்டும். இந்தியாவில் தகுதியற்ற ஒரு மொழிக்குக் கொடுக்கப்படுகிற தகுதியையும், சிறப்பையும் மற்ற மொழிகளும் பெறவேண்டும். இந்தக் கருத்து தமிழகத்தில் மட்டும் அல்ல, ஆந்திரம், கேரளம், கன்னடம், அஸ்ஸாம், வங்காளம் ஆகிய இடங்களிலும் நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்துகொண்டு வருகிறது---வீழ்கிற அளவுக்கு இல்லை. ஆகவே, பரிகாரம் தேடுவது என்ருல், வட்டார மொழிக்கு மதிப்பு கொடுக்கக்கூடிய அளவுக்கு ஊக்கம் கொடுக்கக்கூடிய அளவுக்கு, வாய்ப்புக்களை வகுத்துத் தந்து, எல்லா மொழிகளுக்கும் பெருமை தேடித் தருகின்ற திட்டங்களை எடுத்துக் கொண்டால் தான் அமைதியான சூழ்நிலையும், ஏற்றமும் எதிர்காலத்தில் ஏற்படும். அப்படிக்கில்லாமல், அதை மறுப்பார்களேயானுல், அதன் விளைவிளுல் குழப்ப நிலைமை தான் தொடர்ந்து இருந்துகொண்டு இருக்கும்.

12-30 p.m. இந்தியாவின் தலைமை அமைச்சர் சொல்லியிருப்பது போன்று, சூழ்நிலைகளை ஆராய ஒரு கமிஷன் அமைக்க வேண்டும். அப்படி ஒரு குழு அமைக்கப்படக்கூடும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிருர்கள். அதை நாங்களும் வரவேற்றுப் பேசியும் எழுதியும் இருக்கிறோம். அப்படி ஒரு கமிஷனை அமைத்து இந்தப் பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் என்ன என்று ஆய்ந்து, அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும், இப்படிப் பட்ட கலவரம் ஏற்படாமல் தடுக்கத் தக்க முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் அரசாங்கத்தையும், அமைச்சரவையையும் கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் சினத்தோடும், சீற்றத்தோடும் மாணவர்களிடமும், மற்றவர்களிடமும் நடந்து கொண்ட காரணத்தால்தான் நிலைமைகள் மோசமாகப் போயின. எதிர்க்கட்சிக்காரர்கள் அத்தனைபேர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று, நிலைமையைச் சமாளித்திருக்க முடியும் என்பதனை அழுத்தம் திருத்தமாகச் சொல்ல முடியும். முதலமைச்சர் அவர்களுடைய பேச்சும், போக்கும், அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளும், போலீசார் அத்துமீறிச் செய்த அடக்குமுறைச் செயல்களும்தான் இந்த நிலைமைகளுக்குக் காரணமாக அமைந்தன. எனக்கு முன் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள், கனம் முதல் அமைச்சர் ராஜினுமா செய்ய வேண்டும் என்று சொன்னுல், உடனே எதிர்க் கட்சி அங்கே வந்து உட்காரந்து விட வேண்டும் என்பதல்ல நோக்கம். இந்தப் பிரச்னைக்கு இருக்கும் முக்கியத்துவத்தைத் தெரிவிக்கவேதான் அப்படிச் சொல்லப்பட்டது. இந்திய அரசில் இரு அமைச்சர்கள் ராஜினுமா செய்ததன் காரணமாகத்தான் இந்த பிரச்சினையின் முக்கியத்துவம் உலகத்திற்கு ஓரளவு தெரிந்தது. இந்த மாநிலத்தின் எண்ணத்தைத் தெரிவிக்கும் வகையில் இந்த அரசு எந்த

8th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. இந்திய அரசினரின் போக்கில் நம்பிக்கை தமிழர்களுக்கு ஏற்படவில்லை. இந்திய அரசினருக்கு இந்த மாநில மக்களுடைய விருப்பத்தை உணர்த் தும் வகையில்; இந்த பிரச்னைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் ராஜினமா செய்து அதை நிலை நாட்டி இருந்தால்; நிலை மைகள் வேறுவிதமாக இருந்திருக்கும். சுலபமாகவும்; எளிதாகவும் முடிந்திருக்கக்கூடும். அதை அவர்கள் செய்திருப்பார்களேயா னல், அது அதிர்ச்சி வைத்தியமாக இருந்திருக்கும். அதற்கு பதவியைவிட மனமில்லாமலே அமைச்சர்கள் இருந்து வரு கின்றனர். மாருக முதல் அமைச்சருடைய போக்கும். பேச்சும் போலீசாருடைய அத்துமீறிய நடவடிக்கைகளும்தான் இத் தனைக்கும் காரணம். திராவிட முன்னேற்றக் கழகம் அமைதியைக் காக்க என்றைக்கும் தயாராக இருந்து வந்திருக்கிறது. இனியும் இருந்து வரும்.

இன்று அமைதியைக் காக்க ஊர் ஊராக அமைதிக் குழுக்கள் அமைக்கவேண்டும். அவற்றில் அதிகாரிகள் இடம் பெற, மற்ற அரசியல் தலைவர்கள் பொது மக்கள் இடம் பெற, வழி செய்ய வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் அந்த ஏற்பாட்டிற்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறது. கலவர உணர்ச்சியைத் தூண்டுவதற்கு கழகம் எதுவும் செய்யவில்லை. அந்த எண்ணமும் அறவே இல்லை என்பதை வலி யுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனல் இந்த மன்றத்திலே தெரிவிக்கப்பட்ட எங்கள் கருத்துக்களுக்கு இன்றை க்கு இல்லாவிட்டாலும், எதிர்காலத்தில் மிக்க வலிவு ஏற்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அந்த எங்கள் நம்பிக்கை உணர்ச்சி இன்று அரசினரால் புறக்கணிக்கப்படலாம். இன்று தவறினலும் என்ருவது ஒரு நாள் அந்த உணர்ச்சி வெற்றி பெறும், வெற்றி பெற்றே தீரும். அந்த உணர்ச்சிக்கு இருக்கும் வலிவு தான், கழகத்தை வளர்த்து வருகிறது. இந்த மொழிப் பிரச்னையில் மாணவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து செய்யக் காரண மாக இருந்தது தாய் மொழிப்பற்றும் தாய் நாட்டுப் பற்று மாகும். எந்தக் கட்சியினுடையவும் தூண்டுதலால் மாணவர்கள் இம்மாதிரி நடந்து கொண்டுவிடவில்லை. மொழியுணர்ச்சித்தான் அவர்களைத் தூண்டிற்று. கழகத்தின் ஆட்சி மொழிக் கொள்கை க்கு வலிவு இருக்கிறது, எங்கள் முயற்சி வீண் போகாது, அந்தக் கருத்து, வெற்றி பெற்றே தீரும் என்று சொல்லி, மற்ற கருத் துக்களை மானியக் கோரிக்கைகள் வரும்போது சொல்லிக்கொள்ளு கிறேன் என்று கூறி, இந்த அளவிலே முடிக்கிறேன். வணக்கம்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த வரவு செலவு திட்டத்திலே, மூன்ருவது ஐந் தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டு முடிவுக்கு வந்திருக்கிறது. அதற்குரிய வகையிலே, கோரிக்கைகள், மானியங்கள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றன. அதிலே இந்த திட்டம் எந்த வகையிலே நிறை வேற்றப்படுகிறது, மேலும் எப்படி நிறைவேற்றுகிரேம் என்று சொல்லி, மூன்ருவது திட்டம், குறிப்பிட்ட லட்சியத்திற்கு மேலும் நாம் திட்டங்களை எப்படி எப்படி நிறைவேற்றி வரு

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1965

கிறோம் என்பதையெல்லாம் இந்த வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பித்து பேச்சிலே நான் தெளிவாக்கியிருக்கிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்திலே வரி போடவில்லை என்று நாங்கள் பெருமை பேசிக்கொள்ளவில்லை. அதற்குப் பாராட்டுதலையும் கோரவில்லை. இருக்கிற நிலையிலே எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்திருக்கிறோம். 'போடப்பட்ட வரிகள் அதிகமாகி விட்டன, ஆகவேதான் வரி போடப்படவில்லை. எனவே, வரி போடவில்லை என்று பெருமை பேசிக் கொள்வது சரியில்லை' என்று அறிக்கை பற்றிப்பேசிய கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். வரி போடுவது என்றால், தாங்கக் கூடியவர்கள் மேல் தான் போடுகிறோம். அது தான் 'ஸோஷலிசம்'. வரி போடுவதால் தாங்க முடியாதவர்கள், ஒருக்காலும் அவதிப்படக் கூடாது. தாங்கக் கூடியவர்கள் மீது போடவேண்டும். வரிபோடும் பிரச்சினையில் நாம் அனுசரிக்க வேண்டிய கொள்கையில் அது ஒன்று. இரண்டாவதாக, அதற்கு அவசியம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டாமா? இன்றைக்கு மக்களுடைய வருமானம் பெருகிக்கொண்டு தான் வருகிறது; வசதிகள் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றன. அதை யாரும் மறுக்க முடியாது. அந்த வகையில் இன்றைக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறி வருகிறது. அதோடு தீர்ந்து விடவில்லை. நான்காவது ஐந்தாண்டு திட்டம் தயாராகி வருகிறது என்றும் என் பேச்சில் குறிப்பிட்டிருக்கிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இப்பொழுது தயாராக்கப்பட்டு வருகிறது. முடிவாக தயாரிக்கப்படவில்லை. இன்னும் திட்டக் குழு கூட அதைப் பற்றி மேலும் பல குழுக்கள் அமைத்து அதை அந்தந்த மாநிலப் பிரதிநிதிகளோடு ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கென்று குழு ஏற்படுத்தியிருக்கிறார்கள். வருவாய்க்கென்று ஒரு முக்கியமான குழு அமைத்திருக்கிறார்கள். மின்சாரத்திற்கு ஒரு குழு, வைத்திய வசதிகளுக்கென்று ஒரு குழு, படிப்பு வசதிகள், வீட்டு வசதிகள் குழு என்றெல்லாம் வைத்திருக்கிறார்கள். அந்தக் குழுக்களெல்லாம் தங்கள் பரிசீலனைகளை இன்னும் முடிக்கவில்லை. மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக, வருவாய்க் குழு மிக முக்கியமானது. எவ்வளவு வருவாய் வருகிறது, வேண்டியது எவ்வளவு, எவ்வளவு தூரம் எதிர்பார்க்கலாம் என்பதையெல்லாம் பரிசீலனை செய்யக் கூடிய குழு அது. அது இன்னும் தன்னுடைய பரிசீலனையை முடிக்கவில்லை. அவர்கள் பரிசீலனையை முடிக்க இன்னும் ஒரு மாதகாலத்திற்கு மேல் ஆகும். பொதுவாக நாம் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எவ்வளவு தூரம் செய்திருக்கிறோமோ, அதற்கு இரட்டிப்பாக நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையோடு இந்தத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறோம். சட்ட மன்ற அங்கத்தினர்கள் முன்பே குறிப்பிட்டிருந்தார்கள், கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். நான்காவது திட்டம் பற்றி அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பம் வேண்டும் என்று அங்கத்தினர்கள் கேட்டார்கள். இப்பொழுது பொதுவான கருத்துக்களைத் தெரிவிக்கலாம். பின்னால் குறிப்பாக எந்த திட்டத்தைக் குறித்தும் கருத்துக்களைத்

8th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

தெரிவிக்க ஒரு சந்தர்ப்பம் அளிக்கக்கூடும் என்று நினைக்கிறேன். ஆனால் இப்பொழுது வரவு-செலவுத் திட்டத்திலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி, பொதுவாக கருத்துக்களையும், யோசனைகளையும் கூற எங்களுக்கெல்லாம் சந்தர்ப்பம் கொடுத்து இந்த அறிக்கையிலேயே அதைக் குறிப்பிடவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அதைப்பற்றி கருத்துக்கள் தெரிவிக்க இப்பொழுதே சந்தர்ப்பம் இருக்கவேண்டும் என்று அதைப் பற்றியும் என் பேச்சில் குறிப்பிட்டிருக்கிறேன். விவசாய உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்பதுதான் எல்லோருடைய கருத்தும், கவனமும். ஆகவே, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே விவசாயத்திற்கு, உணவு உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன். இதிலே விலைக் கட்டுப்பாடு ஒன்று. எவ்வளவு தான் உற்பத்தி பெருகினாலும், விலை ஏறிக்கொண்டே போகும் வகையில் நிலைமைகள் இருக்குமானால், அதைக் குறித்து மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் கலந்து ஆலோசித்து, விலையைக் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுப்பாடு இருக்கிறது. வேறு கட்டுப்பாடு இல்லை. விலை ஓரளவுக்கு மேல் இருக்கக் கூடாது. விவசாயிகளுக்கும், வாங்கிச் சாப்பிடுகிறவர் களுக்கும் நியாயமான விலை இருக்கவேண்டும். நடுவில் இருக்கிற வர்கள் விவசாயிகளையோ, வாங்கிச் சாப்பிடுகிறவர்களையோ சுரண்டிச் சாப்பிடக் கூடாது. ஆகவே, இவற்றையெல்லாம் கட்டுப்படுத்த திட்டங்கள் அனுசரிக்கப்பட வேண்டியிருக்கிறது, என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். தங்களுடைய தேவைக்குப் போக மிச்சம் இருப்பதை விற்கவேண்டும் அதை அரசாங்கமே வாங்கும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். ஏனென்றால், தனிப்பட்ட வியாபாரத்தில் அனுபவம் இருக்கிறது. தனிப்பட்ட வியாபாரிகள் கட்டுப்பாடு விலைக்கு ஒத்துக்கொள்ள வில்லை. ஸ்தம்பிதமான நிலைமைதான் ஏற்பட்டது. அதைச் சமாளிக்க வேண்டியிருந்தது. ஆகையினால் எவ்வளவு தூரம் உற்பத்தியாளர்களுக்கு கட்டுபடியாகும் என்று பார்த்துக் கட்டு பாடான விலை நிர்ணயித்து, அந்த விலைக்கு வாங்கி அங்கங்கே விநியோகிப்பதுதான் நல்ல முறை என்று அந்த வகையில் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரியிலிருந்து ஒரு கனம் அங்கத்தினர் கூறினார்கள், எங்களை சும்மா விட்டு விடுங்கள் என்று. அது பொறுப்புள்ள பேச்சல்ல. ஆனாலும், கன்யாகுமரியிலிருந்து வரும் மற்ற அங்கத் தினர்களைக் கேட்டேன்: இந்த அங்கத்தினர் சொல்வதை மற்றவர் களும் ஏற்றுக் கொள்வார்கள் என்றால் நானும் அரசாங்கமும் ஏற்றுக் கொள்ளலாம் என்று நான் அவர்களைக் கேட்டேன். ஆனால் அவர்கள் அது சரியில்லை என்று உடனடியாக மறுத்து விட்டார் கள். ஏனென்றால், கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் அளவுக்கும் மேலாக, அங்கே அரிசி வேண்டியிருக்கிறது. அந்த அரிசி வேறு மாவட்டங்களிலிருந்து வரவேண்டியிருக்கிறது. ஒரு சில மாவட்டங்களிலே எல்லைப் பிரச்னை இருக்கிறது. கள்ளத் தனமாக வேறு மாநிலங்களுக்கு, அதுவும் முக்கியமாக, பற்றாக் குறை மாநிலங்களுக்குக் கொண்டுபோகக்கூடிய நிலை இருக்கிறது என்றாலும், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில்,

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1965

அதிக அளவில் அங்கிருந்து கடத்தப்படக்கூடிய நிலை இருப்பதால், அதைத் தடுக்கும் வகையில், செக் போஸ்ட்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. 'செக் போஸ்ட்கள் வைத்திருப்பது அனுவசிய மான செலவு' என்று கனம் அங்கத்தினர்கள் கூறுகிறார்கள். அது ஒன்றும் அனுவசியச் செலவு அல்ல. பற்றாக்குறை மாநிலங் களுக்குக் கள்ளத்தனமாக அரிசி கொண்டுபோகப்படுவதைத் தடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், அதிலே எவ்வளவு தூரம் வேண்டுமோ அந்த அளவுக்குத்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். எங்கெங்கே செக் போஸ்ட்கள் வைக்க வேண்டு மோ அங்கேதான் வைத்துக் கொள்ளப்படும். அனுபவத்திலே அவை அவசியம் இல்லை என்று ஏற்பட்டால், அரசாங்கம் உடனடி யாகக் கவனம் செலுத்தி வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்று நான் இந்த சமயத்தில் கூற விரும்புகிறேன். தானிய உற்பத்தியைப் பெருக்கவும், உற்பத்தியைச் சீராக விநி யோகிக்கவும் விலைக் கட்டுப்பாட்டை அனுசரிக்கவும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளில் எல்லாம் கனம் அங்கத் தினர்களும், மற்றவர்களும் பொது மக்களின் நன்மையையொட்டி நிறைவேற்றப்படுகிற ஏற்பாடு என்று உணர்ந்து, போதிய ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளு கின்றேன்.

அப்படி உற்பத்தியைப் பெருக்கும் வகையில் விவசாய ஆராய்ச்சி சிறந்த முறையில் நடைபெற்றிருக்கிறது. ஆராய்ச்சி எல்லாம் செய்துதான் சொல்கிறோமே தவிர ஆராய்ச்சி இல்லாமல் சொல்லவில்லை. ஏதோ சிலர், ஓரேயடியாக 'எடிடி. 27 பயன் இல்லை, அது இல்லை, இது இல்லை' என்று எடுத்துப் பேசிவிட்டுப் போகலாம். அனுபவம் உள்ளவர்கள் இதன் அருமையை உணர் வார்கள். எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்று அவர்களுக்குத் தெரியும். உணவு உற்பத்திப் பெருக்கமானது, எந்த அளவுக்கு ஆராய்ச்சியைப் பயன்படுத்திக்கொள்கிறோமோ அதைத்தான் பெரிதும் பொறுத்திருக்கிறது.

பல கனம் உறுப்பினர்கள் தங்கள் தங்களுடைய தொகுதிகளின் தேவைகளையும், மாவட்டத்தின் தேவைகளையும் குறிப்பிட்டார்கள். முக்கியமாக, கனம் உறுப்பினர் திருமதி குழந்தையம்மாள் அவர் கள், 'அவிநாசி தாலுகாவானது புதிய பாசனப் பகுதியில் இடம் பெறுவதைப்பற்றியெல்லாம் பட்ஜெட் உரையில் குறிப்பிடப்பட வில்லையே' என்று சொன்னார்கள். இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகிற மேல் பவானித் திட்டத்தின் மூலம் தண்ணீர் எவ்வளவு கிடைக்கும், பிறருக்குப் பாதகம் இல்லாமல் எவ்வளவு கிடைக்கும், எங்கெங்கே தண்ணீர் கொடுக்க சாத்திய மென்பதெல்லாம் தெரியவேண்டும். அப்படிப் பார்க்கும்போது, அவிநாசி தாலுகாவிற்கு உண்டு, மற்ற தாலுகாவிற்கு இல்லை என்றும் அர்த்தம் இல்லை. எவ்வளவு தூரம் இதைப் பரவலான வகையில் விஸ்தரிக்க முடியுமோ அந்த வகையிலே கவனம் செலுத்தப்படும் என்று நான் கூற விரும்புகிறேன்.

8th March 1965] *[திரு. எம். பக்தவத்சலம்]*

'இந்த பட்ஜெட்டிலே சோஷலிசம் ஒன்றும் இல்லை' என்று சொல்லிவிடலாம். 'இதிலே அபிவிருத்தித் திட்டம் ஒன்றும் இல்லை' என்றும் சொல்லிவிடலாம். சோஷலிசத்தைப்பற்றி அவரவர்களுக்கு வெவ்வேறு கருத்து இருக்கலாம். தங்களுக்கு வேண்டியதைச் செய்தால்தான் சோஷலிஸம் என்று சிலர் நினைக்கிறார்கள். கனம் உறுப்பினர் டாக்டர் நடராஜன் அவர்கள் இதை விளக்கிக் கூறியிருக்கிறார்கள்.

சேலம் உருக்காலையைப்பற்றிச் சில கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். நான் முன்பே கூறினேன். இது ஒரு நல்ல திட்டம் என்பதை அரசாங்கம் நன்றாக உணர்ந்திருக்கிறது. ஆனால் மறுபடியும் பரிசிலனை செய்யவேண்டியிருக்கிறது என்றும், அதிலே அவசரப்பட்டு ஒன்றும் செய்துவிடக்கூடாது என்றும் மத்திய சர்க்கார் கருதுவதால் அது அவர்களுடைய பரிசிலனையில் இருக்கிறது. எப்படியும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையை வைத்துத்தான் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே நான் குறிப்பிட்டேனே தவிர, நம்பிக்கை இல்லையென்றால், இதை நான் ஒருக்காலும் குறிப்பிட்டிருக்க மாட்டேன். சேலம் உருக்காலை நிச்சயமாக வந்துவிடவேண்டும் என்பதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யும் என்று நான் மீண்டும் உறுதியாகக் கூறவிரும்புகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டுக்கான இந்த வரவு-செலவுத் திட்டத்தை எவ்வாறு சமர்ப்பித்திருக்கிறோம், என்ன என்ன செய்து வருகின்றோம் என்ற முக்கியமான பிரச்னைகளைப்பற்றியெல்லாம் இதில் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் எனக்கு முன்பு பேசிய கனம் உறுப்பினர்கள் தெரிவித்தவாறு, இவற்றைப்பற்றியெல்லாம் பேசுவதற்கு இயலாமல் சமீபத்தில் நடந்த கலவரங்களைப்பற்றியே முக்கியமாகப் பேச நேர்ந்தது என்பது உண்மையே. ஆனால், வரவு-செலவுத் திட்டத்திலே பொது விவாதத்தின்போது, பொதுவான நிலைமைகளையும் பேசுவதுண்டு என்பது அனுபவம் உள்ள கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அந்த வகையிலேதான் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கிற, சமீபத்தில் நடந்த, துக்ககரமான, வருத்தத்தைத் தரக்கூடிய சம்பவங்களைப்பற்றி இரு பக்கத்திலும் கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். மானியங்கள் தனித்தனியாக விவாதத்திற்கு வருகிறபோது, மாவட்டங்களிலுள்ள, தொகுதிகளிலுள்ள, நாட்டிலுள்ள பல பிரச்னைகளைப்பற்றியெல்லாம் பேசுவதற்கு வேண்டிய அவகாசம் இருக்கும் என்பதிலும் ஐயம் இல்லை. ஆனால், ஒன்று நான் கூற விரும்புகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தை விவாதத்திற்கு எடுத்துகொள்ளும் இந்த நிலையிலே எதிர்க் கட்சியினர் நடந்து கொண்டது கொஞ்சம் நூதனமாகத் தான் இருந்தது. இதுவரையில் இருந்த பண்புக்கும், இதுவரை இருந்த ஏற்பாடுகளுக்கும் மாறாகத்தான் இருந்தது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். வரவு-செலவுத் திட்டம், இந்தச் சபை முன் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பே, அது எந்தத் தேதியில் இங்கே சமர்ப்பிக்கப்பட வேண்டும், எந்தத் தேதிகளில் அதன் மீது பொது விவாதம் நடத்தப்படவேண்டும், எந்தத் தேதிகளில்

மானியக்கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும், என்று முடிவு செய்யப்பட்டு, அந்த வகையில் வரவு-செலவுத் திட்டம் சபையில் நிறைவேற்றப்படுகிறது. அப்படி முன்னதாகவே தேதிகள் முடிவு செய்யப்பட்டாலும், பிறகு, பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியிலும் விவாதிக்கப்பட்டு மறுபடியும் முடிவு செய்யப்படு கிறது. இந்த மன்றத்தின் கூட்டம் தொடங்குகிற நாள் அன்றே, பிஸினஸ் அட்வைஸரி கமிட்டிக் கூட்டம் கூட்டப்படுகிறது. அதிலே இந்த மன்றத்திலுள்ள எல்லாக் கட்சித் தலைவர்களும் அங்கம் வகிக்கின்றார்கள். அவர்களைக் கலந்துதான், எவ்வாறெல் லாம் செய்வது என்று முடிவு எடுப்பது சகஜமாக இருந்து வருகிறது.

இம்மாதம் முதல் தேதியன்று வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டியது என்று நாள் குறிப்பிடப்பட்டது. காலமும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி, அன்று கனம் சபாநாயகர் அவர்கள் என் பெயரைக் கூப்பிட்டவுடன் நான் நிதி நிலை அறிக்கையில் ஒரு வாக்கியம் வாசித்த பிறகு, எதிர்க் கட்சி களிலே உள்ள தலைவர்கள் எழுந்து வேறு பிரச்னையைக் கிளப்பினார்கள். வேறு ஏதோ பேசவேண்டும் என்று கூறினார்கள். அதற்குப் பிறகு அந்த பிரச்னையைத் தெரிவித்தார்கள். கனம் சபாநாயகர் அவர்கள் தங்களுடைய தீர்ப்பைத் தெரிவித்தார்கள். உடனே இந்த வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றிய உரையை அன்று நான் துவங்கியபோது, கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எல்லோரும் எழுந்து போய்விட்டார்கள். எழுந்து போனபோது நடந்த சம்பவங்களைப் பற்றி நான் இப்போழுது கூறப்போவ தில்லை. எழுந்து சென்றவர்கள் அன்று மறுபடியும் சபைக்கு திரும்பி வரவில்லை. ஆனால் அன்று பத்திரிகையில் பார்த்தேன். வெளியே சென்ற கனம் எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து வெளியிட்ட செய்தியைப் பத்திரிகையிலே பார்த்தேன். பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியிலே என்ன நடந்தது? அங்கே சாதாரணமாக சில யோசனைகள் வருவதுண்டு. யோசனைகள் அங்கே வருவதும், அவற்றின் மீது விவாதிப்பதும், சிலவற்றை ஏற்றுக்கொள்வதும், சிலவற்றை ஏற்றுக்கொள்ளாமலிருப்பதும் உண்டு. அதுபோலவே, அன்றும் பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி கூடியபோது யோசனை வந்தது. விவாதிக்கப்பட்டது. அவசரப் பிரேரணை பற்றிக் கூட பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியிலே பேச்சு வந்தது. அதை அன்றைக்கு மறு நாள், அதாவது மார்ச் 2-ம் தேதி, 4-00 மணிக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கூறப்பட்டது. அதை ஏற்றுக்கொள்ளலாம் என்ற வகையிலேதான் நான் இணங் கினேன். மற்ற விவாதங்கள், எதைப்பற்றியெல்லாம் பேசுவது என்று வந்தது. அப்பொழுதும் இதெல்லாம் விளக்கப்பட்டது. அதற்கு மேலே ஒன்றும் இல்லை.

சாதாரணமாக நாம் அனுசரிக்க வேண்டிய முறைக்குக் கொஞ்சம் மாறாகவே பத்திரிகையிலே வெளிவந்தது. "முதல் அமைச்சர்தான் இதற்குக் காரணம். அவர்தான் இதற்குப் பொறுப்பு, நாங்கள் பேசுவதற்கு முதல் அமைச்சர் இடம்

8th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

கொடுக்கவில்லை" என்ற முறையில் பத்திரிகையிலே செய்தி வந்திருந்தது. இப்படிப் பத்திரிகையிலே வருவதென்பது நாம் அனுசரிக்கும் சம்பிரதாயத்திற்கு முற்றிலும் மாறுனதுதான்.

நாம், வரவுசெலவுத் திட்டத்தை சபையிலே எடுத்துக்கொண்டு விவாதித்து நிறைவேற்றுவதற்கான நாட்களைக் குறிப்பிடு கிறோம். ஆனால், குறிப்பிட்ட சம்பவங்களைப்பற்றிப் பேச வேண்டுமென்றாலும் பேசுவதற்கு அவகாசம் இருக்கிறது. சென்ற ஆறு நாட்களாகப் பேசப்பட்டது. 'மந்திரி சபை மீது நம்பிக்கை இல்லை' என்று முடிவு செய்யவேண்டுமென்று சிலர் நினைத்தால், அதையொட்டியும் பேசலாம். மந்திரிகளுடைய சம்பளங்களைப் பற்றிய மானியம் இந்தச் சபை முன் நாளைக்கே முதன் முதலாக எடுத்துக்கொண்டு விவாதிக்கலாம் என்று ஏற்பாடு செய்திருக் கிறோம். அன்றும் அவர்களுக்கு நான் சொன்னேன். ஆக, நாளைக்கே அது விவாதத்திற்கு வர இருக்கிறது. மந்திரிகள் சம்பளம் பற்றிய மானியக் கோரிக்கைக்கு வெட்டுப் பிரேரணை கொடுக்கும்போது, 'எங்களுக்கு இந்த மந்திரிசபை மீது நம்பிக்கை இல்லை' என்று கருதினால், அப்படியே வெட்டுப் பிரேரணை கொடுக்கலாம். வெட்டுப் பிரேரணை கொடுப்பதென்பது நீண்ட காலமாக இருந்துவரும் பழக்கம். மந்திரி சபையிலே நம்பிக்கையில்லையென்றால், அந்த வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபித்து, அதன் மீது கருத்து தெரிவிப்பதற்குப் போதிய அவகாசம் உண்டு. ஏதோ நான் தவறுதலாக நடந்து கொண்ட தாகவும், அவசரப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள இடம் கொடுக்கவில்லை என்றும் கனம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள் என்றால், இந்த மன்றத்திலேயே வந்து சொல்லியிருக்கலாம். அதற்கும் முறை தவறி, வெளியிலே போய் பத்திரிகையிலே செய்தி விடுவதானது ஒரு முறைதவறான காரியம் தான். அது மாத்திரமல்ல. இரண்டாவது நாள் முதற்கொண்டு இங்கே கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய பேச்சு ஒரு பரபரப்பு அவர்களிடம் இருப்பதைத் தான் எடுத்துக்காட்டியது. இம்மாதிரி, இதுவரைக்கும் நாம் அனுசரித்து வந்த சம்பிரதாயத்திற்கு மாறாக நடந்துகொண்டது ஒரு விஷயம். இங்கே பேசினவர்களில் ஒன்றிரண்டு கனம் உறுப் பினர்கள்--அவர்களும் நம்முடைய பெரு மதிப்பிற்கு உரியவர்கள் தான்—மிகக் கண்ணியக் குறைவாகக் கூடப் பேசினார்கள். ஆனால் வேறு எதுவும் நான் அவர்களிடம் எதிர்பார்க்கவில்லை. அதனால் நான் வருந்தவில்லை. ஆனால் பொதுவாக எதிர்க்கட்சி அங்கத் தினர்கள் இந்தச் சம்பவங்களைப்பற்றிக் குறிப்பிட்டதிலிருந்து அவர்களுக்கு வருத்தமில்லை, இத்தகைய சம்பவங்களைக் கண்டனம் செய்யும் உணர்ச்சி இல்லை, அதற்கு மாறாக ஒரு பரபரப்பு, அமைதியைக் குலைக்கக் கூடிய பரபரப்புதான் இன்னும் அடங் காமல் இருக்கிறது என்று உணர முடிகிறது. ஏதோ அரசாங்கம் தவறிவிட்டது, அரசாங்கத்தின் பொறுப்பை நிறைவேற்றவில்லை என்பதாகக் குறிப்பிட்டுப் பேசினார்கள் ஆனால் நாட்டிலே மிகக் கோரமான சம்பவங்கள் நடந்தன. அதைப்பற்றி யாரும் கண்ட னம் கூடத் தெரிவிக்கவில்லை. தமிழ்நாட்டிலே உள்ளவர்கள் தலை குனியக் கூடியவகையில் நடந்துள்ள சம்பவங்களை நாம் மறந்து

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1965

விடமுடியாது. யார் செய்திருந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் செய்தார்கள். பலர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், உயிரிழந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை வரவு-செலவுத் திட்ட உரையில் தெரிவித்து இருக்கிறேன். அனுதாபம் தெரிவிப்பது வேறு. இருந்தாலும் தமிழ்நாட்டுக்கே இழுக்கு ஏற்படுத்தக் கூடிய நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. எதிர்க் கட்சிக்காரர்கள் அதற்குக் கூடக் கண்டனத்தைத் தெரிவிக்கவில்லை. அவர்கள் பேச்சில்' இதற்கெல்லாம் சர்க்கார்தான் பொறுப்பு, அரசாங்கம்தான் பொறுப்பு, எங்களுக்குச் சம்பந்தம் இல்லை' என்றே பேசினார்களே தவிர பொறுப்புள்ள அங்கத்தினர்களாகிய அவர்கள் நம்முடைய எதிர்காலம் சீரும், சிறப்புடையதாகவுமிருக்க இத்தகைய அராஜகச் செயல்களை எதிர்காலத்தில் தடுப்பதற்கு ஒன்றும் சொல்லவில்லை. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட என்னிடம் சினமும், சீற்றமும்தான் இருப்பதாக திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். என்னைப்பற்றி மிகக் கேவலமாக, கண்ணியக் குறைவாகக் கூட அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் கடந்த ஆறு நாட்களாக இங்கே பேசி வந்தார்களே, நான் இங்கேதானே இருந்தேன். கொஞ்சமாவது சினமோ, சீற்றமோ கொண்டேனா? பலவிதமான பேச்சுக்கள் பேசப்பட்டனவே நான் ஆத்திரம் அடைந்தேனா? அந்தப் பேச்சுக்களை எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பண்பாடுடையன என்று ஒப்புக்கொள்ளமாட்டார். அதையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கவில்லையா? என் முகத்தில் கொஞ்சமாவது சினத்தையோ, சீற்றத்தையோ அவர்கள் கண்டு இருப்பார்களா? எனக்கும்கூட ஆத்திரம் வரும், எப்போது வரும்? நாட்டின் முன்னேற்றத்திற்கு தொடர்ந்து யாராவது முட்டுக்கட்டையாக இருந்தால் ஆத்திரம் வரும். தேசப்பற்றுள்ள யாராக இருந்தாலும் அவர்களுக்கு இந்த எரிச்சல், ஆத்திரம் வரத்தான் செய்யும். அந்த ஆத்திரத்தைத் தவிர்க்க முடியாது. ஏனென்றால், நாட்டின் சுதந்திரம் "கண்ணினும் இனிய சுதந்திரம்" என்று பாரதியார் பாடியது போன்று அவ்வளவு அருமையானது. ரத்தத்தையும், கண்ணீரையும் சிந்தி நாம் சுதந்திரம் பெற்று இருக்கிறோம். அரும்பாடுபட்டு நாம் பெற்ற சுதந்திரத்தைக் குலைப்பதையே தம்முடைய ஜீவாதார உரிமையாகச் சொன்னால் அவர்களிடத்தில் எப்படி ஆத்திரம் வராமல் இருக்கும்? சுதந்திரத்தின் அருமையை உணர்ந்தவர்களுக்கு ஆத்திரம் வரத்தான் செய்யும். அதனால்தான் சுதந்திர தினத்தை துக்க தினமாகக் கொண்டாட வேண்டாம் என்று நான் எத்தனையோ கேட்டுக் கொண்டேன். நான் மட்டும் அல்ல. நான் முன்பு குறிப்பிட்டபோதும் கூட சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த தலைவர்—இன்று இல்லை—திரு. சா. கணேசன் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். "இப்படி எல்லாம் சுதந்திர தினத்தை நாம் துக்க தினமாகக் கொண்டாடுவது என்றால் சீனாக்காரன் நம்மைப்பற்றி என்ன நினைப்பான்? நம் நாட்டுக்குள்ளேயே பலவீனம் இருக்கிறது என்பதாக நம் விரோதிகள் நினைத்துக் கொள்ள இது சந்தர்ப்பம் அளித்துவிடாதா?" என்று கேட்டார்கள். அவர் எடுத்துக் காட்டியதன் நோக்கம் வேறாக இருக்கலாம் என்னுடைய நோக்கம் வேறாக இருக்கலாம். துக்கம் வரலாம், கண்டனத்தைத்

8th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

தெரிவிக்கும் நிமித்தம் ஏற்படலாம். அதற்காக குடியரசு தினத்தையா தேர்ந்தெடுப்பது? இந்தியை வரவேற்றவர்கள் அதை குடியரசு தினத்திற்கு முன்னதாக வரவேற்ருர்கள். வரவேற்பை அன்றைக்கு வைத்துக்கொள்ளவில்லை. "ஏன் இந்தி கொண்டுவருவதை குடியரசு தினத்தன்று கொண்டு வந்தார்கள்?" என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். அதற்காகத் தான் சொன்னேன்—டெல்லியில் அதை வரவேற்றுக் கொண்டாடி யவர்கள் 26-ம் தேதி அல்ல, அதற்கு முன் விழாக் கொண்டாடி ஞர்கள். இவர்கள் ஏன் துக்க தினத்தை 26-க்கு முன்போ, பின்போ வைத்துக் கொண்டிருக்கக் கூடாது? வேறு நாள் மாற்றி வைத்துக் கொள்ளுங்கள்' என்று நான் எவ்வளவோ மன்றாடிக் கேட்டுக்கொண்டேன்.

'நாங்கள் அடையாள பூர்வமாக, அமைதியாக ஓரிடத்தில்தானே கொண்டாடப்போகிறோம் என்று சொன்னோம்' என்கிறார்கள், இருக்கலாம். ஒரு குடம் பாலை விஷமாக்குவதற்கு ஒரு துளி விஷம் போதும். அதனால்தான் நம்முடைய குடியரசு தின விழா வைத் துக்க தினமாக ஆக்காதீர்கள் என்று கேட்டுக்கொண்டேன். நான் உறுதியாகச் சொல்வதை ஆத்திரப்பட்டுச் சொல்வதாக நினைத்துக்கொண்டால் என்ன செய்வது? சுதந்திரத்தைப் பறிக்கக் கூடிய எந்தச் செயலும் ஆத்திரத்தைத்தான் ஊட்டும், நம்முடைய சுதந்திரத்திற்கு யார் ஆபத்தை உண்டாக்கினாலும் அதை விட்டு வைக்க முடியாது. பொறுமைக்கும் அளவு உண்டு. சின்னக் குழந்தைதான், நம்முடைய செல்லக் குழந்தைதான் என்றாலும் அது நெருப்போடு விளையாடுகிறது என்றால் முதலில் அந்தக் குழந்தைக்கே ஆபத்து. வீட்டிற்கே ஆபத்து. சும்மா அந்தக் குழந்தையைவிட்டு இருக்க முடியுமா? நெருப்பைவிட்டு வரும்படி நல்ல வார்த்தையாகச் சொல்லலாம். கேட்கவில்லை என்றால் அந்தக் குழந்தையின் நலத்திற்காகவே ஒரு அடி அடித்து கூட அதை அப்புறம் இழுத்தெறிய வேண்டியதாக இருக்கும். நம் செல்லக் குழந்தை ஆயிற்றே, அடிக்கலாமா என்று பார்க்க முடியும்? நான் கோபப்படுவதாகச் சொல்லிக்கொண்டே என் பேரிலோ, அரசாங்கத்தின் பேரிலோ கோபப்பட்டுப் பயன் இல்லை. இந்தச் சம்பவங்களைப்பற்றிப் பேசும்போது நான் பார்த்தேன். ஒரு பரபரப்பு அவர்களிடத்தில் இருந்தது. 'வெளி மாநிலங்களில் இருந்து போலீசாரைக் கொண்டு வந்தார்கள்' ராணுவத்தைக் கொண்டு வந்தார்கள்' என்று எல்லாம் குற்றம் சாட்டப்பட்டது. திடீரென்று ஆர்ப்பாட்டம் கோரமான பலாத்காரச் செயல்களில் இறங்க ஆரம்பித்தது. அரசாங்க சொத்துக்கும், பொதுமக்க ளுடைய சொத்துக்கும் ஆபத்து ஏற்பட்டது. ரயிலில் செல்கிற வர்கள், மோட்டாரில் செல்கிறவர்கள் பல இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அதை அப்படியே விட்டுக்கொண்டிருக்க முடியுமா? எல்லா இடங்களிலும் அமைதியை ஏற்படுத்திப் பாது காப்பு அளிக்கப் போலீஸ் பலம் போதுமானதாக இல்லை, வேறு இடங்களில் இருந்து தருவித்தோம். அதைத்தவிர அவர்களி டத்தில் நம்பிக்கை இல்லை, அதற்காகப் பிற மாநிலங்களில் இருந்து தருவித்தோம் என்பது சரியல்ல. இப்போதும் கூட அஸ்ஸாம்

எல்லையில் தொல்லைகள் இருக்கின்றன. மேற்கு வங்காள எல்லையில் தொல்லைகள் இருக்கின்றன. அவர்கள் வேண்டுமென்றால் நம்முடைய மாநில போலீசார்களை அனுப்பி வைக்கிறோம். ஒவ்வொரு பிராந்தியத்துக்குமாக மண்டல அமைப்பு வைத்துக்கொண்டிருக்கிறோம். நமக்கு வேண்டுமென்றால் பல இடங்களிலிருந்து போலீஸ்காரர்களை அழைக்கின்றோம். 'அங்கிருந்து வந்தார்கள்; இங்கிருந்து வந்தார்கள், மொழி தெரியாதவர்கள் வந்தார்கள்' என்று குறை கூறுவதென்றால் இருக்கிற போலீசாரை வைத்துக்கொண்டு இன்னும் கொஞ்ச நாளைக்கு கலவரம் நீடிக்கட்டும் என்று மனதிற்குள்ளே நினைக்கின்றார்களா? மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய நிமித்தம் அவர்கள் வந்தால் அதைத் தவறு என்று சொல்வதற்கு இடமில்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1-00 p.m. அதேமாதிரி கட்டுக்கடங்காத நிலை ஏற்பட்டபொழுது ராணுவத்தினரும் அழைக்கப்பட்டார்கள். ராணுவத்தினரை அழைத்தது தவறு என்று சொன்னார்கள். கட்டுக்கடங்காத நிலைமையில் தான் அவர்கள் வரவழைக்கப்பட்டார்கள். அவர்களும் எல்லா இடங்களிலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. பொள்ளாச்சியிலே மட்டும் தான் நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். பொள்ளாச்சியிலே கட்டுக்கடங்காத நிலை ஏற்பட்டது. ராணுவத்தினர் மிகவும் பொறுமையோடு இருந்தனர். ஆனால் அவர்கள் மீதும் கல் எறியப்பட்டது. ராணுவத்தினரைப் பார்த்தும்கூட சமூக விரோதிகள் நிறுத்தவில்லை. ஆகவே, ராணுவத்தினர் சுடவேண்டிய நிமித்தம் ஏற்பட்டது. ஆனால் ராணுவத்தினர் பொள்ளாச்சியை விட்டுப் போய்க்கொண்டிருந்தபொழுது, மக்கள் எல்லாம் சேர்ந்து அவர்களுக்கு ஒரு பாராட்டு விழா நடத்த வேண்டுமென்று சொன்னார்களாம்; ஆனால் அதெல்லாம் வேண்டாம் என்று சொல்லிப் பாராட்டு விழாவுக்கு இடங்கொடுக்காமல் ராணுவத்தினர் திரும்பிச் சென்று விட்டார்கள்.

மகாராஷ்டிரம் போன்ற இடங்களிலிருந்து எல்லாம் ராணுவத்தினர் வந்தார்கள் என்று சொன்னார்கள். ஆனால், மிக மகிழ்ச்சியோடு, பொறுப்புணர்ச்சியோடு நான் சொல்லிக்கொள்கிறேன் அந்த ராணுவத்தினரில் 100-க்கு 75 பேருக்கு மேல் தமிழர்கள் தான்; நல்ல இளைஞர்கள். அவர்கள் தங்கள் கடமையை ஆற்றினார்கள். மக்களைப் பாதுகாத்தார்கள். அவர்களுக்கு நம் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் மீது அவச்சொல், பழிச்சொல் கூறுவது முறையற்றது என்று நான் கூற விரும்புகிறேன்.

போலீஸார் எங்கு தவறு செய்திருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தயங்குவது இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்திலே நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திலே, விசாரணை செய்து, போலீஸார் தவறு இழைத்தார்கள் என்பதை உணர்ந்து, போலீஸ் இலகாத் தலைமை அதிகாரியும் சரி, அரசாங்கமும் சரி, மாவட்ட அதிகாரிகள் உட்பட பல பேர் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பது அங்கத்தினர்களுக்கெல்லாம் தெரியும். போலீஸார் தவறு செய்தால் அதை

8th March 1965] *[திரு. எம். பக்தவத்சலம்]*

அரசாங்கம் பார்த்துக் கொண்டிராது. ஆனால், சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்களின்போது தவறுதலான கருத்து பரப்பப்பட்டது. தூத்துக்குடியிலே துப்பாக்கிப் பிரயோகம் செய்த போலீஸார் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது; அதனால் போலீஸார் வந்தால் பயப்பட வேண்டியதில்லை என்று தவறுதலான கருத்து பரப்பப்பட்டது. போலீஸார் தங்கள் உயிருக்கு வரக்கூடிய ஆபத்தைக்கூடப் பொருட்படுத்தாமல், அச்சம் இல்லாமல் தங்கள் கடமையை நிறைவேற்றியிருக்கிறார்கள். ஒருசிலர் தங்களுடைய உயிரைக்கூடத் தியாகம் செய்ய வேண்டியிருந்தது. கோரமான நிலையிலே கொலை செய்யப்பட்டார்கள் என்பதைப் பார்த்துக்கூட போலீஸார் தங்களுடைய கடமையை நிறைவேற்றினார்கள், மிகவும் உறுதியாக இருந்தார்கள் என்றுதான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆபத்தைச் சற்றும் பொருட்படுத்தாமல் அவர்கள் நடந்துகொண்டதனால்தான் நாட்டில் ஒரு நல்ல அமைதியான நிலையை ஏற்படுத்த முடிந்தது. மேலும் இப்படிப்பட்ட சமூக விரோதிகள் அழிவுச் செயல்களில் இறங்கமுடியாமல் போய்விட்டது. இவ்வளவு இல்லையென்றால் கோரமான நிலைகள்தான் ஏற்பட்டிருக்கும். கனம் முனு ஆதி அவர்கள் சொன்னார்கள். அவர் எங்கள் மாவட்டத்துக்காரர். நானும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால் பெருமைப் படுகிறேன். 'ஏன் எங்களை 10, 11 தேதிகளில் பிடித்திருக்கக் கூடாதா? அப்படிப் பிடித்திருந்தால் என்ன ஆகியிருக்கும்?' என்று சொன்னார்கள். சிலசமயம் நாம் தவறுதலாகப் பேசிவிடுகிறோம்; கொஞ்சம் யோசித்துச் சொல்லவேண்டும். அவர் அப்படிச் சொல்வதின் உட்கருத்தைப் பார்க்கவேண்டும். சிலசமயம் நாம் பேசும் பொழுது அதை மற்றவர்கள் தவறாகப் புரிந்துகொள்ளமுடியும் என்பதைக்கூடக் கருதாமல் சொல்லிவிடுகிறோம். அப்படிப் பிடித்திருந்தால் ஏராளமான சமூக விரோதிகள் எங்கள் பக்கத்தில் இருந்திருப்பார்கள், என்ன செய்யமுடியும் என்பதுபோல் சொல்லியிருக்கிறார்.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, நான் அந்த மாதிரிச் சொல்லவில்லை. "10, 11 தேதிகளில் கலவரம் மிகுதியாக இருந்த பொழுது அமைதியை நிலைநாட்டாமல் எங்கே போய்விட்டார்கள்?" என்றுதான் கேட்டேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர் எந்தமாதிரி வேண்டுமானாலும் குறிப்பிட்டிருக்கலாம். அவர் குறிப்பிட்டதின் உள் கருத்தைத்தான் நான் சொன்னேன். (திரு. முனு. ஆதி : நான் பேசிய பேச்சு இதோ இருக்கிறது.) போலீஸ் எக்செஸ் அளவுகடந்து இருக்கிறது என்று சொல்வது சுலபம். ஆனால் ஒவ்வொரு இடத்திலும் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றிய தகவல்கள் என்னிடம் இருக்கின்றன. ஆங்காங்கு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அந்த விசாரணைகளின்மேல் அறிக்கை வந்தால் அப்பொழுது யார் மீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் தயங்காது. இப்பொழுது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் எதிர்க்கட்சிக்கு வழிகாட்டியாக இருக்கிறார். எங்களுக்கும்கூட வழிகாட்டியாக இருக்கப்

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1965

பார்க்கிறார்கள். நல்ல யோசனைகளை எல்லாம் கூறினார்கள். எங்கள் மீது குறைகளைச் சொன்னார்கள். அவர்கள் மீதுள்ள குறைகளையும் சொன்னார்கள். அத்தகைய உயர்ந்த நிலையில் அவர்கள் எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், பொதுவாக, ஏதோ தவறுதல் செய்துவிட்டது இந்த அரசாங்கம் என்றும் 'அதற்குப் பதில் சொல்வதற்கு நாம் தட்டிக்கழிக்கின்றோம்' என்ற வகையிலே தான் அவர்கள் எதிர்க்கட்சிக்கு வழிகாட்டியாக இருந்து வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது எழுந்து நடக்க வேண்டும்; கண்டனம் செய்யவேண்டும் என்று எல்லாம் சொன்னார்கள்.

திருச்செங்கோட்டில் அத்துமீறிய கலகங்கள் நடந்ததால் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. கலெக்டர் அவர்களும், சூப்பிரண்டெண்டெண்ட் அவர்களும் கூட அங்கும் போனார்கள். அவர்களுக்கே ஆபத்து ஏற்படக்கூடிய நிலை இருந்தது. அதுபற்றி விசாரணை நடக்கிறது; அது வேறு விஷயம். பொதுவாகச் சொல்லலாம்: போலீஸார் அக்கிரமம் செய்துவிட்டார்கள் என்று சொல்வது சுலபம். போலீஸார் அடி, உதை, அவமானம் ஆகிய எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு தங்கள் கடமையைச் செய்கிறார்கள். அவர்கள் எந்த இழிசொல்லையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அதனால் அவர்கள் கடமையிலிருந்து தவறமாட்டார்கள்.

குமாரபாளையத்தில் ஒரு சப்-இன்ஸ்பெக்டரை சட்டையைக் கழற்றி நிர்வாணமாகத் தெருவில் இழுத்துச் சென்றார்கள். அதைப்பற்றி இங்கே யாராவது கண்டனம் செய்தார்களா? அல்லது வருத்தமாவது தெரிவிக்கப்பட்டதா? திரு. மோகன் குமார மங்கலத்தைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். அவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். எல்லோருடைய மதிப்பிற்கும் உரியவர். உயர்ந்த ஒழுக்கமும் ஆற்றலும் படைத்தவர். அவர் சேலத்திற்குச் சென்றபோது அங்கு சூப்பிரண்டெண்டெண்ட் ஆப் போலீஸை பார்த்திருக்கிறார். அவர் என்னசொன்னார் என்பதைப் படிக்கிறேன்.

"Sri Mohan Kumaramangalam called on the Superintendent of Police, Salem (Sri G. Narayanaswami Naidu) on 20th February 1965 at 6 p.m. at the residence of the Superintendent of Police in Salem. As soon as he saw the Superintendent of Police, Sri Mohan Kumaramangalam shook hands with him and congratulated the Superintendent of Police. The Superintendent of Police asked Sri Mohan Kumaramangalam why he is congratulating him. Sri Mohan Kumaramangalam replied that he had been to Tiruchengode where he has some lands and that he ascertained that the Police had done a wonderful job in restoring order in that area. He also added that some of his relations in Palappatti told him that but for the prompt Police reinforcements sent from Salem to Namakkal, the whole town would have been burnt. Sri Mohan Kumaramangalam also stated that he had gone to the Collector's house to congratulate him, but not finding him there he had come to the Superintendent of Police to convey his congratulations. He wanted the Superintendent of Police to convey his congratulations to the Collector also."

8th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

நாங்கள் போலீசாரைப் பாராட்டினல் 'நாங்கள் எப்போதும் போலீசாரைப் பாராட்டிக் கொண்டிருக்கத்தான் கூடும்' என்று சொல்லலாம்; சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அதற்காகத் தான் மேற்கோள் காட்டினேன். சிறந்த ஆசிரியர், பள்ளிக்கூடத் தில் பாடம் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அவர்களுடைய கடி தத்திலே ஒரு பகுதியை மட்டும் படிக்கிறேன்.

'It is very distressing to note that now-a-days people seem to approve, justify and sometimes seek pleasure in expressing their opinions in a violent way, causing destruction to life, person and property. The role of the Police during these trying days in working hard to preserve the law and order and to protect the life and property against frenzied mob has been splendid and praiseworthy. Please convey heartfelt respects to those heroic Police personnel who fulfilled their duties with dauntless courage. I can humbly pray for their welfare and greater glories. Also, please convey my sincere and heartfelt sympathy and condolences to the relatives of those heroic souls, who died with their boots on.

The growing propaganda about 'Police excesses' seem to be a device to malign the good name of the Police, and demoralise them. I wish people who talk of 'Police excess' should view it in the context of 'mob excess''.

இதிலே அப்படியே என்னுடைய கருத்து பிரதிபலிக்கிறது என்னுடைய கருத்தாகவே இது இருந்தாலும் அந்த ஆசிரியர் தெரிவிக்கின்ற வகையைவிட மேலாக என்னால் தெரிவிக்க முடியாது. அந்த ஆற்றல் எனக்கு இல்லை. சென்னை நகரில் இருக் கக்கூடிய ஆசிரியர் ஒருவர் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு எழுதிய கடிதத்தைப்படித்தேன். நடந்த நிகழ்ச்சிகளுக்கும் மாணவர் களுக்கும் சம்பந்தம் இல்லையென்று சொன்னார்கள். பெரும் பாலோருக்குச் சம்பந்தம் இல்லைதான். மாணவர்கள் உணர்ச்சி வசப்பட்டார்கள் என்று நானும் ஒப்புக்கொள்கிறேன்; உணருகி றேன். பிப்ரவரி 25-ம் தேதி அவர்கள் வேறு கண்டன நாள் கொண் டாடுவது என்று முடிவு செய்தார்கள். அதற்கு முன்பு திருச்சியில் கூடிய இந்தி எதிர்ப்பு மகாநாட்டில் பேசிய அத்தனைபேர்கள் மீதும் ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று கேட்டார்கள். அந்த மகாநாட்டு நடவடிக்கைகளுக்கும், சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுக்கும் சம்பந்தம் இல்லை. கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் 'மற்றவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை? என்று கேட்டார் கள். மாணவர்கள் கண்டனம் தெரிவிக்க வேண்டுமென்று இந்தி எதிர்ப்பு மகாநாடுத் தலைவர்கள் முடிவு செய்தார்கள். அந்த முடிவு பத்திரிகையில் வந்தது. அந்த முடிவு இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்தியவர்கள் தெரிவித்ததுதான். அதையொட்டி மாணவர்கள் 25-ம் தேதியே கல்லூரிகளில் இருந்து வெளியே வந்து ஊர்வலம் நடத்தினார்கள்; கண்டனம் தெரிவித்தார்கள். போலீசா ருக்கும் எல்லாம் தெரிவிக்கப்பட்டிருந்தது. தலைமைப் போலீஸ் அதிகாரி மற்ற போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறார்.

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1965

'மாணவர்கள் ஊர்வலமாக வருவதைத் தடை செய்யவேண்டாம்' அவர்களுக்கு எந்தவிதமான தொந்தரவும் கொடுக்க வேண்டாம்' என்று தெரிவிக்கப்பட்டது. சென்னையிலே எடுத்துக் கொண்டால் மாணவர்கள் கோட்டைக்கு வருவதற்கு முன்பே பலாத்காரத்தில் ஈடுபட்டார்கள். பிரசிடென்சி கல்லூரியில் கற்களைத் தூக்கி எறிந்தார்கள். அவர்கள் பலாத்கார உணர்ச்சியோடுதான் வந்தார்கள். அந்தப் பலாத்கார வெறுப்புணர்ச்சிக்குத்தான் வேறு சிலர் தூண்டி விட்டார்கள் என்று சொல்லுகிறேன். நான் இப்பொழுதும் கூறுவேன். ஒரு கட்சியினர் திட்டமிடக்கூடிய வகையில் இந்த பலாத்காரச் செயல்களுக்கு உதவி அளித்தார்கள். அவர்களுடைய கைங்கரியம் அது. இன்னொரு கட்சினர் அவர்களுக்கு வெறுப்பு உணர்ச்சியை ஊட்டினார்கள். உணர்ச்சி வரலாம். ஆனால் எங்கு பார்த்தாலும் கல்லை எடுத்து வீசுவதை நான் விரும்பவில்லை. 'நான் மாணவர்களைச் சந்திக்க மறுத்து விட்டேன்' என்று சொல்வது இப்போது ஒரு 'ஃபாஷன்' ஆகிவிட்டது. அன்று அவர்களைப் பார்க்கின்ற பிரச்சினை எழவில்லை. கல்லூரி நேரத்தில் கல்லூரித் தலைவர் அனுமதி இல்லாமல் வெளியில் வருவது தவறு என்பது என்னுடைய அழுத்தமான கொள்கை. மாணவர்களுக்குக் கட்டுப்பாடு முக்கியமாக இருக்கவேண்டும். கட்டுப்பாடு உணர்ச்சி இல்லாமல் எவ்வளவுதான் அறிவு பெற்றாலும் அந்த அறிவு அழிவுக்குத்தான் பயன்படும். மாணவர்களுக்கு ஒழுக்கமும், கட்டுப்பாடும் எப்போதும் முக்கியம் என்று வற்புறுத்தி வந்திருக்கிறேன். இதிலே மாறுபட்ட கருத்து கனம் உறுப்பினர்களுக்கு இருக்கமுடியாது. அன்று நான் மாணவர்களைப் பார்க்கின்ற பிரச்சினை எழவில்லை. நான் பார்க்க முடியாது என்று சொல்லி விட்டால் என்னுடைய சக அமைச்சர் தொழிலமைச்சர் அவர்கள் எப்படிப் பார்த்திருப்பார்கள்? எனக்கும் அவருக்கும் தகராறு? இந்த மந்திரி சபையைப் பொறுத்தமட்டில் ஒரு சிறிதும் வேற்றுமை கிடையாது. (ஆளும் கட்சித் தரப்பில் ஓரிருவர் மேஜையைத் தட்டினர்.)

திரு. மீ. கலியாணசுந்தரம்: சப்தம் பலமாக இல்லையே!

கனம் திரு. எம் பக்தவத்சலம்: இதிலே ஒன்றும் விசித்திரம் இல்லையென்று மற்றவர்கள் உணருகின்ற காரணத்தால் பேசாமல் இருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: தங்களது சக அமைச்சர் அவர்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டது மட்டும் எப்படி நியாயமாகும்?

(கனம் சபாநாயகர் தலைமை.)

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த நியாயத்தை எல்லாம் கனம் அங்கத்தினர் அவர்களே வைத்துக் கொள்ளலாம். நான் என்னுடைய சக அமைச்சர் அவர்களை 'மாணவர்களைப் பார்க்கக் கூடாது' என்று சொல்லியிருந்தால் அவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள். அப்படி ஒன்றும் பிரச்சினை வரவில்லை. நான் வேறு வேலையாகப் போயிருந்தேன். எனக்கு அலுவல் இருந்த காரணத்

8th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

தால் போனேன். இவர்களிடம் பேசவேண்டுமென்பதற்காக அலுவல்களை விட்டுவிட முடியுமா? பேசுவதற்கு எப்போதும் தயார். ஆறும் தேதியன்று என்னுடன் இரண்டரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அதிலே தீவிரமான தி.மு.க. உணர்ச்சியுள்ளவர்கள் இருந்தார்கள்; அவர்கள் வந்து பேசவேண்டுமென்றால் எப்போதும் நான் குறுக்கே நிற்கவில்லை கடந்த 26-ம் தேதியன்று ஆரம்பத்திலிருந்து பலாத்காரத்தில் ஈடுபட்டார்கள். அதன்காரணமாக அவர்கள் மெமோரியல் ஹாலுக்கு மேலே தாண்டிச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அவர்களை அதற்கு மேலே அனுப்பக்கூடாது என்று போலீசார் நிறுத்திவிட்டார்கள். மாணவர்கள் உணர்ச்சி வசப்பட்டது உண்மைதான். ஏதோ தி.மு.க. வினர் அவர்களை ஹோட்டலில் அழைத்துப் பேசினார்கள் என்று சொல்லும்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அங்கே சென்றார்கள் என்று சொல்லவில்லை. ஒரு சில தி.மு.க. தலைவர்கள் இருந்தார்கள்; ஒரு சில மாணவர்கள் இருந்தார்கள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த மாணவர்களும் இருந்தார்கள். திருவையாறு உறுப்பினர் பழனி அவர்கள் இதைப்பற்றி தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். இதை அடியோடு மறுப்பதில் பயன் இல்லை. அது மாத்திரம் அல்ல. நான் குற்றம் சாட்ட வேண்டுமென்ற அடிப்படையில் சொல்லவில்லை. அவர்களுக்கு மாணவர்களிடத்தில் இன்னும் கொஞ்சம் அனுதாபம் இருக்கவேண்டும். கொஞ்சம் தைரியம் கொடுத்த சில தலைவர்களோடு தொடர்பு கொண்டார்கள் என்பதற்குத் தகவல் இருக்கிறது அப்படி அவர்களுக்கு ஊக்கத்தை அளித்த பிறகு அவர்களைப் புறக்கணிக்கக் கூடாது. ஆங்கிலத்தில்—

It is very wrong to have let them down after encouraging and inciting them to commit acts of violence. After creating a sense of hatred in them, it is very wrong to have let them down.

என்று கூறுவார்கள். பிறகு நிலைமை மிஞ்சிப் போய்விட்டது என்று அறிந்து, அது தங்களையும் பாதிக்கும் என்று கருதி 'எங்களுக்கு ஒன்றும் தெரியாது' எங்கள் பேச்சைக் கேட்கவில்லை' என்று மாணவர்களோடு நேராக சம்பந்தப்பட்ட பெரிய தலைவர் ஒருவர் அறிக்கை விட்டால் அது நியாயமா? (ஒரு கனம் அங்கத்தினர்; எந்தத் தலைவர்?) எந்தத் தலைவர் என்று இங்கிருக்கக் கூடிய தலைவர்களுக்குத் தெரியும். 'மாணவர்கள் நான் சொன்னதைக் கேட்கவில்லை; அவர்கள் ஈடுபட்டார்கள்; அதனால்தான் பலாத்காரம் ஏற்பட்டது' என்று சொல்வது தவறு. மாணவர்களிடத்தில் நமக்கெல்லாம் அனுதாபம் இல்லாமல் இல்லை. எல்லோருக்கும் இருக்கிறது. ஒன்றை நாம் சிந்திக்கவேண்டும். இந்த மாணவர்கள் வெறுப்புணர்ச்சியை வளர்க்கும் வகையிலே, இழிய பலாத்காரச் செயல்களிலே ஈடுபடும் வகையிலே நடந்து கொண்டால் யாருக்கு நல்லது? எந்தக் கட்சிக்கும் அது நல்லதல்ல. அவர்கள் தெருவிலே போய்க் கொண்டிருக்கிற காரை நிறுத்தினார்கள்; பணம் கொடுங்கள் என்று கேட்டார்கள். 'எதற்கு' என்று கேட்டால் 'பெட்ரோல் வாங்க' என்று சொல்லியிருக்கிறார்கள். 'பெட்ரோல் எதற்கு' என்று கேட்டால் 'கொளுத்த' என்று கூறியிருக்கிறார்கள். காரிலே கண்டபடி எழுதியிருக்கிறார்கள்.

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1965

இவற்றையெல்லாம் அவர்கள் உணர்ச்சி வேகத்தில் செய்தார்கள் என்றுதான் நான் உணருகிறேன். அதனால்தான் அரசாங்கம் இது வரை கண்டிப்பாக அனுசரித்து வந்த கொள்கைக்கு மாறாக, கோர்ட்டுக்கு வந்து விட்டால் கோர்ட்தான் தீர்ப்புக் கூறவேண்டும் என்ற நிலையிலே அனுசரித்து வந்த கொள்கைக்கு மாறாக, 'மாண வர்கள் உணர்ச்சி வசப்பட்டார்கள். எப்படியோ, யாரோ தூண்டி விட்டதால் இவ்வாறு நடந்து கொண்டார்கள்; அவர்கள் மீது இருக்கின்ற எல்லா கேஸ்களையும் விட்டு விடுவோம்' என்று இன்று முடிவு செய்து எல்லோரையும் விட்டுவிட்டோம்.

கல்லூரி திறக்கும்போது கேஸ் போட்டு கோர்ட்டுக்கு போய்க் கொண்டிருந்தால் ஒரு வருஷம் படிப்பு போய் விடுமே. குற்றம் தான் செய்தார்கள் என்று கோர்ட் முடிவு செய்து தண்டனை கொடுத்தாலும் தண்டனை பூராவும் அனுபவிக்க வேண்டுமென்றால் ஒரு வருஷம் போய் விடுமே, என்ன குற்றம் செய்தாலும் நம் பிள்ளைகள்தானே, திருத்துவார்கள், திருந்தட்டும், படிப்பு பாதிக் கக் கூடாது என்ற வகையில்தான் நேற்று இந்த முடிவை அரசாங்கம் செய்தது. இன்னும்கூட சிலர் மாணவர்களைத் தூண்டி விடுகிறார்கள். மாணவர் தலைவர்களில் ஒருவர் நேற்று என்னிடம் வந்து சொன்னார். இடதுசாரி கம்யூனிஸ்ட்கள் ஆறு பேர்கள் தன்னிடம் வந்து தொடர்ந்து இந்த இயக்கத்தை நடத்த வேண்டுமென்று சொன்னதாகச் சொன்னார்கள். நமக்கெல்லாம் தெரிந்த ஒருவர், இந்த மன்றத்தில் இல்லை. ஒரு பத்திரிகை ஆசிரியர் அவர்களோடு தொடர்பு. இம்மாதிரி வேறு கட்சிகளோடு அனுதாபம் உள்ளவர்கள்.

SRI K. A. MATHIALAGAN : Sir, on a point of order. The Hon. the Chief Minister is going on making vague and unfounded allegations against my party. Let him be specific and let him substantiate what he says.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அவர்களின் கட்சியைச் சொல்லவில்லை.

SRI K. A. MATHIALAGAN : Sir, let him not make vague and unfounded allegations that my Leader has issued a statement abetting violence.

MR. SPEAKER : There is no point of order.

திரு. கே. ஏ. மதியழகன் : தி.மு.க. தலைவர் ஒருவர் என்று சொன்னார்கள். ரிக்கார்ட்டை தயவு செய்து பாருங்கள். தூண்டி விட்டார்கள், தூண்டிவிட்டு இந்த அறிக்கையை விட்டார்கள் என்று சொன்னார்கள்.

MR. SPEAKER : Let the hon. Member resume his seat. It is not a point of order. A point of order will arise only when there is any violation of the rules of procedure. To-morrow the hon. Member can say that the whole thing is vague and unfounded. I do not expect a person of the stature of the hon. Member who is the acting Deputy Leader of his Party to interrupt the speech of the Hon. Chief Minister in the manner he does.

8th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒலிப்பெருக்கியிருக்கிறது. இருந்தாலும் ரொம்ப உரக்கப் பேசுகிறார்கள். எனக்கு சினம், சீற்றம் இருக்கிறது என்று கனம் எதிர்கட்சி தலைவர் அவர்கள் கூறினார்கள். கனம் தலைவர் அவர்களிடம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். 'இதெல்லாம் உங்களுக்குத்தான் எங்களுக்கு அல்ல' என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு ஆட்சேபணையில்லை. இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை என்று தாங்கள் கூறினீர்கள். என் கருத்துக்களை நான் தெரிவிக்கிறேன்; அவர்கள் அவர்கள் கருத்துக்களை சமயம் வரும்போது, நாளைக்கே தெரிவிக்கட்டும். அவர்கள் ஒரு தீர்க்கதரிசனத்துடன் சொன்னார்கள் நான் பின்னால் சொல்லத்தான் போகிறேன். 26-ம் தேதி குடியரசு தினம், அந்த நாளை துக்க நாளாக கொண்டாட வேண்டாம்' என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டேன். 26-ம் தேதி பல சம்பவங்கள் நடந்தன. மாணவர்கள் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டார்கள். சென்னையில் பலாத்காரச் செயல்கள் நடைபெற்றன. இது முறையா? 27-ம் தேதி நடத்தட்டும் என்று சொன்னேன். 26-ம் தேதி வேண்டாம், 25, 27-ல் நடத்திக் கொள்ளுங்கள் என்று ஏன் சொன்னேன் என்றால் இதையெல்லாம் 'எதிர்பார்த்துத்தான் சொன்னேன். 26-ம் தேதி பஸ் கொளுத்தப்படவில்லையா? இதற்கெல்லாம் தி.மு.க.-வே பொறுப்பு. தி.மு.க. 26-ம் தேதியை குடியரசு தினத்தை துக்கநாளாகக் கொண்டாட வேண்டுமென்று பிடிவாதமாக, நாட்டின் நன்மையை உணராமல், நாட்டுப் பற்று இல்லாமல் செய்ததுதான் இதற்கெல்லாம் பொறுப்பு என்று நான் கண்டிப்பாகச் சொல்ல முடியும். 25-ம் தேதி ஏதோ நடந்தது, மாணவர்கள் கொதித்தெழுந்தார்கள் என்று சொன்னார்கள். மதுரை சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிடுகிற மதுரை சம்பவங்கள், இன்னும் பல சம்பவங்கள் இன்வஸ்டிகேஷனில் இருக்கிறது. இன்வஸ்டிகேஷனில் யார் தவறு செய்தாலும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என பக்கத்திலுள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள். காங்கிரஸ்காரர்களில் பல பேர்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். எல்லாம் பரிசீலனை செய்யப்படுகிறது. போலீசுக்கு விருப்பு வெறுப்பு இல்லை, குற்றம் செய்தது யாராக இருந்தாலும் சரி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். அதற்காகத்தான் நான் கேட்டேன், நான் பார்த்தேன் என்று சொன்னால் கொஞ்சம் எழுதிக் கொடுங்கள் அதை சாட்சியமாக வைத்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம், என்று கேட்டேன். ஒரு பத்திரிகை மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம், மற்றொரு பத்திரிகை மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவில்லை என்றால் அப்படியெல்லாம் இல்லை. இன்வஸ்டிகேட் செய்யப்படுகிறது. இன்வஸ்டிகேட் செய்து நம் வழக்கு ஆலோசகர்களைக் கேட்டு அவர்கள் கேஸ் இருக்கிறது எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னால் எடுத்துக் கொள்ளப் படுகிறது, வேறொன்றில் இதில் கேஸ் இல்லை கோர்ட்டில் போனால் நிற்காது என்று சொன்னால் விட்டு விடுகிறோம். பலாத்காரத்தை தூண்டுகிற வகையில் யார் செய்திருந்தாலும் அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. மதுரை

சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கு 26-ம் தேதி குடியரசு நாளை மிக விமரிசையாக, மிகுந்த உற்சாகத்தோடு கொண்டாட வளைவுகள் எல்லாம் போடப்பட்டன. மாணவர் ஊர்வலம் ஜில்லா காங்கிரஸ் ஆபீசுக்கு வருவதற்கு முன்பு இரண்டு இடங்களில் வளைவுகள் கொளுத்தப்பட்டன அங்குதானே அவர்களுக்கு உணர்ச்சி வந்தது என்று சொல்வது தவறு. மாணவர்கள் அடிப்பட்டிருந்தால் எனக்கு பரிபூரண அனுதாபம் உண்டு. யார் செய்திருந்தாலும் அதை வெறுக்கிறேன். கண்டு பிடித்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள அரசாங்கம் தயங்காது. காங்கிரஸ் கொடிகளை கொளுத்தி விட்டு கறுப்புக் கொடியை கட்டியிருக்கிறார்கள். கல்லூரி சம்பவங்கள் பற்றிச் சொன்னார்கள். பிரின்சிபால் வெளியே போகாதீர்கள், தடை உத்தரவிருக்கிறது என்று நல்லெண்ணத்தோடு சொன்னார்கள். மீறி வந்ததால் லத்தி சார்ஜ் செய்ய வேண்டி வந்தது. திருப்பரங்குன்றத்தில் உள்ள எஞ்ஜினியரிங் கல்லூரி பற்றி சொன்னார்கள். கேஸ் இருக்கிறது அதுபற்றி ப்ரைவேட் கம்ப்ளெயின்டும் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே கோர்ட்டில் இருப்பதால் அதைப்பற்றிக் கூற விரும்பவில்லை. கல்லூரிக்குள் இருக்கிறவர்கள் அங்கேயே எரிப்பது தானே? அண்ணாமலை யூனிவர்சிட்டி பற்றி சொன்னார்கள். பெரிய காம்பஸ் இருக்கிறது. அங்கிருந்து நடத்துவதுதானே? அதை விட்டு விட்டு வெளியே ஊர்வலம் வருவது எதற்காக? அண்ணாமலை யூனிவர்சிட்டியைப் பொறுத்தவரையில் இரண்டு நாட்களுக்கு முன்பே அங்குள்ள தி.மு.க. இவர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு நன்றாகச் செய்ய வேண்டும், 25-ம் தேதி செய்யவில்லை, 27-ம் தேதி செய்ய வேண்டும் என்று தூண்டி விட்டதாக தகவல் வந்திருக்கிறது. கோரமான செயல் நடைபெற்றது. துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. அது இப்போது நீதிவிசாரணையில் இருக்கிறது. அம்மாதிரி மாணவர்கள் பேர் ஃபேஸ்டாகப் போய் பணம் கேட்பது, காரை நிறுத்துவது இதெல்லாம் சென்னையில் மட்டுமல்ல, தமிழ் நாடு பூராவும் நடந்தது. இது வெட்கப்பட வேண்டிய விஷயம். பிள்ளைகளைக் கெடுத்து விட்டு பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு என்று சொல்வார்கள். மாணவர்கள் கெடுவது பெற்றோர்களுக்கு நல்லதல்ல. மாணவர்கள் நன்கு படிக்க வேண்டும். தவறு செய்தால் தவறு என்று சொல்ல வேண்டும். கேஸ் வித்ட்ரா செய்து விட்டதால் இன்னும் மறுபடியும் எதைச் செய்தாலும் ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று யாரும் நினைக்கக் கூடாது. இப்போது சொல்கிறேன், இனி தவறுகள் செய்வதாக இருந்தால் திருந்த வேண்டும், திருத்த அடக்கித் திருத்தத்தான் வேண்டும். இரண்டு மதிப்பிற்குரிய வைஸ் சான்ச்சலர்கள், போனது எல்லாம் போகட்டும், மாணவர்களை விட்டு விடுங்கள், கேஸ்களை வாபஸ் செய்யுங்கள் என்று சொன்னார்கள். அவர்களைவிட மாணவர்களிடம் அக்கறை, நம்பிக்கை கொண்டவர்கள் வேறு யாரும் இருக்க மாட்டார்கள். ஆகவே தண்டனை பெற்றவர்களைக்கூட விட்டு விட்டேன். இன்று நடைபெறுகிறதைச் சொல்கிறேன். சில கல்லூரிகளில் போய் 'படிக்காதே, வெளியே இரு' என்று சொன்னால் யாருக்கு நல்லது? படிக்க வேண்டுமென்றுதான் 37 கோடி ரூபாய்

8th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

வரவு செலவுத் திட்டத்தில் வைத்திருக்கிறோம். ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம், உயர்நிலைப் பள்ளிகளில் எல்லாம் ஒழுங்காக வந்திருக்கிறார்கள். சென்னை நகரில் அநேகமாக பல கல்லூரிகளில் ஒழுங்காக வந்திருக்கிறார்கள். எல்லோரும் ஊரிலிருந்து வர வேண்டும். இருந்தாலும் சில இடங்களில் கலகம் செய்ய தூண்டி விடுகிறார்கள். தி. மு. க. தொடர்பு உள்ளவர் ஒருவர் இங்கிருந்து மதுரைக்கு போய் நீங்கள் படிக்காதீர்கள் என்றும், கல்லூரிக் குள்ளே போகிற மாணவர்களை உள்ளே போகாதீர்கள் என்றும் சொல்லியிருக்கிறார். வெளியே இருப்பவர்கள் பிள்ளைகளை கெடுக்கப் பார்க்கிறார்கள். பிள்ளைகள் இதை உணருவார்கள் என்று நம்புகிறேன். இரண்டு நாட்கள் வராவிட்டாலும் பிறகு அவர்கள் நன்மையை உணர்ந்து படித்துத் தேறுவார்கள் என்று நினைக்கி றேன். பெற்றோர்களும் இதைக் கண்காணித்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் மீது வெறுப்பில்லை. கவலைதான் ஏற்படுகிறது. மாணவர் கள் கெட்டுவிடுகிறார்களே, மாணவர்களை கெடுத்து விடுகிறார்களே, இந்த மாணவர்கள் வளரவேண்டுமே, இந்த நாட்டின் நலனையும் கல்வியையும் காப்பாற்றவேண்டுமே, இந்த நாட்டினுடைய மதிப் பை காப்பாற்றவேண்டுமே, அவர்கள் சிறந்த வகையில் இந்த நாட் டினுடைய ஆட்சியை நடத்திச் செல்ல வேண்டுமே, இவர்கள் எப்படி இந்த நாட்டின் சீரிய மக்களாக வாழ்வது என்கிற கவலை கள்தான் எனக்கு ஏற்படுகின்றன. ஆகவே பொதுவாக இது போன்ற கிளர்ச்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்திக்கொள்வது தவறு, மாணவர்களை நாங்கள் ஈடுபடுத்தவில்லை என்று சொல்லிவிடு வதால் மட்டும் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவதில்லை, எங்கள் கட்சியில் எந்தவிதமான மாண வர்களும் ஈடுபடுவதில்லை என்றும் எதிர்க்கட்சியிலுள்ள சிலர் சொன்னார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு அண்ணாமலை பல்கலைக் கழகத்திற்கு சென்றிருந்தபோது, அங்கே சுமார் 25 பேர்கள் வந்து ஏதோ கண்டனம் தெரிவிக்கவேண்டும் என்று வந்தார்கள். அவர் களுடைய கோரிக்கைகளை எல்லாம் கேட்டேன். அவர்கள் எக்ஸை டெட்டாக பல காரியங்களைச் சொல்லிவிட்டுப் போனார்கள், அப்படி அவர்கள் போகும் போது அவர்கள் கோரிக்கை அடங்கிய ரிக்கார் டையும் தந்துவிட்டு போனார்கள். அதில் சேர்ந்து இருந்தது, அதாவது சிதம்பரம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 25 ரூபாய் கொடுத்திருப்பதாகவுள்ள ரசீது அத்துடன் இருந்தது. இது எதைக் காட்டுகிறது, இவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் துடன் சம்பந்தப்பட்டவர்கள் இல்லை என்று சொல்லிவிட முடியுமா? ஏதோ என்னிடம் அந்த ரசீது கிடைத்து விட்டது. இதுதான் இன்று இருக்கக்கூடிய நிலை. சமீபத்தில் 25-ம் தேதி மாணவர்கள் என்னை வந்து சந்தித்தபோதும் நான் அவர்களிடம் சொன்னேன், நன்றாக படியுங்கள், அது உங்களுக்கு மிகவும் முக்கியம் என்று நான் அவர்களிடம் சொன்னேன். இன்னும் எவ்வளவோ காலம் இருக்கின்றன, நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன, மத்திய ஆட்சிமொழி பற்றி நீங்கள் இப்போது கவலைபடவேண்டியதில்லை, என்றைக்கும் இந்தி திணிக்கப்படுவதை நாங்கள் ஏற்க மாட்டோம், தமிழ் மொழிக்காக நான் என்றைக்கும்

1-30 p.m.

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1965

பாடுபடுவேன், அதிலும் சட்டபூர்வமாக ஆங்கிலம் இருப்பதற்கும் நான் பாடுபடுவேன், இதைப்பற்றி நான் மத்திய சர்க்காரிடத்தில் சொல்வேன், அதை வெற்றிகரமாக நிறைவேற்றவும் செய்வேன் என்று சொன்னேன். அவர்கள் திரும்பத் திரும்ப கிளிப்பிள்ளை போன்று இது போதாது, கான்ஸ்டிட்டியூஷனை திருத்தவேண்டும், ஆங்கிலந்தான் இருக்கவேண்டும், இந்தி அறவே இருக்கக்கூடாது என்று சொன்னார்கள் (குறுக்கீடு) திணிப்பு, திணிப்பு என்பதெல்லாம் இப்போது பிரச்சினையே இல்லை. நான் அவர்களுக்குச் சொன்னேன், இந்தி அறவே வேண்டாம் என்று நாம் சொல்லிவிட முடியாது, வடநாட்டிலுள்ளவர்கள் ஆங்கிலமே இருக்கவேண்டாம் என்றாலும் நாம் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே ஆங்கிலம் தொடர்ந்து இருந்து வரும், அதற்காக எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும், ஆகவே இந்தி அறவே கூடாது என்று சொல்வது இந்தி பேசும் மக்களுக்கு உகந்ததாக இராது, ஆகவே அவ்விதம் சொல்வது சரியல்ல, நல்லதும் அல்ல என்று சொன்னேன். நான் சொன்ன பிரகாரம் முடிவும் எடுக்கப்பட்டது. கான்ஸ்டிட்டியூஷனை நாம் இன்றைக்கும் திருத்தவில்லை. ஏதோ இங்கு தெரிவிக்கப்பட்டது, இம்மாதிரிப்பட்ட கோரச் செயல்கள், வன்முறை செயல்கள் எல்லாம் நடந்த பின்னால்தானே இந்த விளைவுகள் ஏற்பட்டன. இதன் பின்னால்தானே அபிஷியல் லாங்க்வேஜ் ஆக்ட் திருத்துவது என்று முடிவு செய்யப்பட்டது என்று சில கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். அது தவறு. பலாத்காரம் செய்தாக வேண்டும், கோரச் செயல்களை நடத்தியாக வேண்டும், நான்கு பேர்கள், அல்லது பத்து பேர்கள் கொல்லப்பட்டாகவேண்டும் என்ற நிலைமை இருந்தால்தான் பிரச்னைக்கு வழியேற்படும் என்கின்ற கருத்தில் சொன்னார்கள். நான்கு பேர் பத்து பேர் என்று சொன்னால், அது ஐம்பது பேர்கள் என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம், சிலர் 200 பேர்கள் இறந்து போனார்கள் என்று சொன்னார்கள். அங்கு மக்களுடைய வாக்கைப்பெற்று வந்திருக்கக் கூடியவர் சொன்னார்கள், இன்றைக்கு சிறையில் 2,500 பேர்களை பிடித்துவைத்திருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். நான் சொன்னது, கலவரத்திற்கு காரணமாக இருந்த ரௌடிகள் எல்லோரையும் சேர்த்து 2,500 பேர்கள் வைத்திருக்கலாம் என்று சொன்னேன். இவர்கள் அத்தனை பேரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதும் அவர்களுக்கும் தெரிந்திருக்கலாம். அப்படியிருக்கும்போது இவர்கள் ரௌடிகளைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லும்போது, பொறுப்பு வாய்ந்த அங்கத்தினர் ஒருவர், எங்கள் கட்சியைச் சேர்ந்த 2,500 பேர்களை பிடித்து வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்? அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தை அடக்கவேண்டும் ஒடுக்கவேண்டும் என்கின்ற எண்ணம் அரசாங்கத்திற்கு கொஞ்சமும் கிடையாது. சட்ட முறையில் யார் யார் மீது கேஸ் போடப்பட வேண்டுமோ அவர்களைப் பிடித்து வைத்திருக்கக்கூடும். அப்படி கைது செய்து வைத்திருப்பவர்களில் அதிகம் பேர்கள் ரௌடிகளாக இருக்கலாம். அப்படியிருக்கும்போது எங்கள் கட்சியை அடக்கி ஒடுக்குவதற்காக இவ்விதம் அதிகம் பேர்களை பிடித்து வைத்திருக்கிறார்கள் என்றால் இதற்கு என்ன பொருள்?

8th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

இன்னும் சிலர் சொல்லுகிறார்கள், இம்மாதிரிப்பட்ட சம்பவங்கள் நடந்ததினால்தான் அபிஷியல் லாங்க்வேஜ் பற்றிய பிரச்னை வந்தது. 'மே' என்று போட்டிருந்ததை 'ஷால்' என்று போடலாம் என்பதை ஒப்புக்கொண்டார்கள் என்று சொன்னார்கள். பிரதம மந்திரியின் உறுதி மொழி இதில் சேர்ந்திருக்கவேண்டும் என்பதுதான் எல்லோருடைய கருத்தும். நான் அப்போதும் சொன்னேன், பிரதம மந்திரியினுடைய உறுதிமொழி இதில் இருக்கிறது என்று அன்றும் சொன்னேன். அப்போது பிரதம மந்திரி நேரு அவர்கள் இருந்த காலம். இதைப் பற்றி பிரதம மந்திரி அவர்களிடத்திலும், உள் நாட்டு அமைச்சர் அவர்களிடத்திலும் பேசினேன். அப்போது "இன்டெஃபினிட்" டாக இருக்கவேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. அப்போது 'மே' என்றிருந்தால் போதுமானது என்றநிலை இருந்தது. இப்போது வரம்பு வைக்கவேண்டும் என்று சொல்லுகிறோம், ஆகவே 'ஷால்' என்று போடவேண்டும் என்று சொல்லுகிறோம். எந்த ஒரு மாநிலம் விரும்புவது வரையிலும் இந்தி வைக்கப்பட மாட்டாது என்று சொல்லுகிறோம். மற்ற சட்ட நிபுணர்கள் எல்லோரும் இதைத்தான் சொல்லுகிறார்கள், ஆகவே 'மே' என்றிருப்பதை 'ஷால்' என்று போட வேண்டும் என்று சொல்கிறோம். அது மாத்திரமல்ல, இன்றைக்கு பொதுவாக ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அதை மாற்றுவதற்குரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். உத்தரவுகள் போட்டு இந்த அச்சத்தை போக்கிவிட முடியாது. உறுதி மொழி அளித்த பிரதம மந்திரி காலஞ்சென்று விட்டார். அந்த முறையில் அச்சத்தைப் போக்குகின்ற வகையில் சட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும் என்று சொன்னோம். அதை மத்திய அரசாங்கம் ஒப்புக் கொண்டது.

இதை நீங்கள் இப்போதுதானே சொல்லுகிறீர்கள், இத்தனை நாட்கள் கழித்து இப்போதுதானே இதைச் சொல்லுகிறீர்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள். என் முன்னால் இதை சொல்லவில்லை என்று சிலர் கேட்கிறார்கள். இப்போது மட்டுமல்ல, முன்பும் இதை நான் சொல்லி வந்திருக்கிறேன். ஆனால் எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் வற்புறுத்தியது என்ன? கான்ஸ்டிட்யூஷனை மாற்ற வேண்டும் என்றும் 17-வது சாப்டரையே அடியோடு எடுத்து விடவேண்டும் என்றும் இந்தி அறவே இருக்கக்கூடாது என்றும் ஆங்கிலம்தான் இருக்கவேண்டும் என்றும் சொன்னார்கள். இந்தியினால் என்ன பிரயோசனம் என்று இன்று கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள்கூட கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரும் தலைவர் டெல்லியில் சொல்லுகிறார், இந்தி லிங் லாங்க்வஜ்-ஜாக இருக்கலாம், சுலபமான நடையாக இருந்தால் அதை பரப்புவதற்கும் ஏற்றுக்கொள்ளலாம், என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) திணிக்கப்படுவது என்கின்ற பேச்சே போய் விட்டது, இப்போது அதைப்பற்றிய பேச்சே இல்லை. ஆகவே ஆட்சி மொழி விஷயத்தில் அரசாங்கம் எத்தகைய கொள்கைகளை கைக்கொண்டிருக்கிறது என்பதைக் "கம்பெயரிங்" காக பார்த்து கருத்துக்களை சொல்லவேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்களை கேட்டுக்கொள்கிறேன்.

கனம் கம்யூனிஸ்ட் தலைவர் அவர்கள் சில கருத்துக்களை சொன்னார்கள். அதைப்பற்றி நான் சொன்னால் அவர்களுக்கு கோபம் வரும், அலர்ஜி ஏற்பட்டுவிடும். அவர்கள் சொன்னார்கள், திருச்சியில் நடைபெற்ற மகாநாட்டின் விளைவாகத்தான் 25-ம் தேதி சம்பவங்கள் நடைபெற்றன என்று சொல்வது சரியல்ல என்றும், அப்படியென்றால் அந்த மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் சொன்னார். ஆனால் இதைப்பற்றி இவர்களுடைய தலைவர் தங்கள் சகாக்களிடத்தில் வேறு விதமாகவும் சொல்லி இருக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் மீது எல்லாம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி சொன்னது கிடையாது. மகாநாடுதான் காரணம் என்றால், மகாநாட்டுக்கு முதுகெலும்பாக இருக்கக் கூடியவர்களை, சம்பந்தப்பட்டவர்களை சர்க்கார் ஒன்றும் செய்யவில்லை என்றுதான் குறிப்பிட்டேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பது அரசாங்கத்திற்கு தெரியும். யாரையும் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு கிடையாது. எவ்வளவு பெரிய மனிதர்களாக இருந்தாலும் அவர்கள்தான் காரணம் என்று தோன்றினால் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அப்படியென்றால் கலவரங்களுக்குக் காரணமாயிருந்தது என்று சொல்லப்படுகின்ற ஒரு பத்திரிகை ஆசிரியர் மீது இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அவர்கள் பக்கத்தில் போவதற்கே இந்த அரசாங்கத்திற்கு தைரியம் கிடையாது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தைரியம் கிடையாது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் வேண்டுமானால் நினைத்துக்கொள்ளலாம். நான் முன்பே குறிப்பிட்டேன். இதைப்பற்றி சொல்லும்போது அவர்களுக்கு கோபம் வந்துவிடும் என்று இந்த நிலையில் எனக்கு கோபம் வந்துவிடும் என்று உபதேசம் செய்யப்படுகிறது. நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, கலவரங்களுக்கு யார் காரணமாக இருந்தாலும் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றும் என்னிடம் சில மாணவர்கள் வந்து பேசினார்கள். சில தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். எதிர்கட்சித் தலைவர்களே அதை டிராப்ட் செய்து கொடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இன்று எனக்கு கிடைத்திருக்கக்கூடிய செய்தியில், கம்யூனிஸ்டுகள், லெஃப்டிஸ்ட்கள் சிலர் கல்லூரிகளுக்குச் சென்று நீங்கள் தொடர்ந்து கல்லூரிகளுக்கு போகவேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே கல்லூரி மாணவர்களை மற்றவர்கள் தூண்டவில்லை என்று சொல்வதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. தூண்டினார்கள் என்பதற்கு என்னிடம் தகவல்கள் இருக்கின்றன. இப்போது சட்டத்தை மாற்றும் விஷயத்திலே மற்றொன்று சொன்னார்கள். மத்திய அரசாங்க மந்திரிகள் ராஜிநாமா செய்தது பற்றி

8th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தவிர—இதில் அவர் கருத்தும் என் கருத்தும் ஒன்றுதான்—மற்றவர்களெல்லாம் அதைப் பாராட்டிப் பேசினார்கள். பாராட்டுதலை நான் மறுக்கவில்லை. பாராட்டட்டும். ஆனால் பாராட்டுகிற அரசியல்வாதிகளை, எதிர்க் கட்சி அங்கத்தினர்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அந்த அமைச்சர்களுடைய ராஜிநாமாவைப்பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்களெல்லாம் பாராட்டினார்களே, இப்போது கனம் அமைச்சர்கள் ராஜினமாவை வாபஸ் வாங்கினார்கள். இப்போது எல்லாவற்றையும் அவர்கள் கையில் விட்டு விடலாமே. இனிமேலும் இந்தி திணிக்கப்படுகிறது என்று சொல்ல வேண்டாமே; அதைப் பற்றி அச்சப்பட வேண்டாமே; அவர்கள் ராஜிநாமா செய்தார்கள். இப்போது வாபஸ் வாங்கி விட்டார்கள். ராஜிநாமா செய்ததைப் பாராட்டுகிறார்களே, அவர்கள், இப்போது அமைச்சர்கள் வாபஸ் வாங்கிக்கொண்டதினால் அவர்களிடத்தில் இதை விட்டு விடலாமே . . .

திரு. கே. ஏ. மதியழகன் : அந்த அமைச்சர்கள் ராஜிநாமாவைப் பொறுத்த மட்டில் கனம் முதல் அமைச்சருடைய கருத்து என்ன என்று அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சொன்னதுதான் என்னுடைய கருத்தும் ராஜிநாமா செய்தது தவறு என்பதுதான் எனது கருத்து. தவறு என்றால் கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சொல்லுகிற மாதிரி அதனால் சம்பவங்கள் கோர நிலை அடைந்தது என்று நான் ஏற்றுக்கொள்ள முடியாது. 11-ம் தேதி அந்த அச்சம் இருந்தது. ஆனால் எல்லாம் திட்டமிட்டப்படிதான் நடந்தது. இதனால் ஒன்றும் இல்லை ராஜிநாமா செய்தது தவறு என்று அவர்களிடமே சொன்னேன். அன்று இரவே சொன்னேன். பிப்ரவரி 11-ம் தேதியே சொன்னேன். அவர் ராஜிநாமா செய்தாரே, நானும் ராஜிநாமா செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். நான் ஒன்று சொல்லுகிறேன். சில கனம் அங்கத்தினர்களுக்கு ரொம்பவும் அனுதாபம் என்னிடத்தில். தள்ளாத வயது என்று சொன்னார்கள். நான் வயதைக் குறைக்கவில்லை. ஆனால் தள்ளுகிற வரையில்தான் பதவி. (சிரிப்பு) வரவு-செலவுத் திட்ட அறிக்கையைச் சமர்ப்பித்து ஒரு மணி நேரம் படித்தேன். (சிரிப்பு) படிக்கும்போது ஒரு சொட்டுத் தண்ணீர்கூட குடிக்கவில்லை. (சிரிப்பு) காலையில் 8-30 மணிக்கு வந்து 2-00 மணி வரையில் சபையிலேயே உட்கார்ந்திருக்கிறேன். தள்ளுகிறவரையில்தான் இது. அதற்கு மேல் ஒரு நாளும் பதவியில் இருக்க மாட்டேன். தள்ளுகிற வரையில் என்பது ஒன்று; மக்கள் விரும்புகிற வரையில் என்பது மற்றொன்று. ஏதாவது ஒன்று இல்லையென்றாலும் பதவியில் இருக்க மாட்டேன். திருவள்ளுவர் கோவிலுக்குப் போய் உட்காரவேண்டும் என்று எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த அங்கத்தினர் அனுதாபத்தோடு கேட்டுக்கொண்டார். கோவிலுக்குப் போய்ப் பார்க்கலாமே தவிர, அங்கு போய் உட்கார மாட்டேன். குறுக்கே நிற்கும் எதிர்ப்பு சக்திகளை அகற்றுவதில் ஈடுபடுவேன். (ஆரவாரம்) ராஜிநாமா செய்வது, எப்போது செய்வது என்பது எல்லாம் எங்களுக்குத் தெரியும். எந்த சமயத்தில் செய்வது என்று எங்களுக்குத் தெரி

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1965

யும். கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார்கள், ராஜிநாமா செய்யும் எண்ணத்தோடுகூட இருந்தேன் என்று சொன்னார்கள். வருகிற தேர்தலை முன்னிட்டு இப்பொழுதே சட்ட சபையைக் கலைத்துவிடுங்கள் என்று சொன்னார்கள். வருகிற தேர்தல் வரப் போகிறது. அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்றால் பார்த்துக்கொள்ளலாம். ஏன்? மக்கள் யாரிடம் இருக்கிறார்கள் என்பது இன்றே தெரியும். அப்போதும் யாரிடம் இருப்பார்கள் என்று நன்றாகத் தெரியும்.

நம்முடைய நாடு ஒன்று என்று கனம் அங்கத்தினர் டாக்டர் நடராஜன் அவர்கள் கூறினார்கள். அதை மனதில் கொள்ளவேண்டும். அது மெண்ட்டல் ரிஸர்வேஷன் உள்ளவர்களுக்குத் தெரியாது, புரியாது. இந்தியை வேண்டாமென்று சொல்லலாம். நம் மாணவர்கள் எங்கெங்கு படிக்கிறார்கள், எங்கெங்கு உத்தியோகம் வகிக்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். மும்மொழித் திட்டம் என்றால் மும்மொழித் திட்டம் ஒன்றும் நமக்குப் புதிது அல்ல. இப்போது இந்தி படிக்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இந்த ஆண்டிலே இந்தி பரீட்சைக்குப் போகிறவர்கள் 105,000 பேர்கள். சென்ற ஆண்டில் இந்திப் பரீட்சை எழுதியவர்கள் 95,000 பேர்கள். கட்டாயம் இல்லாமலேயே படிக்கிறார்கள். இந்தி படிப்பது நல்லது என்று அவர்களுக்குத் தெரியும். ஆங்கிலமும் படிக்க வேண்டும். தமிழும் நன்றாக படிக்கவேண்டும். அதோடு இந்தியும் படிக்க வேண்டும். வட நாட்டில் தென்னாட்டு மொழி ஒன்றைப் படித்தால் நலம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மும்மொழிக் கொள்கையை கண்டிப்பாக அனுசரித்து வருவோம். இந்திமேல் வெறுப்பு கொண்டு இந்தி அரக்கி என்று சொல்லி, எங்களை கொடும்பாவி கட்டிக் கொளுத்தினார்கள். நம்பிக்கை உள்ளவர்கள், பின்னால் இருக்கிறவர்கள் செய்கிறார்களோ இல்லையோ என்று கயாவில் தாங்களே தங்களுக்கு சிரார்த்தம் செய்து கொள்ளுவார்கள். எனக்கு கயாகூட வேண்டாம். நம் பிள்ளைகளே செய்து விட்டார்கள். கயாவுக்குக்கூட போகவேண்டாம் என்று அவர்களே செய்து விட்டார்கள். கல்வி, அறிவு இதற்காக ஏற்பட்டது புத்தகாலயம். டாக்டர் ராதாகிருஷ்ணன் மெமோரியல் லைப்ரரி பற்றிச் சொன்னார்கள். அங்கே இருந்த புத்தகங்கள், இந்திப் புத்தகங்கள் அல்ல, சமஸ்கிருதப் புத்தகங்கள், ஆங்கிலப் புத்தகங்கள், தமிழ்ப் புத்தகங்கள் எல்லாம் எரிக்கப்பட்டன. ஒரு மொழி மீது வெறுப்பு அறிவு மீது வெறுப்பு, மக்கள் மீது வெறுப்பு ஏற்படுத்துவது சரியல்ல. பெற்றோர்களெல்லாம் மாணவர்கள் மீது அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் எல்லாம் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். மாணவர்கள் சீராக வளர வேண்டும். அவர்களை தீய காரியங்கள் செய்யத் தூண்டி விடுவது தவறு, அத்தகைய செயல்களைப் பாராட்டுவது தவறு. இதிலே சில ஆசிரியர்கள் தூண்டி விட்டார்கள். அதை மறுப்பதற்கில்லை. இதெல்லாம் தவறு. மாணவர்கள் நல்ல முறையில் வளரவேண்டும், தீயச் செயல்களில் ஈடுபடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். மாணவர்களும் இதையெல்லாம் மறந்து திரும்பவும் படிப்பதற்குச் செல்லும்போது இன்னும் தூண்டி விடுகிறவர்கள் இருக்கிறார்கள்.

8th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

இன்னும் கல்லூரிக்குப் போகாமல் சிலர் இருக்கிறார்கள். ஒன்றை மட்டும் கூறுகிறேன். எந்த விஷயத்திலும் மாணவர்களுக்குப் பாதகம் இல்லாமல் அவர்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் இருக்கிறது. மற்றவர்கள் மாணவர்களைப் பயன்படுத்திக்கொள்ளப் பார்த்தால் அதற்குச் சற்றும் இடம் கொடாமல் அவர்கள் அறிவு பெறவேண்டும். அவர்களெல்லாம் சிறந்த மக்களாக வளரவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தி.மு.க. பங்கு என்ன என்று கேட்டார்கள். நான் முன்பே சொன்னேன். திராவிட முன்னேற்றக் கழகத்தவர் ஒருவர், இடது சாரி கம்யூனிஸ்ட்கள் ஆறு பேர்கள் தொடர்ந்து கிளர்ச்சியைச் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாணவர்களை முன்னே வைத்துக்கொண்டு, பின்னே இருந்துகொண்டு தங்களுக்கு வேண்டிய அத்தனை காரியங்களையும், அத்தனை செயல்களையும் நடத்தியிருக்கிறார்கள். அந்த முறையில்தான் நடத்தப்பட்டது. அதனால் எவ்வளவு தூரம் மக்கள் பாதிக்கப்பட்டார்கள்? அவர்களே செய்து விட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. சமூக விரோதிகளும் சேர்ந்தார்கள். உணவுப் பொருள்களைக் கள்ளக் கடத்தல் செய்கிறவர்களைப் பொறுத்த மட்டில் அவர்களிடம் போலீஸார் கண்டிப்பாக இருந்தார்கள் என்று அவர்கள் சேர்ந்தார்கள். திருட்டுச் சாராயம் காயச்சுகிறவர்கள், குமாரபாளையம் காவேரிக் கரை ஓரமாக இருக்கக் கூடியவர்கள், அவர்கள் மீது போலீஸார் கண்டிப்பாக இருந்தார்கள் என்று அவர்களும் சேர்ந்தார்கள். இவ்வாறு நடைபெற்றது மாத்திரம் அல்ல. தி.மு.க. மீது பழி சுமத்தவேண்டுமென்று சொல்லவில்லை. கூடிய வரையில் அப்போஸிஷன் நல்ல முறையில் இயங்குகிறது என்று கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். அந்த மாதிரித்தான் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோதும் அதையடுத்தும் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் நடந்துகொண்ட முறை என்ன? நல்ல சம்பிரதாயங்களை வளர்க்கவேண்டும், நல்ல முறையில் எதிர்க்கட்சிகள் நடந்துகொள்ளவேண்டும் என்ற எண்ணத்திற்கு, அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறவேண்டும் என்ற எண்ணத்திற்கு இடி விழுந்தாற்போல் சம்பவங்கள் சில நாள் நடைபெற்றிருக்கின்றன. சென்னை நகரில் இரண்டு மூன்று சம்பவங்கள் நடைபெற்றன. பச்சையப்பன் கல்லூரிக்கு அருகில் சர்க்கார் பஸ் கொளுத்தப்பட்டது. அங்கே 55-வது யூனிட் தி.மு.க. பொருளாளர். இன்னும் 13 பேர்கள் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருந்திருக்கிறார்கள். அதே மாதிரித்தான் காலேஜுக்குள் மற்றொரு சம்பவம் நடந்திருக்கிறது. சில தி.மு.க. உத்தியோகஸ்தர்களும் இந்தச் சம்பவங்களில் கலந்துகொண்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அவர்களைப் பற்றிய பெயர்கள் இருக்கின்றன. வட ஆற்காடு, ஆற்காடு, பேர்ணம்பட்டில் எவ்வளவு நஷ்டம்? 80,000 ரூபாய் அளவுக்கு நஷ்டம். அதிலே இடது சாரி கம்யூனிஸ்டுகளும், தி.மு.க.-வும் கலந்துகொண்டார்கள். ஆரணியில் தி.மு.க.-வில் பொறுப்புள்ள பதவி வகிக்கிறவர்களும் கலந்துகொண்டார்கள். போஸ்ட்

[திரு. எம். பக்தவத்சலம்] [8th March 1965

ஆபீஸ் கொளுத்தப்பட்டது. 80,000 ரூபாய் நஷ்டம். தென் ஆற்காடில் நடைபெற்ற சம்பவங்களிலே தி.மு.க.-வினர் கலந்து கொண்டார்கள். 5,000 ரூபாய் அளவுக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் க்வார்ட்டர்ஸ் கொளுத்தப்பட்டது. செங்கல்பட்டில், பட்டா பிராமில் நடந்தது என்ன? அந்த இடத்தில் ரயிலை நிறுத்தி நெருப்பு வைத்தார்கள். அதில் கலந்துகொண்டவர்கள் இடதுசாரி கம்யூனிஸ்டுகள். திருத்தணியில் நடைபெற்ற கலவரங்களில் கலந்து கொண்டவர்கள் தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள், தி.மு.க-வை சேர்ந்தவர்கள் 11 பேர்கள் இருக்கிறார்கள். திருவெற்றியூரில் நடந்த சம்பவம் என்ன? ரயிலை நிறுத்தி, ரயில்வே ஸ்டேஷனை கொளுத்தவும் செய்தார்கள். அங்கேயும் தி.மு.க.-காரர்கள் இருந்தார்கள், கலந்துகொண்டார்கள். ஆதம்பாக்கத்தில் போஸ்டு ஆபீசைத் தாக்கினார்கள், டெலிபோன் பூத்தைக் கொளுத்தினார்கள். டெலிபோன் பூத், போஸ்டு ஆபீஸ் இவைகளைக் கொளுத்துவது என்றால் என்ன? ஒருவர் கொளுத்துவார், சைக்கிளில் ஒருவர் வருவார், அங்கே இருக்கிற பணத்தை எடுத்துக்கொண்டு போய் விடுவார். முன் கூட்டியே திட்டமிடப்படாமல் இந்த வேலைகள் எப்படி நடக்க முடியும்? செங்கல்பட்டில் வாலாஜாபாத்திலும் கலவரங்கள் நடந்தன. இதிலும் சில தி.மு.க. வினர் கலந்து கொண்டார்கள். இவர்களே எல்லாவற்றையும் செய்துவிட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. இவர்களும் கலந்து கொண்டார்கள் மற்றவர்களும் கலந்து கொண்டார்கள், தூண்டி விட்டார்கள். திருப்பூரிலும் கோரமான சம்பவங்கள் நடந்தன. ஒருவர் டி.எம்.கே., மற்றொருவர் கம்யூனிஸ்டு, இரண்டு பேர்கள் முக்கியமானவர்கள் இங்கே பங்கு கொண்டார்கள். பொள்ளாச்சியில் 7 பேர்கள் டி.எம்.கே.-யைச் சேர்ந்தவர்கள். இன்னும் இடது சாரி கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். இங்கே காங்கிரஸ் கொடிக் கம்பத்திற்கு தீ வைத்திருக்கிறார்கள். அங்கு மிலிடரிக்குக் கூட யாரும் அச்சப்படவில்லை. அதனால் தான் அங்கே துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டியிருந்தது. கோவையில் நடந்தது என்ன? அங்கேயும் இடது சாரி கம்யூனிஸ்டு, டி.எம்.கே.-க்காரர்கள் கலந்துகொண்டார்கள், தியேட்டர் கொளுத்தப்பட்டது. மற்ற சம்பவங்களும் நடந்தன. மற்றவர்களும் கலந்து கொண்டார்கள். மதுரையிலும் சம்பவங்கள் நடந்தன. மன்ற உறுப்பினர் ஒருவர் பற்றி கூறப்பட்டது. நான் ஒன்று கூற விரும்புகிறேன். அந்த சம்பவத்தைப் பற்றி செய்தி வந்தது என்றால், அந்த சம்பவத்தைச் சேர்த்து என்ன நிகழ்ந்ததோ, அந்தச் சம்பவத்தைச் சார்ந்ததாகக் கைது செய்யப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். யார் சொல்லியும் கைது செய்யப்படவில்லை. போலீசார் தாங்களாகவே நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். அதோடு வேறு சில தி.மு.க.-காரர்கள் இருக்கிறார்கள் என்று எனக்கு தகவல் இருக்கிறது. கொடைக்கானல் பண்ணைக்காட்டில் நடந்த சம்பவத்திலும் தி.மு.க.-காரர்கள் கலந்துகொண்டார்கள். என்னிடம் வந்து சொல்லுகிறார்கள். அவர்களிடம் அனுதாபம் உள்ளவர்களே சொல்லுகிறார்கள். அவர்கள் ஒரு கான்ஸ்டேபிளைப் பிடித்து அடித்து, தண்ணீரில் மூழ்க வைத்திருக்கிறார்கள், அதிலே தி.மு.க.

8th March 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

கலந்து கொண்டிருக்கிறார்கள். ராமனுதபுரத்திலும் சம்பவம் நடந்தது, பெயர் என்னிடம் இருக்கிறது. போஸ்டு ஆபீஸ் முதலிய வைகளுக்கு மிகுந்த நஷ்டம். சேலம், குமாரபாளையத்தில் நடந்த சம்பவத்தில் முக்கியமான பேர்கள் இருக்கிறார்கள். பெயர் இருக்கிறது. தி.மு.க-வைச் சேர்ந்தவர்கள் தடை உத்தரவை மீறி வந்தார்கள். மீறி வந்து போஸ்டு ஆபீசைத் தாக்கினார்கள். அது தான் ஆரம்பம். அதற்குப் பிறகு மற்றவர்கள் சேர்ந்து கொண்டார்கள். இவர்கள் எல்லாவற்றிலும் கலந்துகொண்டார்கள் என்று நான் சொல்லவில்லை. டி.எஸ்.பி-யின் ஆடையைக் களைந்து விட்டிருக்கிறார்கள், இதில் தி.மு.க.-வினர் கலந்து கொண்டார்கள். தடை உத்தரவை மீறி வந்தார்கள். வந்ததும், அதற்கு மேலே மற்றவைகள் நடந்தன. திருச்செங்கோட்டில் நடந்தது. பெயர் இருக்கிறது. மற்றவர்களும் இருக்கிறார்கள். ரௌடிகளும் சேர்ந்து கலந்து கொள்கிறார்கள். இல்லையென்று மறுக்கவில்லை. நாமக்கல்லிலும் அப்படித்தான். பெயர் இருக்கிறது. போலீஸ் பார்ட்டியைத் தாக்கியிருக்கிறார்கள். எஸ்.ஐ., ஹெட் கான்ஸ்டேபிள், போலீஸ் கான்ஸ்டேபிள் இவர்களெல்லாம் தாக்கப்பட்டிருக்கிறார்கள். தஞ்சாவூரில் விஜயபுரத்தில் நடந்தது என்ன? பெயர் இருக்கிறது. தி.மு.க-வினர் முன் நின்று போஸ்டு ஆபீசை தாக்கி இருக்கிறார்கள். மன்னார்குடியிலும் அப்படித்தான். பெயர் என்னிடம் இருக்கிறது. இடது சாரி கம்யூனிஸ்டு, தி.மு.க. அனுதாபிகள் கலந்து கொண்டிருக்கிறார்கள். திருச்சியில் கரூரில் கோரமான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. தி.மு.க. கிளை ஸ்தாபனத்தைச் சேர்ந்த காரியதரிசி, இடது சாரி கம்யூனிஸ்டுகள் இவர்களெல்லாம் சேர்ந்து அங்கே ஆரம்பித்தார்கள். மற்றவர்கள் அதைப் பிடித்துக்கொண்டார்கள். மணப்பாரையில் ஒருவர் இடது சாரி கம்யூனிஸ்டு, இன்னொருவர் டி.எம்.கே. 15 பேர்கள் சேர்ந்துகொண்டு ரயில்வே ஸ்டேஷன், போஸ்டு ஆபீஸ் ஆகிய இடங்களுக்கு நெருப்பு வைத்தார்கள். அங்கே டெப்யூடி சூபரிண்டெண்டெண்டு ஆப் போலீஸ் அடிக்கப்பட்டார்கள். திருநெல்வேலியில் காயல் பட்டணத்தில் —

The flag flying over the youth wague building was stolen 4 பெயர் இருக்கிறது. டி.எம்.கே-யைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மீதுதான் போலீசார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி திருநெல்வேலியில் பாளையம்கோட்டையில் பாராளு மன்ற உறுப்பினர் வீட்டில் தாக்குதல் நடந்தது. அவர்கள் வீட்டை மட்டும் ஏன் தேடிப் பிடிக்கவேண்டும்? அவர் என்ன தவறு செய்தார்கள்? ஏன் காங்கிரஸ் கொடியை கொளுத்தவேண்டும்? இவ்வாறெல்லாம் செய்து நாட்டிலே ஒரு வெறுப்பு உணர்ச்சியைக் கிளப்பவேண்டும் என்பது தான் எண்ணம். ஜனநாயகத்தில் அராஜகத்தை மூட்டி அதனால் வெற்றி அடையவேண்டும் என்று யாராவது நினைத்தால், அது ஒருக்காலும் நடக்காது. ஜனநாயகத்திற்கு அராஜகம் முற்றிலும் புறம்பானது. ஐந்தாண்டுக்கு ஒரு முறை மக்களிடம் அவரவர்கள் கொள்கைகளை எடுத்துச் சொல்லி, கோட்பாடுகளை எடுத்துச் சொல்லி மக்கள் ஆதாவு பெறலாம். ஆனால், அதற்கு மாறாக அராஜகத்தை ஏற்படுத்தினால் அதை அனுமதிக்க முடியாது. ஏதோ ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கிறது, அந்த அச்சத்தைப் போக்குவதில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். ஆனால், அந்த

அச்சத்திலிருந்து ஒரு வெறுப்பை ஏற்படுத்தி, ஒரு சிலரை பயன் படுத்திக் கொண்டு, நாட்டிலே அராஜகத்தை ஏற்படுத்திவிடலாம் என்று யாராவது நினைத்தாலும் சரி, எந்தக் கட்சி நினைத்தாலும் சரி, ஜனநாயகத்தில் அதற்கு நாம் இடம் கொடுக்காது என்று நான் உறுதியோடு கூறி, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் குடியரசு தினத்தைப்பற்றி தங்களுக்குள்ள அழுத்தமான, ஆழ்ந்த உணர்வுகளை தெரிவித்தார்கள். நான் அதனை ஒப்புக்கொள்கிறேன். அவர்கள் இந்த மன்றத்திலே குடியரசு தினத்தை துக்க தினமாகக் கொண்டாடக்கூடாது என்று வேண்டிக் கொண்டார்கள். இந்த மன்றத்திற்கு அப்பால் தன்னுடைய சக்திக்கு உட்பட்டு அந்த புனிதத்தைத் காப்பாற்றுவதற்கு வேறு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, நான் கனம் உறுப்பினர் ராஜாங்கத்தை இங்கே கொண்டு வந்து காட்ட வேண்டும் என்று சொன்னேனே, அதைப்பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லையே.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி உரிமைப் பிரச்னை எழுப்பப்பட்டபொழுதே சொல்லிவிட்டேன். அதற்கு மேல் ஒன்றும் சொல்வதற்கில்லை.

புலவர் கா. கோவிந்தன் : நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஆங்காங்கு நடந்த கலவரங்களில் கலந்துகொண்டதாக தி.மு.க.-வினர், இடது சாரி கம்யூனிஸ்டு கட்சியினர் என்று ஒரு பட்டியலைப் படித்தார்கள். அந்தப் பட்டியல் ஆங்காங்கு உள்ள காங்கிரஸ் தோழர்கள் கொடுத்த பட்டியலா அல்லது போலீசார் கொடுத்த பட்டியலா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : காங்கிரஸ்காரர்களிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. போலீசிலிருந்துதான் தகவல் வந்தது. போலீஸ்தான் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. ஒன்று மறந்துவிட்டேன், சொல்லுகிறேன். கனம் அங்கத்தினர் திரு. கோசல்ராம் அவர்கள் ஒரு பழி சுமத்தினார்கள். நாம் சுதந்திரம் அடைந்த வரலாற்றை நாம் நம்முடைய இளம் சிறார் களுக்கு எடுத்துக் கூறவில்லை, ஆகவே, அவர்கள் இப்படி வெறுப்பு உணர்ச்சிக்கும், பிறர் தூண்டுதலுக்கும் ஆளாகிறார்கள் என்று சொன்னார். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நாம் சுதந்திரம் பெற்ற வரலாற்றைப் பற்றி, சுதந்திரப் போராட்டத்தில் செய்யப் பட்ட தியாகங்கள் பற்றி பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூற வேண்டும். சிறு சிறு பாட புத்தகங்களை ஆக்கி, அதை பாட புத்தகங்களாக வைத்து, அவர்கள் அவைகளைப் படிக்கும்படிச் செய்யவேண்டும். அவர்கள் சுதந்திரத்தின் அருமையை நன்றாக உணரச் செய்யவேண்டும். மாணவர்கள்தான் எதிர்காலச் சொத்துச் செல்வங்கள். அவர்களுக்கு சுதந்திர வரலாறு பற்றி சரியான

